# අකීදා හා මසාදිරුෂ් ෂරීආ

**(ඉස්ලාමීය මූලධර්ම හා නීති මූලාශ්‍ර)**

**ඉස්ලාමීය දීනිය්යාත් ධර්මාචාර්යවරුන්ට (උපදේශකවරුන්)**
**අදාල සහතික පත්‍ර විභාගය සඳහා පෙළ පොත්**

# அகீதாவும் மஸாதிருஷ் ஷரீஆவும்

**(இஸ்லாமியக் கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும்)**

**இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ்**
**பரீட்சைக்குரிய பாடப்புத்தகம்**

# Aqeeda and Masadirus Shariah

**(Islamic Principles and Legal Sources)**

**Text Book for**
**Islamic Deeniyyath (Dharmacharya) Certificate Examination**

# العقيدة ومصادر الشريعة

**الكتاب المقرر لشهادة الإمتحانات**
**الدينية (للمعلمين)**


**إصدار: إدارة الشؤون الإسلامية**
**كولومبو-سريلانكا**

***Published by :***
***Department of Muslim Religious and Cultural Affairs***
***180, T. B. Jayah Mawatha,***
***Colombo - 10,***
***Sri Lanka.***



2-CM14796

CM 14796- 2,500(2012/8)


بسم الله الرحمن الرحيم

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மத் (நளீமி)
பிரதிப் பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்
துணைத் தலைவர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி (நளீமி)
முன்னாள் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் (நளீமி)
பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள்** : அஷ்ஷெய்க் உஸ்தாத் எம். ஏ. எம். மன்சூர் (நளீமி)
B. A. (Hons)
பணிப்பாளர்
அல்மிஷ்காத், அல்குர்ஆன் திறந்த கல்விக்கூடம்
அக்குரணை

அஷ்ஷெய்க் எஸ். எச். எம். பளீல் (நளீமி) M. A.
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் ஏ. பி. எம். அப்பாஸ் (நளீமி) M. A.
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் ஜே. எம். அரபாத் கரீம் (நளீமி)
B. A. (Cey)
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் எம். ரிஷாட் (நளீமி) B. A. (Cey)
விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

**செம்மையாக்கற் குழு** : அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல் (M. A.)
முன்னாள் செயலாளர்,
முஸ்லிம் விவகார இராஜாங்க அமைச்சு

அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன் (M. A.)
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனை பல்கலைக்கழகம்

கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி)
முன்னாள் பீடாதிபதி / சிரேஷ்ட விரிவுரையாளர்
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

மௌலவி எம். என். இஜ்லான் (காசிமி)
பிரதம கதீப்
கொழும்பு பெரியபள்ளிவாசல்

அல்ஹாஜ் எம். எச். எம். நாளிர் B. A. (Hons)
வளவாளர்
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம

அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபீர் (M. A.)
சிரேஷ்ட விரிவுரையாளர்
கொழும்பு பல்கலைக்கழகம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி B. A. (Hons)PGDE
முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம

**இணைப்பாக்கம்** : மௌலவி அல்ஹாஜ் எம். எச். எம். லாபிர் (கபூரி)
B. A. PGDE
மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக்குழுத் தலைவர்

மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி)
B. A. (Cey)
உதவிப் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

| | | |
|---|---|---|
| **தலைப்பு** | : | **அகீதாவும் மஸாதிருஷ் ஷரீஆவும்**<br>(இஸ்லாமியக் கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும்)<br><br>இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய)<br>சான்றிதழ் பரீட்சைக்குரியது |
| **பதிப்பாசிரியர்** | : | அல்ஹாஜ் மௌலவி எம். எச். நூறுல் அமீன் (நத்வி) BA(Cey)<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| **வெளியீடு** | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>இல. 180, T. B. ஜாயா மாவத்தை<br>கொழும்பு - 10. |
| **பதிப்பு** | : | அரசாங்க அச்சகத் திணைக்களம்<br>இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,<br>கொழும்பு - 08. |
| **முதற்பதிப்பு** | : | 2014 |
| **பதிப்புரிமை** | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

# மாண்புமிகு பிரதமர், புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் அவர்களது ஆசிச் செய்தி

இலங்கை சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் ஒரு தேசமாகும். சிறுபிராயம் முதல் பிள்ளைகளிடையே கலாசாரம், சகவாழ்வு, மானிடத்துவம் பற்றிய மனப்பாங்கை வளர்ப்பதன் ஊடாகவே தேசத்தையும் சமூகத்தையும் மதிக்கின்ற, சமய கலாசாரத்தை கௌரவிக்கின்ற, மனிதமாண்பை புரிந்து கொண்ட சமூகமொன்றை உருவாக்க முடியும். பரீட்சையை மையப்படுத்திய கல்வித் திட்டத்தின் மூலம் சிலவேளை தார்மீக பண்பாட்டு ரீதியான கல்வியை வழங்குவது கடினமாகலாம். இதனால் இலங்கையில் ஞாயிறு சமய பாடசாலைக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமய பிள்ளைகள் தத்தமது சமய ஸ்தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு சென்று சமயக் கல்வியைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமயக் கல்விப் போதனைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை வளப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள், சீருடை வழங்கல் மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைந்நூல், மாணவர்களுக்கான பாடநூல் என்பனவும் இலவசமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பௌத்த சமய பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும் ஏனைய சமயம் சார்ந்த பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அஹதிய்யா என்ற பெயரில் செயற்படும் இஸ்லாமிய சமய பாடசாலைகளுக்கு அவசியமான பாடத்திட்டத்தை தயார் செய்யும் வேலைத்திட்டத்தினை சிறப்பாக நிறைவு செய்துள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதே பிரகாரம் பாடநூல் தொகுதியொன்றை வெளியிட மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

சமயக் கல்விப் போதனையின் இலக்கை அடைவதில் ஆசிரியர் களுக்கான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாததாகும். மிக விரைவில் இது விடயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

எந்தவொரு மட்டத்திலாயினும் கற்றல், கற்பித்தல் செயற்பாடு வெற்றியளிப்பதற்கு உரிய பாடநூல்கள் அவசியம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இவ்வவசியத் தேவையை சரியாகப் புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய பாடத்திட்டத்திற்கமைவாக இரு பரீட்சைகளுக்குமான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்திருப்பது காலத்தின் தேவையாகும். சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் இதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதை செய்து முடிப்பதற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. மு. ஜயரத்ன**
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் பிரதமரும்
புத்த சாசனம் மற்றும்
மத அலுவல்கள் அமைச்சரும்

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# கௌரவ புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் பிரதியமைச்சரின் ஆசிச் செய்தி

பல்லின சமய, கலாசார விழுமியங்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டு மக்கள் மத்தியில், தார்மீக சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையில் வதியும் பிரதான நான்கு சமயத்தவர்களும் தத்தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மூலம் முதன் முறையாக இஸ்லாமிய சமய (அஹதிய்யா) பாடசாலை மாணவர்களுக் கான பாடத்திட்டத்தினையும் அப்பாடத்திட்டத்திற்கமைவாக பாடநூல் களையும் வெளியிடும் இச்சிறப்பான வேளையில் வாழ்த்துச் செய்தி யொன்றை வெளியிடக் கிடைத்தமையினை பெரும் நற்பேறாகக் கருதுகிறேன்.

நீண்டகாலமாக நிலவிவந்த குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு எமது அமைச்சின் ஊடாக பங்களிப்புச் செய்வது எமது கடமை என்பதோடு பல தசாப்தங்களாக இயங்கிவரும் அஹதிய்யா சமய பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமது சமய கல்விப்பணிகளை முன்கொண்டு செல்வதற்கு இது பேருதவியாக அமையும் என நம்புகிறேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலைத்திருப்பது அரசியல் பொருளாதார அபிவிருத்தியுடன் சமய, சமூக மட்டத்திலான அபிவிருத்தியும் இணைந்து தான் என உறுதியுடன் நம்பிக்கை பூண்டுள்ளேன். குறிப்பாக சமூக மட்டத்திலான ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதாயின் சமய, கலாசார துறைசார் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்படி சமய, சமூக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதில் அஹதிய்யா முதலான சமயப் பாடசாலைகள் ஆற்றும் பணி விலைமதிக்க முடியாததாகும்.

சிறு பராயம் முதல் பிள்ளைகளை சமய பின்னணியில் வாழப் பயிற்றுவிப்பதுபோல் அதற்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் ஒழுக்க விழுமியங்களால் போஷிக்கப்பட்ட இளைய தலைமுறையொன்று உருவாகுவதை எதிர்பார்க்க முடியும்.

எங்களைப் போல் பல்லின சமய, கலாசார சமூகமொன்று வாழும் நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மக்கள் தமது பிள்ளைகளுக்கு அவரவர்களது சமய அறிவையும் விளக்கத்தையும் வழங்குவதற்கு இதுபோன்ற சமய பாடசாலைகள் ஊடாக மேற்கொள்ளும் அறப்பணி மகத்தானதாகும்.

இம்மகத்தான பணியைச் செய்வதில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இதற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது அமைச்சின் நன்றியறிதலை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

**எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,**
பிரதியமைச்சர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரது ஆசிச் செய்தி

தார்மீக சமுதாயமொன்றை தோற்றுவிப்பதில் சமயக் கல்வி அதிமுக்கிய பங்காற்றுகிறது. பாலர் பருவம் முதல் பிள்ளைகளிடையே சமய விழுமியச் சிந்தனையை ஏற்படுத்த முடியுமாயின் நாட்டின் சமூக சூழலை நல்ல நிலைக்கு மாற்றுவது கஷ்டமாயிராது. யாவரிடத்திலும் நல்ல மனப்பாங்கு ஏற்படுவது அனுபவங்கள் ஊடேயாகும். சமயக் கல்வி பயனுள்ள அனுபவங்களை வழங்குவதற்கான சிறந்த ஊடகமாகும். பரீட்சையை மையப்படுத்திய பொதுக்கல்வியுடன் மாத்திரம் சமய அறிவைப் புகட்டுவது சிரமமான காரியமாகும். இதற்கு மாற்றீடாக இலங்கையில் ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் சமய பாடசாலைகள் முறை இத்துறையில் பெருமளவு வெற்றியை ஈட்டித்தந்துள்ளது.

பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ பிள்ளைகளிடையே சமய சூழலும் சமய அறிவும் விருத்தி செய்யப்படும் வகையில் ஒவ்வொரு சமயம் சார் பிள்ளைகளுக்குமாக வெவ்வேறான சமயப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. சமய பாடசாலைகளுக்கான பாடத்திட்டம், பாடநூல் என்பன தற்போதைக்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு அவசியப்படும் பயிற்சித்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் சீருடை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு முக்கிய குறைபாடாக விளங்கி வந்த பாடநூல்களை வழங்க ஏற்பாடு செய்கின்றமை முக்கிய அம்சமாகும். சகல சமய குழந்தைகளுக்கும் ஒரே விதமான வசதிகளை செய்து கொடுப்பது அரசின் கொள்கையாகும். இஸ்லாமிய சமய பாடசாலைகள் விடயத்தில், முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடத்திட்டத்தை தயாரித்து சிறப்பாக வெளியிட்டு வைத்த இத்திணைக்களம், தேவையான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்தமை சமய கல்வித்துறையில் ஒரு திருப்பு முனையாகும். எந்தவொரு கல்வி மட்டத்திலும் பாடத்திட்டத்தின் உரிய பலாபலன்களை அடைவதில் பாடநூல்கள் முக்கிய பங்கு வகிப்பதை மறுக்க முடியாது. இவ்வவசியத் தேவையினை சரிவரப்புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆரம்ப நடவடிக்கையாக அஹதிய்யா (தஹம்) இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்

களையும், தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்களுடன் மொத்தம் 10 நூல்களை வெளியிட எடுத்துள்ள நடவடிக்கையினையிட்டு இத்திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

மேற்படி அறப்பணியில் ஈடுபட்டிருக்கும் திணைக்கள ஊழியர்கள், வளவாளர்கள், நூலாக்கக்குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளை சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

**எம். கே. பீ. திசாநாயக்க,**
செயலாளர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இன்றைய உலகு பயங்கர ஆன்மீக வறுமையிலும் வெறுமையிலும் வாடிக் கொண்டிருக்கிறது. உண்மையாக இன்றைய உலகின் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது ஆன்மீக வீழ்ச்சியும் அதனடியாகப் பிறந்துள்ள பண்பாட்டு வீழ்ச்சியுமாகும் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

சமய சார்பற்ற சிந்தனை, சடவாதம், உலகாயதம் முதலான மதவிரோத கொள்கைகளின் செல்வாக்கின் காரணமாகவே ஆன்மீக, தார்மீக, ஒழுக்க பண்பாட்டுத் துறைகளில் பயங்கர பின்னடைவை இன்று நாம் கண்டு வருகிறோம். அறிவைப் பூஜிக்கின்ற சமூகம் ஆன்மீகத்தைப் புறக்கணிக்கிறது. உடலைக் கவனிக்கின்ற சமூகம் உள்ளத்தை மறந்துவிடுகின்றது. இம்மையை நேசிக்கின்ற சமூகம் மறுமையை நிராகரிக்கின்றது.

சமகால உலகின் இத்தகைய சமய விரோத சவால்களுக்கு முகங்கொடுத்து மனித சமூகத்தை சன்மார்க்க அடிப்படையில், ஆன்மீகப் பாதையில் வழிநடாத்த வல்ல அறிவையும், புலமையையும், ஆளுமையையும் உருவாக்குகின்ற பயிற்சிப் பாசறைகளான அரபுக் கல்லூரிகளோடு இணைந்து அஹதிய்யா பாடசாலைகளும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஹதிய்யா பாடசாலைகள் இலங்கையில் 50 வருடங்களுக்கும் மேலாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அஹதிய்யா பாடசாலைகளை சிறந்த முறையில் வழிநடத்துவதற்காக திணைக்களம் அதற்கான முழுமையான பாடத்திட்டத்தை வெளியிட்டு வழிநடாத்தி வந்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

இந்த வகையில் இப்பாடத்திட்டங்கள் மூலம் பூரண பயனைப் பெற முடியாது என்பதை அறிந்த திணைக்களம், முதற்கட்டமாக இப்பாடத்திட்டங்களுக்கு அமைவாக இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச்சான்றிதழ் பரீட்சை மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த பணியை சிறப்பாக மேற்கொண்ட புத்தக

ஆக்கக்குழுவுக்கும் தொகுப்பாசிரியர் குழு மற்றும் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்ட எமது திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் அவர்களுக்கும் மற்றும் இப்பணியில் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இப்பணியில் ஈடுபட்டவர்களது உழைப்பையும், அவர்களது முயற்சி யையும் அல்லாஹ் அங்கீகரித்துச் சிறந்த நற்கூலிகளை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல்,**
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்)

# ஆசிச் செய்தி

இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறியாகும். முஸ்லிமாக வாழ்வதாயின் அல்குர்ஆன், அல்ஹதீஸ் தொடர்பான தெளிவான அறிவைப் பெறுவது அவசியமாகும். "அறிவைத்தேடுவது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலார் மீதும் கடமையாகும்." என்ற கருத்தில் வரும் நபிமொழியும் "அல்குர்ஆனைக் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்" என்ற கருத்தில் வரும் நபிமொழியும் இதனை வலியுறுத்துகின்றன. இலங்கையில் இஸ்லாத்தை பாடசாலைப் பருவத்தில் கற்றுக்கொள்வதற்கான ஒரு சிறந்த ஊடகமாக அஹதிய்யா பாடசாலைகள் காணப்படுகின்றன. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளின் வளர்ச்சியில் போற்றத்தக்க சேவைகளை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததாகும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளுக்கு வருடாந்தம் வழங்கி வரும் சேவைகள் அஹதிய்யாவின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமைகின்றன.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையான 14 வருடங்களுக்குரிய தேசிய அஹதிய்யாப் பாடத்திட்டம் தயாரித்தமை இலங்கை அரசாங்க பரீட்சை திணைக்களம் மூலம் அஹதிய்யா இறுதி சான்றிதழ் பரீட்சை, இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) சான்றிதழ் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளையும் நடாத்த ஏற்பாடு செய்தமை, மாவட்ட ரீதியாக அஹதிய்யா ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளும் கருத்தரங்குகளும் நடாத்தியமை அஹதிய்யா ஆசிரியர்களுக்கான வருடாந்த நூல் கொள்வனவுக் கொடுப்பனவு வழங்கியமையும், வருடாந்தம் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கியமையும் அப்பணிகளில் சிலவாகும்.

இவற்றில் அஹதிய்யா பாடசாலைகளது வரலாற்றில் தேசிய பாடத்திட்டத்திற்கு அமைவாக பாடநூல்கள் வெளியிடப்படுவது முக்கியதொரு மைல்கல்லாகும். அஹதிய்யா சமூகத்தின் ஏகோபித்த



3-CM14796

கோரிக்கையின் முதற்கட்டம் இன்று நிறைவேறுவதையிட்டு உளப் பூரிப்படைகிறேன். முதற் கட்டமாக, அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை வகுப்புகளுக்குரிய அகீதா, மஸாதிருஷ்ஷரீஆ, பிக்குஹுல் இஸ்லாம், ஸீரா வத்தாரீக், அஹ்லாக் ஆகிய நான்கு பாடங்களுக்கும் தீனிய்யாத் பரீட்சைக்குரிய மேற்படி நான்கு பாடங்களுடன் அரபு மொழியும் இஸ்லாமிய இலக்கியமும் ஆகிய ஆறு பாடங்களுக்குமாக பத்து பாட நூல்கள் வெளிவருகின்றமை சிறப்பித்துக் கூறவேண்டிய தொன்றாகும். புதிய பணிப்பாளர் தலைமையில் இப்பணிகள் யாவும் தொடரும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

மேற்படி பணிகளை முன்கொண்டு செல்வதில் ஆரம்பம் முதல் இன்றுவரை அயராது உழைத்துவரும் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள், தொகுப்பாசிரியர்கள் ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்களாவர். அல்லாஹ் அவர்களது முயற்சிகளை அங்கீகரித்துக் கொள்வானாக. இப்பணியில் இவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கு கிடைத்தமையை அல்லாஹ் எனக்கு வழங்கிய ஒரு மகத்தான சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன்.

இதற்காக என்னால் ஆன பணிகளைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

அல்லாஹ்வின் அருள் வேண்டி அனைவருக்கும் பிரார்த்திக்கிறேன்.

ஆமீன் !

**அஷ்ஷெய்க் Y. L. M. நவவி**,
உயர் கல்வியமைச்சின்
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
(முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்)

உயர் கல்வியமைச்சு,
இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

# மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத் தலைவரின் ஆசிச் செய்தி

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அஹதிய்யாப் பாடசாலைகள் மூலம் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் பல நன்மைகளையடைந்து வந்துள்ளது. இருப்பினும் எதிர்பார்க்கப்படும் முறையான பயனை சமூகம் அடைவதற்கு முக்கிய சில தடைகள் இருந்து வந்துள்ளன. அவற்றுள் ஒன்று பாடநூல் இல்லாமை, மற்றையது தேவையான ஆசிரிய வளம் கிடைக்காமை எனலாம்.

பெரும்பாலும் அஹதிய்யாப் பாடசாலைகளில் க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது க.பொத.(உயர் தரம்) வரை கற்றவர்களே கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில இடங்களிலேயே உலமாக்களும் பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களும் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அஹதிய்யா பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்தும் வகையிலேயே இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியைக் கற்றுத் தேர்வதன் மூலம் அவர்கள் சன்மார்க்க போதனாசிரியர்களுக்கான தராதரத்தைப் பெறுகின்றனர். இச்சான்றிதழ் உடையவர்களை சமய ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தினை அரசு முன் கொண்டுள்ளது. எனவே இப்பாடத்திட்டம் முறையாக கற்பிக்கப்படுவதன் மூலம் அஹதிய்யாக்கள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும். அத்தோடு ஆசிரியர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தவும் முடியும். மேலும் இவர்களிடம் கற்கும் மாணவர்களது அறிவுமட்டம் உயர்வடையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கரிசனை கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு செயற்பட்டுவருகின்றமை பாராட்டுக்குரியது. இதற்கு முன்னோடியாக விளங்கிய முன்னாள் பணிப்பாளர் அஷ்ஷெய்க Y. L. M. நவவி அவர்களது பங்களிப்பு மெச்சத்தக்கதாகும். அவரது வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இதற்கு உறுதுணையாக விளங்கின. அவருக்கு பக்கபலமாக விளங்கிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. நூறுல் அமீன் அவர்களது அயராத முயற்சியும் ஈடுபாடும் இங்கு குறிப்பிடத்தக்கவை. அஹதிய்யாப் பாடசாலைகள் மத்திய சம்மேளனம் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்

திணைக்களத்தின் இந்தப் பங்களிப்பினை நன்றியுணர்வோடு நோக்குகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை பூராவும் எமது இளைய தலை முறையினரான பாடசாலைப் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவையும் உணர்வையும் ஊட்டி தூய இஸ்லாமிய ஷரிஆவின் வழியில் நடாத்தும் பொறுப்பையேற்று செயற்பட்டு வரும் அஹதிய்யாவின் முன்னோடிகள், அதன் தொண்டர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்கள் என்பதை கூறவிரும்புகிறோம்.

அஹதிய்யாவின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.அப்துல் அஸீஸ் அவர்களைத் தொடர்ந்து எம்மோடு பணியாற்றியாற்றுகின்ற தலைவர்கள், நிருவாகிகள் யாவருக்கும் இவ்விஸ்தாபனத்தை வழிநடாத்திச் செல்வதற்கான மனோபலத்தையும் உடற்சுகத்தையும் நல்க வேண்டுமென மத்திய அஹதிய்யா சம்மேளனம் பிரார்த்திக் கின்றோம்.

மத்திய அஹதிய்யா சம்மேளனம் 1988 ஆம் ஆண்டு பொதுப் பாடத்திட்டத்தை வகுத்தது, இதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியாக 2003 ஆம் ஆண்டு பொதுப்பாடத்திட்டத்தனை அறிமுகஞ் செய்தது, 2005 ஆம் ஆண்டு முதல் தேசிய மட்டத்தில் அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சைகள் இடம் பெற்றாலும் பரீட்சைகளுக்கான பாடநூல்கள் எதுவும் இல்லா திருந்தமை பெரும் குறைபாடாக இருந்தது. இதனால் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது எண்ணிக்கையும் குறைவாக இருந்ததுடன் விண்ணபித்தோருள் பரீட்சைக்குத் தோற்றாமலிருப்போரின் எண்ணிக்கையும் கணிசமாயிருந்தது.

மேற்படி குறைபாட்டை முன்னாள் முஸ்லிம் சமய, பண்பாட்டலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி அவர்களிடம் எடுத்துக்கூறியபோது அவர் தேவையான நூல்களைத் தயாரித்து வெளியிட முன்வந்தார். அவர் விட்ட இடத்தில் இருந்து இப்பணியை சிறப்பாக தொடர்கின்ற பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் அவர்களின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது.

இப்பணியில் ஒத்துழைத்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. அவர்களின் பணியை அங்கீகரிப்பானாக.

**மௌலவி எம். எச். எம். லாபிர்,**
மத்திய அஹதிய்யா சம்மேளனம்,
பாடத்திட்டக் குழுத்தலைவர்.

# பதிப்புரை

## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும்! அல்ஹம்துலில்லாஹ் !

"(எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை."(அல்குர்ஆன் - 51 : 56)

இவ்வுலகில் மானிட வர்க்கம் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை அடிச்சுவடுகளை முறையாக பின்பற்றி முஸ்லிமாக வாழ்ந்து மரணிப்பதே யாகும். அல்லாஹ்வின் அடியார்கள் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஆத்மீக சிந்தனையுடன் தனது வாழ்வை இபாதத்துடன் இணைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கு பின்வருமாறு சான்று பகர்கின்றது : "இவ்வுலகத்தில் அல்லாஹ் ஒருவனுக்கு நன்மையை நாடினால் அவனுக்கு மார்க்கத்தில் தெளிவான விளக்கத்தை வழங்குகிறான்." (அல்ஹதீஸ்)

மேற்படி இறைவசனத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைக்கும் ஏற்ப மார்க்கத்துடன் தொடர்புடையவனாக வாழ்வது கட்டாயக் கடமையாகும். இவ்வாறாக ஒரு முஸ்லிம் இறையச்சம், பொறுமை, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், நற்பண்புகளுடன் வாழ்வதற்கு இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை பெற்றுக் கொள்வது இன்றியமையாத தாகும். மார்க்கக் கல்வியை பெறுவது உண்மையான மு∴மினாக வாழ்வதற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நல்லொழுக்கமுடைய ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இன்று நாடளாவியரீதியில் பல இஸ்லாமிய ஷரீஆ கல்வி நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் தங்களாலான பங்களிப்புகளைச் செய்து வருவது உண்மையில் போற்றத்தக்கதாகும்.

மேற்படி நோக்கத்தை மையமாகக் கொண்டு சுமார் ஆறு தசாப்தங்களுக்கு மேல் அஹதிய்யா கல்வியை மேம்படுத்துவதற்காக திட்டங்களை வகுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் மத்திய அஹதிய்யா சம்மேளன தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பணி என்றும் பாராட்டத்தக்கதாகும்.

அத்துடன் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக அரபுக் கல்லூரிகள், அஹதிய்யா பாடசாலைகள், குர்ஆன் மத்ரஸாக்கள் போன்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதிலும், பௌதிக வளங்களை விரிவுபடுத்துவதிலும் இத்திணைக்களம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவற்றுள் அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பல திட்டங்களை வகுத்து செயற்பட்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் முதல் பணியாக அஹதிய்யா மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டத்தினை 2003 ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்தமையும் இப்பாடத்திட்டத்திற்கமைவாக 2005 ஆம் ஆண்டு அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சையை நடாத்துவதற்கு இத்திணைக்களம் நிதியுதவி வழங்கி தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 2008 ஆம் ஆண்டு இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சையையும் பரீட்சைத் திணக்களத்தின் மூலமாக நடாத்துவதற்கு சகல நடவடிக்கை களையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. மேலும் 2008 ஆம் ஆண்டு அஹதிய்யா பாலர் வகுப்பு முதல் இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சை வரைக்குமான பாடத்திட்டங்களை வகுத்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இத்திணைக்களம் வருடந்தோறும் அஹதிய்யா ஆசிரிய ஆசிரியைகளுக்கான சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவு வழங்குதல், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றையும் நடை முறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் பாடப் புத்தகங்கள் இல்லாததன் காரணமாக பரீட்சைக்கு தோற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்திற்கொண்டு பரீட்சைகளுக்கு ஏற்றவிதமாக பாடப்புத்தகங்களை உருவாக்கும் பணியை எமது திணைக்களம் மேற்கொண்டது.

மேற்படி நூல்களை வெளியிடுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் முன்னோடியாக விளங்கி, ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய முன்னாள் பணிப்பாளர்களான அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களுக்கும் அஷ்ஷெய்க் M. I. அமீர் அவர்களுக்கும் இந்நூல் எவ்வித தங்கு தடையுமின்றி துரிதமாக வெளிவர காரணமாக இருந்த தற்போதைய பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. M. ஸமீல் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இப்பாடப் புத்தகத்தை வடிவமைத்து பிரசுரிப்பதற்கு எல்லா வகையிலும் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி மற்றும் பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சீ. அகார் முஹம்மத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இப்பணியை செவ்வனே முடிப்பதற்கு ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் வழங்கியவர்களையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

இப்புத்தகம் நூலுருவில் வெளிவருவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியில் பாடவிதானங்களுக்கேற்ப பாடங்களை எழுதி வடிவமைத்து தந்த எழுத்தாளர் குழு அங்கத்தவர்களான அக்குரணை அல்மிஸ்காத், அல்குர்ஆன் திறந்த கல்விக்கூடத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் உஸ்தாத் எம். ஏ. எம். மன்சூர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவரையாளர்களான அஷ்ஷெய்க் எஸ். எச். எம். பளீல் (நளீமி), அஷ்ஷெய்க் எம். ஜே. எம். அரபாத் கரீம் (நளீமி) அஷ்ஷெய்க் எம். ரிஷாத் (நளீமி) ஆகியோர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இப்புத்தகத்தினை செம்மைப்படுத்தி, வடிவமைத்து தந்தவர்களான முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன், சிரேஷ்ட விரிவுரையாளரும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதியுமான கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி), மௌலவி எம். என். இஜ்லான் (காசிமி) மகரகம, தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளர் அல்ஹாஜ் எம். எச். எம். நாளிர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபிர், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை நூலாக்குவதற்கு ஆரம்பம் முதல் இன்று வரை என்னுடன் இணைப்பாளராக செயலாற்றிய மௌலவி எம். எச். எம். லாபீர் (கபூரி) மற்றும் அல்முபாரக் தேசிய பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி எம். டீ. எஸ். றுவைதா அவர்களுக்கும் இப்புத்தகம் நூல் வடிவில் வெளிவருவதற்கு பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அதிகாரிகளான அஷ்ஷெய்க் எம். ஐ. முனீர் (நளீமி), திருமதி எம். ஐ. ரஸீனா, அல்ஹாஜ் ஏ. ஏ. எம். அஸ்ரின், திருமதி எம். வை. எப். இன்சிபா, மற்றும் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய திணைக்கள அனைத்து அதிகாரிகளுக்கும், சிற்றூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை கனிணி வடிவமைத்துத் தந்த திருமதி எம். எப். ஷாமிலா, திருமதி எம். எச். எஸ். பாத்திமா மஹ்ஸனி, திருமதி எம். எச். எப். ரிஸானா ஆகியோருக்கும் மற்றும் இப்புத்தகத்தின் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த ஜனாப் அஸார் வஸீர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கனிணி பிரிவில் கடமை புரியும் திருமதி ஏ. என். ஹிதாயா அவர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இப்பாடநூல் சம்பந்தமாக ஏதேனும் ஆலோசனைகளும் கருத்துக் களும் இருப்பின் மறுபதிப்பில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனவே இப்பணியில் ஈடுபட்ட சகலரது முயற்சியையும் எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன் உரிய பயனை அடைவதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக!

ஆமீன் !!

**மௌலவி எம். எச்.நூறுல் அமீன்**,
உதவிப்பணிப்பாளர்.
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

## உள்ளடக்கம்

**பக்கம்**


| | | |
|---|---|---|
| 01. | இஸ்லாமிய அகீதா | 1 |
| 02. | அகீதா சார்ந்த பிரிவுகள் | 45 |
| 03. | மஸாதிருஷ் ஷரீஆ (அடிப்படை மூலாதாரங்கள்) | 51 |
| 04. | துணை மூலாதாரங்கள் | 132 |

# அகீதாவும் மஷாதிருஷ் ஷரீஆவும் (இஸ்லாமியக் கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும்)

## நூல் அறிமுகம்

இஸ்லாமிய தர்மாச்சார்ய பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பாடவிதானத்தின் முதல் பகுதியாக "அல் அகீதா வமஷாதிருஸ் ஷரீஆ அமைகிறது. இப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட பாடநூல்தான் உங்கள் கைகளில் இருக்கின்றது.

இஸ்லாமிய வாழ்வு நெறியின் அடித்தளமாக அமையும் அகீதா (இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள்) மற்றும் மஷாதிருஸ் ஷரீஆ (இஸ்லாமிய சட்ட மூலாதாரங்கள்) பற்றி விளக்குவதற்காக இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அஹதிய்யா இறுதிப் பரீட்சைக்கான பாடவிதானத்திலும் இவ்விரு பகுதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் இங்கு அவை மேலும் விரிவாகவும் ஆழமாகவும் விளக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இங்கு வேறுபல அம்சங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

அகீதா பற்றிப் பேசப்படும் பகுதியில் அல்லாஹ் பற்றிய விசுவாசம், மலக்குகளும், ஜின்களும், வேதங்களும், நபிமார்களும், மறுமை நாள் போன்ற அடிப்படையான அம்சங்கள் சிறப்பாக ஆராயப்பட்டுள்ளன. அத்துடன் வரலாற்றில் இந்த நம்பிக்கைக் கோட்பாடுகளை கட்டிக்காக்க உழைத்த அமைப்புக்களான அஷ்அரிய்யாக்கள், மாதுரூதிய்யாக்கள் போன்றோர் பற்றிய விளக்கமும் இடம்பெறுகின்றது.

இஸ்லாமிய சட்டமூலாதாரங்கள் என்ற பகுதியில் குர்ஆனிய கலைகள் தொடர்பான விரிவான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. குர்ஆனை விளக்க ஒருவர் முயல்வதாயின் அவருக்குத் தேவைப்படும் அடிப்படையான ஞானங்களாக இவை அமைந்துள்ளன. குர்ஆன் வாழும் அற்புதமாக இருப்பதற்கான மிக முக்கிய சான்றுகள் இங்கு ஆராயப்படுகின்றன. குர்ஆனை கற்க முனையும் ஒருவர் அதனை ஏனைய நூல்களை அணுகுவதுபோன்று அணுகிவிடக்கூடாது என்பதற்காக அதன் இலக்குகள் அதன் தன்மைகள் பற்றிய விளக்கமும் இடம்பெறுகின்றது.

ஸுன்னாவைப் பற்றிய பகுதியில் அதன்பதவிளக்கம் அது தொகுக்கப்பட்ட முறை, ஹதீஸ்களை பாதுகாப்பதற்காக வரலாற்றில் கையளிக்கப்பட்ட அணுகுமுறைகள் பற்றியெல்லாம் விளக்கப்படுகிறது. குறிப்பாக எமது ஆரம்ப கால இமாம்கள் ஹதீஸ்களை போலிகளிட மிருந்து பாதுகாக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்க வையாகும். இப்பகுதியில் முஹத்திஸீன்கள் தொகுத்த ஹதீஸ் நூல்கள் பற்றியும் ஓரளவு விரிவான விளக்கம் இடம்பெறுகிறது. குர்ஆனை அணுகுவதற்கென தனியான முறைமைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பது போலவே ஹதீஸ்களை கற்பதற்கு முன்னரும் கவனிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் உள்ளன என்பது பற்றிய தெளிவும் வழங்கப்படுகிறது.

அஹதிய்யா இறுதிப் பரீட்சையில் இஸ்லாமிய சட்டத்தின் துணை மூலாதாரங்கள் பற்றி விரிவாக விளக்கப்படவில்லை. ஆனால் இப்பாடநெறியில் அது விரிவாக இடம்பெறுகிறது. மேலும் இஜ்திஹாத் பற்றியும் மத்ஹப்களின் தோற்றப் பின்னணிகள் பற்றியும் இப்பகுதியில் ஆராயப்படுகிறது.

பரீட்சார்த்திகள் தாம் ஏற்றுவிசுவாசித்துள்ள இஸ்லாத்தின் அடிப்படையான நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றியும் தாம் பின்பற்றும் இஸ்லாமிய சட்டங்களது மூலாதாரங்கள் பற்றியும் அவற்றை வரலாற்றில் பாதுகாக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றியும் அறிய இப்பாடப்பரப்பு பெரிதும் துணை செய்யும்.

**அஷ்ஷெய்க் எஸ். எச். எம். பளீல்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்.

ஜாமிஆ நளிமிய்யா கலாபீடம்,
பேருவளை.

# இஸ்லாமிய அகீதா


## இஸ்லாமிய அகீதா பற்றிய அறிமுகமும் பொது விளக்கமும்

இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகளைக் குறிக்க அகீதா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அகீதா என்ற சொல்லின் பன்மை வடிவமே அகாஇத் என்பதாகும். இஸ்லாமிய வரலாற்றில் தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ் போன்றவை தனித்தனி கலைகளாகத் தோற்றம் பெற்றது போல அகீதாவும் தனிக்கலையாக வளர்ச்சியடைந்தது. இஸ்லாத்தின் நம்பிக்கை சார்ந்த பகுதிகளை உள்ளடக்கியுள்ள அகீதா எனும் கலை பல்வேறு பெயர்களைக் கொண்டு வரலாற்றில் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இல்முல் பிக்ஹில் அக்பர், இல்முல் கலாம், இல்மு உஸூலித்தீன், இல்முத் தௌஹீத், இல்முன் நழ்ர் வல் இஸ்தித்லால் போன்ற பல்வேறு பெயர்களால் அறிமுகமாகிய அகீதா ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டில் "இல்முல் அகாஇத்" என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டது.

உள்ளத்தினால் ஆழமாக விசுவாசிக்க வேண்டிய நம்பிக்கை சார்ந்த ஷரீஆ சட்டங்களை அல்லது விதிகளை இக்கலை ஆராய்கிறது. மனித வாழ்வை இயக்கிச் செல்லும் அடிப்படைக் காரணியாக இந்த நம்பிக்கை சார்ந்த பகுதி காணப்படுகிறது. அல்லாஹ், மறுமை, மலக்குகள், வேதங்கள், தூதர்கள், கழாகத்ர் போன்ற ஈமானின் அடிப்படை அம்சங்களை அகீதா உள்ளடக்கியுள்ளது.

நடத்தை சார்ந்த பகுதி, நம்பிக்கை சார்ந்த பகுதி என இரண்டு பகுதிகளாக இஸ்லாமிய ஷரீஅத் நோக்கப்படுகிறது. எனினும், நடத்தை சார்ந்த விவகாரங்களை ஆராயும் கலையாக பிக்ஹ் விளங்குவது போன்று நம்பிக்கைக் கோட்பாடுகளை விளக்கும் கலையாக அகீதா காணப்படுகிறது. எனினும் அல்குர்ஆன் நம்பிக்கையையும், செயலையும் ஒன்றாக இணைத்து குறிப்பிடுகிறது.

"ஆயினும், எவர்கள் ஈமான் கொண்டு, நல்ல செயல்கள் புரிந்து, சத்தியத்தையும், பொறுமையையும் பரஸ்பரம் ஏவிக்கொண்டவர்களைத் தவிர" (103 : 3)



அகீதாவையும், வாழ்வையும் பிரித்து நோக்க முடியாது. தூய அகீதாவின் மீதே முஸ்லிமின் வாழ்வு கட்டியெழுப்பப்படுகிறது. ஒரு சிறந்த முஸ்லிமை உருவாக்குவதில் அகீதாவுக்கு கூடிய முக்கியத்துவமுள்ளது. நபி(ஸல்) அவர்கள் ஸஹாபாக்களை தூய அகீதாவின் அடிப்படையில் உருவாக்கினார்கள். அவர்களிடம் காணப்பட்ட உறுதியான நம்பிக்கை மிகப்பெரும் சாதனைகளை சாதிக்கச் செய்தது. எனவே, அகீதா என்பது வெறுமனே நம்பிக்கையாக மாத்திரமல்லாமல் வாழ்வோடு ஒன்றிணைந்ததாகவே இருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## இஸ்லாமிய அகீதாவின் உள்ளடக்கம்


இஸ்லாமிய அகீதா நான்கு பிரிவுகளாக நோக்கப்படுகின்றது. ஒவ்வொரு பிரிவினுள்ளும் பல உப பிரிவுகள் காணப்படுகின்றன.

(1) **இலாஹிய்யாத்** :- அல்லாஹ் பற்றிய நம்பிக்கையுடன் தொடர்பான ஆய்வுகள் இதில் உள்ளடக்கப்படுகின்றன. இறைவனுடைய ருபூபிய்யா, உலூஹிய்யா மற்றும் பண்புகள், திருநாமங்கள் இலாஹிய்யாத் என்ற பகுதியில் அடங்கியுள்ளன.

(2) **ரூஹானிய்யாத்** :- பௌதிக உலகிற்கு அப்பாற்பட்ட மலக்குமார்கள், ஜின்கள், ரூஹ் போன்ற மறைவான அம்சங்களோடு தொடர்பானவை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(3) நுபுவ்வாத்** :- நபிமார்களோடு தொடர்பானவற்றை ஆராயும் பகுதி நுபுவ்வாத் எனப்படுகிறது. நபிமார்களின் பண்புகள், பணிகள், தூதுத்து வத்தின் அவசியம் என்பவற்றோடு அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதங்கள், முஃஜிஸாக்கள் போன்றவையையும் இப்பகுதி கொண்டுள்ளது.

(4) **ஸம்இய்யாத்** :- கப்ர் மற்றும் மறுமை நிகழ்வுகளை உள்ளடக்கியதாக ஸம்இய்யாத் உள்ளது. கப்ர் நிகழ்வுகள், மறுமையின் அடையாளங்கள், உலகப் பேரழிவு, மீள எழுப்பப்படல், மஹ்ஷர் மைதான நிகழ்வுகள், விசாரணை, கூலிவழங்கல் போன்ற அனைத்து மறு உலக நிகழ்வுகளும் இதில் உள்ளடக்கப்படுகின்றன.



(1) **இலாஹிய்யாத்** :- நேரடியாக இறைவனுடன் சார்ந்த அம்சங்கள் அனைத்தும் இப்பகுதியில் உள்ளடங்குகின்றன. அவற்றில் முதன்மை அம்சமாக தௌஹீத் அமைகிறது.

- **தௌஹீத்**

இஸ்லாமிய நம்பிக்கையின் அடிப்படையே இறை நம்பிக்கையாகும். இறை நம்பிக்கையின் அடிப்படை தௌஹீதாகும். தௌஹீதின் அடிப்படையில் தான் இஸ்லாமிய மார்க்கம் அமைந்திருக்கின்றது. குர்ஆனின் மூல ஊற்றும் தௌஹீதாகும். இறைத் தூதர்களின் போதனைகளின் மையக்கருத்தும் தௌஹீதாகும். இஸ்லாம் போதிக்கும் தௌஹீதை ஏற்று வாழ்பவர்களே வெற்றியடைவார்கள். இத்தகைய தௌஹீதின் யதார்த்த நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தௌஹீதை பின்வருமாறு நோக்கலாம்.

(அ) தௌஹீத் ருபூபிய்யா
(ஆ) தௌஹீத் உலூஹிய்யா
(இ) தௌஹீதுல் அஸ்மா வஸ்ஸிபாத்

**(அ) ருபூபிய்யா**

பிரபஞ்சத்தையும், அதிலுள்ளவற்றையும் படைத்தவன் அல்லாஹ்தான். அவனே பிரபஞ்சத்தை ஆளுகிறான். அவனுக்கு இணைகிடையாது; நிகரற்றவன். அவன் விதித்த விதிகளையும், நியதிகளையும் யாராலும் மாற்றமுடியாது. உலகில் நன்மைக்கும் தீமைக்கும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணமாக இருப்பவன் அவனே. இத்தகைய அல்லாஹ்வின் இரட்சிப்போடு தொடர்பாக நம்பிக்கை கொள்வதே தௌஹீத் ருபூபிய்யாவாகும்.

தௌஹீதின் இப்பகுதியை வரலாற்றில் மறுத்தவர்கள் மிகவும் குறைவு. உலகைப் படைத்தாளும் இறைவன் ஒருவன் இல்லை என வாதிக்கும் நாஸ்திக வாதிகளே தௌஹீதின் இப்பகுதியை மறுத்தார்கள். மிகப்பெரும்பான்மையான மக்கள் தௌஹீத் ருபூபிய்யாவை ஏற்கின்றனர். உதாரணமாக, அரபுமக்கள் ஜாஹிலிய்யா காலத்திலும் தௌஹீதின் இப்பகுதியை ஏற்றே வாழ்ந்தனர். குர்ஆன் இதனை பல இடங்களில் உறுதிப்படுத்துகின்றது.

> "அவர்களிடம் நீங்கள் 'வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்? சூரியனையும், சந்திரனையும் வசப்படுத்தியவன் யார்?' என்று கேட்டால் "நிச்சயமாக 'அல்லாஹ்வே' என்று கூறுவார்கள்." (29 : 61)

"வானத்திலிருந்து நீரை இறக்கி, பூமி இறந்து போனதன் பின்னால் அதனை உயிர்ப்பித்தவன் யார்? என்று நீங்கள் அவர்களை கேட்டால் நிச்சயமாக அல்லாஹ்வே என்று அவர்கள் கூறுவார்கள்." (29 : 63)

அல்லாஹ்வுக்கு இணைவைத்து வணங்கிய அந்த அரபிகள் தௌஹீத் ருபூபிய்யாவை ஏற்று வாழ்ந்தனர் என்பதை மேற்கூறிய வசனங்கள் தெளிவுப்படுத்து கின்றன. தௌஹீதின் இப்பகுதியை மாத்திரம் ஏற்றுக்கொண்டதால் அவர்கள் மு.ஃ.மின்களாக ஆகிவிடவில்லை. மாற்றமாக அவர்கள் தௌஹீத் உலூஹிய்யாவை நிராகரித்தார்கள்.

### (ஆ) உலூஹிய்யா

அல்லாஹ்வை மட்டுமே வணங்கி அவனது சட்டங்களை மனப்பூர்வமாக ஏற்று வழிப்பட்டு நடத்தல், எந்தவகையிலும் அவனுக்கு இணை வைக்காமல் நடந்துகொள்ளல் என்பதே உலூஹிய்யா என்பதன் பொருளாகும். தௌஹீத் ருபூபிய்யாவோடு தௌஹீத் உலூஹிய்யா சேரும்போதே தௌஹீத் என்பதன் கருத்து பூரணமடைகின்றது. எனவே தான், அரபுமக்கள் தௌஹீத் ருபூபிய்யாவை மாத்திரம் ஏற்றுக் கொண்டமைக்காக முஸ்லிம்களாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனெனில், அவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைத்தார்கள். அல்லாஹ்வை நெருங்குவதற்காக, அவனிடம் தமக்காக பரிந்துரைப்பதற்காக நடுவர்களாக பல கடவுளர்களை ஆக்கிக்கொண்டார்கள்.

பழங்காலம்தொட்டே விக்கிரகங்களை கடவுளர்களாகக்கொண்ட வணக்கமுறை இருந்துவந்துள்ளது. நபி நூஹ்(அலை), நபி இப்ராஹீம் (அலை) போன்ற நபிமார்கள் இத்தகைய விக்கிரக ஆராதனைகளுக்கு எதிராகவே போராடினார்கள்.

அல்லாஹ் அல்லாதவற்றை கடவுளர்களாகக்கொள்வதும், மனிதர்கள் உருவாக்கிய சட்டங்களை ஏற்றுவாழ்வதும், வணக்க வழிபாடுகளை அல்லாஹ்வை விடுத்து வேறொன்றுக்காக நிறைவேற்றுவதும் தௌஹீத் உலூஹிய்யாவுக்கு முரணானவைகளாகும். இத்தகையவர்களை இணைவைப்பாளர்கள் என்றே இஸ்லாம் கருதுகிறது. நபிமார்கள் அனைவரினதும் பிரசாரத்தின் மூல ஊற்றாக தௌஹீத் உலூஹிய்யாவே இருந்தது.

உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் "நிச்சயமாக என்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹி அறிவிக்காமலில்லை (21 : 25)

"நாம் ஒவ்வொரு சமூகத்துக்கும் தூதர்களை அனுப்பி அல்லாஹ்வை வணங்குங்கள், தாகூத்களை தவிர்த்துகொள்ளுங்கள் என்று கட்டளை யிட்டோம்." (16 : 36)

### (இ) தௌஹிதுல் அஸ்மா வஸ்ஸிபாத்

அல்லாஹுத்தலா பூரணத்துவத்தின் அனைத்துப் பண்புகளையும் பெற்றவன், அனைத்துக் குறைபாடுகளிலிருந்தும் தூய்மையானவன், தனித்துவமானவன் என்று நம்பிக்கை கொள்வதே தௌஹீதுல் அஸ்மா வஸ்ஸிபாத்தாகும். அல்லாஹ் வுக்குரிய பெயர்கள், பண்புகளை எந்தவிதமான மாற்றமும் திருத்தமுமின்றி அப்படியே ஏற்றுக் கொள்வதோடு, படைப்புக்களை விட்டும் அவனைத் தூய்மைப்படுத்தலும் தௌஹீதுல் அஸ்மா வஸ்ஸிபாத்தில் அடங்கும்.

இவ்வகையில் நோக்கும்போது தௌஹீதுல் அஸ்மா வஸ்ஸிபாத் மூன்று அடிப்படைகளின் மீது எழுந்திருப்பதைப் புரிந்துகொள்ளலாம்.

1. அல்லாஹ்வை படைப்புக்களுக்கு நிகராக்குவதை விட்டும், குறைபாடு களைவிட்டும் தூய்மைப்படுத்தல்.

2. குர்ஆனிலும், ஸுன்னாவிலும் விபரிக்கப்பட்டுள்ள அல்லாஹ்வின் திருநாமங்களையும், பண்புகளையும் எந்தவித திரிபுகளுமின்றி விசுவாசித்தல்.

3. அல்லாஹ்வின் பண்புகளை புரிந்துகொள்வதில் எல்லைமீறிச் செல்லாதிருத்தல்.

அல்லாஹ் தன்னை தனக்கேயுரிய உயர்ந்த பண்புளாலும், திருநாமங்களாலும் அறிமுகப்படுத்தியுள்ளான். அவன் எத்தகைய குறைபாடுகளுமற்றவன். பூரணத்து வத்தின் அனைத்துப் பண்புகளையும் பெற்றவன். அவனுக்கு நிகராக, அவனது பண்புகளுக்கு ஒப்பாக யாருமே, எதுவுமேயில்லை. இந்த உண்மைகளை குர்ஆன் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளது.

"அவனைப் போன்று எதுவுமில்லை." (42 : 11)
"அவனுக்கு நிகராக எவருமில்லை." (112 : 4)
"நீங்கள் அல்லாஹ்வுக்கு உதாரணங்கள் கூறாதீர்கள்." (16 : 74)

### (ஆ) ரூஹானிய்யாத்

மலக்குமார்களை நம்பிக்கைக் கொள்வது ஈமானின் அடிப்படைகளுள் ஒன்றாகும். ஈமான் கொள்ளவேண்டிய சில விடயங்களை அல்குர்ஆன் தெளிவுபடுத்தும்போது பின்வருமாறு கூறுகிறது :

“(விசுவாசிகள்) யாவரும் அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் விசுவாசிக் கின்றனர்.” (2 : 285)

மலக்குமார்கள் புலனுக்கு உட்படாத மறைவானதொரு படைப்பினமாகும். அவர்களுக்கு பௌதீகத் தோற்றம் கிடையாது. ஒளியினால் படைக்கப்பட்ட மலக்குமார்கள் பற்றி மிகச்சரியாகத் தெரிந்தவன் அல்லாஹ் மாத்திரமே. மறைவான நம்பிக்கை ஒன்றாக விளங்கும் மலக்குகள் பற்றிய நம்பிக்கையை அல்லாஹ்வும், அவனது தூதரும் கூறிய அமைப்பில் நம்பிக்கைகொள்வது எமது கடமையாகும்.

“மலக்குகள் ஒளியினாலும், ஜின்கள் நெருப்புச் சுவாலையினாலும் ஆதம் (அலை) அவர்கள் மண்ணினாலும் படைக்கப்பட்டுள்ளார்கள். (முஸ்லிம்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மலக்குகள் மனிதர்களைப் போன்றவர்களல்லர். அவர்கள் ஒளியால் படைக்கப்பட்டுள்ளார்கள். அதனால் அவர்களின் அமைப்பிலும் செயலிலும் வேறுபாடுகள் இருக்கும். மலக்குகள் மனித கண்களுக்கு புலப்படமாட்டார்கள். அவர்களை சுய உருவில் பார்க்கமுடியாது. சிலவேளைகளில் மலக்குகள் நாய், பன்றி தவிர்ந்த வேறு உருவங்களில் காட்சியளிப்பர். ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஸஹாபாக்களுக்கு மத்தியில் மனித உருவில் சமூகமளித்துள்ளார்கள். இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு முன் மலக்குமார்கள் விருந்தாளிகள் போன்று சமூகமளித்ததாக அல்குர்ஆன் கூறுகிறது.

மலக்குகள் ஆண்களுமல்லர், பெண்களுமல்லர். ஜாஹிலிய்யாக் கால மக்கள் அவர்களை அல்லாஹ்வின் பெண் மக்கள் என்று கூறியபோது, அல்குர்ஆன் அதனை வன்மையாகக் கண்டித்தது. அவர்களுக்கு பெற்றோர்களோ, பிள்ளைகளோ இல்லை. மனிதனைப் போன்று பசி, தாகம், ஆசை, களைப்பு, தூக்கம், முதிர்ச்சி, தளர்ச்சி போன்றன ஏற்படாது.

மனித இனத்திலிருந்து மலக்குகள் வித்தியாசப்படுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. மலக்குகள் அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்படும் இயல்பை மாத்திரம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு மனோ இச்சைகளுக்கு எதிராகப் போராடவேண்டும் என்ற தேவையோ, தீமை உணர்வோ கிடையாது. மாற்றமாக அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டு அவனது ஏவல்களை பின்பற்றி நடக்கும் பண்பும் இயல்பும் கொண்டவர்களே அவர்கள். அல்லாஹ்வின் அனுமதியும் நாட்டமுமின்றி உலகில் எந்தவொரு காரியத்தையும் அவர்கள் செய்யமாட்டார்கள். எதனையும் சுயமாக செய்யும் ஆற்றலும் அவர்களுக்கில்லை. இந்த உண்மைகளை அல்குர்ஆன் பல இடங்களில் தெளிவுபடுத்தியுள்ளது.

அவர்கள் தங்களுக்கு மேலுள்ள தங்களது இரட்சகனை பயப்படுகிறார்கள். மேலும் தங்களுக்கு இடப்பட்ட கட்டளைகளையே செய்து கொண்டிருக்கின்றனர்" (16 : 50)

அல்லாஹ் அவர்களுக்கு ஏவியதில் ஒரு சிறிதும் மாறுசெய்யமாட்டார்கள். அவர்கள் தங்களுக்கிடப்பட்ட கட்டளைகளையே செய்து வருவார்கள்.

## மலக்குமார்களது பணிகள்

பல்வேறுபட்ட உயர்ந்த பணிகளை ஆற்றும் பொறுப்பை மலக்குகளுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான். அவற்றை பின்வரும் மூன்று பிரதான தலைப்புக்களுக்குள் உள்ளடக்க முடியும் :-

(அ) ஆத்மீக உலகோடு தொடர்பான செயல்கள்
(ஆ) பௌதீக உலகோடு தொடர்பான செயல்கள்
(இ) மனிதனோடு தொடர்புபடும் செயல்கள்

(அ) **ஆத்மீக உலகோடு தொடர்பான செயல்கள்** : மறைவான அல்லது கட்புலனுக்கு உட்படாத ஆத்மீக உலகோடு தொடர்பான பல்வேறு செயல்களை மலக்குமார்கள் நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுள்ளார்கள்.

(i) **அல்லாஹ்வைத் துதிசெய்து அவனுக்கு முழுமையாக கட்டுப் படுதல்.** "உம்முடைய இரட்சகனிடத்தில் இருப்பவர்கள் அவனுக்கு இபாதத் செய்வதை விட்டும் பெருமையடிக்கமாட்டார்கள். மேலும் அவர்கள் அவனை துதி செய்து அவனுக்கு ஸுஜூதும் செய்வார்கள்." (7 : 206)

(ii) **அர்ஷை சுமத்தல்.-**"அர்ஷை சுமந்துகொண்டிருப்பவர்களும், அதனை சுற்றி இருப்பவர்களும் தங்களின் இரட்சகனின் புகழைக் கொண்டு துதிசெய்கிறார்கள். இன்னும் அவனை விசுவாசிக்கிறார்கள். (40 : 7)

(iii) **சுவர்க்கவாசிகள் மீது ஸலாம் சொல்லி வரவேற்றலும் நரக வாசிகளை தண்டித்தலும்** :- "......... ஒவ்வொரு வாசலிலிருந்தும் மலக்குகள் இவர்களிடம் வந்து நீங்கள் (உங்கள் வாழ்க்கையில் கஷ்டங்களையும்) பொறுமையுடன் சகித்துக்கொண்டதன் காரணமாக உங்களுக்கு ஈடேற்றம் உண்டாகட்டும் (உங்களுடைய இந்த) இறுதி வீடு மிக்க நல்லதாயிற்று என்று கூறுவார்கள். (13 : 23, 24)

"அதில் (நரகில்) கடும் சித்தமுடைய பலமுள்ள மலக்குமார்கள் உள்ளனர்" (66 : 6)

(iv) **வஹியை கொண்டுவரல்** :- "யார் ஜிப்ரீலுக்கு விரோதியாக உள்ளாரோ அவருக்கு நீர் கூறுவீராக. நிச்சயமாக அவர் தாம் அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க உம் இதயத்தின் மீது குர்ஆனை இறக்கிவைத்தார்." (2 : 97)

(ஆ) **பௌதீக உலகோடு தொடர்பான செயல்கள்** :-

அல்லாஹ் பிரபஞ்ச செயற்பாடுகளைச் செய்ய பல பொறுப்புக்களை மலக்குகளுக்கு வழங்கியுள்ளான். அந்தவகையில் காற்றை அனுப்புதல், மழையை பொழிய வைத்தல், தாவரங்களை முளைக்கச் செய்தல் முதலான வேலைகளை எமது புலனுறுப்புக்களுக்கு அப்பால் நின்று மலக்குமார்கள் மேற்கொள்கிறார்கள். இவற்றை நிர்வகிப்பதற்காக பொறுப்பு வழங்கப்பட்ட மலக்குகள் அல்லாஹ்வின் கட்டளையின் பிரகாரம் செயற்படுகிறார்கள் என்று நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

(இ) **மனிதனோடு தொடர்புபடும் செயல்கள் :-**

மனித வாழ்வோடு மலக்குமார்கள் மிக நெருக்கமான உறவு வைத்திருக் கிறார்கள். மனிதன் உலகில் பிறக்கும் முன்பு கருவறையில் சிசுவாக இருப்பது முதல் மரணத்துக்குப் பின்னர் வரை அவனது வாழ்வின் அனைத்துப்பகுதிகளோடும் அவர்கள் சம்பந்தப்படுகிறார்கள்.

"கழிவறையில் இருத்தல், உடல் உறவுகொள்ளுதல் ஆகிய சந்தர்ப்பங்களைத் தவிர வேறு மற்றைய எல்லா வேளைகளிலும் உங்களை விட்டும் பிரியாதவர்கள் நிச்சயமாக உங்களோடு இருக்கிறார்கள். எனவே நீங்கள் அவர்களுக்கு வெட்கப்படுங்கள் மேலும் அவர்களை கௌரவப்படுத்துங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வோடு ஒருவன் மிக நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முனையும்போது மலக்குமார்களுடனான தொடர்பும் வலுவானதாக அமைந்து விடுகிறது. மனித வாழ்வோடு மலக்குகள் தொடர்புபடுவதை பல்வேறு வகையில் அல்குர்ஆனும், ஹதீஸும் எமக்கு தெளிவுபடுத்தியுள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு விளங்கிக் கொள்வோம் :-

(i) **நன்மை உணர்வை மனிதனில் ஏற்படுத்ததல்** :- சத்தியத்தையும், நன்மை செய்யும் உணர்வையும் மனித உள்ளத்தில் உண்டுபண்ணி ஆன்மீகப் பலத்தை ஏற்படுத்துவதில் மலக்குமார்களுக்கு பெரும் பங்குண்டு.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :-

"மலக்கைப் பொறுத்தவரையில் நன்மையை உணர்த்தி, சத்தியத்தை உண்மைப்படுத்துகிறார். யார் இந்த உணர்வை பெறுகிறாரோ அவர் அதனை அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்ததாகக் கருதி அவனைப் புகழட்டும். அதற்கு மாற்றமான உணர்வை யார் கண்டுகொள்கிறாரோ அவர் ஷைத்தானிடமிருந்து பாதுகாப்புத் தேடிக்கொள்ளட்டும்......... (திர்மிதி)

(ii) **மு.ஃ.மின்களுக்காக பிரார்த்தித்தல்** :- அல்லாஹ் தனது விசாலமான மன்னிக்கும் தன்மையாலும், அடியார்கள் மீதான அளவுகடந்த அன்பின் காரணமாகவும் மு.ஃ.மின்களுக்காக மன்னிப்பையும் அருளையும் வேண்டி பிரார்த்திக்குமாறு தன்னுடைய மலக்குகளுக்கு கட்டளையிட்டுள்ளான்.

"......... அவர்கள் (மலக்குகள்) விசுவாசிகளுக்காக பாவமன்னிப்பு கேட்கிறார்கள். எமது இரட்சகனே நீயோ மிகவும் விசாலமான அருளையும் அறிவையும் அனைத்திலும் கொண்டிருக்கிறாய். எனவே, தௌபா கேட்டு, உன்னுடைய பாதையை பின்பற்றியவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்குவாயாக. அவர்களை நரக வேதனையிலிருந்து காத்தருள்வாயாக ! (40 : 7)

இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :- "ஒவ்வொரு நாள் காலையிலும் இரண்டு மலக்குகள் பிரார்த்தனை செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் இறைவா கொடுக்காது தடுப்பவரை அழித்துவிடு என்றும் மற்றையவர் இறைவா செலவழிப்பவருக்கு பின்னால் கொடுத்துவிடு என்று பிரார்த்திப்பார். (புகாரி)

(iii) **ஒவ்வொரு நாளும் பஜ்ர், அஸர் தொழுகைகளுக்கு சமூகமளித்தல்** :- இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :- "இரவிலும் பகலிலும் மலக்குமார்கள் உங்களிடம் மாறிமாறி வருகிறார்கள். பஜ்ர், அஸர் தொழுகைகளின்போது ஒன்று சேருகிறார்கள். உங்களோடு இரவை கழித்தவர்கள் வானத்தை நோக்கி உயர்ந்து செல்வர். அப்போது அவர்களது இரட்சகன் தனது அடியார்களைப்பற்றி நன்கு அறிந்திருந்த நிலையிலும் பின்வருமாறு விசாரிப்பான் :- "எனது அடியார்களை நீங்கள் எப்படி விட்டுவிட்டு வந்தீர்கள்?" அப்போது அவர்களோ 'நாங்கள் அவர்கள் தொழுது கொண்டிருக்கும் நிலையில் சென்று, தொழுது கொண்டிருக்கும் நிலையிலே விட்டுவிட்டு வந்தோம்' என்பார்கள்." (புகாரி, முஸ்லிம்)

(iv) **அல்லாஹ்வை நினைவூட்டுகின்ற இடங்களுக்கு பிரசன்னமாகுதல்**:- அல்லாஹ்வை நினைவூட்டுகின்ற மனிதர்களையும் இடங்களையும் மலக்குமார்கள் விரும்புகிறார்கள். இத்தகைய மனிதர்களுக்கு மேலும் ஆத்மீகப்பலத்தை வழங்குவதற்கு அவர்கள் இருக்கும் இடங்களைத் தேடிச் செல்கிறார்கள். அல்லாஹ்வை ஞாபகப்படுத்துபவர்களைத் தேடி பாதையில் சுற்றிவரும் மலக்குமார்கள் இருக்கிறார்கள். அப்படி இறைநினைவில் ஒரு கூட்டம் இருப்பதை அவர்கள் கண்டால் அந்த இடத்தை நோக்கி விரைந்து தங்களது இறக்கைகளால் அவர்களை சூழ்ந்துகொண்டு அல்லாஹ்விடத்திலே அடியார்களைப் பற்றி பாராட்டிப் பேசுவதாக நபி(ஸல்) அவர்கள் மிக நீண்டதொரு ஹதீஸில் விளக்கியுள்ளார்கள்.

(v) **கல்விதேடச்செல்வோர் மற்றும் அதனை போதிப்பவர்களுக்காக பிரார்த்தித்தல்** :- இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :-"நிச்சயமாக அல்லாஹ்வும், அவனது மலக்குகளும், வானம் பூமியிலுள்ளோரும் மக்களுக்கு நல்லதை கற்றுக்கொடுப்போருக்கு ஸலவாத் சொல்கிறார்கள்." (திர்மிதி)

மலக்குமார்கள் மனிதர்களோடு தொடர்புபடும் சந்தர்ப்பங்கள் இன்னும் அதிகமாக காணப்படுகின்றன. மனிதர்களது செயல்களை பதிவுசெய்தல், உயிர்களைக் கைப்பற்றுதல், சுவர்க்கத்தைக்கொண்டு சுபசெய்தி சொல்லுதல் போன்ற மனித வாழ்வின் மிக முக்கியமான கட்டங்களில் மலக்குமார்களது பங்கேற்பு இருப்பதாக குர்ஆனும், ஹதீஸும் தெளிவுபடுத்துகின்றன. எனவே, மலக்குமார்கள் பற்றிய நம்பிக்கை ஈமானின் அடிப்படையாக இருப்பது போலவே, அதனூடாக மனிதவாழ்வில் நல்ல பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்படும் தன்மை கொண்ட மிக உயர்ந்த, கௌரவமான மலக்குமார்கள் எமது வாழ்வை அவதானித்து வருவதையும், எங்களுக்கான அவர்களது பிரார்த்தனையும், வாழ்த்தும் எப்போதும் இருப்பதையும் ஒரு முஸ்லிம் உணரும்போது அவனது வாழ்வில் மிக உயர்ந்த ஆத்மீக முன்னேற்றங்கள் ஏற்படும்.

**(2) ஜின்கள்**

ரூஹானிய்யாத் பகுதியில் உள்ளடங்கும் இன்னொரு அம்சமே ஜின்களாகும். ஜின் என்பது பகுத்தறிவுள்ள, நாட்ட சக்தி வழங்கப்பட்ட, பொறுப்புக்கள் கொடுக்கப்பட்ட மறைவானதொரு படைப்பாகும். குர்ஆனும், ஸுன்னாவும் ஜின்கள் பற்றி குறிப்பிடுவதன் மூலம் முஸ்லிம்கள் ஜின் இருப்பதை நம்பவேண்டியுள்ளது. ஜின், மனித அறிவுக்கு அப்பாற்பட்ட மறைவானதொரு இனமாக இருப்பதால் குர்ஆன், ஸுன்னா கூறுவதையே நாம் நம்பவேண்டும்.

ஜின் இனத்தின் அடிப்படை மற்றும் அவர்களில் காணப்படும் பிரிவுகள், அவர்கள் ஒவ்வொரு சாராரும் போய்ச்சேரும் இடம், அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பாக வஹி தெளிவுபடுத்தியுள்ளது.

மனித இனம் தோன்ற முன் ஜின்வர்க்கம் நெருப்பினால் படைக்கப்பட்டதை குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

> “தட்டினால் சத்தம் வரக்கூடிய மாற்றமடைந்த கறுப்புக் களிமண்ணி லிருந்து மனிதனை நாம் படைத்தோம். மேலும் ஜின்னை அதற்கு முன்பதாக கொடிய உஷ்ணமுள்ள நெருப்பிலிருந்து நாம் படைத்தோம்.” (15 : 26, 27)

மனிதனைப் போன்று பொறுப்பு வழங்கப்பட்ட ஓர் இனமே ஜின் வர்க்கமாகும். அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்காகவே மனித, ஜின் வர்க்கங்கள் படைக்கப் பட்டுள்ளன. ஜின் இனத்துக்கான போதிய வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. ஜின்கள் தங்கள் மீது சுமத்தப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதைப் பொறுத்து மறுமை வாழ்வு அமையும். மனிதர்கள் போன்று ஜின்கள் பொறுப்புக்கள் வழங்கப்பட்டவர்கள் என்பதை குர்ஆன் பல வசனங்களில் விளக்குகிறது.

“ஜின், மனிதவர்க்கத்தினரே! என்னுடைய வசனங்களை உங்களுக்கு ஓதிக்காண்பித்து, உங்களுடைய இந்நாளின் சந்திப்பை பற்றி உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் தூதர்கள் உங்களிலிருந்தே உங்களுக்கு வரவில்லையா? என்று கேட்பான். அதற்கவர்கள் ‘நாங்களே எங்களுக்கு எதிராக சாட்சி கூறுகிறோம்’ என்று கூறுவார்கள். உலக வாழ்வு அவர்களை ஏமாற்றிவிட்டது. நிச்சயமாக அவர்கள் நிராகரிப்பாளர்களாக இருந்தார்கள் என தங்களுக்கு பாதகமாக அவர்கள் சாட்சியும் கூறுவர்.” (6 : 130)

“ஜின்வர்க்கத்தையும், மனித வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காக அன்றி நான் படைக்கவில்லை.” (51 : 56) என அல்லாஹ் கூறுகிறான்.

ஜின்களில் அல்லாஹ்வை ஏற்று பின்பற்றி வாழும் நல்ல முஸ்லிம்களும், அல்லாஹ்வை ஏற்காத பாவிகளும் இருக்கிறார்கள். இந்த உண்மையை குர்ஆன் ஸூரதுல் ஜின்னிலே குறிப்பிடுகிறது. நல்லவர்களிலும் பல்வேறு படித்தரங் கொண்டவர்கள் காணப்படுகிறார்கள்.

“நிச்சயமாக எம்மில் நல்லவர்களும் இருக்கின்றனர். அதுவல்லாதோரும் இருக்கிறார்கள். நாம் பல்வேறு வழிகளையுடையோராக இருந்தோம்” என்று ஜின்கள் கூறினார்கள்.” (72 : 05)

“முற்றிலும் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிந்து வாழும் முஸ்லிம்களும் இருக்கிறார்கள். அநியாயக்காரர்களும் எம்மிலே இருக்கின்றனர்.” (72 : 14)

## ஜின்களிடம் மறைவான அறிவில்லை

புலன்களுக்கு உட்படாத மறைவானவை பற்றிய அறிவை அல்லாஹ் மாத்திரமே அறிந்துவைத்துள்ளான். இத்தகைய மறைவான அறிவை அல்லாஹ் யாருக்கும் அறிவிப்பதில்லை. மக்களுக்கு தூதை எத்திவைப்பதற்காக தான் தெரிவு செய்த தூதர்களுக்கு அவன் நாடிய பிரகாரம் மறைவான உலகு பற்றி அறிவிக்கிறான்.

“மறைவானவற்றை அறிந்த அல்லாஹ் அது பற்றி யாருக்கும் அறிவிக்கமாட்டான். தூதரில் தான் தெரிவு செய்து பொருந்திக் கொண்டவருக்குத் தவிர.” (72 : 26, 27)

நபி (ஸல்) அவர்களது காலத்து அரபிகள், ஜின்களுக்கு மறைவான அறிவு இருப்பதாக நம்பியிருந்தார்கள். எனவே, தங்களுக்கு ஏற்படும் துன்பங்களையும், பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக ஜின்களை அணுகினார்கள். இந்நிலையில் ஜின்களில் ஒரு சாரார், நபி(ஸல்) அவர்கள் குர்ஆனை ஓதுவதை செவிமடுத்துச் சென்று, தங்களுக்குள்ளால் பேசிக் கொண்டதை குர்ஆன் ஸூரதுல் ஜின்னில் தெளிவுபடுத்துகிறது. அவர்கள் தங்களது உரையாடலிலே எதிர்காலம் குறித்த அறிவோ, மறைவான அறிவோ தங்களுக்கு இல்லை என்பதாக குறிப்பிடுவதை குர்ஆன் சொல்கிறது.

> "பூமியில் உள்ளோருக்கு இதைக்கொண்டு தீங்கு நாடப்பட்டிருக்கின்றதா? அல்லது அவர்களின் இரட்சகன் அவர்களுக்கு நன்மை நாடியிருக்கின்றானா என்பதை நிச்சயமாக நாங்கள் அறியமாட்டோம்." 72 : 10)

எனவே ஜின்களிடம் மறைவான அறிவு எதுவுமில்லை என்பதை ஜின்களே ஏற்றுக்கொண்டார்கள். ஜின்களுக்கு மறைவான விடயங்கள் தெரியும் என நம்புவது இணைவைப்பாகும். அல்லாஹ்வுக்கு மட்டுமே உரிய மறைவான உலகு குறித்த அறிவை, இன்னொரு படைப்புக்கு இருப்பதாக நம்புவது இணைவைப்பாகவும், நிராகரிப்பாகவும் மாறிவிடுகிறது. ஜின்கள் மனிதர்களைப் போன்ற அல்லாஹ்வின் படைப்பாகும். அவர்களிடமும் பலவீனங்கள் காணப்படுகின்றன. இந்தவகையில் நபி சுலைமான் (அலை) அவர்களது மரணம்பற்றி பேசும்போது அறிவு ரீதியாக எந்தளவுக்கு ஜின்கள் பலவீனமானவர்கள் என்பதை குர்ஆன் பின்வரும் வசனத்துக்கூடாக விளக்குகிறது.

> "அவர் மீது நாம் மரணத்தை விதியாக்கிய போது, அவரது மரணத்தைப்பற்றி அவர் சாய்ந்திருந்த அவரது தடியை அரித்துவிட்ட கறையானைத் தவிர, வேறெதுவும் அந்த (ஜின் இனத்துக்கு) அறிவிக்கவில்லை. அவர் கீழே விழுந்த போது ஜின்கள் அவர் மரணித்த செய்தியைப் புரிந்து கொண்டார்கள். அவர்கள் மறைவானவற்றைப்பற்றி அறிந்திருந்தால் இத்தகைய இழிவான வேதனைக்கு அகப்பட்டிருக்க மாட்டார்கள்." (34 : 14)

## இப்லீஸும் ஷைத்தானும்

இப்லீஸ் என்ற சொற்பிரயோகம் அரபு அல்லாத வேற்று மொழிச் சொல் என்றும் இப்லாஸ் என்ற மூலச் சொல்லிலிருந்து உருவாகிய அறபுமொழிச் சொல் என்றும் இரு வேறுபட்ட கருத்துக்களுண்டு. இப்லாஸ் என்பது அல்லாஹ்வின் அருளைவிட்டும் நம்பிக்கையிழக்க வைத்தல், அல்லது நன்மையை விட்டும்

தூரமாக்குதல் போன்ற கருத்துக்களைக் குறிக்கிறது. எனவே, இப்லீஸ் என்பதன் பொருள் இறையருளில் நிராசையடைந்து தூரமாகியவன், நன்மைகளை விட்டும் தூரப்படுத்தப்பட்டவன் என்பதாகும். இப்லீஸ் ஷைத்தான்களின் தலைவனாவான்.

மலக்குமார்கள் நன்மையையும் சீர்திருத்தத்தையும் கொண்டு வருவதற்கு உழைக்கும் அல்லாஹ்வின் படைகள் என்றால் இப்லீஸும், அவனோடு இருக்கும் ஷைத்தான்களும் உலகில் தீமையையும், குழப்பத்தையும் ஏற்படுத்துவதற்காக செயற்படும் அல்லாஹ்வின் எதிரிகளாவர். எனவே, மலக்குகளுக்கு நேர் எதிரானவர்களே ஷைத்தான்களாவர். மலக்குமார்களின் பணிகள் எப்போதும் அல்லாஹ்வை வணங்குதல், வாழ்வை விருத்தியடையச் செய்தல், பிரபஞ்சத்தில் ஒழுங்கை ஏற்படுத்தல், ஒற்றுமையையும் அன்பையும் வளர்த்தல், சத்தியத்தை நோக்கி வழிகாட்டுதல் முதலானவற்றை நோக்காகக் கொண்டிருக்கும். ஆனால் ஷைத்தான்களோ எப்போதும் அல்லாஹ்வுக்கு எதிராக தொழிற்படுதல், பிரிவினையையும் அழிவையும் குழப்பத்தையும் உண்டுபண்ணுதல், குடும்ப உறவுகளை அறுத்தல், இறைவனை விட்டும் மக்களை தூரமாக்குதல் போன்றவற்றையே நோக்கமாகக் கொண்டுள்ளனர். உலக வரலாற்றில் ஏற்பட்ட அனைத்து நிராகரிப்புகளுக்கும் இணைவைப்புக்கும் குழப்பங்களுக்கும் சமூக அழிவுகளுக்கும் காரணமாக இருந்தவர்கள் இத்தகைய ஷைத்தான்களே.

> “அல்லாஹ் மீது சத்தியமாக உமக்கு முன்பிருந்த பல சமூகத்தார் களுக்கு நாம் தூதர்களை அனுப்பிவைத்தோம். அப்போது ஷைத்தான் அவர்களுக்கு அவர்களது தீய காரியங்களை அலங்கரித்துக் காண்பித்தான். ஆகவே இன்றைய தினம் அவர்களுக்கு அவனே தோழனாக இருக்கிறான். மறுமையில் அவர்களுக்கு மிக துன்புறுத்தும் வேதனையுண்டு.” (16 : 63)

ஷைத்தான் எப்படியாவது மனிதனை அல்லாஹ்வோடு தொடர்புபடாது வைப்பதற்காக ஒவ்வொரு பாதையிலும் இருந்து செயற்படுகிறான். இதனை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

“ஷைத்தான் மனிதனுக்கு முன்னால் பல பாதைகளில் அமர்ந்து கொள்கிறான். இஸ்லாத்தின் பாதைக்கு முன்னால் அமர்ந்து ‘நீ உன்னுடையதும், உன்னுடைய மூதாதையர்களதும் மார்க்கத்தை விட்டு விட்டு இஸ்லாத்தை தழுவுகிறாயா?’ என்று கேட்பான். அவனுக்கு மாறுசெய்து இஸ்லாத்தையும் தழுவிவிட்டால் ஹிஜ்ரத்தின் பாதையில் அமர்ந்து “உனது பூமியையும், உனது வானத்தையும் விட்டு விட்டு ஹிஜ்ரத் செல்லப் போகிறாயா? என்று கேட்பான்.” அவனுக்கு

மாற்றமாக ஹிஜ்ரத்தும் சென்றால், பின்னர் ஜிஹாதுடைய பாதையில் அமர்ந்து கொள்வான். 'சொத்தையும், உயிரையும் அழிவுக்கு உட்படுத்தும் போராட்டத்தில் கலந்து, நீ மரணிக்கப் போகிறாயா? உன்னுடைய பெண்பிள்ளைகளை திருமணம் முடித்து வைக்கவும், உனது சொத்துக்களை பகிர்ந்தளிக்கவும் யார் இருக்கப் போகிறார்கள்?' என்று கூறுவான். அவனுக்கு மாற்றமாக போராட்டத்தில் குதிப்பான். இப்படியெல்லாம் யார் செய்து மரணிக்கிறாரோ அவனை சுவனத்தில் நுழைவிப்பது அல்லாஹ்வின் கடமையாகும். (முஸ்னத் அஹ்மத்)

ஒவ்வொரு மனிதனோடும் ஒரு ஷைத்தான் இருக்கிறான். அல்லாஹ் மனிதனுக்கு நேர்வழிகாட்டவும், உதவவும் மலக்கை நியமித்திருப்பது போல சந்தேகத்தை உண்டுபண்ணி, தீமையை அலங்கரித்துக் காட்டி, வழிகேட்டை நோக்கி இட்டுச்செல்ல ஷைத்தானையும் ஒவ்வொரு மனிதனுக்கும் படைத்துள்ளான்.

> "அவ்வாறே! ஒவ்வொரு நபிக்கும் மனிதரிலும், ஜின்களிலுமுள்ள ஷைத்தான்களை விரோதியாக நாம் ஆக்கியிருந்தோம்." (6 : 112)

> நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இப்னுமஸ்ஊத் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். "உங்களில் ஒவ்வொருவருக்கும் ஜின்னொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்." அல்லாஹ்வின் தூதரே, உங்களுக்குமா என்று அவர்கள் கேட்டதற்கு நபி (ஸல்) அவர்கள் "ஆம் எனக்கும் தான்" என்று கூறிவிட்டு, "என்றாலும் எனக்கு அல்லாஹ் அவனுக்கு எதிராக உதவி செய்தான். அவனோ இஸ்லாத்தைத் தழுவிவிட்டான். அவன் எனக்கு நன்மையைத் தவிர வேறு எதனையும் ஏவமாட்டான்" என்றார்கள். (ஆதாரம் - முஸ்லிம்)

மனிதனை அல்லாஹ் உலகிலே சோதனைக்காகப் படைத்துள்ளான். எனவே, உலகில் நன்மைகளையும், தீமைகளையும் ஏற்படுத்தி, மலக்குகளையும், ஷைத்தான்களையும் படைத்து இத்தகைய இரண்டில் அவர்கள் எதனைத் தெரிவு செய்கிறார்கள் என்பதில்தான் சோதனையின் வெற்றி தோல்வி தங்கியுள்ளது. இந்நிலையில் ஒருவன் ஷைத்தானை எப்போதும் எதிரியாகவே கொண்டு வாழ வேண்டும் என குர்ஆன் கட்டளையிட்டுள்ளது.

> "நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு எதிரியாவான். அவனை நீங்கள் எதிரியாகவே எடுத்துக்கொள்ளுங்கள். சுட்டெரிக்கும் நரகவாதிகளாக்கு வதற்காக அவன் தனது கட்சிக்கு அழைக்கிறான்." (35 : 6)

ஷைத்தானை சவாலாக கொண்டுவாழும் அதேவேளை ஈமானை உறுதிப் படுத்திக் கொள்வதும், உளத்தூய்மையை வளர்த்துக்கொள்வதும் ஷைத்தானின் ஆதிக்கத்திலிருந்து ஒரு முஸ்லிமைப் பாதுகாக்கிறது.

## (3) நுபுவ்வத்

இஸ்லாமிய அகீதாவின் மற்றொரு பிரதான பகுதியாக நுபுவ்வத் காணப்படுகிறது. நபிமார்களை விசுவாசித்தல், அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதங்களை நம்புதல் ஆகிய இரு பகுதிகளும் நுபுவ்வத் என்பதில் உள்ளடங்குகின்றன. வேதங்களையும் தூதர்களையும் விசுவாசித்தல் என்பன ஆறு அடிப்படை நம்பிக்கைகளுள் பிரதானமான இரண்டு அம்சங்களாகும்.

**நுபுவ்வத்**

↙ ↘

| நபிமாரை விசுவாசித்தல் | வேதங்களை விசுவாசித்தல் |
|---|---|

### I. நபிமார்களை விசுவாசித்தல்

உலகத்தாருக்கு நேர்வழிகாட்டுவதற்காக அல்லாஹ்வினால் அனுப்பி வைக்கப்பட்ட நபிமார்களை ஈமான் கொள்வதும், அவர்களுக்கு மத்தியில் எந்தவித வேறு பாட்டையும் ஏற்படுத்தாதிருப்பதும் ஒரு முஸ்லிமின் அடிப்படைக் கடமையாகும். இதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான் :-

"அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கிவைக்கப்பட்டவற்றையும், இப்றாஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், ய.்.கூப் அவர்களது சந்ததியினருக்கு இறக்கி வைக்கப்பட்டவற்றையும், மூஸா, ஈஸா ஆகியோருக்கு வழங்கப்பட்டவற்றையும் தங்களது இரட்சகனிடமிருந்து நபிமார்களுக்கு வழங்கப்பட்டதையும் ஈமான் கொண்டுவிட்டோம் என்றும், அவர்களுக்கு மத்தியில் யாரையும் நாம் பிரித்து நோக்கமாட்டோம். நாங்கள் அவனுக்கு கட்டுப்பட்ட முஸ்லிம்களாகவே இருக்கிறோம் என்றும் கூறுங்கள்" (2 : 136)

"தூதரும், மு.்.மின்களும் அல்லாஹ்வினால் இறக்கிவைக்கப்பட்டவற்றை ஈமான் கொண்டார்கள். அல்லாஹ், மலக்குமார்கள், வேதங்கள், தூதர்களை ஈமான் கொண்ட அனைவரும், அல்லாஹ்வின் தூதர்களுக்கு மத்தியில் எத்தகைய வேறுபாட்டையும் ஏற்படுத்தமாட்டோம் என்று கூறி நாம் அவனுக்கு செவிமடுத்து கட்டுப்பட்டுவிட்டோம் என்று கூறுகிறார்கள்." (2 : 285)

நபிமார்களை விசுவாசிப்பதும், அவர்களுக்கு மத்தியில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தாதிருப்பதும் கடமை போலவே அவர்களை நம்புவதும் கடமை என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

"அல்லாஹ், மறுமைநாள், மலக்குகள், வேதங்கள், நபிமார்களை ஈமான் கொள்வதே நன்மையாகும்." (2 : 177)

இறைத்தூதர்களை விசுவாசிக்காதிருப்பதும் அவர்களுக்கு மத்தியில் வேறுபாடு காண்பதும் அவர்களிற் சிலரை விசுவாசித்து, இன்னும் சிலரை விசுவாசிக்காதிருப் பதும் குப்ர் என குர்ஆன் குறிப்பிடுகின்றது.

"அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நிராகரித்து, அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கு மத்தியில் பிரிவினை ஏற்படுத்த விரும்புகின்றவர்களும், சிலரை விசுவாசித்து, சிலரை நிராகரித்து விட்டதாகவும் கூறுகின்றவர்களும், மேலும் அவர்களுக்கு மத்தியில் வேறொரு பாதையை தெரிவு செய்வோரும் உண்மையான நிராகரிப்பவர்களாவர்." (4 : 150, 151)

அல்லாஹ் மனித சமுதாயத்துக்கு வழிகாட்டுவதற்காக உலகிற்கு அனுப்பிவைத்த நபிமார்களில் சிலரைப் பற்றி அல்குர்ஆனிலே குறிப்பிட்டிருக் கிறான். இன்னும் பலரை அல்குர்ஆன் குறிப்பிடவில்லை. அனைத்து நபிமார்களையும் ஈமான் கொள்வது முஸ்லிமினது கடமையாகும்.

"நாம் உங்களுக்கு முன்பு பல தூதர்களை அனுப்பி வைத்தோம். அவர்களிற் சிலரை நாம் உங்களுக்கு வரலாறாக கூறினோம். இன்னும் சிலரைப் பற்றி நாம் கூறவில்லை. (40 : 78)

இருபத்தைந்து நபிமார்களின் பெயர்களை அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. சில நபிமார்களை படிப்பினைக்காக மிகவும் விரிவாக விளக்கியுள்ளது. எந்தவொரு சமூகத்துக்கும் அல்லாஹ் வழிகாட்டலை வழங்காது இருக்கவில்லை. இதனை குர்ஆன் பல இடங்களில் வலியுறுத்திச் சொல்கிறது.

"அல்லாஹ் மீது சத்தியமாக உங்களுக்கு முன்னர் பல தூதர்களை நாம் அனுப்பிவைத்தோம்" (33 : 40)

"எந்தவொரு சமூகத்துக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் வராமலிருக்கவில்லை." (35 : 24)

"ஒவ்வொரு சமுதாயத்துக்கும் ஒரு தூதர் இருக்கிறார்." (10 : 48)

“ஒவ்வொரு சமுதாயத்துக்கும் நேர்வழிகாட்டக்கூடியவர் இருக்கிறார்” (13 : 7)

ஒவ்வொரு சமுதாயத்துக்கும் அல்லாஹுத்தஆலா அந்தந்த சமூகத்திலிருந்து நபிமார்களை அனுப்பிவைத்தான். ஒரு சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வாகவும் அங்குள்ள தீமைகளை அழிப்பதை இலக்காகக் கொண்டும் தூதர்கள் அனுப்பிவைக்கப்பட்டார்கள். ஷிர்க், ஒழுக்கப் பிரச்சினை, வியாபார மோசடி, அரசியல் அடக்குமுறை போன்ற பல்வேறு தீமைகள் ஒவ்வொரு சமூகத்திலும் மிகைத்துக் காணப்பட்டன. அவற்றை அழிப்பதை பிரதான நோக்கமாகக் கொண்டு அவர்கள் செயல்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் மறுமை வரைக்கும் இறுதி நபியாக வந்தமையினால் உலகில் தோன்றும் அனைத்துப் பிரச்சினைக்கும் அவர்கள் தீர்வுகளை முன்வைத்தார்கள்.

### தூதுத்துவத்தின் நோக்கம்

அல்லாஹ் உலகத்தாருக்கு வழிகாட்டுவதற்காக தூதர்களை அனுப்பி வைத்தான். அல்லாஹ்வை வணங்கி, அவனது மார்க்கம் மாத்திரமே உலகில் நிலைநாட்டப்படல் வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு உலகிற்கு நபிமார்கள் அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

“நாம் உமக்கு முன்னர் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் என்னைத் தவிர வேறு கடவுள் கிடையாது; என்னை மாத்திரமே வணங்குங்கள் என நாம் வஹி அறிவித்தோம்.” (21 : 25)

“நாம் ஒவ்வொரு சமுதாயத்துக்கும் தூதரை அனுப்பி நீங்கள் அல்லாஹ்வை வணங்கி தாகூத்களை தவிர்த்துக் கொள்ளுங்கள் எனக் கட்டளை பிறப்பித்தோம்.” (16 : 36)

### ரஸூல்மார்களின் பண்புகள்

அல்லாஹ் ரஸூல்மார்களை மிக உயர்ந்த பணிக்காக தெரிவு செய்துள்ளான். மகத்துவமிக்க பணியை மிகச் சிறப்பாக மேற்கொள்ள தகுதியான பண்புகள் காணப்பட வேண்டும்.

தூதர்கள் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டுவதற்காக வந்தவர்களாவர். இந்தவகையில், அல்லாஹ் மனித இனத்துக்கு வழிகாட்ட அவர்களிலிருந்து தூதர்களை தெரிவு செய்து அனுப்பி வைத்தான். மலக்குமார்கள் தூதர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பின் அவர்கள் மனிதர்களுக்கான முன்மாதிரியாக இருக்க முடியாது. ஏனெனில், அவர்களது உணர்வுகள், இயல்புகள், பணிகள் அனைத்தும் மனிதர்களிலிருந்து மிகவும் வித்தியாசமானவைகளாகும்.

மனிதர்கள் அல்லாஹ்வின் தூதர்களாக வந்தபோது அவர்களது சமூகங்கள், அவர்கள் மனிதர்கள் என்ற காரணத்தை வைத்து நிராகரிக்க முன் வந்தமையை அல்குர்ஆன் பல இடங்களில் முன்வைக்கின்றது.

"நீங்கள் எங்களைப் போன்றே மனிதர்கள். நீங்கள் எங்களது மூதாதையர்கள் வணங்கி வந்தவற்றைவிட்டும் எங்களை தடுப்பதற்கு விரும்புகின்றீர்களா? எங்களுக்கு மிகத் தெளிவான ஆதாரத்தைக் கொண்டு வாருங்கள் என்று நபிமார்களைப் பார்த்து அவர்கள் கூறினார்கள். அவர்களது தூதர்கள் அவர்களுக்கு நாங்கள் உங்களைப் போன்று மனிதர்கள் தான், என்றாலும் அல்லாஹ் அவனது அடியார்களில் தான் விரும்பியோருக்கு அருள்பாலித்தான் என்று கூறினார்கள்." (14 : 10, 11)

மனிதர்களுக்கு வழிகாட்டுவதற்கு அல்லாஹ் ஆண்களையே தெரிவு செய்தான். நபித்துவம் என்பது ஒரு சாதாரண பதவியல்ல. அது மிகவும் பொறுப்புவாய்ந்த பணியாகும். சமூகத்தோடு ஒன்றாக இருந்து தனிமையாகவும், கூட்டாகவும், இரவு பகல் வேறுபாடின்றி மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு கடமையான பணி தான் நுபுவ்வத்தாகும். இதனை ஆண்களிலும் மிக உறுதிவாய்ந்த பலம் மிக்கவர்களே சுமக்கமுடியும். இந்தவகையில் ஆண்கள் நபித்துவப் பொறுப்பை சுமக்க மிகவும் தகுதி பெற்றவர்கள். அல்குர்ஆன் நபிமார்களை ஆண்களிலிருந்து தெரிவு செய்ததாக குறிப்பிடுகின்றது. "(நபியே!) உங்களுக்கு முன்னரும் (மனிதர்களில் ஆண்களைத் தவிர வேறொருவரையும் நாம் நம்முடைய தூதராக அனுப்பவில்லை..........." (21 : 7)

நபியாக இருப்பவர் பூரண அறிவும் விவேகமும் பலமான மனன ஆற்றலும் பெற்றவறாக இருத்தல் அவசியமாகும். மிகவும் உறுதியான ஆதாரங்களை முன்வைக்க வேண்டியவர்களே நபிமார்களாவர். அவர்களிடத்தில் மறதியோ, பொடுபோக்கோ காணப்பட முடியாது. அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய

வழிகாட்டல்களை அதே வடிவத்தில் எத்திவைக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தவகையில் நபிமார்களிடத்தில் புத்திகூர்மை, விவேகம்,(பதானத்) என்பன நிறைவாக காணப்பட்டதை நபிமார்களின் வரலாறுகளைப் பார்க்கும் போது புரிந்து கொள்ள முடிகின்றது.

நபிமார்கள் பாவம் செய்வதிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் அரபுமொழியில் இதனை "இஸ்மத்" என்பர். இஸ்மத் என்பதற்கு மொழியில் 'பாதுகாத்தல்' என்பது பொருளாகும். சிலர் இஸ்மத் என்பதை அமானா என்றும் வழங்குவர். அல்லாஹ்வுடைய ஏவல், விலக்கல்களுக்கு முரணில்லாதவாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வதை இது குறிக்கிறது. பாவங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல், அல்லாஹ்வின் ஏவல், விலக்கல்களில் அல்லாஹ்வுக்கு நம்பிக்கையாக நடந்து கொள்ளுதல் என்பன நபிமார்களின் முக்கிய பண்புகளாகும். எனவே, ஒரு தூதரிடம் ஏமாற்று, துரோகம் போன்ற எதிர்ப்பண்புகள் காணப்பட முடியாது. நபிமார்கள் தீமைகளில் சம்பந்தப்பட்டு விடாமல் இத்தகைய விசேட ஆற்றலை அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியுள்ளான்.

நபிமார்களது நம்பிக்கைகள், கருத்துக்கள், நடத்தைகள், குண இயல்புகள் அனைத்தும் மனிதர்களால் முன்னுதாரணங்களாகக் கொண்டு பின்பற்றப்பட இருப்பதனால் அவர்கள் பாவங்கள், தீமைகளில் சம்பந்தப்படாதிருப்பது மிகவும் அவசியமாகும். அவர்கள் அனைத்திலும் சிறந்த முன்மாதிரிகளாக விளங்க வேண்டும். எனவேதான், நபிமார்களைப் பற்றி அல்லாஹுுத்தஆலா பின்வருமாறு சிலாகித்துக் குறிப்பிடுகிறான்.

"உங்களுக்கு அவர்களிடத்தில் சிறந்த முன்மாதிரி இருக்கிறது" (60 : 6)

"உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடத்தில் சிறந்த முன்மாதிரி இருக்கிறது." (33 : 21)

குப்ர், ஷிர்க் என்பன மிகப் பெரும் பாவங்களாகும். நபிமார்களும் ரஸூல்மார்களும் நுபுவ்வத்துக்கு முன்னரும் பின்னரும் அவைகளிலிருந்து முழுமையாக பாதுகாக்கப்பட்டார்கள். பெரும் பாவங்களை வார்த்தை மற்றும் செயலினால் செய்வதிலிருந்தும் பாதுகாக்கப்பட்டார்கள்.

**5. பிரசாரத்தில் உண்மை, நேர்மையைக் கடைப்பிடித்தல் :**

நபிமார்கள் எப்போதும் உண்மை பேசுபவர்களாகவும் நேர்மையைக் கடைப்பிடிப்ப வர்களாகவும் இருந்தார்கள். பொய்யுரைத்தல் என்ற பண்பு அவர்களிடம் கொஞ்சமேனும் இருக்கவில்லை. அல்லாஹ் அவர்களுக்கு இறக்கிய கட்டளைகளை மக்களுக்கு முழுமையாக எத்திவைப்பது தூதர்களின் அடிப்படைப் பணியாகும்.

> “தூதரே உமது இரட்சகனிடமிருந்து உமக்கு இறக்கிவைக்கப்பட்டவற்றை எத்திவைப்பீராக. நீர் அவ்வாறு செய்யாதுவிட்டால் அவனது தூதை எத்திவைக்காதவராவீர்...” (5 : 67)

பிரசாரப் பணியில் அமானிதத்தைக் கைக்கொள்வது உண்மைக்கு இன்றியமையாத பண்பாகும். எனவே நபிமார்கள் தமக்கு இறைவனால் வழங்கப்பட்ட எந்தக் கட்டளையையும் மறைக்காமல், மாற்றாமல் மனித சமூகத்துக்கு அமானிதமாக முன்வைத்தவர்களாவர்.

## II. <u>வேதங்களை விசுவாசித்தல்</u>

அல்லாஹ் மனித சமுதாயத்துக்கு நேர்வழிகாட்டுவதற்காக வேதங்களையும், கட்டளைகளையும் வழங்கி நபிமார்களையும், ரஸூல்மார்களையும் அனுப்பி வைத்தான். நபிமார்களையும், அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதங்களையும் ஈமான் கொள்வது ஒரு முஸ்லிமின் அடிப்படைக் கடமையாகும்.

வேதங்களை ஈமான் கொள்வதன் அவசியத்தை அல்குர்ஆன் பல இடங்களில் வலியுறுத்துகிறது. அல்லாஹ் இறைத்தூதருக்கு பின்வருமாறு கட்டளையிட்டான்:-

> “நபியே நீர் கூறுவீராக! நான் அல்லாஹ் இறக்கிய வேதங்களை ஈமான் கொண்டுவிட்டேன். உங்களுக்கு மத்தியில் நீதி செலுத்துமாறும் ஏவப்பட்டு மிருக்கிறேன்.” (42 : 15)

> முஃமின்களை நோக்கியும் அல்லாஹ் பின்வருமாறு கட்டளையிடுகிறான். “விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ், அவனது தூதர், அவனது தூதர்மீது இறக்கி வைத்த வேதம், அவருக்கு முன்பு இறக்கிய வேதங்களையும் விசுவாசம் கொள்வீர்களாக.” (4 : 136)

நபிமார்களுக்கு வழங்கப்பட்ட வேதங்கள் ஸுஹுபு என்றும் கிதாப் என்றும் இரு வடிவங்களில் அமைந்திருந்த போதிலும் அவை, அனைத்தும் இறைவனின் வஹியாக உள்ளன. எனவே, இறைவன் நபிமார்களுக்கு வஹியாக அருளிய வேதங்களை ஈமான் கொள்வது அத்தியவசியமானதாகும்.

"நாம் அல்லாஹ்வையும், எங்களுக்கு இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், ய∴கூப், அவர்களது சந்ததியினருக்கு இறக்கி வைக்கப்பட்டவற்றையும், மூஸா, ஈஸாவுக்கு வழங்கப்பட்டவற்றையும் தங்களது இரட்சகனிடமிருந்து நபிமார்களுக்கு வழங்கப்பட்டவற்றையும் ஈமான் கொண்டுவிட்டோம் என்று கூறுங்கள்." (2 : 136)

முன்னைய நபிமார்களுக்கு வழங்கப்பட்ட வேதங்கள் ஒன்றையொன்று உண்மைப்படுத்துவதாகவே அமைந்துள்ளன. நபி ஈஸா(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட இன்ஜீல் வேதம் நபி மூஸா(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட தௌராத்தை உண்மைப்படுத்துவதாக அமைந்துள்ளது. அல்குர்ஆன் இன்ஜீல் குறித்து குறிப்பிடும் போது "அதற்கு முன்னாலுள்ள தௌராத்தை உண்மைப்படுத்து வதாக உள்ளது" எனக் கூறுகிறது. (5 : 46)

அல்லாஹ் இறக்கிய வேதங்களில் சிறியளவையேனும் எவர் மறுக்கிறாரோ அவர் 'காபிர்' ஆவார் என்றே அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

"………. எவன் அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குகளையும் அவனுடைய வேதங்களையும் அவனுடைய தூதர்களையும் இறுதி நாளையும் நிராகரிக்கின்றானோ அவன் நிச்சயமாக வெகு தூரமான வழிகேட்டில் தான் செல்கின்றான்." (4 : 136)

முன்னைய வேதங்களில் காணப்படும் ஷரீஅத் சட்டங்களை பின்னைய வேதங்கள் மாற்றும் என்பதும் வேதங்கள் பற்றிய நம்பிக்கையில் முக்கியமானதாகும். தௌராத் வேதம் ஹராம் எனக் கூறிய சில விடயங்களை இன்ஜீல் வேதம் ஹலாலாக்கியதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

"என் முன்னால் உள்ள தவ்ராத்தை(யும்) நான் உண்மையாக்கி வைத்து (முன்னர்) உங்களுக்கு விலக்கப்பட்டவைகளில் சிலவற்றை உங்களுக்கு ஆகுமாக்கி வைப்பதற்காகவும் ……. " (3 : 50) என்று ஈஸா (அலை) கூறியதாக அல்குர்ஆன் கூறுகிறது.

இந்தவகையில் அல்குர்ஆன் தௌராத்திலும், இன்ஜீலிலும் காணப்பட்ட பல சட்டங்களை மாற்றியமைத்தது.

"........ அன்றி அவர்களின் சுமையையும் அவர்கள் மீதிருந்த (கடினமான சட்ட) விலங்குகளையும் நீக்கிவிடுவார். (7 : 157)

## (4) ஸம்இய்யாத்

இஸ்லாமிய அகீதாவின் இன்னொரு முக்கிய பகுதியே ஸம்இய்யாத்தாகும். மறுமை வாழ்வோடு தொடர்பான அனைத்து நிகழ்வுகளையும் குறிப்பாக இப்பகுதி உள்ளடக்குகிறது. புலனுக்கு அப்பாற்பட்ட மறுமை நிகழ்வுகளை குர்ஆனும், ஸுன்னாவும் போதிப்பது போல் ஈமான் கொள்வது ஒரு முஸ்லிமின் அடிப்படை கடமையாகும்.

ஈமானின் அடிப்படைத் தூணாகவும், அகீதாவின் முக்கிய பகுதியாகவும் மறுமை நம்பிக்கை விளங்குகிறது. அதுமாத்திரமன்றி, அல்லாஹ்வை ஈமான் கொள்வதைத் தொடர்ந்து அமையும் ஒரு நம்பிக்கையாகவும் காணப்படுகின்றது. ஏனெனில், அல்லாஹ்வை ஈமான் கொள்வது பிரபஞ்சத்தை தோற்றுவித்த முதல் மூலத்தை ஏற்றுக்கொள்வதாகவும் அமைகின்றது. எனவே, பிரபஞ்சத்தை தோற்றுவித்த அல்லாஹ்வையும், அதன் இறுதி முடிவையும் அறிந்து ஏற்றுக்கொள்ளும் ஒரு மனிதன் தனது வாழ்வின் இலட்சியத்தை புரிந்து செயற்பட அவை துணைசெய்யும். அல்லாஹ், மறுமை பற்றிய நம்பிக்கை இல்லாத போது வாழ்வு இலட்சியமற்றதாக மாறிவிடுகிறது. மறுமை நம்பிக்கையற்ற மனிதன் ஆத்மீக உணர்வையும், ஒழுக்க உணர்வையும் இழந்து மிகவும் கீழ்த்தரமானவனாக மாறிவிடுகிறான்.

மனித வாழ்வை அல்லாஹ் இலக்கோடு படைத்துள்ளான். எனவே தான், மனிதனைப் படைத்த அல்லாஹ் அவனிலே ரூஹையும் ஊதி, பகுத்தறிவையும் வழங்கி மலக்குமார்களை விடவும் கண்ணியப்படுத்தி, பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் மனிதனுக்காகப் படைத்து, பிரபஞ்சத்தை நிர்வகிக்கும் ஒருவனாகவும் ஆக்கினான். இத்தகைய உயர்வினைப் பெற்ற மனிதன் உலகில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக செயற்பட வேண்டியுள்ளான். அவனுக்கு உலகிலே ஆற்றவேண்டிய பொறுப்புக்களும், கடமைகளும் வழங்கப்பட்டுள்ளன. இபாதத், இமாரத், கிலாபத் ஆகிய முக்கிய பணிகள் மனிதனுக்கு காணப்படுகின்றன. உலகில் அவன்மீது சுமத்தப்பட்ட பொறுப்புக்களுக்கு கூலி வழங்கப்படும் ஒரு நாளையும் அல்லாஹ் அமைத்துள்ளான். மறுமை நாள் ஒன்று இருப்பதால்

மனித வாழ்வு பெறுமதிமிக்கதாகக் காணப்படுகிறது. எனவே உலக வாழ்வு பொருளற்ற வீண்விளையாட்டல்ல. அது இன்னொரு வாழ்வுக்கான சோதனைக் கூடமாகும் என்பதை குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.

"நாம் உங்களை வீணாக படைத்திருக்கிறோம் என்றும் நீங்கள் எங்களிடம் திரும்பி வரமாட்டீர்கள் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?" (23 : 115)

எனவே, மறு உலகிற்காக தயாராகும் வாழ்வாக உலகவாழ்வு அமைந் திருக்கிறது. இந்தவகையில் உலக வாழ்வு அர்த்தமற்றதாகவோ, இலட்சிய மற்றதாகவோ இருக்க முடியாது. வாழ்வை பொருளுள்ளதாக ஆக்கி நிரந்தர மறுமை வாழ்வில் வெற்றி பெற முயற்சிப்பதே ஒரு முஸ்லிமின் இலட்சியமாக இருக்கும்.

## மறுமை நம்பிக்கையை நிறுவுவதற்கு குர்ஆன் வழங்கிய முக்கியத்துவம்

மறுமைக்கு குர்ஆன் மிகுந்த முக்கியத்துவம் வழங்கியுள்ளது. மனித வாழ்வை அர்த்தப்படுத்தும் மறுமை மீதான நம்பிக்கை இறை நம்பிக்கையினடிப்படையாகவே தோன்றுகிறது. அல்லாஹ், மறுமை பற்றிய நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே ஒரு முஸ்லிமின் வாழ்வு இலட்சியம் கொண்டதாக அமைகிறது. எனவே தான் குர்ஆன் பல்வேறு இடங்களில் இறை நம்பிக்கையையும், மறுமை நம்பிக்கையையும் இணைத்துச் சொல்கிறது.

"......... என்றாலும் நன்மை என்பது அல்லாஹ்வையும், மறுமையையும் ஈமான் கொள்வதாகும்." (2 : 177)

"நிச்சயமாக மு.்.மின்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபிஈன்களாயினும் எவர்கள் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் ஈமான் கொண்டு நல்ல செயல்களை செய்கின்றனரோ அவர்களுக்கு அவர்களது இரட்சகனிடத்தில் கூலியுண்டு. மேலும் அவர்களுக்கு எந்தப்பயமும் கவலையுமில்லை." (2 : 62)

மறுமை குறித்து குர்ஆன் மிகவும் விரிவாகப் பேசியுள்ளது. மறுமை இருப்பதற்கான ஆதாரங்கள், மறுமையை ஈமான் கொள்வதன் அவசியம், பிரபஞ்ச அழிவு, மறு உலக நிகழ்வுகள், சுவர்க்கம், நரகம் போன்ற அனைத்து பகுதிகளையும் குர்ஆன் மிக விரிவாக விளக்கியுள்ளது. இந்தவகையில் குர்ஆனிலே

1600 க்கும் அதிகமான மறுமை குறித்து பேசும் ஆயத்துக்கள் காணப்படுகின்றன. எனவே, முழுக் குர்ஆனிலும் சுமார் நான்கிலொரு பகுதி மறுமை குறித்த வசனங்களாக இருப்பதை அவதானிக்கலாம்.

குர்ஆனின் எந்த ஸூராவைப் பார்த்தாலும், எந்தப்பக்கத்தைப் புரட்டினாலும் மறுமை குறித்த செய்தி பெரும்பாலும் காணப்படுகிறது. நேரடியாக மறுமை என்ற சொற்பிரயோகத்தை பயன்படுத்தாவிட்டாலும் அவை மறுமைக்கான ஆதாரங்கள், அடையாளங்கள் என்ற வகையில் குறிப்பிடப்படுகின்றன. எனவே, குர்ஆனின் கண்ணோட்டத்தில் மறுமைதான் வாழ்வு என்றாகிவிடுகிறது. உலகத்தை வாழ்வாக சொன்னாலும் உண்மையான வாழ்வாக, நிரந்தர வாழ்வாக மறுமை விளங்குகிறது. எனவே தான் பாவியாக மரணித்துப்போய் மறுமை வாழ்வில் தோல்வி கண்ட ஒரு மனிதன் சொல்லும் ஒரு செய்தியை ஸூரதுல் பஜ்ரிலே குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது.

> “எனவே, வாழ்க்கைக்காக முன்கூட்டியே சமர்ப்பித்திருக்கக் கூடாதா? என்று கூறுவான்” (89 : 24)

குர்ஆன் மறுமை நாளை விளக்குவதற்கு பல பெயர்களைப் பயன் படுத்தியுள்ளது. ஒவ்வொரு பெயரும் மறுமையின் ஏதோ ஒரு நிகழ்வை, பயங்கரத்தை விளக்குவதாக உள்ளது. பின்வரும் சொற்பிரயோகங்களைக் கொண்டு குர்ஆன் மறுமையை விளக்குகிறது :-

| | | |
|---|---|---|
| யௌமுல் ப∴ஸ் | - | எழுப்பப்படும் நாள் |
| யௌமுல் கியாமா | - | எழுந்து நிற்கும் நாள் |
| அஸ்ஸாஆ | - | நேரம் |
| ஆஹிரா | - | மறு உலகம் |
| யௌமுத்தீன் | - | கூலிகொடுக்கும் நாள் |
| யௌமுல் ஹிஸாப் | - | விசாரணை நாள் |
| யௌமுல் பத்ஹ் | - | வெற்றி நாள் |
| யௌமுத்தலாகீ | - | சந்திக்கும் நாள் |
| யௌமுல் ஜம்இ | - | ஒன்று கூட்டப்படும் நாள் |
| யௌமுத் தகாபுன் | - | நஷ்டமடையும் நாள் |
| அல்ஹாக்காஹ் | - | உண்மையான நாள் |
| அத்தாம்மா | - | பேரழிவு |
| அஸ்ஸாஹ்ஹா | - | கடுமையான சத்தம் |
| அல்காஷியா | - | சூழ்ந்துகொள்ளும் நாள் |
| யௌமுல் குலூத் | - | நிரந்தர நாள் |
| அல்வாகிஆ | - | நிகழக்கூடியது |

| | | |
|---|---|---|
| யௌமுல் ஹஸ்ரா | - | கைசேதப்படும் நாள் |
| யௌமுத் தனாத் | - | அழைக்கக் கூடிய நாள் |
| ஆஸிபா | - | நெருங்கக் கூடியது |
| அல்காரிஆ | - | பெருஞ்சத்தம் |

மறுமை நாளைக் குறிப்பதற்காக பல்வேறு சொற்களை மேற்கண்டவாறு குர்ஆன் பயன்படுத்தியுள்ளது. அந்த ஒவ்வொரு சொற்பிரயோகமும் மறுமைநாளை, அதன் தன்மையை, கொடூரங்களை விளக்குகின்றது. அவற்றில் அஸ்ஸாஹ்ஹா, அத்தாமா, அல்காரிஆ போன்றவை பிரபஞ்ச அழிவைச் சுட்டுவதாகவும், வேறு சில மீள எழுப்பப்படுவதை குறிப்பதாகவும், இன்னும் சில மஹ்ஷர் வெளியை விளக்குவதாகவும் உள்ளன.

நபி(ஸல்) அவர்கள் குர்ஆனிலே சில ஸூராக்களை சுட்டிக்காட்டி அவை கியாமாவை விளக்குவதாக குறிப்பிட்டார்கள்.

> “யாருக்கு மறுமை நாளை கண்ணால் பார்ப்பதில் மகிழ்ச்சியிருக்குமோ அவர் ஸூரதுல் தக்வீர், ஸூரதுல் இன்பிதார், ஸூரதுல் இன்ஷிகாக் ஆகிய ஸூராக்களை ஓதிக்கொள்ளட்டும்” என்று அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

ஸூராக்களான தக்வீர், இன்பிதார், இன்ஷிகாக் ஆகியவை பிரபஞ்ச அழிவையும், கியாமத் நாள் காட்சிகளையும் மிக விரிவாக விளக்குகின்றன. இத்தகைய ஸூராக்களை விளங்குவதன் மூலம் மறுமை நாளை ஓரளவு புரிந்து கொள்ள முடியும் என்பதைத் தான் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்தவகையில் குர்ஆன் மிகவும் பரவலாகவும், தனியான ஸூராக்களுக்கூடாகவும், தனியான சொற்பிரயோகங்களை பயன்படுத்தியும் மறுமை பற்றிய சிந்தனையை மிக விரிவாக விளக்கியுள்ளதை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. மறுமையை கடுமையாக மறுப்பவர்களுக்கும், அதனை பிழையாக புரிந்து கொண்டவர்களுக்கும் அல்குர்ஆன் ஆதாரங்களை முன்வைத்து விளக்குகிறது. அதனை ஏற்று வாழ்பவர்களின் வாழ்க்கையில் அது பெரிய பாதிப்பை உண்டுபண்ண வேண்டும் என்பது இதன் மற்றுமொரு நோக்கமாகும்.

### மறுமை குறித்த விரிவான விளக்கம்

மறுமையை ஈமான் கொள்வது ஈமானின் அடிப்படைகளுள் ஒன்றுபோல அதனை விரிவாக விளங்கி நம்புவதும் அவசியமானதாகும். இந்தவகையில் மறுமை நாள் எனும்போது பல்வேறு விடயங்கள் உள்ளடங்குகின்றன.

1. பிரபஞ்ச அழிவு
2. மஹ்ஷர் வெளி
3. சுவர்க்கம், நரகம்

(1) **பிரபஞ்ச அழிவு**

மறுஉலக தோற்றத்தின் ஆரம்பப் புள்ளியாக பிரபஞ்ச அழிவு இடம்பெறவுள்ளது. உலக அழிவை தொடர்ந்தே மறுமை தோன்றுகிறது. இவ்வாறு உலகம் பாரிய அழிவுக்கு உட்பட முன்பு உலக அழிவுக்கான பல்வேறு அடையாளங்கள் இடம்பெறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அத்தகைய அடையாளங்களும் மறுமை நம்பிக்கையோடு தொடர்புபட்டதாகவே காணப்படுகின்றன. அவை சிறிய அடையாளங்கள், பெரிய அடையாளங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

(1) சிறிய அடையாளங்கள் நிகழ்ந்து முடிவுற்ற பின்னர் மஹ்தி (அலை) வெளிப்படுவார். அதன் பின்னரே பெரிய அடையாளங்கள் நிகழ ஆரம்பிக்கும். எனவே மஹ்தி (அலை) அவர்களின் வருகை சிறிய பெரிய அடையாளங்களை இணைக்கும் ஓர் பாலமாக அமையப் போகும் முக்கிய நிகழ்ச்சியாகும்.

**இமாம் மஹ்தி (அலை) அவர்களின் வருகை**

கியாம நாளின் அடையாளங்களில் பிரதானமான ஒன்றாக இமாம் மஹ்தி (அலை) அவர்களின் வருகை கருதப்படுகிறது.

உலக முடிவின் இறுதிக்காலப் பகுதியில் அவர் தோன்றுவார் எனவும் அவருடைய பெயர் முஹம்மது இப்னு அப்துல்லா அல்லது அஹ்மத் இப்னு அப்துல்லா என்று இருக்கும் என்றும் அறிவிப்புக்கள் கூறுகின்றன.

அநீதி அட்டூழியங்களால் நிறைந்த உலகை நீதி நேர்மையைக் கொண்டு அவர்கள் நிரப்புவார்கள். நபியவர்களின் சுன்னாக்களை நிரப்புவார்கள். பூமியில் நீதியை நிலைநாட்டி ஆட்சிசெய்வார்கள் அதன் பின்னரே தஜ்ஜாலின் வருகை இடம் பெற்று அவனது அக்கிரமங்கள் இடம்பெறும். ஈற்றில் ஈஸா (அலை) அவர்களுடைய வருகையைத் தொடர்ந்து தஜ்ஜாலைக்கொல்வதில் மஹ்தி (அலை) அவர்கள் ஈஸா (அலை) அவர்களுடன் ஒன்று சேர்ந்து போராடுவார்கள். மறுமைநாளின் அடையாளங்களில் ஒன்றான மஹ்தி (அலை) அவர்களின் வருகை பற்றி பேசும் ரிவாயத்துக்கள் யுகமுடிவு ஏற்படும் கால கட்டத்தில் இவ்வுலகத்தில் தோன்றும் ஓர் சீர்திருத்தவாதியாகவே அவர் இருப்பார் என்பதையே சுறுக்கமாகக் கூறுகின்றன.

(2) இங்கு மறுமைநாளுக்கான மிகவும் பிரதானமான அடையாளங்கள் மாத்திரம் நோக்குவோம்.

I. **சூரியன் மேற்கிலிருந்து உதித்தல்**

பிரபஞ்ச அழிவின் மிக முக்கிய அடையாளமாக சூரியன் மேற்கில் உதித்தல் காணப்படுகிறது. பிரபஞ்ச ஒழுங்கமைப்பில் ஏற்படும் முதல் மாற்றமாக அது அமையும். மனிதர்களுக்கு பரிச்சயமற்ற ஓர் நிகழ்வாகத் தோன்றும் இது, மறுமை நெருங்கியதை அறிவிக்கும் ஒரு அடையாளமாக விளங்கும். நபி(ஸல்) அவர்கள் சூரியன் மேற்கிலிருந்து உதித்தலை பிரதான அடையாளமாக கூறினார்கள். சூரியன் மேற்கிலே உதிப்பதைக் கண்டு பயந்து அனைவரும் ஈமான்கொள்வார்கள். ஆனால் அந்த ஈமான் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இதனைத்தான் குர்ஆன் பின்வருமாறு சொல்கிறது :-

"உம் இரட்சகனின் சில அத்தாட்சிகள் வரும் அந்நாளில் அதற்கு முன்னர் விசுவாசங்கொள்ளாதிருந்து, அல்லது விசுவாசங்கொண்டிருந்தும் எந்த நன்மையையும் செய்யாதிருந்த ஆத்மாவுக்கு அந்நாளில் ஈமான் கொள்வதானது எந்தப்பயனும் அளிக்காது." (அன்ஆம் - 158)

மேற்கில் சூரியன் உதித்ததும் ஒரு காபிர் ஈமான் கொள்வதால் எந்தப்பயனும் கிடைக்கப் போவதில்லை. அவ்வாறே ஒரு பாவி தௌபா செய்தால் அந்தத் தௌபாவுக்கு எந்தப்பயனுமில்லை. ஒரு மு∴மின் முன்னர் எத்தகைய நன்மையையும் செய்யாதவராக இருந்து சூரியன் மேற்கில் உதித்த பின்பு செய்யத்தொடங்கினால் அந்த நற்செயல் எந்தப்பயனையும் அளிக்கப்போவதில்லை.

II. **பூமியிலிருந்து ஒரு பிராணி வெளியாகுதல்**

பூமியிலிருந்து ஒரு பிராணி வெளியாகுவது மறுமைக்கான ஓர் அடையாளமாகும். தௌபா அங்கீகரிக்கப்படும் காலம் முடிவடைந்ததன் பிறகு அல்லாஹ் மனிதர்களோடு பேசும் பிராணியை வெளியாக்குவான். மறுமை நாள் நெருங்கியதை அறிவிக்கும் ஓர் அற்புதமாக அதனை மனிதர்கள் அப்போது புரிந்து கொள்வார்கள்.

"இறுதி நாள் அவர்களை நெருங்கிய சமயத்தில், அவர்களுக்காகப் பூமியிலிருந்து ஒரு கால்நடையை நாம் வெளிப்படுத்துவோம். அது எந்தெந்த மனிதர்கள் நம்முடைய வசனங்களை நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை அவர்களுக்குச் சொல்லிக் காண்பிக்கும்." (27 : 82)

### III. தஜ்ஜால் தோன்றுதல்

தஜ்ஜால் என்பதன் பொருள் அதிகம் பொய்பேசுபவன் என்பதாகும். தஜல் என்ற சொல்லிலிருந்தே தஜ்ஜால் என்ற சொல் உருவாகியது. தஜல் என்றால் மூடிமறைத்தல் என்பது கருத்தாகும். எனவே, தஜ்ஜால் என்ற சொல்லானது “சத்தியத்தை அசத்தியத்தால் மூடி மறைப்பவன்” என்ற கருத்தை தருகிறது. எனவே, அவன் தன்னிடம் தெய்வீகப் பண்புகள் இருப்பதாக கூறி அற்புதங்களைக் காட்டி சத்திய மார்க்கத்தை விட்டும் திசை திருப்பும் வேலையை அதிகம் செய்வதால் நபி(ஸல்) அவர்கள் அவனுக்கு “தஜ்ஜால்” எனப்பெயரிட்டார்கள். இறுதிக்காலத்தில் தஜ்ஜாலின் வருகை குறித்து நபி(ஸல்) அவர்கள் பல ஹதீஸ்களுக் கூடாக எச்சரித்தார்கள்.

அப்துல்லாஹ் பின் உமர்(ரழி) அவர்கள் கூறுகிறார்கள் : இறை தூதர்(ஸல்) அவர்கள் மக்களுக்கு மத்தியில் எழுந்து அல்லாஹ்வை புகழ்ந்துவிட்டு தஜ்ஜாலைப் பற்றி பின்வருமாறு எச்சரித்தார்கள் “நிச்சயமாக நான் உங்களை தஜ்ஜாலை விட்டும் எச்சரிக்கை செய்கிறேன். எல்லா நபிமார்களும் அவர்களது சமூகத்துக்குச் சொல்லாத ஒரு விடயத்தை நான் உங்களுக்கு சொல்கிறேன். அவனது ஒரு கண் குருடாகும் (குறைபாடுள்ள தாகும்) அல்லாஹ் ஒரு போதும் குறைபாடுடையவனல்லன்.” (புஹாரி)

தஜ்ஜாலின் பண்புகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஹதீஸ்கள் மிக விரிவாக விளக்கியுள்ளன. கண் குறைபாடுள்ளவனாகவும், நெற்றியில் காபிர் என எழுதப்பட்டவனாகவும், பல அற்புதங்களை நிகழ்த்துபவனாகவும், ஷாம் தேசத்திற்கும், ஈராக்கிற்கும் இடையில் அமைந்துள்ளதொரு இடத்திலிருந்து வெளியேறுபவனாகவும், உலகம் முழுவதும் பெரும் குழப்பம் விளைவிப்பவனாகவும் தஜ்ஜால் இருப்பான் என்பதை நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். தஜ்ஜாலை ஈஸா (அலை) அவர்களே கொலை செய்வார்கள். தஜ்ஜாலின் குழப்பங்கள் உலக அழிவு நெருங்கும் போது மிகப் பயங்கரமாக அதிகரித்திருக்கும் என்பதை ஹதீஸ்கள் விளக்குகின்றன.

### IV. ஈஸா (அலை) அவர்களின் வருகை

மறுமை நாள் நெருங்கும் போது தஜ்ஜாலின் குழப்பங்கள் அதிகரித்திருக்கும் போது ஈஸா(அலை) அவர்கள் அவனை கொலைசெய்து அவனது அட்டகாசங்ளை அடக்கி நபி(ஸல்) அவர்களது ஷரீஅத்தின் அடிப்படையில் ஆட்சி நடாத்தி அல்லாஹ் நாடியவாறு சில காலங்கள் வாழ்ந்து மரணிப்பார்கள் என ஹதீஸ்கள் தெளிவுபடுத்துகின்றன.

இறைதூதர்(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : "எனது உயிர் யாருடைய கையில் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக உங்களுக்கு மத்தியில் மர்யம்(அலை) அவர்களது மகன் இறங்கும் காலம் நெருங்கிவிட்டது. அவர் நீதியான ஆட்சியாளர். அவர் சிலுவையை உடைப்பார். பன்றியை கொலை செய்வார். ஜிஸ்யா வரியை நீக்குவார். செல்வம் பெருக்கெடுத்து யாரும் அதில் ஆசைவைக்க மாட்டார்கள். அந்த நேரத்தில் உலகம், அதிலுள்ளவற்றைவிட ஸுஜுது செய்வது சிறந்ததாகும்." (புகாரி, முஸ்லிம்)

V. **யஃஜூஜ், மஃஜூஜ் வெளியாகுதல்**

யஃஜூஜ், மஃஜூஜ் எனும் குழப்பம் விளைவிக்கும் ஒரு கூட்டம் உலக அழிவு நெருங்கும் போது வெளியாகும். இதனை குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது.

"யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்திற்கு வழிதிறக்கப்பட்டால் அவர்கள் ஒவ்வொரு மேட்டிலிருந்தும் இறங்கி (குழப்பம் விளைவிக்க பல பாகங்களிலிலும்) விரைவார்கள். (21 : 96)

இத்தகைய பாரிய அடையாளங்கள் தோன்றியதைத் தொடர்ந்து பிரபஞ்ச அழிவு இடம்பெறும். முதல் ஸூர் ஊதப்பட்டதும் இந்தப் பாரிய பிரபஞ்சம் முழுமையான அழிவுக்கு உட்படும். அந்த அழிவு பெரும் சத்தம், கடும் இருள், வேகம், பயங்கரம் நிறைந்ததாக காணப்படும். பூமியின் தரைத்தோற்ற அம்சங்கள் முழுமையான மாற்றத்துக்கு உட்பட்டு மஹ்ஷருக்கான நிலம் தோற்றுவிக்கப்படும்.

"இந்தப்பூமி வேறுவித பூமியாகவும், அவ்வாறே வானங்களும் வேறுவிதமாக மாற்றப்படும் அந்நாளில் யாவரையும் அடக்கியாளும் ஒருவனாகிய அல்லாஹ் வின் சந்நிதியில் அனைவரும் கூடிவிடுவார்கள்." (14 : 48)

மறுமை நாளைத் தோற்றுவிப்பதற்காக அல்லாஹ் முழு உலகையும் அழிக்கிறான். இவ்வாறு பிரபஞ்சம் அழிக்கப்படும் நாள் அல்லாஹ் மாத்திரமே அறிந்த ஒரு ரகசியமாகும். அது அல்லாஹ்வின் அறிவுக்கு மாத்திரம் உட்பட்டதாகும். இதனை குர்ஆன் பல இடங்களில் தெளிவுபடுத்துகின்றது.

"அவர்கள் உம்மிடம் மறுமை எப்போது வரும் என்று கேட்கிறார்கள். நபியே கூறுவீராக ! அது பற்றிய அறிவு என்னுடைய இரட்சகனிடத்தில் மாத்திரமே உண்டு" (7 : 157)

"நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் தான் மறுமை பற்றிய அறிவுண்டு" (31 : 34)

### (1) கப்று

மறுமை நம்பிக்கையினுள் அடங்கும் ஒரு பகுதியே கப்றின் வாழ்வாகும். ஒரு மனிதன் மரணித்ததும் அவனது மறுமை வாழ்வு ஆரம்பித்து விடுகிறது. முழு உலகும் அழிக்கப்பட்டு மீண்டும் அனைவரும் எழுப்பப்படும் வரை கப்றுடைய வாழ்வை அனைவரும் அனுபவிப்பர். உலக வாழ்வை ஒருவர் பயன்படுத்திய முறையைப் பொறுத்து கப்றுடைய வாழ்வு அமைகிறது. உலகில் அல்லாஹ்வை ஏற்று, மறுமையை நம்பி, இஸ்லாத்தின் போதனைகளுக்கேற்ப வாழ்ந்தவனின் கப்று சுவனத்தின் பூஞ்சோலையாக இருக்கும் அதேவேளை, அல்லாஹ்வை நிராகரித்து பாவங்கள் செய்தவனின் கப்று நரகத்தின் படுகுழியாக காணப்படும். இந்தவகையில் கப்றுடைய வாழ்வு முக்கியம் பெறுகிறது. கப்றுடைய வாழ்வு குறித்தும், அதன் சுகபோகங்கள், தண்டனைகள் பற்றியும் ஏராளமான ஹதீஸ்கள் வந்துள்ளன.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் பின் மாலிக்(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் :

அடியான் கப்றிலே வைக்கப்பட்டுவிட்டால், அவனைச் சுமந்து வந்தோர் திரும்பிவிடுவர். அவர்களது செருப்பின் சப்தத்தை அவன் செவிமடுப்பான். இரண்டு மலக்குகள் வந்து அவனுக்கு அருகாமையில் அமர்ந்து அவனிடத்திலே “நபி(ஸல்) பற்றி நீ என்ன சொல்கிறாய்” என்று வினவுவார்கள். அவன் மு.்.மினாக இருந்தால் “அவர் அல்லாஹ்வின் அடியானும், அவனது தூதருமாவார் என்று சாட்சி சொல்கிறேன்” என்று கூறுவான். அப்போது அவனிடம் “நரகில் உனது இடத்தைப் பார், அதற்குப் பகரமாக உனக்கு சுவனம் வழங்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லப்படும். முனாபிக்கையும், காபிரையும் பொறுத்தவரையில் தனக்கு இவரைத் தெரியாது என்றும் மக்கள் உலகில் எதனைச் சொன்னார்களோ அதனைத் தான் நானும் சொன்னேன் என்றும் கூறுவான். அப்போது அவனுக்கு இரும்பினாலான சுத்தியலினால் அடிக்கப்படும். அப்போது அவன் கடுமையாக அலறுவான். மனித, ஜின் இனங்களைத் தவிர ஏனையவைகள் அதனை செவிமடுக்கும்.” (புகாரி, முஸ்லிம்)

### (2) மஹ்ஷர் வெளி

கியாமத் நாள் காட்சிகளில் அல்லது மறுமையில் உலக அழிவைத் தொடர்ந்து இடம்பெறுவது மறு உலக நிகழ்வுகளாகும். இது இரண்டாவது ஸூர் ஊதப்பட்டதும் அனைவரும் எழுப்பப்பட்டு ஒரு வெட்டவெளியை நோக்கி வந்து கூடுவதோடு ஆரம்பித்து, பல நிகழ்வுகளையும் அமளிதுமளிகளையும் கொண்ட ஒரு உலகமாக காணப்படும்.

"ஸூர் ஊதப்படும் அந்நாளில் நீங்கள் கூட்டம் கூட்டமாக வருவீர்கள். வானம் திறக்கப்பட்டு (அதில்) பல வழிகள் ஏற்பட்டு, மலைகள் (தம் இடம் விட்டுப்) பெயர்க்கப்பட்டு தூள் தூளாகிவிடும்" (78 : 18-20)

எனவே இரண்டாவது ஸூர் ஊதப்பட்டதும் மனிதர்கள் மீள எழுப்பப்படுவார்கள். அங்கு மிகப்பெரும் திரளாக மக்கள் ஒன்று கூடுவார்கள். ஓர் இடத்தை நோக்கி விரட்டப்பட்டவர்கள் போன்று மக்கள் அங்கு விரைவார்கள்.

"அது ஓர் அதட்டல் மாத்திரமே. உடனே அவர்கள் ஒரு திடலில் கூடி விடுவார்கள்" (79 : 13-14)

இவ்வாறு ஒன்று கூடும் நிலையைத் தான் குர்ஆன் 'மஹ்ஷர்' என வர்ணிக்கிறது. அதன் தரைத்தோற்ற அம்சங்கள் மிகவும் வித்தியாசமானதாகவும், பயங்கரங்கள் நிறைந்ததாகவும் காணப்படும். கோள்களும், வானங்களும் அழிந்து வேறு தோற்றத்தைப் பெற்றிருக்கும். பெரும் இடைவெளிகளைக் கொண்டதாக அது தென்படும். மிகப் பாரிய மலைகள் இடிந்து தூசிகள் போல் பறந்து கொண்டிருக்கும். இப்படியாக தரைத்தோற்ற அம்சங்கள் முற்றிலும் வேறுபட்டதாக காணப்படும். மனிதர்கள் அல்லோல கல்லோலப்பட்டு திரண்டு இருப்பார்கள். மனிதர்கள் ஒன்று திரட்டப்படும் தினத்தை நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு தெளிவுபடுத்தினார்கள்.

இறைத் தூதர்(ஸல்) அவர்கள் சொன்னதைத் தான் செவிமடுத்ததாக ஆயிஷா(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : மனிதர்கள் மறுமையில் நிர்வாணமாகவும், கத்னா செய்யப்படாதவர்களாகவும் ஒன்று திரட்டப்படு வார்கள். அப்போது "அல்லாஹ்வின் தூதரே சிலர் வேறு சிலரை பார்ப்பார்களே" என்று கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் "ஆயிஷாவே அங்கு ஒருவர் இன்னொருவரை பார்ப்பதை விட நிலைமை மிகவும் பாரதூரமானதாக இருக்கும்" என்றார்கள். (முஸ்லிம்)

மஹ்ஷர் வெளியின் துன்பம் அனைவரையும் சூழ்ந்துகொள்ளும். இறைத் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். "சூரியன் கியாமத் நாளில் மக்களுக்கு மிக அருகாமையில் கொண்டுவரப்படும். அது ஒரு மைல் தூரமாக இருக்கும். மனிதர்கள் தத்தமது செயல்களுக்கேற்ப வியர்வையில் மூழ்கியிருப்பார்கள். அவர்களிற் சிலர் கரண்டைக்கால் வரையும், இன்னும் சிலர் முழங்கால் வரையும், வேறு சிலர் இடுப்பு வரையும் இன்னும் சிலரை வியர்வை முழுமையாக மூடிக்கொள்ளும்" என்று நபி(ஸல்) அவர்கள் தன்னுடைய கையினால் வாயை சுட்டிக்காட்டினார்கள். (முஸ்லிம்)

இத்தகைய நெருக்கடிகளும் துன்பங்களும் நிறைந்த வேளையில் தான் சில கூட்டத்தாருக்கு அல்லாஹுத்தஆலா தன்னுடைய அர்ஷுடைய நிழலில் நிழல்கொடுக்கிறான். கியாமத் நாளின் அவலங்களில் மூழ்கி, துன்பத்திலே வாழும் மக்கள் விடிவை எதிர்பார்த்து அங்குமிங்குமாக திரிவார்கள். அந்தக் கோர நிலையை முடிவுக்கு கொண்டு வர விசாரணையை தொடங்குமாறு நபிமார்களை அணுகி அல்லாஹ்விடம் ஷபாஅத் செய்யுமாறு வேண்டுவார்கள். அனைத்து நபிமார்களும் அந்த கோரிக்கையை மறுக்க இறுதியாக நபி(ஸல்) அவர்கள் இறைவனிடம் விசாரணையை ஆரம்பிக்குமாறு வேண்டி ஷபாஅத் செய்வார்கள். இவ்வாறு ஷபாஅத் செய்வதையே அஷ்ஷபாஅதுல் குப்ரா "பெரிய ஷபாஅத்" எனப்படுகிறது. இந்தகைய ஷபாஅத்தினூடாக நபி(ஸல்) அவர்கள் மிகவும் உயர்ந்த இடத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். இதனைத்தான் நபி(ஸல்) அவர்களுக்கு கியாமத் நாளில் கிடைக்கும் மகாமுன் மஹ்மூத் - புகழத்தக்க இடம் எனப்படுகிறது.

> அல்லாஹுதஆலா தானாகவே முன்னின்று விசாரணையை மேற்கொள் கிறான். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். "கியமாத் நாளில் அல்லாஹு தஆலா உங்களில் ஒவ்வொருவருடனும் பேசுவான். அவனுக்கு அடியானுக்கு மிடையில் எந்த மொழிபெயர்ப்பும் கிடையாது." (புகாரி)

வலது கையில் பட்டோலை வழங்கப்படுவோர் விசாரிக்கப்படமாட்டார்கள். யார் மறுமையில் விசாரிக்கப்படுகிறாரோ அவர் தண்டிக்கப்பட்டவராக ஆகிவிடுவார். வலது கையில் பட்டோலை வழங்கப்படுவோர் விசாரிக்கப்படாமல் இருப்பது "அல்அர்ள்" எனப்படும். அங்கு அவனது செயல்களை எடுத்துக்காட்டுதல் மட்டுமே இடம்பெறும்.

ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் :

> இறைத்தூதர் (ஸல்) அவர்கள் "மறுமையில் யார் விசாரிக்கப்பட்டாலும் அவர் அழிந்துவிட்டார்." என்றார்கள். அப்போது நான் "அல்லாஹ்வின் தூதரே "யாருடைய வலக்கையில் பட்டோலை வழங்கப்படுமோ அவர் இலகுவாக விசாரிக்கப்படுவார்" என்று அல்லாஹ் சொல்லவில்லையா" என்று கேட்டேன். அதற்கு இறைதூதர்(ஸல்) அவர்கள் : "அது அர்ளாகும். அதாவது, அவனது செயல்களை எடுத்துக்காட்டுவதாகும். கியாமத் நாளில் யார் விசாரிக்கப்படுகிறாரோ அவர் தண்டிக்கப்பட்டவராகிறார் என்றார்கள்." (புகாரி)

(3) மறுமை நிகழ்வுகளோடு தொடர்புபட்ட - நாம் ஈமான் கொள்ள வேண்டிய மற்றொரு அம்சமே "ஹவ்ழ்" நீர்த்தடாகமாகும். நபி(ஸல்) அவர்களுக்கும், அவர்களது உம்மத்தில் அவர்களை ஏற்று வாழ்ந்த நல்லடியார்களுக்கும்

விஷேடமாக வழங்கப்படும் நீர்த்தடாகமே "ஹவ்ழ்" ஆகும். அதே போன்று நன்மை, தீமைகளை அளவிடுவதற்காக மறுமையில் மீஸான் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மிக நீதியான முறையில் மனிதனின் நன்மை, தீமைகள் நிறுக்கப்பட்டு தீர்ப்புச் சொல்லப்படும்.

"அந்நாளில் நன்மை, தீமைகள் எடைபோடுவது உண்மையாகும். அப்போது எவர்களுடைய நன்மைத்தட்டு கனக்குமோ அவர்களே வெற்றியாளர்களாவர். எவர்களுடைய நன்மைத்தட்டு கனம் குறைந்ததாக இருக்குமோ அத்தகையோர் அல்லாஹ்வுடைய வசனங்களை பொய்யாக்கிக் கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள் தமக்குத் தாமே நஷ்டமிழைத்துக் கொண்டவர்களாவர்." (7 : 8,9)

விசாரணைக்குப் பிறகு நரகத்துக்கு மேலால் போடப்பட்டிருக்கும் பாலத்தை மக்கள் கடந்து செல்வர். அது ஸிராத் எனப்படும். சுவர்க்கம் செல்பவர்களும் நரகவாதிகளும் அதனூடாகவே செல்ல வேண்டும். அதனைக் கடந்து செல்வதில் ஏற்றத்தாழ்வுகளுண்டு.

### (4) சுவர்க்கம், நரகம்

கியாமத் நாள் காட்சியில் இறுதி நிகழ்வாக சுவர்க்க, நரக வாழ்வு அமைந்துள்ளது. இதுவரை நாம் நோக்கிய பிரபஞ்ச அழிவு, கப்று வாழ்வு, மஹ்ஷர் வெளி நிகழ்வுகள் என்பன முடிவடையக் கூடியவையே. ஆனால் சுவர்க்கமும், நரகமும் நிரந்தரமானவையாகும். சுவனமும், நரகமும் நிரந்தரமானவை என்பதை குர்ஆனும் ஹதீஸும் விரிவாக விளக்கியுள்ளன. நபி(ஸல்) அவர்கள் இதனை பின்வருமாறு தெளிவுபடுத்தினார்கள். "சுவர்க்கவாசிகள் சுவர்க்கத்திற்கும் நரகவாசிகள் நரகத்திற்கும் சென்றுவிட்டால் மௌத் (மரணம்) சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் மத்தியில் கொண்டு வரப்படும். பின்னர் ஓர் அழைப்பாளன் பின்வருமாறு அழைப்பான். சுவர்க்கவாசிகளே மரணமே இல்லை, நரகவாசிகளே மரணமே இல்லை. அப்போது சுவர்க்கவாசிகளின் மகிழ்ச்சி மேலும் அதிகரிக்கும் நரவாசிகளின் துக்கமும் அதிகரிக்கும்". (புகாரி)

நிரந்தர சுவனத்துக்குள் நல்லடியார்கள் நுழைந்து அதன் சுகபோகங்களை நிறைவாக அனுபவிப்பர். சுவர்க்க சுகபோகங்கள் பற்றி குர்ஆன் பல இடங்களிலே விளக்கியுள்ளது. ஸூரத்துன் நப.ஃ. பின்வருமாறு சொல்கிறது.

"நிச்சயமாக இறையச்சமுள்ளோருக்கு வெற்றி இருக்கிறது. தோட்டங்களும், திராட்சைகளும், சமவயது கன்னிப்பெண்களும், (மதுவால்) நிரம்பிய கிண்ணங் களும் அவர்களுக்குண்டு. அவர்கள் அதிலே வீண் வார்த்தையையோ, பொய்ப்படுத்

தலையோ செவிமடுக்கமாட்டார்கள். உமது இரட்சகனிடமிருந்து கூலியும் போதுமான வெகுமதியுமுண்டு.” (78 : 31-36)

எனவே, சுவனத்தில் வரையறையற்ற வெகுமதிகளும், சுக போகங்களும் கிடைக்கின்றன. உலகில் இறையச்சமுள்ளவர்கள் செய்த நற்கருமங்களுக்கு அவற்றின் அளவை விட மிக அதிகமான வெகுமதிகள் வழங்கப்படுவதாக குர்ஆன் குறிப்பிடுகிறது. சுவர்க்கவாதிகளுக்கு மத்தியில் ஏற்றத்தாழ்வுமுண்டு. மிகச்சிறந்தவர்களுக்கும் சிறந்தவர்களுக்குமிடையிலே வித்தியாசங்களுண்டு. நரகிற்கு சென்று தண்டனைகளைப் பெற்றுவிட்டு திரும்பியவர்களும், நரகிற்கு செல்லாது நேரடியாக சுவர்க்கத்துக்கு சென்றவர்களும் சமனாகமாட்டார்கள்.

சுவர்க்க சுகபோகங்கள் குறித்து ஸூரதுல் காபிலே அல்லாஹுத் தஆலா பின்வருமாறு வர்ணிக்கிறான்.

“அவர்களுக்கு அதிலே விரும்பியதெல்லாம் கிடைக்கும். இன்னும் எங்களிடத்தில் அதைவிட அதிகமாகவுமுண்டு.” (50 : 30,31)

எனவே, சுவன இன்பங்களை வரையறுத்துக்கூற முடியாது. அது மனித அறிவுக்கும், கற்பனைக்கும் அப்பாற்பட்டது. அத்தகைய சுவனத்திலே மனிதன் பெற்றுக்கொள்ளும் மிகப்பெரும் இன்பமாக அல்லாஹ்வின் திருமுகத்தை பார்க்கும் நிகழ்வு இடம்பெறும். அதுதான் ஒரு மனிதனுக்கு மறுமையில் கிடைக்கும் மிகப்பெரும் இன்பமாகும்.

## நரகம்

அல்லாஹ்வையும் மறுமையையும் நிராகரித்து வாழ்ந்தவர்களும் பாவங்கள் மிகைத்தோரும் இறுதியாக செல்லுமிடமாக நரகம் இருக்கும். மறுமையை அல்லாஹ் மிக நீதியான தீர்ப்பு வழங்கும் இடமாக ஆக்கியுள்ளான். அங்கு யாருமே எந்த அநீதிக்கும் உட்படமாட்டார்கள். உலகில் செய்தவற்றின் விளைவு களை அங்கு மனிதன் கண்டுகொள்வான். இந்தவகையில் பாவங்களும், அநியாயங்களும் செய்து அத்துமீறிச் செயற்பட்டோர் கடும் வேதனைகளும், அபாயங்களும் கொண்ட நரகினுள் நுழைந்து எரிவார்கள். நரகின் கொடுமைகளோ மிகவும் பயங்கரமானவை. உலகில் செய்த அநியாயங்களுக்கு ஏற்ற கூலியை நரகிலே பாவி பெற்றுக்கொள்கிறான். ஸூரது நப.்.யிலே பின்வருமாறு அல்லாஹ் சொல்கிறான் :-

"அது (அவர்கள் செயலுக்குத்) தகுமான கூலியாகும்." (78 : 26)

எனவே, உலகில் செய்த அநியாயங்களுக்கு தகுந்த விளைவை, தண்டனையை பாவிகள் அனுபவிப்பர். நரகம் முழுமையாக நெருப்பினால் சூழப்பட்டிக்கும். அதன் சுவர்களும், கதவுகளும் நெருப்பினால் ஆக்கப்பட்டிருக்கும். எனவே பாவிகள் அதனுள் வீழ்ந்து எரிவார்கள்.

"அவர்களை வைத்து நரகம் இறுக்கி மூடப்படும்" : (90 : 20) இத்தகைய கொடுமைகளும், தண்டனைகளும் வழங்கப்பட்டும் அவன் அழிந்துவிட மாட்டான். அங்கு மரணம் கிடையாது. அதேவேளை நிம்மதியான வாழ்வும் கிடையாது."பின்னர் அவன் அதில் இறக்கவுமாட்டான்." (சுகமாக) வாழவுமாட்டான். (87 : 13)

நரகிலே காபிர்கள் நிரந்தரமாக தங்கிவிட பாவம் மிகைத்த மு.:.மின்கள் அதற்கேற்ற தண்டனையைப் பெற்று பின்னர் சுவர்க்கம் திரும்புவார்கள்.

# கழா கத்ர்

ஒரு முஸ்லிம் விசுவாசிக்க வேண்டிய ஆறு அடிப்படைகளில் ஒன்றே கழாகத்ர் பற்றிய நம்பிக்கையாகும். அல்லாஹுத்தஆலா இந்தப் பிரபஞ்சத்துக்கு வகுத்த சீரான ஒழுங்கு, பொது விதிகள், பிரபஞ்சத்தை இயக்கும் சீரான நியதிகளை குறிக்கவே "கத்ர்" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. பிரபஞ்சத்தைப் படைக்க முன்பே அல்லாஹ் அனைத்தையும் ஏற்பாடு செய்து அவை எந்த நேரத்தில் எந்த வடிவத்தில் நிகழ வேண்டும் என்பதை முன் கூட்டியே அறிந்து வைத்துள்ளான்.

இந்தப் பிரபஞ்சம் எந்தத் திட்டமிடலும், கண்காணிப்பும் அறிவுமின்றி இயங்கவில்லை. இந்தப் பிரபஞ்சத்துக்குப் பின்னால் அல்லாஹ்வின் பாரிய திட்டமிடலிருக்கிறது. அவன் உலகைப் படைக்குமுன்பே அனைத்தையும் அறிந்து ஒழுங்கான நியதிகளை வகுத்து சிறப்பாக அமைத்துள்ளான். அனைத்து நிகழ்வுகளும் இறைவனின் பதிவேட்டிலே பதியப்பட்டிருக்கின்றன. உலக நிகழ்வுகள் அனைத்தும் இறைவனால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

"நிச்சயமாக நாம் அனைத்தையும் நிர்ணயத்தோடு படைத்துள்ளோம்." (54 : 49)

"அனைத்தையும் அவன் படைத்து சீராக நிர்ணயித்துள்ளான்." (25 : 2)

இறைவனின் ஆழ்ந்த அறிவாலும், திட்டமிடலாலும் பிரபஞ்சம் படைக்கப்பட்டு செவ்வனே இயக்கிச் செல்லப்படும் உண்மையை விசுவாசிப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் அடிப்படைக் கடமையாகும். அல்லாஹ்வின் நிறைவான அறிவையும் சக்தியையும் ஏற்றுக்கொள்ளும் ஒன்றாக கழா கத்ர் பற்றிய நம்பிக்கை காணப்படுகிறது.

**கழா கத்ர் நம்பிக்கையின் முக்கியத்துவம் -**

கழாகத்ரை விசுவாசிப்பது முஸ்லிமுடைய நம்பிக்கையிலிருந்து பிரித்து நோக்க முடியாத ஒரு பகுதியாகும். மனித செயற்பாடுகள், படைப்பினங்களின் எதிர்கால நிகழ்வுகள் அனைத்தையும் அல்லாஹ் நன்கறிந்துள்ளான் என்று நம்பிக்கை கொள்வது முஸ்லிமின் அடிப்படைக் கடமையாகும்.

இஸ்லாத்தின் கழாகத்ர் பற்றிய நம்பிக்கைக் கோட்பாடு அல்லாஹ்வுடைய திருநாமங்களையும் பண்புகளையும் ஈமான் கொள்வதன் அடியாகவே எழுகிறது. அல்லாஹுத்தஆலா தன்னை திருநாமங்கள், பண்புகளுக்கூடாகவே அறிமுகம்

செய்கிறான். இறைவனின் பெயர்களையும், பண்புகளையும் நம்பிக்கை கொள்வது கழாகத்ரை நம்பிக்கை கொள்வதாக அமைகிறது. அல்லாஹ்வுடைய பண்புகளில் விரிந்த அறிவும், சக்தியும், நாட்டமும் கழாகத்ர் நம்பிக்கையில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன.

"அவன் அனைத்தையும் நன்கறிகிறான்" (2 : 29)

"அவன் அனைத்தின் மீதும் சக்தி பெற்றவன்" (57 : 2)

"அவன் விரும்பியதை செய்பவன்" (85 : 16)

அல்லாஹ்வின் ஆழமான அறிவு, வல்லமை, நாட்டம் போன்ற பண்புகளை விளங்குவதும், விசுவாசிப்பதும் முஸ்லிமின் கடமையாகும்.

இஸ்லாமிய அகீதாவின் ஆறு தூண்களில் ஒன்றான கழாகத்ர் பற்றிய நம்பிக்கையின் அவசியத்தை வரலாற்றில் ஹதீஸ் ஜிப்ரீல் எனப்படும் நபிமொழி தெளிவுபடுத்துகின்றது. ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி(ஸல்) அவர்க ளிடத்திலே ஈமான் குறித்து எனக்குச் சொல்லுங்கள் என்றார். "அது அல்லாஹ்வின் மீதும் அவனது வானவர்கள், அவனது வேதங்கள். அவனது தூதர்கள், இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொள்வதும் நல்லவைகளும் தீயவைகளும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கும் (கத்ர்) என்று நம்புவதாகும்" என நபி (ஸல்) அவர்கள் பதிலுரைத்தார்கள் எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

கத்ரை ஈமான் கொள்ளும் வரை ஒருவன் ஈமான் கொண்டவனாக ஆவதில்லை. இதனை அலி(ரழி) அவர்கள் அறிவிக்கும் நபி மொழி பின்வருமாறு தெளிவுபடுத்துகிறது. "ஓர் அடியான் நான்கு விடயங்களை ஈமான் கொள்ளும் வரை ஈமான் கொண்டவனாக ஆகமாட்டான். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை என்றும் நான் சத்தியத்தைக் கொண்டு அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதர் என சாட்சிபகர்வதும், மரணத்தையும், கியாமத்தையும் விசுவாசிப்பதும், கத்ரை ஈமான் கொள்வதுமாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

"அல்லாஹுத்தஆலா பேனையை முதலாவது படைத்து அதற்கு எழுதுமாறு கட்டளையிட்டான். "நான் எதனை எழுதுவது என அது கேட்டபோது அல்லாஹுத்தஆலா,"மறுமை நாள் வரைக்கும் நிகழும் அனைத்தையும் பதிவு செய்." என்றான். உபாதத் இப்னூஸ் ஸாமித் மேற்கூறியவாறு ஹதீஸை அறிவுப்புச் செய்து விட்டு இறைத்தூதர் நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு சொல்வதை தான் செவிமடுத்ததாக கூறுகிறார். "யார் இந்த நம்பிக்கை யில்லாமல் மரணிக்கிறாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்லர்." (அபூதாவூத்)

கழாகத்ரை ஈமான் கொள்வதன் அவசியம் குறித்து நபி(ஸல்) அவர்கள் அதிகமாக விளக்கியுள்ளார்கள். கழாகத்ரை நம்பிக்கை கொள்வதன் அவசியத்தை விளக்கும் இருநூற்று இருபதற்கும் மேற்பட்ட ஹதீஸ்கள் இருப்பதாக இமாம்கள் குறிப்பிடுகிறார்கள்.

அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வது கத்ரையும் சேர்த்து நம்பிக்கை கொண்டதாக அமைகிறது என்பதால் அல்குர்ஆன் கத்ர் பற்றிய நம்பிக்கையை தனியாக குறிப்பிடவில்லை. அல்லாஹ்வை ஈமான் கொள்வதையும், அவனது அறிவு, சக்தி, நாட்டம் போன்றவற்றை வேறாக பிரித்து நம்புவதும் சாத்தியமற்றதாகும். ஒருவன் இறைவனை நம்புகிறான் என்றால் அவனது ஏற்பாடுகளையும், திட்டங்களையும், நிர்வாகத்தையும் சேர்த்தே நம்புகிறான் என்பது பொருளாகும். எனவே, இறை நம்பிக்கையிலிருந்து பிரித்து நோக்க முடியாத ஒன்றாக கழாகத்ர் பற்றிய விசுவாசம் காணப்படுகின்றது.

**கத்ரின் படித்தரங்கள்**

இறைவனின் ஏற்பாட்டை அல்லது நிர்ணயத்தை நான்கு படித்தரங்களில் விளங்கிக் கொள்ளலாம்.

1. ஒரு நிகழ்வு நடைபெற முன்னரே அதைப்பற்றிய அறிவு அல்லாஹ் விடத்தில் உண்டு. அல்லாஹ்வுடைய அறிவுக்கு முன்னால் கட்புல னானவை, கட்புலனாகாதவை, சிறியவை, பெரியவை, இறந்தகாலம், எதிர்காலம் என்ற வேறுபாடில்லை. ஒரு செயல் எப்போது நிகழும், எந்த வடிவத்தில் நிகழும் போன்ற அனைத்தையும் அல்லாஹ் நன்கறிந்து வைத்துள்ளான்.

“உமது இரட்சகனை விட்டும் பூமியிலோ, வானத்திலோ கடுகளவேனும் ஒன்றோ அல்லது அதைவிடவும் சிறியதோ அல்லது அதைவிட பெரியதோ தவறிச் செல்லமாட்டாது. மிகத் தெளிவான ஏட்டிலே அனைத்தும் உள்ளன.” (10 : 61)

எதிர் காலத்தில் ஒரு காரியம் நடக்கப் போவதாக அல்லாஹ் அறிந்திருந்தால் அது நடந்தே தீரும். நடக்கமாட்டாது என்பது ஒரு போதும் நிகழப் போவதில்லை. குறித்த காரியம் எந்த நிலையில் எந்தப் பண்புகளோடு நிகழும் என்பதையெல்லாம் அவன் அறிந்த பிரகாரமே நடக்கும்.

2. பிரபஞ்சத்தில் நிகழும் அனைத்துக் காரியங்களும் அல்லாஹ்வின் நாட்டத்தின் பிரகாரம் நடைபெறும். இறை நாட்டத்துக்கு வெளியில் எதுவும் நிகழப் போவதில்லை.

3. பிரபஞ்சத்தில் இருப்பவை அனைத்தும் அல்லாஹ்வின் ஆக்கங்களாகும். இறைசக்தியின் அடையாளமே பிரபஞ்சப் படைப்புக்களாகும். அவனல்லாது வேறு எந்த சக்தியும் உலகில் எதனையும் ஏற்படுத்த முடியாது.

4. பிரபஞ்ச நிகழ்வுகள் அனைத்தையும் மிக ஆரம்பம் முதலே அல்லாஹ் பதிவேட்டில் பதிவு செய்துள்ளான். இதனைத் தான் அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது. “பதிவேட்டில் எதனையும் நாம் குறிப்பிடாமல் விட்டுவைக்கவில்லை.” (6 : 38)

பிரபஞ்ச நிகழ்வுகள் அனைத்தும் அல்லாஹ்வின் அறிவு, சக்தி, நாட்டம் என்பவற்றினடியாகவே செயற்படுகின்றன. அனைத்தையும் படைக்க முன்னர் அவற்றை இறைவன் அறிந்து வைத்துள்ளான். பிரபஞ்ச நிகழ்வுகள் அனைத்தும் இறை நாட்டத்தின் படியே நிகழ்கின்றன. இறைவனே உலகில் அனைத்தையும் உண்டாக்குகின்றான். பிரபஞ்சம் படைக்கப்பட முன்னரே அனைத்தும் அல்லாஹ் வின் பதிவேட்டிலே பதிவு செய்யப்பட்டுவிட்டன. இத்தகைய அனைத்து படித்தரங்களையும் ஏற்றுக் கொள்ளும் போதே கழாகத்ர் பற்றிய நம்பிக்கை பூரணம் பெறுகிறது.

### சுதந்திரமற்ற பகுதியும் சுதந்திரமுள்ள பகுதியும்

இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கையாக விளங்கும் கத்ர் மீதான நம்பிக்கை மனித வாழ்வோடு மிகவும் பின்னிப் பிணைந்ததாகும். வாழ்வின் ஒவ்வொரு பகுதியோடும் அது தொடர்புபடுகிறது. மனிதனின் பிறப்புக்கு முன் ஆரம்பித்து அவனது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களோடும் தொடர்புபட்டிருக்கும் கத்ரை நாம் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். இறைவனின் அறிவு, சக்தி, நாட்டம், என்பன தொழிற்படும் கத்ர் மனித வாழ்வோடு இரண்டு வகையில் தொடர்புபடுகிறது.

### 1. மனிதனுக்கு சுதந்திரமற்ற பகுதி

மனிதனைப் படைத்த அல்லாஹ் அவனுக்குத் தேவையானவற்றை ஏற்படுத்தி வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளான். பிரபஞ்சம் முழுவதையும் அல்லாஹ் இயக்கிச் செல்வது போல மனித வாழ்வையும் அவன் திட்டமிட்டு நடத்திச் செல்கிறான். மனிதன் அல்லாஹ்விடத்தில் கேட்காமல் அல்லது மனிதன்

அறியாமலேயே எத்தனையோ அருட்கொடைகளை வழங்கியுள்ளான். அவ்வாறு இறை அருளினால் படைக்கப்பட்ட மனிதன் எத்தனையோ விடயங்களில் அவனது எந்தத் தெரிவும், சுதந்திரமும் அற்றவனாக காணப்படுகிறான். மனிதனாகப் படைக்கப்படல், ஆண் அல்லது பெண்ணாகப் படைக்கப்படல், அரபிக்கு அல்லது அஜமிக்கு பிள்ளையாக இருத்தல், குறிப்பிட்டதொரு இடத்தில் குறித்த மாதத்தில் பிறத்தல், அவனது நிறம், மொழி, உடற்கட்டமைப்பு, அவனது ஆயுள் போன்றன முழுமையாக இறைநாட்டமாகவே உள்ளன. இந்தப் பகுதியில் மனிதனுக்கு எந்த சுதந்திரமும் வழங்கப்படவில்லை.

> "உமது இரட்சகன் அவன் விரும்பியவாறு படைத்து தெரிவு செய்கிறான். அவர்களுக்கோ எந்தத்தெரிவுமில்லை." (28 : 68)

> "வானங்கள் பூமியினது அதிகாரம் அல்லாஹ்வுக்கே உரித்தாகும். அவன் விரும்பியவாறு படைக்கிறான். அவன் விரும்பியவருக்கு பெண் பிள்ளைகளை பரிசளிக்கிறான், இன்னும் சிலருக்கு ஆண் குழந்தைகளை பரிசளிக்கிறான். அல்லது ஆண், பெண் என்று கலந்தும் கொடுக்கிறான். தான் நாடிய சிலரை குழந்தைகளற்ற மலடர்களாக ஆக்கிவிடுகிறான். அவனோ ஆழ்ந்த அறிவும், சக்தியுமுள்ளவன்." (42 : 49, 50)

> "அவன்தான் கருவறைகளில் அதான் விரும்பியவாறு உங்களுக்கு உருவமளிக்கிறான். அவனைத் தவிர கடவுள் கிடையாது. அவன் சக்தியும் ஞானமும் மிக்கவன்." (3 : 6)

> "எந்தவொரு ஆத்மாவுக்கும் அல்லாஹ்வின் நாட்டமின்றி மரணிக்க முடியாது. (3 : 145)

மேற்கூறிய அல்குர்ஆன் வசனங்கள் மனிதனுக்கு சுதந்திரம் வழங்கப்படாத பகுதிகளை விளக்குகின்றன. அத்தகைய சுதந்திரமளிக்கப்படாத பகுதிகளுக்கு அவன் பொறுப்பாக இல்லை. அவை குறித்து மறுமையில் அல்லாஹ் அவனிடத்தில் விசாரிக்கப் போவதுமில்லை. ஆனால், மனிதன் அல்லாஹ்வின் இந்த ஏற்பாடுகளை நிறைவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதில் திருப்தி காணாது இருப்பது அல்லாஹ்வின் படைப்பாற்றலில் குறைகாணுவதாக அமையும். எனவே, கழாகத்ரின் சுதந்திரமற்ற பகுதியானது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முழுக்க இறை நாட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது.

## 2. மனிதனுக்கு தெரிவுச் சுதந்திரமுள்ள பகுதி

கழாகத்ரின் அடுத்த பகுதி மனிதனுக்கு தெரிவுச் சுதந்திரம் வழங்கப்பட்ட பகுதியாகும். இங்கு தெரிவுச் சுதந்திரம் என்பது மனிதன் தனக்கு சுதந்திரமும், அதிகாரமும் இருப்பதாக நினைக்கும் பகுதியாகும். உண்ணுதல், குடித்தல், உடுத்தல் போன்ற அன்றாட வாழ்வோடு தொடர்பானவையும், தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற இஸ்லாம் விதியாக்கிய கடமைகள் மற்றும் இஸ்லாம் வகுத்தவைகள் என்பனவும் மனிதனுக்கு தெரிவுச் சுதந்திரம் வழங்கப்பட்ட பகுதிகளாக உள்ளன.

சத்தியத்தையும், அசத்தியத்தையும் தெரிவு செய்வதும், தெரிவுக்குப் பின் அதனடிப்படையில் வாழ்வதும் மனித சுதந்திரத்துக்கு உட்பட்டது.

> “நபியே கூறுவீராக ! சத்தியம் உங்களது இரட்சகனிடமிருந்து வந்ததாகும். யார் விரும்புகிறாரோ அவர் ஈமான் கொள்ளட்டும். யார் விரும்புகின்றாரோ அவர் நிராகரிக்கட்டும்.” (18 : 29)

> “நிச்சயமாக இது ஞாபகமூட்டலாகும். யார் விரும்புகிறாரோ அவர் தன்னுடைய இரட்சகனை நோக்கி பாதையை அமைத்துக் கொள்ளட்டும்.” (73 : 19)

எனவே, சத்தியம், அசத்தியம், நன்மை, தீமை என்பன தெளிவுபடுத்தப்பட்டு, மனிதனுக்கு அவற்றில் விரும்பியதை தெரிவு செய்து கொள்ளும் சுதந்திரத்தையும் அளித்திருப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. இவ்வாறு சுதந்திரமளிக்கப்பட்ட பகுதியில் அவன் தெரிவு செய்வதைப் பொறுத்து மறுமை வாழ்வு அமையும். இறைவனின் விசாரணை கூட செயற் சுதந்திரமுள்ள பகுதியிலே இடம் பெறுகின்றது.

எனவே மனிதன் இரண்டு பகுதிகளைக் கொண்டவனாக இருக்கிறான். அவை செயற் சுதந்திரம் வழங்கப்பட்ட பகுதியும், செயற் சுதந்திரம் வழங்கப்படாத பகுதியுமாகும். செயற் சுதந்திரம் வழங்கப்படாத பகுதியிலும் இறைவனின் ஏற்பாடுகளை முழு மனதுடன் விசுவாசிப்பதும், செயற்சுதந்திரம் வழங்கப்பட்ட பகுதியில் சத்தியத்தை தெரிந்து பின்பற்றி வாழ்வதும் மறுமை வெற்றிக்கு இன்றியமையாததாகும்.

**கழாகத்ரை ஈமான் கொள்வதன் பயன்கள்**

கழாகத்ர் பற்றிய நம்பிக்கை முஸ்லிமின் வாழ்வில் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்துகிறது. உலக வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் அவனை சிறந்த மனிதனாக அந்த நம்பிக்கை வாழவைக்கிறது. யுத்தம், சமாதானம், இன்பம், துன்பம், வசதி, நெருக்கடி போன்ற வாழ்வின் எதிரும் புதிருமான சந்தர்ப்பங்களிலும் கழாகத்ரை விசுவாசித்த மனிதனை மிகச் சிறந்த மனிதனாக, நிதானமிழக்காத வனாக வாழவைக்கிறது. இந்தவகையில் கத்ர் மீதான நம்பிக்கை ஒரு முஸ்லிமின் வாழ்வில் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

1. **அபாயம், மற்றும் நிர்க்கதியான கட்டங்களில் உறுதியாக வாழ வைக்கும்.** நெருக்கடி, அபாயம் நிறைந்த சூழலில் இறைவனின் ஏற்பாட்டின் மீதுள்ள நம்பிக்கை ஒரு முஸ்லிமை வீரனாக செயற்படுத்தும். தன்மீது அல்லாஹ் ஏற்படுத்தி வைத்துள்ளவை சார்பாக இருப்பினும் அல்லது எதிராக இருப்பினும் நடந்தே தீரும் என்ற நம்பிக்கை அவனது உள்ளத்திலே ஆழமாக பதிந்துள்ளது. அல்லாஹ் நிர்ணயித்த நேரத்துக்கு முன்னால் தனக்கு மரணம் வரப்போவதில்லை. யாராலும் தன்னுடைய ஆயுளை அதிகரிக்கச் செய்யவோ, குறைக்கவோ முடியாது என அவன் உறுதியாக நம்புகிறான்.

> “அவர்களது மரணவேளை வந்து விட்டால் சற்று நேரம் பிற்படுத்தப்படவும் மாட்டார்கள், முற்படுத்தப்படவும் மாட்டார்கள்.” (7 : 34)

இந்த ஆழமான நம்பிக்கை தான் வரலாறு நெடுகிலும் முஸ்லிமை உறுதியாக வாழவைத்து எத்தனையோ வீரதீரச் செயல்களை நிகழ்த்த வைத்தது.

**2. அநியாயத்துக்கெதிராக உறுதி கொள்ளல்**

கழாகத்ர் பற்றிய நம்பிக்கையானது அநியாயம், மற்றும் அசத்தியத்துக்கெதிராக களத்திலே போராடும்போது ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும். அது இறைவனின் தீர்மானத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டதால் தீமைகளுக்கு எதிராக குரல் கொடுத்து சவால்களை ஸ்திரமாக இருந்து எதிர்கொள்ளும் துணிச்சலை ஏற்படுத்துகிறது. பின்வரும் அல்குர்ஆன் வசனம் முஸ்லிமுடைய வார்த்தைகள் இப்படித்தான் அமையும் என்கிறது.

> “நபியே நீர் கூறுவீராக! அல்லாஹ் எங்களுக்காக விதித்ததைத் தவிர வேறு எதுவும் எங்களுக்கு நிகழாது. அவனே எங்களது தலைவன். அவன் மீது மு.்.மின்கள் தவக்குல் வைப்பார்கள்.” (9 : 5)

### 3. துன்பங்களின் போது பொறுமையாக இருத்தல்

கத்ரை விசுவாசித்த மு.'.மினை பதற்றமோ, பீதியோ பீடிக்காது. அதிருப்தியோ கலக்கமோ அவனுக்கு ஏற்படாது. அவனை எதிர்நோக்கி வரும் அனைத்து துன்பங்களையும் மலை போன்று உறுதியாக நின்று எதிர்கொள்வான். முஸ்லிமின் உள்ளத்திலே அல்குர்ஆன் கூறும் பின்வரும் உண்மை ஆழப்பதிய வேண்டும்.

> "பூமியிலோ அல்லது உங்களுக்கோ நேரும் எந்தத் துன்பமாக இருந்தாலும் அதனை ஏற்படுத்த முன்னர் லௌஹுல் ம.'.பூல் எனும் ஏட்டிலே பதிக்கப்பட்டு விட்டது. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதாகும். உங்களை விட்டு தவறிச்சென்றதை விட்டும் நீங்கள் கவலை கொள்ளாதிருப்பதற்காகவும், உங்களுக்கு அவன் கொடுத்ததைக் கொண்டு வரம்பு மீறி மகிழ்ச்சி கொள்ளாதிருப்பதற்காகவும் இதனை அறிவிக்கிறான்." (57 : 22, 23)

கத்ரை விசுவாசித்த முஸ்லிமுக்கு துன்பமான சோதனைகளின் போது நிலைகுலையாமல் இருக்கும் சக்தியை அது வழங்கும். ஏனெனில், அனைத்தும் முன்கூட்டியே எழுதப்பட்டுவிட்டன. எனவே, இழப்புகளுக்காக கைசேதப்பட்டு கவலையில் மூழ்கவும், சாதித்தமைக்காக சந்தோஷப்பட்டு பெருமை அடிப்பதும் கத்ரை விசுவாசித்தவனின் பண்பல்ல. எனவே தான் நபி(ஸல்) அவர்கள் கத்ரை விசுவாசித்த ஒரு மு.'.மினை பின்வருமாறு வர்ணித்தார்கள்:

> "மு.'.மினின் நிலை ஆச்சரியமானது. அவனது விடயமனைத்தும் அவனுக்கு நலவாகவே அமைந்துள்ளன. ஒரு விசுவாசிக்கு மாத்திரமே இந்த பாக்கியமுண்டு. அவனை மகிழ்வூட்டும் எதாவது நடந்தால் அதற்காக நன்றி செலுத்துவான். அது அவனுக்கு நலவாக அமைகிறது. துன்பம் அவனை பீடித்தால் பொறுமையாக இருப்பான். அதுவும் அவனுக்கு நலவாகவே அமைந்துவிடுகிறது." (முஸ்லிம்)

### 4. அல்லாஹ் பகிர்ந்தளித்தவற்றில் திருப்தியும் மனநிறைவும் காணல்

கத்ரை விசுவாசித்ததன் இன்னொரு விளைவு அல்லாஹ் பகிர்ந்தளித்த ரிஸ்கில் மன நிறைவும் திருப்தியும் காணுவதாகும். இந்த ஈமானிய உணர்வு வேறுபல சிறந்த பயன்களையும் ஏற்படுத்துகிறது. போதும் என்ற தன்மையை அவனுக்குள்ளால் ஏற்படுத்துகிறது. "உண்மையான செல்வம் என்பது போதும் என்ற மனநிலையாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

“அல்லாஹ் உனக்கு பிரித்தளித்தவற்றில் திருப்திகொள். நீயே மக்களில் மிகவும் செல்வந்தனாக இருப்பாய்” என்று நபியவர்கள் கூறினார்கள். அதே போன்று கழாகத்ர் மீதான விசுவாசம் ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் ரிஸ்கை மிகவும் நிதானமாக, தூய்மையாக, ஹலாலாக சம்பாதிக்க வைக்கிறது. அளவுக்கதிகம் அதிலே கவனம் செலுத்தி பொருள்களுக்குப் பின்னால் அள்ளுண்டு அவன் செல்வதில்லை.

### 5. உள அமைதியும், மன நிறைவும் ஏற்படுதல்

ஒருவனுக்காக அல்லாஹ் நிகழும் என நியமித்தவை நடைபெறாமல் இருக்கவும் மாட்டாது. நிகழமாட்டாது என்று நிர்ணயித்தவை நிகழவும் மாட்டாது என்ற ஒரு மு.்.மினின் விசுவாசம்; தனது வாழ்வில் எது இடம் பெற்றாலும் அவனது மனநிம்மதியை பாதிக்கமாட்டாது.

மனிதனது உள்ளத்தில் ஏற்படும் பீதி, தடுமாற்றம் என்பவற்றுக்கு கடந்த காலம் குறித்த கவலை, நிகழ்காலம் குறித்த அதிருப்தி, எதிர்காலம் குறித்த பயம் போன்றவை காரணமாகும்.

### 6. ஆக்கபூர்வமான செயல்களை நோக்கி தூண்டுதல்

மனநிறைவையும், நிம்மதியையும் பெற்றுக்கொண்ட மு.்.மின் இறந்தகாலம் பற்றிய கவலையோ, எதிர்காலம் குறித்த அச்சமோ இன்றி நிகழ்காலத்தில் உற்சாகமாக தொழிற்படுவான். நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:- “பலமான மு.்.மின் பலவீனமான மு.்.மினை விட அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானவனாகவும், சிறந்தவனாகவும் இருக்கிறான். ஆனால், இரண்டிலும் நலன்கள் இருக்கின்றன. உனக்கு பயனுள்ளதில் கவனம் செலுத்து. அல்லாஹ்வை உதவியாகக் கொள். நீ இயலாதவனாக இருந்து விடாதே. நான் இப்படிச் செய்திருந்தால் இப்படி நடந்திருக்கும் என்று கூறாதே. மாறாக அல்லாஹ் நிர்ணயித்தவை அவன் நாடியவாறு நடந்து விட்டது என்று கூறு. இப்படி செய்திருக்க வேண்டுமே என்று கூறுவது ஷைத்தானின் செயலை குறிப்பதாகும்.” (முஸ்லிம்)

எனவே, மேற்கூறிய ஹதீஸ் உலகிலும் மறுமையிலும் நலன் விளைவிக்கும் காரியத்தில் கவனம் செலுத்துமாறும், அதற்காக அல்லாஹ்வை உதவியாகக் கொள்ளுமாறும் கூறுகிறது. உலக வாழ்வுக்கு தேவைப்படும் லௌகீகக் காரணிகளைப் பெற்று, இறைவனின் மீது நம்பிக்கை கொண்டு வாழ்வதும் ஒரு மு.்.மினுக்கு திருப்தியை ஏற்படுத்தும்.

## அகீதா சார்ந்த பிரிவுகள்

இஸ்லாமிய வரலாற்றில் அகீதா தனியான கலையாக தோற்றம் பெற்று வளர்ச்சி கண்டது. இஸ்லாமிய அகீதாவில் பல்வேறுபட்ட சிந்தனைப் பிரிவுகள் தோன்றின. அவற்றில் தூய இஸ்லாமிய நெறிமுறைகளிலிருந்து விலகிய மு.்.தஸிலா, ஷீஆ, ஹவாரிஜ் போன்ற பிரிவுகளும் தூய இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்திய அஷ்அரிய்யா, மாதுரூதிய்யா போன்றவைகளும் குறிப்பிடத்தக்கவைகளாகும். அல்குர்ஆன், ஸுன்னா வழியில் தோன்றிய அகீதாவின் பிரிவுகளை இங்கு நோக்குவோம்.

**(1) அஷ்அரி அகீதாப் பிரிவு :-**

பிரபஞ்சம் பற்றிய உண்மைகளும், மதக்கோட்பாடுகளும் மனிதனின் பகுத்தறிவின் அடிப்படையில் உணர்ந்து விளக்கப்பட முடியும் என்ற மு.்.தஸிலாக்களின் தீவிர பகுத்தறிவுக் கொள்கைகளுக்கு எதிராகத் தோன்றியதே அஷ்அரி இயக்கமாகும். அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தின் அகீதாவை பிரதிநிதித்துவப் படுத்தும் அகீதாவாக விளங்கும் அஷ்அரி அகீதாவை ஹிஜ்ரி 260 இல் பஸராவில் பிறந்த இமாம் அபுல்ஹஸன் அலி இப்னு இஸ்மாஈல் அஷ்அரி தோற்றுவித்தார். அவரது தந்தை இஸ்மாஈலின் மரணத்துக்குப் பின்னர் அவரது தாய் மு.்.தஸிலா இயக்கத்தின் புகழ்ப்பெற்ற அறிஞரான அபூஅலி அல்ஜுபாஈயைத் திருமணம் முடித்தார். அல்ஜுபாஈயினால் வளர்க்கப்பட்டு, கல்வியறிவு அளிக்கப்பட்ட அல்அஷ்அரி விரைவில் மு.்.தஸிலாக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவராகவும், ஜுபாஈயின் நம்பிக்கைக்குரிய துணையாளராகவும் இருந்தார். அபுல் ஹஸன் அஷ்அரி சொல்வன்மை மிக்க பேச்சாளராகவும், மதிநுட்பமிக்க தர்க்க வல்லுனராகவும் விளங்கியதால் மு.்.தஸிலாக் கொள்கையின் பிரதம பிரசாரகராகவும், மு.்.தஸிலாக் கொள்கையை எதிர்ப்பவர்களோடு விவாதிப்பவராகவும் இருந்தார். மு.்.தஸிலாக் கொள்கையை துறைபோக கற்ற அறிஞராக இருந்த அஷ்அரி, அல்லாஹ்வின் அருளினால் வழிதவறிய மு.்.தஸிலாக் கொள்கைக்கு எதிராக போர்க்கொடி தூக்குபவராக மாறினார். மு.்.தஸிலாக் கொள்கையின் பலவீனங்களையும், பிழைகளையும் தன்னுடைய நாற்பதாவது வயதில் உணர்ந்துகொண்ட அபுல் ஹஸன் அஷ்அரி பதினைந்து நாட்களாக வீட்டை விட்டு வெளியேறாது வீட்டிலே ஒதுங்கி இருந்துவிட்டு பதினாறாவது நாள் வெள்ளிக்கிழமை பள்ளிவாசலுக்கு சென்று மின்பரில் ஏறி தான் மு.்.தஸிலாக் கொள்கையை விட்டு விலகிவிட்டதாகவும், அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவதாகவும் மக்கள் முன்னிலையில் தெரிவித்தார்.

மு.்.தஸிலாக் கொள்கையை வெறுத்து விலகிய நொடிப்பொழுது முதல் அதற்கெதிரான பிரசாரத்திலே மிகத்தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தார். மு.்.தஸிலாக்கள் எந்தத் தர்க்க முறையையும், தத்துவச் சொற்றொடர்களையும் தமது கருத்துக்களை

நிறுவுவதற்குப் பிரயோகித்தார்களோ, அதே தர்க்கமுறையையும், தத்துவச் சொற்றொடர்களையும் அவர் மு:்.தஸிலாக்களோடு நடாத்திய கலந்துரையாடல்கள், விவாதங்களில் பயன்படுத்தி, மு:்.தஸிலாக் கொள்கையை முறியடித்தார்.

**அஷ்அரி கோட்பாடுகள் :-**

மு:்.தஸிலாக் கோட்பாடுகளுக்கு எதிராக அமைந்த அஷ்அரி இயக்கத்தின் மூலக்கொள்கைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:-

1. இறைவனின் பண்புகளும் (ஸிபாத்), அதனுடைய உட்பொருளோடு (தாத்) அதற்குள்ள தொடர்பும் :

    அல்லாஹ்வுக்கு சில பண்புகளும், தன்மைகளும் உள்ளன என்பதை அஷ்அரீக்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால், இவை மனிதனுடைய பண்புகளுடனும், தன்மைகளுடனும் எவ்வகையிலும் தொடர்புபடுத்தக் கூடியவையல்ல. எனவே இறைவனின் பண்புகளை ஆராய முற்படவோ அல்லது இப்பண்புகளை மனிதனின் பண்புகளோடு ஒப்பிடவோ முற்படக்கூடாது என அவர்கள் கூறினர்.

    மனிதனின் பண்புகளைக் குறிப்பிட நாம் பயன்படுத்தும் சொற்களை, இறைவனின் பண்புகளைக் குறிக்கப் பயன்படுத்தும் பொழுது, அது வேறு கருத்தில் பயன்படுத்தப்படல் வேண்டும். இறைவனின் பண்புகள் மனிதனின் பண்புகளிலிருந்து அவற்றின் அளவைப் பொறுத்தளவில் மட்டும் தான் வித்தியாசப்படும் எனக்கொள்ளல் தவறாகும். உதாரணமாக, இறைவன் மனிதனை விட ஞானமுள்ளவன், ஆற்றலுள்ளவன் என்பது போல் அவனது பண்புகளின் அளவைப் பொறுத்தளவில் மட்டுமன்றி, அவற்றின் முழுத்தன்மையைப் பொறுத்தளவிலும் வித்தியாசமுடையவனாவான். இவ்வாறு இறைவனின் தன்மைகள், மனிதனின் தன்மைகளிலிருந்து வித்தியாசப்படுவதை அஷ்அரீக்கள் ‘தன்ஸீஹ்’ எனக்கூறினர்.

2. அல்குர்ஆன் படைக்கப்பட்டதா, இல்லையா என்பது பற்றிய கோட்பாடு:

    அஷ்அரீக்கள், அல்குர்ஆன் என்பது நித்தியமானது, அது படைக்கப்பட வில்லை என்ற கோட்பாட்டை அதிகமாக வலியுறுத்துகின்றனர். அல்குர்ஆன் படைக்கப்படவில்லை என்பதற்கு பின்வரும் திருவசனங்களை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

    “நிச்சயமாக உங்கள் இறைவனாகிய அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்து, அர்ஷின் மீது தனது ஆட்சியை

நிலைநாட்டினான். அவனே, இரவால் பகலை மூடுகின்றான். பகலால் இரவை மூடுகின்றான். இது தீவிரமாகவே அதனைப்பின் தொடர்கிறது. சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும் அவனது கட்டளைக்கு உட்பட்டிருக்கின்றன. படைப்பும் (படைத்தலும்) அதன் ஆட்சியும் அவனுக்குரியதல்லவா? அகில உலகங்களையும் படைத்துப் போசித்து பரிபாலிக்கும் அல்லாஹ் மிக்க பாக்கியமுடையவன்" (7 : 54)

இங்கு இறைவன் தனது கட்டளைகளை தனது சிருஷ்டி தொழிற்பாட்டிலிருந்து வேறுபட்டதாக காட்டுகிறான். எனவே, இறைவனது கட்டளை, அவனது படைப்புக்களின் வகைகளில் அடங்குவதல்ல என அவர்கள் கூறுகின்றனர். மேலும் இறைவனது கட்டளையானது அவனது தன்மையை பொறுத்தளவில் அவனது வார்த்தைகள், பேச்சு ஆகியவற்றின் மூலமாக வெளிப்படுவதாகும். எனவே, 'கலாமுல்லாஹ்' (இறைவனின் பேச்சு) எனப்படும் அல்குர்ஆனும் படைக்கப்படாததாகும்.

"அவனே வானங்களையும் பூமியையும், முன்மாதிரியின்றியே படைத்தவன். அவன் எதனைப்படைக்கக் கருதி முடிவு செய்தாலும் அதனை ஆகுக என கூறிய மாத்திரத்தில் உடனே அது ஆகிவிடும்." (2 : 117) எனவும் அல்லாஹ் குறிப்பிடுகிறான். எனவே அல்குர்ஆன் படைக்கப்பட்டது எனில் "குன்"(ஆகுக) என்ற வார்த்தை இது தோன்றுவதற்கு முன் அதற்கு கூறப்பட்டதாக ஆகிவிடும் என அவர்கள் வாதிக்கின்றனர்.

### 3. இறை தரிசனத்தின் சாத்தியம் :

மறுமையில் இறைவனை கண்ணால் பார்த்து, தரிசனம் செய்ய முடியும் என்பதற்கு பல குர்ஆன் வசனங்களை ஆதாரமாகக் காட்டுகின்றார்கள்.

"அந்நாளில் சிலருடைய முகங்கள் மிக்க சந்தோஷமுடையவையாகத் தங்கள் இறைவனை நோக்கிய வண்ணமாக (பிரகாசமாக) இருக்கும். வேறு சிலருடைய முகங்களோ, அந்நாளில் வாடியவையாக இருக்கும்." (75 : 22-23)

இந்த வசனம் மறுமையில் இறை தரிசனமானது சுவர்க்கவாசிகளுக்கு அல்லாஹ் அளிக்கும் பேரருள் என விளக்குகின்றது.

இறை தரிசனம் சாத்தியம் என்பதை அல்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றின் ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமன்றி, தர்க்க ரீதியாகவும் அவர்கள் நிறுவுகின்றனர்.

**4. மனிதனின் செயல் சுதந்திரம் :**

மனிதனின் செயற்சுதந்திரம் பற்றிய கோட்பாட்டைப் பொறுத்தளவில் இமாம் அஷ்அரி மத்திய வழியையே கடைப்பிடித்தார். மு.ஃதஸிலாக்கள் மனிதன் பரிபூரண சுதந்திரமுடையவன் எனக் கூற அல்அஷ்அரி மனிதனின் செயல் சுதந்திரத்தை பின்வரும் வகையில் விளக்கினார்:-

> "மனிதனால் எதனையும் சிருஷ்டிக்க முடியாது. இறைவன் ஒருவனே சிருஷ்டிகர்த்தாவாக இருக்கிறான். மனிதனின் ஆற்றல் அவனது செயல்களில் எந்த விளைவையும் ஏற்படுத்துவதில்லை. இறைவன் தனது அடியார்களில் ஒரு செயலை புரியும் சக்தியையும் (குத்ரத்), அச்செயலை தெரிவு செய்யக்கூடிய தன்மையினையும் (இக்தியார்) சிருஷ்டிக்கிறான். இறைவன் தனது அடியார்களில் அவன் சிருஷ்டித்த சக்தி, தேர்ந்தெடுக்கும் தன்மை ஆகியவற்றிற்கு ஏற்ப அவனில் தனது செயல்களைச் சிருஷ்டிக்கிறான்."

> எனவே, அஷ்அரியைப் பொறுத்தளவில், மனிதனின் செயல், அதன் ஆரம்பம், அதன் செயல்பாடு என்பவற்றைப் பொறுத்தளவில் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டவை. அச்செயல் மனிதனால் புரியப்படுகிறது. இவ்வாறு மனிதன் இச்செயலை புரிவதை "கஸ்ப்" என அஷ்அரி அழைக்கின்றார்.

இந்தவகையில் அஷ்அரி, மனிதன் அவனது செயல் சுதந்திரம் காரணமாக தனது செயல்களுக்கு தானே பொறுப்பாகின்றான் என்ற கருத்தை நிறுவியவராக கருதப்படுகின்றார். பின்வரும் உதாரணத்தின் ஊடாக இக்கருத்தை அவர் தெளிவுபடுத்துகிறார். "ஒரு மனிதன் ஓர் எழுதுகோலின் துணைகொண்டு ஒரு காகிதத்தில் எழுதுகிறான். இறைவன் அவனது உள்ளத்தில் எழுத வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டி அவனுக்கு எழுதும் ஆற்றலையும் வழங்குகிறான். அதன் காரணமாக அவனது விரல்களும் எழுதுகோலும் அசைந்து, காகிதத்தில் எழுத்துக்கள் தோன்றுகின்றன." இந்த வகையில் மனிதனின் செயல்களுக்கும், அல்லாஹ்வின் நாட்டத்துக்கும் இடையிலான தொடர்பை விளக்குகிறார்.

முஃதஸிலாக்களின் வழிதவறிய சிந்தனைகள் மற்றும் கொள்கைகளுக்கு எதிராக ஆதாரங்களை முன்வைக்கும் அஷ்அரீக்கள் அல்குர்ஆன், ஸுன்னா என்பவையே அகீதாவின் மூலாதாரங்களாகும் எனக் கூறுகின்றார். இந்தவகையில் முஃதஸிலாக்களின் அதி தீவிர பகுத்தறிவுப் போக்கினால் ஏற்பட்ட வழிபிறழ்வுகளை சுட்டிக்காட்டி இஸ்லாமிய அகீதாவின் தூயவடிவை தர்க்க ரீதியாக முன்வைத்த அகீதாப்பிரிவாக அஷ்அரி கோட்பாடு விளங்குகிறது.

### (2) மாதுரூதிய்யா அகீதாப் பிரிவு :-

அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தின் அகீதாவை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றொரு சிந்தனைப்பிரிவே மாதுரூதிய்யாவாகும். இமாம் அல் அஷ்அரியின் காலப்பிரிவில் ஸமர்கந்தில் வாழ்ந்த புகழ் பூத்த அறிஞர் அபூமன்ஸுர் அல்மாதுரூதி (மரணம் ஹிஜ்ரி 332) என்பவரே மாதுரூரிய சிந்தனைப் பிரிவின் ஸ்தாபகர் ஆவார். முஃதஸிலாக் கொள்கைகளினால் இஸ்லாம் மாசுபடுத்தப்பட்டதற்கு எதிராக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே மாதுரூதிய்யாவாகும். முஃதஸிலாக் கொள்கைக்கு எதிராக ஒன்றுபட்ட அஷ்அரி, மாதுரூதி கொள்கைகள் காலப்போக்கில் வரலாற்றுச் சூழ்நிலைகளால் தனித்தனி அகீதாப் பிரிவுகளாக வளர்ச்சி கண்டன.

அஷ்அரி கோட்பாட்டிற்கும், மாதுரூதிக் கோட்பாட்டிற்கும் இடையில் மிகச் சிறிய வேற்றுமையே காணப்படுகிறது. இவ்விரு சாராருக்குமிடையே மிகச் சாதாரணமான - அடிப்படையல்லாத முப்பது முதல் நாற்பது விடயங்களிலேயே வித்தியாசம் காணப்படுகின்றது. இமாம் அபூமன்ஸுர் அல்மாதுரூதி ஹனபி மத்ஹபைச் சேர்ந்தவராகக் காணப்பட்டதால், அவர்களில் பெரும்பாலானோர் மாதுரூதியின் கோட்பாட்டை பின்பற்ற, ஷாபிஈக்களில் பெரும்பாலானோர் அஷ்அரியின் கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர்.

### மாதுரூதிய்யாவின் பிரதான கொள்கைகள்

1. இறைவனின் நாட்டம், வார்த்தை போன்ற பண்புகளை படைக்கப்பட்டதாகக் கருதும் முஃதஸிலாக்களின் நம்பிக்கைக்கு புறம்பாக அவை நிரந்தர மானவை என்ற தூய அகீதாவை முன்வைத்தார்கள்.

2. மனித சுதந்திரத்தைப் பொறுத்தவரையில் முஃதஸிலாக்கள் பூரண சுதந்திரமுள்ளவனாக மனிதனைக் கருதுவதற்கும், மனிதன் அவனது

செயல்களில் தாக்கம் விளைவிப்பவனாக இல்லை எனக்கருதும் அஷ்அரி நிலைப்பாட்டிற்கும் இடைப்பட்ட மத்திய நிலைப்பாட்டை மாதுரூதி முன்வைத்தார். அதாவது, மனிதன் தனது செயலை செய்வதற்கான உந்து சக்தியையும் தானே பெறுகிறான் என்ற கருத்தை முன்வைத்தார்.

மேற்கூறியவை போன்ற அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு மாதுரூதிய்யா அகீதாப் பிரிவு அஷ்அரியோடு சிறியளவில் முரண்படுகிறது. மு.ஃ.தஸிலாக்களின் பகுத்தறிவு ரீதியான எல்லை மீறல்களுக்கு சிறந்த மறுப்புக்களை முன்வைத்து, அல்குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படையில் தூய அகீதாவைப் பாதுகாத்து, அதனை கட்டிக்காத்த ஒரு சிந்தனைப்பிரிவாக மாதுரூதிய்யா விளங்குகிறது.

# மஸாதிருஷ் ஷரீஆ

இஸ்லாமிய சட்டங்களுக்கு அடிப்படையாக அமைகின்ற மூலாதாரங்கள் மஸாதிருஷ் ஷரீஆ எனப்படுகின்றன.

பின்வருவன இஸ்லாமிய சட்டங்களுக்கான மூலாதாரங்களாக கருதப்படுகின்றன.

1. குர்ஆன்
2. சுன்னா
3. இஜ்மா∴
4. கியாஸ்
5. இஸ்திஹ்ஸான்
6. இஸ்திஸ்ஹாப்
7. உர்ப்
8. கவ்லுஸ் ஸஹாபி
9. ஷராஇஉஸ் ஸாபிகா
10. ஸத்துத் தராஇ∴
11. இஸ்திஸ்லாஹ்

**மஸாதிர் நக்லிய்யா - அறிமுகம்**

ஷரீஆவின் மூலாதாரங்கள் பல்வேறு அடிப்படைகளில் பாகுபடுத்தப் படுவதுண்டு பிரதானமாக அவற்றை :-

1. மஸாதிருந் நக்லிய்யா
2. மஸாதிருல் அக்லிய்யா என இரு பிரிவுகளாக பிரிப்பதுண்டு.

நபி(ஸல்) அவர்களது காலம் முதல் இன்று வரை சில சட்ட மூலாதாரங்கள் அறிவிப்புக்கள் வாயிலாக தொடர்ந்து அடுத்த சந்ததிக்கு நகர்த்தப்பட்டு வந்துள்ளன. இவ்வாறு அறிவிப்புக்கள் வாயிலாக நகர்த்தப்படுகின்ற மூலாதாரங்களையே மஸாதிருன் நக்லிய்யா என்பர். இப்பிரிவில் பின்வரும் மூலாதாரங்கள் உள்ளடக்கப் படுகின்றன.

1. குர்ஆன்
2. சுன்னா
3. கவ்லுஸ் ஸஹாபி
4. ஷராஇஉஸ் ஸாபிகா

இவ்வகை சட்டமூலாதாரங்களை விளங்குவதற்கும் நடைமுறைப்படுத்து வதற்கும் மாத்திரமே அறிவானது தனது பங்களிப்பைச் செய்யலாம். அதாவது, இவ்வகை சட்ட மூலாதாரங்களை ஒரு முஜ்தஹித் பயன்படுத்தும் போது அவர் இருப்பதை நகர்த்துகின்ற பணியைத் தான் செய்கிறார். அதாவது இருப்பதை ~~விளங்குவதி~~லும் நடைமுறைப்படுத்துவதிலும் மாத்திரமே தனது அறிவுப் பங்களிப்பைச் செய்கிறார்.

இஸ்லாமிய சட்டங்களை முஜ்தஹித் விளங்க முனைந்த வேளையில் பிரதான மூலாதாரங்களாகிய குர்ஆனையும் ஹதீஸையும் அடியொட்டி தோன்றிய மூலாதாரங்களையே மஸாதிருல் அக்லிய்யா என்பர். இவ்வகை சட்ட மூலாதாரங்களை ஒரு முஜ்தஹித் பயன்படுத்தும் போது அறிவுக்கு கூடுதல் வேலை வழங்க வேண்டியுள்ளது. இருப்பதை நகர்த்தும் பணியை விட கூடுதலான பணியை அவரது அறிவு இங்கு ஆற்ற வேண்டியுள்ளது. பின்வரும் மூலாதாரங்கள் இப்பிரிவில் அடக்கப்படுகின்றன.

1. கியாஸ்
2. இஸ்திஹ்ஸான்
3. இஸ்திஸ்லாஹ்
4. இஸ்திஸ்ஹாப்

மஸாதிருன் நக்லிய்யா, மஸாதிருல் அக்லிய்யா எனும் இவ்விரு வகை மூலாதாரங்களிலுமே மனித அறிவுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. முதலாவது வகையில் விளங்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் அறிவுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது வகையில் ஷரீஆவின் எல்லைக்குள் நின்றுகொண்டு அதற்கு முரணில்லாத வகையில் அறிவுப் பங்களிப்பைச் செய்ய தாராளமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்விரு வகைச் சட்ட மூலாதாரங்களை அடிப்படையாக வைத்து உருவாகும் சட்டங்கள் இஸ்லாமிய சட்டங்களாகவே கருதப்படும். ஏனெனில் இறைவழிகாட்டலின் அடிப்படையிலேயே அச்சட்டங்கள் பெறப்பட்டுள்ளன.

**வஹி**

- வஹியின் அவசியம்
- வஹியின் வகைகள்

**அல்குர்ஆன்**

- **அருளப்படலும் தொகுக்கப்படலும்**

மனித சமூகத்துக்கு வழிகாட்டுவதற்காக இறைவனால் நபி(ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட அல்குர்ஆன் பின்வரும் நோக்கில் பார்க்கப்படவேண்டும்.

1. **அது முழுமையாக லைலதுல் கத்ர் எனும் இரவில் முதலாம் வானத்திலுள்ள பைத்துல் இஸ்ஸாவுக்கு அருளப்பட்டது**. லைலதுல் கத்ர் எனும் பாக்கியம் பொருந்திய இரவில் அருளப்பட்டது எனும் கருத்தை முன்வைக்கும் (2 : 184) (97 : 1) (44 : 3) வசனங்கள் பைத்துல் இஸ்ஸாவுக்கு முழுமையாக அது ஒரே நேரத்தில் அருளப்பட்டதையே குறித்து நிற்கின்றன.

வருடத்தின் அனைத்து மாதங்களிலுமே அல்குர்ஆன் இறக்கி அருளப்பட்டது. எனவே, லைலதுல் கத்ரில் அல்குர்ஆன் அருளப்பட்டது என கூறும் மூன்று வசனங்களும் பைத்துல் இஸ்ஸாவுக்கு ஒரே தடவையில் லைலதுல் கத்ர் இரவில் அது அருளப்பட்டமையையே குறித்து நிற்கின்றன எனக் கூறுவதே பொருத்தமானது. இப்னு அப்பாஸ்(றழி) அவர்களும் பெரும்பான்மையான அறிஞர்களும் இக்கருத்தையே கொண்டுள்ளனர்.

2. **இருபத்தி மூன்று வருடங்களாக தேவைக்கேற்ப பகுதி பகுதியாக அருளப்படல்.** நபி(ஸல்) அவர்கள் மீது அருளப்பட்ட அல்குர்ஆன் ரமழான் மாதத்தில் லைலதுல் கத்ர் எனும் இரவில் முழுமையாக ஒரே தடவையில் கடைசி வானத்துக்கு இறக்கப்பட்டது. பின்னர் பகுதி பகுதியாக அது இறக்கப்பட்டது என இப்னு அப்பாஸ்(றழி) அவர்கள் கூறுகின்றார்கள். (தபரானீ)

அல்குர்ஆன் 23 வருடங்களாக இறங்கியது. அவ்வாறு இறங்குகையில் ஒரு வசனம் மாத்திரம் இறங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. பல வசனங்கள் இறங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. முழு அத்தியாயமுமே இறங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. அல்குர்ஆன் நபி(ஸல்) அவர்களது காலத்தில் மனனமிடப்படுவதன் மூலமாகவும் எழுதிவைக்கப்படுவதன் மூலமாகவும் பாதுகாக்கப்பட்டது. அது அவர்களது காலத்தில் தனியான ஒரு நூல் வடிவில் அது தொகுக்கப்பட்டிருக்கவில்லை. அபூபக்கர்(றழி) அவர்களின்

காலத்தில் அல்குர்ஆனை நூலுருப்படுத்த வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது.

யமாமா யுத்தத்தில் அல்குர்ஆனை மனனமிட்டிருந்த எழுபது ஸஹாபாக்கள் ஷஹீதாக்கப்பட்டமை உமர்(றழி) அவர்களிடத்தில் பீதியை ஏற்படுத்தியது. அல்குர்ஆனை மனனமிட்டவர்கள் இழக்கப்படுவதனூடாக சமூகத்தில் இருந்து அல்குர்ஆன் மறைந்து விடுமோ என அஞ்சிய அவர்கள் அபூபக்ர்(றழி) அவர்களுக்கு அதனை நூலுருப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்கள். ஆரம்பத்தில் மறுத்த அபூபக்ர்(றழி) அவர்கள் பின்னர் அவ்வேண்டுகோளை நிறைவேற்ற முன்வந்தார்கள்.

ஸைத் பின் ஸாபித்(றழி) அவர்களிடம் அல்குர்ஆனை நூலுருப்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டது. ஆரம்பத்தில் அப்பணியை ஏற்கமறுத்த அவர்கள் பின்னர் அதன் அவசியத்தை உணர்ந்து ஏற்றுக்கொண்டார்கள்.

ஸைத் பின் ஸாபித்(றழி) அவர்களால் தொகுக்கப்பட்ட அல்குர்ஆன் பிரதி அபூபக்ர்(றழி) அவர்களிடம் இருந்து வந்தது. பின்னர் உமர்(றழி) அவர்களிடம் அது இருந்தது. அடுத்து ஹப்ஸா(றழி) அவர்களிடம் அது இருந்தது. உஸ்மான்(றழி) அவர்களது ஆட்சியில் அவர்களது வேண்டுகோளின் பேரில் ஹப்ஸா(றழி) அவர்களால் அவர்களிடம் அது ஒப்படைக்கப்பட்டது.

## உஸ்மான்(றழி) அவர்களது காலத்தில் அல்குர்ஆன் ஒன்று திரட்டப்படல்

இஸ்லாமிய சாம்ராஜ்யம் விரிவடைந்தபோதெல்லாம் அல்குர்ஆனைக் கற்றிருந்த அறிஞர்கள் அச்சாம்ராஜ்யத்தின் நகரங்களுக்கு பிரிந்து சென்றனர். ஒவ்வொரு நகரைச் சார்ந்தவர்களும் தம்மிடம் வந்த அறிஞர்களிடம் அல்குர்ஆனை ஓதக் கற்றிருந்தனர். இவ்வாறு கற்றிருந்த அவர்கள் ஒரு யுத்தத்துக்காக அல்லது வேறு ஏதேனும் ஒரு தேவைக்காக ஒன்றிணையும் போது அல்குர்ஆனை ஓதுகின்ற முறையில் காணப்படும் வித்தியாசத்தை உணர்ந்தனர்.

ஆர்மேனியா, ஆசர்பைஜான் யுத்தங்களில் பங்குகொண்டவர்களுள் ஹுதைபதுல் யமானி(றழி) அவர்களும் ஒருவர். ஓதல் முறைகளில் காணப்படும் வேறுபாடுகளினால் ஏற்படவுள்ள அபாயத்தை உணர்ந்த அவர் இதுபற்றி கலீபா உஸ்மான்(றழி) அவர்களிடம் முறையிட்டார். சமூகத்தில்

சிறுவர்களுக்கு அல்குர்ஆனை கற்பிப்பவர்களும் இத்தகைய ஒரு பிரச்சினையை எதிர்கொள்வதாக ஏற்கனவே உஸ்மான்(றழி) அவர்களுக்கு செய்தி கிடைத்திருந்தது.

யுத்தங்களில் ஹாபிழ்கள் கொல்லப்படுவதனால் சமூகத்தை விட்டு அல்குர்ஆன் மறைந்து விடுமோ என்ற அச்சமே அபூபக்ர்(றழி) அவர்கள் அல்குர்ஆனை நூலுருவில் தொகுக்க பிரதான காரணியாக அமைந்தது.

அல்குர்ஆனை ஓதுகின்ற முறையில் காணப்பட்ட வித்தியாசங்கள் சமூகத்தில் பிளவுகளுக்கு காரணமாக அமைவதை உஸ்மான்(றழி) அவர்கள் அவதானித்தார்கள். இந்நிலை நிவர்த்திக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அவர்களால் திரும்பவும் அல்குர்ஆன் தொகுக்கப்பட்டது.

அபூபக்ர்(றழி) அவர்களால் அல்குர்ஆன் ஒன்று திரட்டப்பட முன்னர் எலும்புகளிலும் ஓலைகளிலும் கற்களிலும் எழுதப்பட்ட நிலையில் அது காணப்பட்டது. இவ்வாறு பல இடங்களில் இருந்த அல்குர்ஆன் வசனங்களையும் அத்தியாயங்களையும் வரிசைக்கிரமமாக ஒரே நூலில் ஒன்று திரட்டித்தரும் பணியை அபூபக்ர்(றழி) அவர்கள் மேற்கொண்டார்கள். இப்பணியின் போது அல்குர்ஆனை வித்தியாசமான முறைகளில் ஓதுவதற்கு இருந்த அனுமதியும் கருத்திற்கொள்ளப்பட்டது.

உஸ்மான்(றழி) அவர்கள் அல்குர்ஆனை ஒன்று திரட்டியபோது அல்குர்ஆனை அனைவரும் ஒரே அமைப்பில் ஓதத்தக்க வகையில் அது எழுதப்பட்டது. ஓதுகின்ற முறையில் காணப்பட்ட வேறுபாடுகள் தடுக்கப்பட்டன.

காலமாற்றங்கள் அல்குர்ஆனைத் திரிபுபடுத்தாதிருக்க உஸ்மான்(றழி) அவர்கள் மேற்கொண்ட பணி பேருதவியாக அமைந்தது. முஸ்லிம் சமூகத்தின் பிளவுக்கு அல்குர்ஆன் காரணமாக அமைவதிலிருந்தும் பாதுகாக்கப்பட்டது.

**தர்தீப் நுஸூல் தர்தீப் திலாவத்**

அல்குர்ஆன் 23 வருடங்களில் இறங்கியது. இவ்வாறு அது இறங்கும் போது நபி(ஸல்) அவர்களது வழிகாட்டலின் பிரகாரம் ஸஹாபாக்கள் அதனைப் பதிவு செய்து வந்தனர். அவ்வாறு பதிவு செய்யும் போது ஜிப்ரீல்(அலை) அவர்களிடமிருந்து கிடைத்த வழிகாட்டல் பிரகாரமே நபி(ஸல்) அவர்கள் அல்குர்ஆனை பதிவு செய்யுமாறு பணித்தார்கள்.

அல்குர்ஆனின் அத்தியாயங்களை அவை இறங்கிய கால ஒழுங்கில் வரிசைப்படுத்துவதனையே “தர்தீபுந் நுஸூல்” என்பது குறித்து நிற்கின்றது. இறங்கிய ஒழுங்கு என சுருக்கமாக அதனை குறிப்பிடலாம்.

அல்குர்ஆனின் அத்தியாயங்கள் அவை இறங்கிய ஒழுங்கில் இடம்பெற வில்லை. மாற்றமாக அதில் வசனங்கள் இறங்கும் போதும் அத்தியாயங்கள் இறங்கும் போதும் ஜிப்ரீல் (அலை) அவர்களது வழிகாட்டலின் படி அவற்றுக்குரிய ஒழுங்கில் வரிசைக் கிரமத்தில் எழுதப்பட்டு வந்தன. அந்த ஒழுங்கிலேயே நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு வருடமும் ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு அல்குர்ஆனை ஓதிக்காட்டி வந்தார்கள். இறுதியாக இரண்டு தடவைகள் நபி(ஸல்) அவர்களால் அவ்வொழுங்கிலேயே அல்குர்ஆன் அவர்களுக்கு ஓதிக்காட்டப்பட்டது. அவ்வொழுங்கில்தான் அபூபக்ர்(றழி) அவர்களால் அல்குர்ஆன் தொகுக்கப்பட்டது. உஸ்மான்(றழி) அவர்களால் மீளவும் தொகுக்கப்பட்டது. அது தற்போதும் அவ்வொழுங்கமைப்பிலேயே உள்ளது. இவ்வாறு அல்குர்ஆன் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ள அமைப்பையே “தர்தீபுத் திலாவத்” என்பர். ஓதும் ஒழுங்கு என அதனை சுருக்கமாகக் கூறலாம்.

இமாம் அபூபக்ர் பின் அன்பாரீ(றஹ்) அல்குர்ஆனின் ஒழுங்கமைப்பு சம்பந்தமாக குறிப்பிடும் பின்வரும் கருத்து குறிப்பிடத்தக்கதாகும். “அல்லாஹ் அல்குர்ஆனை முழுமையாக கடைசி வானத்துக்கு இறக்கினான். பின்னர் இருபதுக்கு மேற்பட்ட வருடங்களில் அதனைப் பகுதி பகுதியாக இறக்கினான். ஒரு நிகழ்வு இடம்பெறுகையில் ஓர் அத்தியாயம் இறங்கியது. இவ்வாறு ஓர் அத்தியாயம் இறங்கும் போது அல்லது ஒரு வசனம் இறங்கும் போது அல்குர்ஆனில் அது எந்த இடத்தில் இடம்பெற வேண்டும் என ஜிப்ரீல்(அலை) அவர்கள் நபி(ஸல்) அவர்களுக்கு அறிவிப்பார்கள். எனவே, அல்குர்ஆனின் எழுத்துக்களும் வசனங் களும் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது போல அதன் அத்தியாயங்களும் நபி(ஸல்) அவர்களாலேயே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. ஆகையால், யாராவது ஓர் அத்தியாயத்தை அதனது இடத்தை விட்டு முற்படுத்தினால் அல்லது பிற்படுத்தினால் அவர் அல்குர்ஆனின் ஒழுங்கமைப்பை சீர்குலைத்தவராகவே கருதப்படுவார்.” (அல்இத்கான் 1/62)

எல்லோரும் ஒரே அமைப்பிலேயே அல்குர்ஆனை ஓதவேண்டும் என உஸ்மான் (றழி) அவர்கள் பணித்த போது, இறங்கிய ஒழுங்கில் அல்குர்ஆனை பதிவு செய்து வைத்திருந்த ஸஹாபாக்கள் அவற்றை கைவிட்டனர். அல்குர்ஆனை அவர்கள் இஜ்திஹாதின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தியிருப்பின் ஏற்கனவே தங்களிடம் காணப்பட்டதை கைவிட்டிருக்கமாட்டார்கள். இவ்வாறு அவர்கள் கைவிட்டமை நபி(ஸல்) அவர்களது காலத்தில் அல்குர்ஆன் தற்போதுள்ள ஒழுங்கிலேயே இருந்தது என்பதற்கு ஆதாரமாக அமைகின்றது.

இறங்கிய ஒழுங்கில் அல்குர்ஆனை சில ஸஹாபாக்கள் எழுதி வைத்து கொண்டிருந்தமை அல்குர்ஆன் ஒரு நூல் வடிவில் ஒன்று திரட்டப்பட முன்னர் இடம் பெற்ற நிகழ்வாகும். இந்நிகழ்வு அல்குர்ஆனின் அத்தியாயங்கள் இறைவழிகாட்டலின் அடிப்படையிலேயே ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்ற கருத்துக்கு எதிரான ஆதாரமாககொள்ளப்பட முடியாததாகும்.

# அல்குர்ஆனின் அமைப்பு

**மக்கி, மதனீ**

அல்குர்ஆனின் அத்தியாயங்கள் மக்கீ, மதனீ என இரு பிரிவுகளாக பிரித்து நோக்கப்படுகின்றன. இவற்றை எந்த அடிப்படையில் பாகுபடுத்துவது என்பதைப் பொறுத்த வரையில் மூன்று கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. **இறங்கிய காலத்தை வைத்து பாகுபடுத்துதல் :-**
   ஹிஜ்ரத்துக்கு முன் அருளப்பட்டவை, மக்கா அல்லது வேறோர் இடத்தில் அருளப்பட்டிருந்தாலும் மக்கீ எனப்படுகின்றன. ஹிஜ்ரத்துக்கு பின் அருளப்பட்டவை. மதீனாவின் அல்லது வேறு இடங்களில் அருளப்பட்டிருந்தாலும் மதனீ எனப்படுகின்றன. உதாரணமாக (4 : 58) ஆம் வசனம் மக்கா வெற்றிகொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் க.்.பாவினுள் வைத்து இறக்கப்பட்டது. அல்லது மாஇதா எனும் அத்தியாயத்தின் மூன்றாம் வசனம் இறுதி ஹஜ்ஜின் போது அருளப்பட்டது. எனினும் இவற்றை மதனீ என்றே குறிப்பிடுவர். காரணம், ஹிஜ்ரத்துக்கு முந்தியவை, பிந்தியவை என்ற அடிப்படையிலேயே இங்கு பாகுபாடு இடம்பெற்றுள்ளது.

2. **இறங்கிய இடத்தை வைத்து பாகுபடுத்தல்** :-
   மக்காவிலும் மக்காவுக்கு அருகேயுள்ள மினா, அரபா, ஹுதைபிய்யா போன்ற இடங்களிலும் அருளப்பட்டவற்றை மக்கீ என்பர். மதீனாவிலும் மதீனாவுக்கு அருகேயுள்ள உஹத், குப்ஆ, ஸல்உ போன்ற இடங்களிலும் அருளப்பட்டவற்றை மதனீ என்பர்.

இறங்கிய இடத்தை அடிப்படையாகக் கொண்டு மக்கீ, மதனீ என பாகுபடுத்தும் போது சில வசனங்களை இவ்விரு பிரிவுகளிலுமே அடக்க முடியாமல் போகின்றது. உதாரணமாக, பிரயாணங்களின் போது இறங்கிய வசனங்கள், தபூக்கில் இறங்கியவை, பைதுல் மக்திஸில் இறங்கியவை போன்றவற்றை எங்கு உள்ளடக்குவது என்ற சிக்கல் எழுகிறது. அவ்வாறே ஹிஜ்ரத்தின் பின்னர் மக்காவில் இறங்கியவற்றை மக்கீ பிரிவில் சேர்க்க வேண்டிய நிலையும் இடத்தை வைத்து பாகுபாடு செய்வதால் ஏற்படுகின்றது. எனவே இடத்தை அடிப்படை யாகக் கொண்டு மக்கி, மதனீ என பாகுபடுத்துவது ஏற்கத்தக்கதல்ல.

3. **பேசப்படுபவரை வைத்து பாகுபடுத்துதல்** :- குர்ஆன் யாரை நோக்கி விளித்துள்ளது என்பதைப் பொறுத்து மக்கீ மதனீ என பாகுபடுத்த வேண்டும் என சிலர் கூறுவர். இவர்களது கருத்துப் படி மக்காவாசிகளை விளித்துப் பேசுபவை மக்கீகளாகவும் மதீனாவாசிகளை விளித்துப் பேசுபவை

மதனீக்களாகவும் "மனிதர்களே" என விளிக்கின்ற வசனங்கள் மக்கீகளாகவும், விசுவாசிகளே என விளிப்பவை மதனீக்களாகவும் அமையும்.

இவ்வாறு விளிக்கப்படுபவரை வைத்து மக்கீ, மதனீ என பாகுபடுத்தும் போதும் சில சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

(அ) அல்குர்ஆனில் எல்லா அத்தியாயங்களையும் இப்பாகுபாட்டின் படி இரண்டு பிரிவுகளாக பிரித்து நோக்க முடியாதுள்ளது. ஏனெனில், "மனிதர்களே" என்ற விளிப்போ "விசுவாசிகளே" என்ற விளிப்போ இடம் பெறாத பல அத்தியாயங்கள் உள்ளன. இவற்றை மக்கீ என்பதா? மதனீ என்பதா?

(ஆ) சில அத்தியாயங்களில் இரு வகையான விளிப்புகளுமே இடம் பெற்றுள்ளன. உதாரணமாக, ஸூரதுல் பகரா ஒரு மதனீ அத்தியாயம். ஆனால், அவ்வத்தியாயத்தில் "மனிதர்களே!" என்ற விளிப்பு 21ஆம் வசனத்திலும் 168 ஆம் வசனத்திலும் இடம்பெறுகின்றது. ஸூரதுன் நிஸாஉ ஒரு மதனீ அத்தியாயம் அவ்வத்தியாயம் ஆரம்பிப்பதே "மனிதர்களே!" என்று தான். ஸூரத்துல் ஹஜ் ஒரு மக்கீ அத்தியாய மாகும். ஆனால், "விசுவாசிகளே" என்று விளித்துப் பேசும் (77ம்) வசனம் அதிலே உண்டு. எனவே யாரை விளித்து குர்ஆன் பேசுகிறது என்பதை வைத்து மக்கீ, மதனீ என பாகுபாடு செய்வதும் ஏற்கத்தக்க தல்ல.

எனவே ஹிஜ்ரத்தை அடிப்படையாக் கொண்டு மக்கீ, மதனீ என பாகுபடுத்துவதே மிகவும் பொருத்தமானது என்பது தெளிவு.

மக்கீ; மதனீ என பிரித்து இனங்காணுவதற்கு அறிஞர்கள் இரண்டு அடிப்படைகளில் தங்கியிருந்தனர்.

(1) **அறிவிப்புக்கள்** : அல்குர்ஆனின் ஸூராக்களை மக்கீ - மதனீ என நபி (ஸல்) அவர்கள் பாகுபடுத்தி தந்துவிட்டுச் செல்லவில்லை. எனவே, அல்குர்ஆன் இறங்கும் காலப்பகுதியில் வாழ்ந்த ஸஹாபாக்கள், அவர்களிடம் படித்த தாபிஈன்கள் ஆகியோரது அறிவிப்புக்களை அடிப்படையாகக் கொண்டே இறங்கிய காலப்பகுதியையும் இடத்தையும் அவற்றுடன் தொடர்புடைய நிகழ்வு களையும் அறிய வேண்டியுள்ளது. இவ்வாறான அறிவிப்புக்களை அடிப்படையாக வைத்தே பெரும்பாலான அத்தியாயங்கள் மக்கீ - மதனீ என பாகுபடுத்தப்பட்டுள்ளன.

(2) **இஜ்திஹாத்** : வசனங்களை ஆராய்ந்து அவற்றுக்கான பிரத்தியேக சிறப்பம்சங்களை வைத்து மக்கீ - மதனீ ஸூராக்களை கண்டுபிடித்தனர். இவ்வாறான சிறப்பம்சங்களை அடிப்படையாக வைத்தும் மக்கீ-மதனீ பாகுபாட்டை மேற்கொண்டனர்.

இஜ்திஹாதின் மூலம் கண்டறியப்பட்ட மக்கீ ஸூராக்களுக்கான வரையறைகளாக பின்வரும் அம்சங்களை குறிப்பிடுவர் :-

(அ) ஸஜ்தா இடம் பெற்றுள்ள அனைத்து அத்தியாயங்களும் மக்கீக்களாகும்.

(ஆ) "கல்லா" என்ற சொல் இடம் பெற்றுள்ள அனைத்து அத்தியாயங்களும் மக்கீக்களாகும். அவ்வாறான 15 அத்தியாயங்களில் 33 இடங்களில் இச்சொல் இடம்பெற்றுள்ளது. அல்குர்ஆனின் இறுதி அரைப்பகுதியிலேயே இச்சொல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ) "மனிதர்களே" என விளித்துப் பேசுகின்ற, "விசுவாசிகளே" என விளித்துப் பேசாத அனைத்து ஸூராக்களும் மக்கீ ஸூராக்களாகும். இதற்கு ஹஜ் மாத்திரம் விதிவிலக்காகும். அது ஒரு மக்கீ ஸூராவாகும். எனினும், இறுதியில் "விசுவாசிகளே" எனும் விளிப்பு இடம்பெற்றுள்ளது.

(ஈ) பகரா, ஆலஇம்ரான் தவிர்ந்த (ஹுரூபுல் முகத்தத் எனப்படும்) ஒற்றை எழுத்துக்களைக் கொண்டு ஆரம்பிக்கும் அனைத்து ஸூராக்களும் மக்கீக்களாகும். ர.்.த் எனும் ஸூரா ஒற்றை எழுத்துக்களைக் கொண்டு தான் துவங்கியிருந்தாலும் அது மக்கீயா, மதனீயா என்பதில் கருத்து வேறுபாடு நிலவுகின்றது.

உள்ளடக்கம், வசனங்களின் அமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் மக்கீ ஸூராக்கள் பின்வரும் சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன:-

(அ) ஏகத்துவத்தின் பால் அழைப்பு விடுத்தல், ரிஸாலத்தை நிறுவுதல், மறுமையை நிறுவுதல், மறுமையின் பயங்கரங்களையும் நரகின் வேதனைகளையும் சுவன இன்பங்களையும் எடுத்துரைத்தல், அறிவு ரீதியான ஆதாரங்களையும் பிரபஞ்ச அத்தாட்சிகளையும் அடியாகக் கொண்டு நிராகரிப்பர்களுடன் வாதிடுதல்

(ஆ) சமூக அமைப்புக்கு இன்றியமையாத சட்டவாக்கத்துக்கான பொதுவான அடிப்படைகளை இடுதல், உயரிய பண்புகளை விளக்குதல், கொலை, அநாதைகளின் சொத்தை அபகரித்தல், பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தல் போன்ற நிராகரிப்பாளர்களிடம் காணப்பட்ட இழிகுணங்களை அம்பலப்படுத்துதல்

(இ) நபி(ஸல்) அவர்களுக்கு ஆறுதலாக அமையவும் நிராகரிப்பாளர் களுக்கு எச்சரிக்கையாகவும் நபிமார்களினதும் கடந்த கால சமூகங் களினதும் வரலாறுகளை எடுத்துரைத்தல்

(ஈ) அதிகமான சத்தியங்களையும், சிறிய வசனங்கள் ஓசை நயமுள்ள கடினமான பதப் பிரயோகங்களையும் கொண்டிருத்தல்,

மக்கீ ஸூராக்களைப் போன்றே மதனீ ஸூராக்களுக்கும் அறிஞர்கள் சில சிறப்புப் பண்புகளை வகுத்துத் தந்துள்ளனர் :-

(அ) கடமை அல்லது தண்டனை பற்றி பேசும் அனைத்து ஸூராக்களும் மதனீக்களாகும்.
(ஆ) நயவஞ்சகர்களைப் பற்றி பிரஸ்தாபிக்கின்ற அனைத்து ஸூராக்களும் மதனீ ஸூராக்களாகும். அன்கபூதில் நயவஞ்சகர்களைப் பற்றி குறிப்பிட்டாலும் அது ஒரு மக்கீ ஸூராவாகும்.
(இ) வேதம் வழங்கப்பட்டவர்களுடன் வாதிடுகின்ற அனைத்து ஸூராக்களும் மதனீக்களே.

உள்ளடக்கம், வசனங்களின் பாணி என்பவற்றை வைத்து நோக்குகையில் மதனீ ஸூராக்களின் சிறப்பம்சங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:-

(அ) வணக்க வழிபாடுகள், கொடுக்கல் வாங்கல் முறைகள், தண்டனைகள், குடும்ப அமைப்பு, வாரிசுச் சொத்து, ஜிஹாதின் சிறப்பு, சமூக உறவுகள், யுத்தத்தின் போதும் சமாதானத்தின் போதும் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒழுங்குகள் சர்வதேச உறவுகள் அமைய வேண்டிய முறை, ஆட்சிக்கான அடிப்படைகள், சட்டவாக்கத்துடன் தொடர்புடைய அம்சங்கள் ஆகிய வற்றை விளக்குதல்

(ஆ) யூத கிறிஸ்தவர்களுடன் உரையாடுதல், அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தல், அவர்கள் வேதங்களை திரிபுபடுத்தியமை பற்றியும் சத்தியத்துக்கு அநியாயம் செய்தமை பற்றியும் விளக்குதல் அறிவு கிட்டிய பின்னரும் வரம்பு மீறி அவர்கள் தங்களுக்கிடையில் பிளவுபட்டமையை தெளிவுபடுத்துதல்.

(இ) நயவஞ்சகர்களது மனப்பாங்கு, நடத்தைகள், சூழ்ச்சிகள் என்பவற்றை விளக்குவதோடு அவர்கள் மார்க்கத்துக்கு எவ்வளவு ஆபத்தானவர்கள் என்பதை எடுத்துரைத்தல்.

(ஈ) ஷரீஆவையும் அதனது நோக்கங்களையும் விளக்குவதற்கு ஏற்ற வகையில் அமைந்த நீண்ட வசனங்கள்

**மக்கீ, மதனீ பற்றிய அறிவினால் கிட்டுகின்ற பயன்கள்:**

1. அல்குர்ஆனை சரியாக விளங்குவதற்கும் விளக்குவதற்கும் அது இறங்கிய காலம், சூழல், இடம் என்பன பற்றிய அறிவு பயன்படும். உதாரணமாக, இருவசனங்கள் முரண்படுவது போன்று அமைந்தால் அவற்றுள் நடைமுறைப்படுத்த வேண்டிய வசனத்தை அறிந்துகொள்ள இவ்வறிவே உதவி செய்யும்.

2. த.்.வாப் பணியில் எமது அழைப்பு எவ்வாறு கால, இட, சூழல் மாற்றங்களைக் கருத்திற்கொண்டும் பேசப்படுபவர்களுக்கு ஏற்ற வகையிலும் அமைத்துக் கொள்ளப்படுவது அவசியம் என்பதை புரிந்து கொள்ள இவ்வறிவு உதவும்.

3. நபி(ஸல்) அவர்களது ஸீராவை அல்குர்ஆனின் வசனங்களின் ஊடாக அறிந்துகொள்ள உதவியாக அமையும்.

**மக்கீ, மதனீ ஸூராக்களின் எண்ணிக்கை** :-

இவற்றின் எண்ணிக்கையை வரையறுப்பதில் கருத்து வேற்றுமை நிலவுகின்றது.

- மதனீ ஸூராக்களின் எண்ணிக்கை 20

| | |
|---|---|
| (1) பகரா | (11) ஹுஜுராத் |
| (2) ஆல இம்ரான் | (12) ஹதீத் |
| (3) நிஸா | (13) முஜாதலா |
| (4) மாஇதா | (14) ஹஷ்ர் |
| (5) அன்பால் | (15) மும்தஹினா |
| (6) தவ்பா | (16) ஜுமுஆ |
| (7) நூர் | (17) முனாபிகூன் |
| (8) அஹ்ஸாப் | (18) தலாக் |
| (9) முஹம்மத் | (19) தஹ்ரீம் |
| (10) பத்ஹ் | (20) நஸ்ர் |

- மக்கீ; மதனி என வரையறுப்பதில் சர்ச்சை நிலவும் ஸூராக்களின் எண்ணிக்கை 12

| | |
|---|---|
| (1) பாத்திஹா | (8) பய்யினா |
| (2) ர.்.த் | (9) ஸல்ஸலா |
| (3) ரஹ்மான் | (10) இக்லாஸ் |
| (4) ஸப் | (11) பலத் |
| (5) தகாபுன் | (12) நாஸ் |
| (6) முதப்பிபீன் | |
| (7) கத்ர் | |

- மக்கீ ஸூராக்களின் எண்ணிக்கை : 82

மேலுள்ள இருபிரிவுகளிலும் இடம்பெறாத அனைத்து ஸூராக்களும் இப்பிரிவில் அடங்கும்.

## நாஸிக் மன்ஸூக்

“நஸ்க்” என்ற சொல் அறபு மொழியில் பிரதி பண்ணுதல், நீக்குதல் ஆகிய கருத்துக்களில் பயன்படுத்தப்படுகின்றது. இஸ்லாமிய வழக்கில் “பின்னால் வருகின்ற ஷரீஆவின் ஓர் ஆதாரத்தின் மூலம் ஏற்கனவே உள்ள ஒரு ஷரீஆ சட்டம் நீக்கப்படுவதையே நஸ்க் என்பது குறிக்கும்” என இமாம் ஷாதிபீ குறிப்பிடுகின்றார்.

ஓர் உதாரணத்தின் மூலம் நாஸிக் மன்ஸூக் பற்றி விளங்க முனைவோம். ஸூரா முஜாதலாவின் 12 ஆம் வசனம் இறை நம்பிக்கை கொண்டவர்களே!

நீங்கள் தூதருடன் தனிமையில் பேசுவதாயின் அவ்வாறு பேசுவதற்கு முன் சிறிது தான தர்மம் செய்யுங்கள். இது உங்களுக்கு நன்மையானதும் மிகத் தூய்மையானதுமாகும். ஆனால், தர்மம் செய்வதற்கு எதுவும் உங்களிடம் இல்லையென்றால் திண்ணமாக அல்லாஹ் பெரிதும் மன்னிப்பவனாகவும் கருணைமிக்கவனாகவும் இருக்கின்றான்" எனக் கூறுகின்றது. இவ்வசனம் நபி(ஸல்) அவர்களோடு எவராவது தனிமையில் பேச விரும்பினால் அதற்கு முன்னர் தர்மம் செய்வது கடமை என்ற கருத்தைத் தருகின்றது.

ஸூரா முஜாதலாவின் 13 ஆம் வசனம் மேற்குறிப்பிடப்பட்ட அக்கடமையை இரத்துச் செய்கின்றது. தனிமையில் உரையாடுவதற்கு முன் தானதர்மங்கள் வழங்க வேண்டியிருக்குமே என்று நீங்கள் பயந்துவிட்டீர்களா? நீங்கள் அப்படி செய்யவில்லையானால் அதற்காக அல்லாஹ் உங்களை மன்னித்துவிட்டான். நீங்கள் தொழுகையை நிலைநாட்டிக் கொண்டும் ஸகாத் கொடுத்துக் கொண்டும் இருங்கள். மேலும், அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படிந்து வாழுங்கள். நீங்கள் செய்பவை அனைத்தையும் அல்லாஹ் நன்கறிந்தவனாக இருக்கின்றான்."

12 ஆம் வசனம் சொல்லியுள்ள சட்டத்தை 13 ஆம் வசனம் இரத்து செய்கின்றது. இந்நிலையில் 12 ஆம் வசனத்தை மன்ஸூக் எனவும் 13 ஆம் வசனத்தை நாஸிக் எனவும் குறிப்பிடுவர்.

**நாஸிக் மன்ஸூக் பற்றிய அறிவின் அவசியம்** :-

ஒரு தடவை அலி(றலி) அவர்கள் மஸ்ஜிதில் நுழைந்தார்கள். அங்கே ஒருவர் மனிதர்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தார். "இங்கே என்ன நடக்கிறது" என அலி(றலி) அவர்கள் வினவினார்கள். "ஒருவர் மனிதர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்" என அங்கிருந்தவர்கள் கூறினர் அப்போது அலி(றலி) அவர்கள் "இவர் மனிதர்களுக்கு உபதேசம் செய்யவில்லை. மாற்றமாக நான் இன்னாரின் மகன்; என்னைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று தான் கூறுகிறார்" எனக் கூறிவிட்டு, அம்மனிதரை தம்மிடம் வரவழைத்தார்கள். "உமக்கு நாஸிக் எது மன்ஸூக் எது என்று தெரியுமா? என வினவினார்கள் அவர் "தெரியாது" என்றார். "நீர் அழிந்துவிட்டீர். அடுத்தவர்களையும் அழித்துவிட்டீர்" என அலி(ரழி) அவர்கள் அம்மனிதரைக் கடிந்து கொண்டார்கள். (தப்ஸீர் குர்துபீ)

"எவருக்கு ஞானம் வழங்கப்படுகிறதோ அவர் ஏராளமான நன்மைகள் வழங்கப்பட்டவராவார்." (2:268) எனும் வசனத்தில் இடம் பெறும் ஞானம்(ஹிக்மா) எனும் சொல் அல்குர்ஆன் பற்றிய (நாஸிக் மன்ஸூக், முஹ்கம்-முதஷாபிஹ், முகத்தம்-முஅக்கர், ஹராம், ஹலால்) அறிவைக் குறிக்கும் என இப்னு அப்பாஸ் (றழி) விளக்கம் அளித்துள்ளார்கள். (அந்நவாஸிஹ்-இப்னுல் ஜவ்ஸீ)

**நஸ்க் இடம்பெற முடியாத இடங்கள்** : மனிதர்களின் நிலைமைகளுக்கு ஏற்ப மாறுபடமுடியாத, அவர்களின் கணிப்பீடுகளுக்கு ஏற்ப மாறுபட முடியாத, அடிப்படையான அம்சங்கள் பற்றி பேசும் வசனங்களில் மாற்றம் இடம்பெற முடியாது. மாற்றம் என்பது சட்ட வசனங்களைப் பொறுத்தவரையிலேயே இடம்பெற்றிருக்கும். பின்வரும் அம்சங்களில் நஸ்க் (மாற்றம்) இடம்பெறமுடியாது.

1. நம்பிக்கை பற்றிப் பேசும் வசனங்கள்
2. வணக்க வழிபாடுகளைப் பற்றிப் பேசும் வசனங்கள்
3. உயர்ந்த ஒழுக்கங்களைப் பற்றிப் பேசும் வசனங்கள் (நீதி, உண்மை, பெற்றோரை பேணல்)
4. அடிப்படையான தீமைகளைப் பற்றி பேசும் வசனங்கள் (ஷிர்க், கொலை, பெற்றோருக்கு தீங்கிழைத்தல், பொய், அநீதி)

ஒரு வசனம் சொல்கின்ற கருத்து நிலையானது என்பதை காட்டக் கூடிய வார்த்தைப் பிரயோகம் அவ்வசனத்தில் இடம்பெற்றிருப்பின் அவ்வசனத்திலும் மாற்றம் இடம்பெற முடியாது. உதாரணம், அவதூறு கூறுபவர்களுக்குரிய தண்டனை பற்றி பேசும் அல்குர்ஆன் “இனி அவர்கள் கூறும் சாட்சியத்தை எப்போதும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்” (24 : 4) என கட்டளை பிறப்பிக்கின்றது. இங்கு “எப்போதும்” என்ற பிரயோகம் அச்சட்டம் நிலையானது என்பதை உணர்த்துகிறது.

கடந்த கால நிகழ்வுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்ற வசனங்களிலும் மாற்றம் இடம்பெற முடியாது. ஏனெனில், அவ்வாறு மாற்றம் இடம் பெறுமாயின் ஏற்கனவே அல்லாஹ்வோ அல்லது அவனது தூதரோ தெரிவித்த கருத்து பிழை என்ற முடிவுக்கு வரவேண்டிவரும். இவ்வாறு அல்லாஹ்வோ அவனது தூதரோ பொய் கூறுவது சாத்தியமற்றதாகும். உதாரணம் : “எனவே, ஸமூது சமூகத்தினர் ஒரு கடுமையான சத்தத்தால் அழிக்கப்பட்டார்கள்.” ஆத் சமூகத்தினரோ பெரும் சப்தத்தோடு, கடும்குளிர் கலந்த கொடுங் காற்றைக் கொண்டு அழிக்கப்பட்டனர். (69 : 5-6)

நாஸிக் மன்ஸூக் பற்றிய அறிவை பெறுவதற்கு பின்வரும் வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**நபி(ஸல்) அவர்களது கூற்று :-** “கப்றுகளை தரிசிப்பதை நான் உங்களுக்குத் தடுத்திருந்தேன். இப்போது நீங்கள் அவற்றைத் தரிசியுங்கள்”



8-CM14796

(ஹாகிம்) கப்றுகளை தரிசிக்கக் கூடாது என்ற சட்டம் மன்ஸுூக் என்பதற்கு இந்த ஹதீஸ் ஆதாரமாக அமைகின்றது.

(2) **ஸஹாபாக்களது அறிவிப்புக்கள்** :- உதாரணம் :- பி∴ரு மஊனா போராட்டத்தில் பங்கு கொண்ட ஸஹாபாக்கள் சம்பந்தமாக அல்குர்ஆன் வசனங்கள் இறங்கின. நாம் அவற்றை ஓதினோம். அவ்வசனங்கள் உயர்த்தப்பட்டு விட்டன என அனஸ்(ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். நஜ்த் பிரதேச மக்களிடம் நபி(ஸல்) அவர்களால் அனுப்பப்பட்ட ஸஹாபாக்கள் பி∴ரு மஊனா என்ற இடத்தை அடைந்தனர். அவ்வேளை, ஆமிர் பின் துபைல் என்பவன் பனூ ஸுலைம் பிரிவைச் சேர்ந்த கோத்திரங்களை இந்த ஸஹாபாக்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டான். இந்த ஸஹாபாக்களை சூழ்ந்து கொண்ட அக்கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களுடன் போராடினர். அனைவரும் ஷஹீதாகினர். இவ்வாறு வஞ்சிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட அவர்கள் சம்பந்தமாக அல்குர்ஆன் வசனங்கள் இறங்கின. அவை ஓதப்பட்டு வந்தன. பின்னர் அவை உயர்த்தப்பட்டன என்று அனஸ் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(3) **இஜ்மா∴** :- ஒரு குறிப்பிட்ட அல்குர்ஆன் வசனம் நாஸிக் அல்லது ஒரு குறிப்பிட்ட வசனம் மன்ஸுூக் என ஏகோபித்த முடிவு இருப்பின் அதனூடாக அவ்வசனங்கள் நாஸிக் மன்ஸுூக் என்பதை அறியலாம். எவ்வசனம் முன்னர் இறங்கியது, எது பின்னால் இறங்கியது என்ற வரலாற்றை அறிந்திருப்பது நாஸிக் மன்ஸுூக் பற்றிய அறிவைப் பெறுவதற்கான இன்னொரு வழிமுறையாகும்.

ஆனால், நாஸிக் மன்ஸுூக் பற்றிய அறிவைப் பெறுவதற்கு இஜ்திஹாத் ஒரு வழியாகப் பயன்படமுடியாது. அவ்வாறே, அல்குர்ஆன் விளக்கவுரையாளர் ஒருவரது கருத்தும் இவ்வறிவைப் பெறுவதற்கான வழிமுறையாக கருதப்படமாட்டாது. இரு வசனங்களுக்கிடையில் முரண்பாடு காணப்படுவது வெளிப்பார்வைக்கு அவற்றில் ஒன்று நாஸிக் அடுத்தது மன்ஸுூக் என்பதற்கான ஆதாரமாகமாட்டாது. அவ்வாறே, இரு அறிவிப்பாளர்களில் ஒருவர் பிற்காலப் பகுதியில் இஸ்லாத்தை ஏற்றவராக இருப்பின் அவரது அறிவிப்பு நாஸிக் என்பதற்கான ஆதாரமாகக் கொள்ளப்படுவ தில்லை.

சுருங்கக் கூறின், நாஸிக் மன்சூக் பற்றி அறிவதற்கு மேலே தரப்பட்டுள்ள மூன்று வழிகள் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும். அவை தவிர வேறு வழிகளில் நாஸிக் மன்ஸுூக் அறியப்படமுடியாது.

அல்குர்ஆனில் எத்தனை மன்ஸுூகான வசனங்கள் காணப்படுகின்றன என்ற வினாவுக்கு விடை தேடுகின்ற போது வித்தியாசமான பதில்கள் கிடைக்கின்றன. 247 மன்ஸுூக் ஆன வசனங்கள் இருப்பதாக இமாம் இப்னுல் ஜவ்ஸீ குறிப்பிடுகின்றார். இமாம் ஸுயூதி 20 வசனங்கள் என்கிறார். இமாம்

ஷாபீஈ (ரஹ்) அவர்களது காலம் வரை “நஸ்க்” என்ற சொல் சட்டத்தை மாற்றுதல் என்ற கருத்தில் மாத்திரமன்றி இன்னும் விரிந்த கருத்திலும் பயன்படுத்தப்பட்டது. இதனாலேயே “மன்ஸுக்” என்ற சொல் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போது மன்ஸுக் என்ற சொல் சட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தையே குறிக்க பயன்படுவதனால் அல்குர்ஆனில் இவ்வாறு மாற்றப்பட்ட வசனங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. என்பது புரியப்படுதல் இன்றியமையாததாகும்.

**முஹ்கம், முதஷாபிஹ்**

அல்குர்ஆனில் முஹ்கம், முதஷாபிஹ் என இரு வகையான வசனங்கள் இருப்பதாக அத்தியாயம் ஆலஇம்ரானின் ஏழாம் வசனம் குறிப்பிடுகின்றது.

“அவனே இவ்வேத நூலை உம்மீது இறக்கியருளினான். இதில் “முஹ்கமாத்” எனும் வசனங்களும் உள்ளன. அவை தான் வேதத்தின் அடிப்படை “முதஷாபிஹாத்” எனும் வேறு வசனங்களும் உள்ளன. (3 : 7)

இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள “முஹ்கம்”, “முதஷாபிஹ்” எனும் பதங்கள் குறிப்பிடுகின்ற கருத்துக்கள் எவை என்பதைப் பொறுத்த வரை இஸ்லாமிய அறிஞர்கள் வித்தியாசமான கருத்துக்களை முன் வைத்திருப்பதனைக் காணலாம்.

1. “முஹ்கம்” என்பது சொல்ல வரும் கருத்து என்ன என்பது மனிதர்களால் புரியமுடியுமான வசனங்களும் “முதஷாபிஹ்” என்பது அல்லாஹ் மாத்திரமே கருத்தை அறிந்த வசனங்களுமாகும்.

2. “முஹ்கம்” என்பது ஒரேயொரு கருத்துக்கு இடம்பாடுடைய வசனம்.

3. “முஹ்கம்” என்பது வேறு வசனங்களின் துணையின்றி விளங்க முடியுமான, விளக்கம் அவசியப்படாத வசனம். முதஷாபிஹ் என்பது வேறு வசனங்களின் துணையின்றி விளங்க முடியாத விளக்கத்தை வேண்டி நிற்கின்ற வசனம்.

முஹ்கமான வசனங்களுக்கு உதாரணங்களாக நாஸிக் ஆன வசனங்களையும் ஹலால், ஹராம், தண்டனைகள், கடமைகள், நன்மாராயங்கள், எச்சரிக்கைகள் என்பவற்றைப் பற்றி பேசுகின்ற வசனங்களையும் குறிப்பிடலாம்.

முதஷாபிஹான வசனங்களுக்கு உதாரணங்களாக மன்ஸுக் ஆன வசனங்கள், அல்லாஹ்வின் பண்புகள், பெயர்கள் பற்றி பேசும் வசனங்கள்,

மறுமை எப்போது நிகழும் என்பது பற்றிய அறிவு, மறுமையின் நிகழ்வுகள் பற்றிப் பேசும் வசனங்கள், அத்தியாயங்களின் ஆரம்பத்தில் இடம்பெறும் ஒற்றை எழுத்துக்கள் போன்றவற்றைக் குறிப்பிடுவர்.

முதஷாபிஹான வசனங்களை விளங்க முடியுமா என்ற விடயத்தில் இரு வேறுப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

1. முதஷாபிஹான வசனங்கள் இறைவனுக்கு மாத்திரமே விளங்கக் கூடியவை. அவற்றை ஏனையோரால் விளங்க முடியாது. இக்கருத்தை இப்னு மஸ்ஊத்(றழி), உபை பின் க.்.ப்(றழி) போன்றோரும் அநேகமான ஸஹாபாக்களும் தாபிஈன்களும் கொண்டுள்ளனர். அவர்கள் பின்வரும் ஆதாரங்களின் மூலம் தம் கருத்தைப் பலப்படுத்துகின்றனர்.

(அ) “எனினும் அவற்றின் உண்மைப் பொருளை அல்லாஹ்வையன்றி எவரும் அறியார். அறிவுத் திறன்மிக்கவர்கள் ‘இவற்றை நாங்கள் நம்புகின்றோம். இவை அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து அருளப்பட்டவைதாம்’ என்று கூறுகிறார்கள்.” (3 : 7)

(ஆ) முதஷாபிஹாத் ஆன வசனங்களை அளவுமீறி ஆய்வு செய்வோரை அல்குர்ஆனும் ஹதீஸும் கண்டித்துள்ளன. எவருடைய இதயங்களில் கோளாறு உள்ளதோ அவர்கள் குழப்பம் செய்யும் நோக்கில் முதஷாபிஹான வசனங்களைத் தேடித்திரிந்து கொண்டும், அவற்றின் கருத்தைத் திரித்துக் கூற முயற்சி செய்து கொண்டும் இருப்பார்கள்.” (3:7)

குழப்பம் செய்ய விரும்புவோரும் அல்குர்ஆனின் கருத்துக்களைத் திரித்து கூற முனைவோரும் “முதஷாபிஹான” வசனங்களின் பின் அலைவார்கள் என்ற கருத்தை இவ்வசனம் குறிப்பிட்டுள்ளது. ஆயிஷா(றழி) அவர்கள் கூறுகின்றார்கள் : நபி(ஸல்) அவர்கள் பின்வரும் வசனத்தை ஓதினார்கள். “அவனே இவ்வேத நூலை உம்மீது இறக்கியருளினான். இதில் முஹ்கமாத் எனும் வசனங்களும் உள்ளன. அவை தான் வேதத்தின் அடிப்படைகளாகும். முதஷாபிஹாத் எனும் வேறு வசனங்களும் உள்ளன. “எவர்களுடைய இதயங்களில் கோளாறு உள்ளதோ அவர்கள் குழப்பம் செய்யும் நோக்கில் முதஷாபிஹான வசனங்களைத் தேடித்திரிந்து கொண்டும் அவற்றின் கருத்தைத் திரித்துக் கூற முயற்சி செய்து கொண்டும் இருப்பார்கள். எனினும், அவற்றின் உண்மைப் பொருளை அல்லாஹ்வை அன்றி எவரும் அறியமாட்டார்கள். அறிவுத்திறன்மிக்கவர்கள் இவற்றை நாங்கள் நம்புகின் றோம். இவை அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து அருளப்பட்டவைதாம்

என்று கூறுகிறார்கள்." இந்த வசனத்தை ஓதிய நபி(ஸல்) அவர்கள் "முதஷாபிஹான வசனங்களின் பின் அலைபவர்களை நீர் கண்டால் அவர்களையிட்டு எச்சரிக்கையாக இரும். அவர்களைப் பற்றித்தான் இங்கு அல்லாஹ் சொல்லியுள்ளான் எனக் குறிப்பிட்டார்கள்." (புஹாரி, முஸ்லிம்)

2. முதஷாபிஹான வசனங்களை அறிவுத்திறன் மிக்கவர்களால் விளங்க முடியும். இக்கருத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களில் இமாம் முஜாஹித் இமாம் நவவீ போன்றோர் முக்கியமானவர்கள், இவர்கள் தமது கருத்தைப் பலப்படுத்த பின்வரும் ஆதாரங்களை முன்வைக்கின்றனர்:-

   (அ) ஆலஇம்ரானின் 7 ஆம் வசனத்தை அவர்கள் பின்வருமாறு வாசிக் கின்றனர். "இதன் உண்மைப் கருத்தை அல்லாஹ்வும் அறிவுத் திறன்மிக்க கல்விமான்களையும் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். அவர்கள் (அறிவுத்திறன் மிக்க கல்விமான்) "இவற்றை நாங்கள் நம்புகின்றோம். இவை அனைத்தும் எங்கள் இறைவனிடமிருந்து அருளப்பட்டவை தாம்" என்று கூறுகிறார்கள்." (3 : 7)

   (ஆ) அல்லாஹ் தனது அடியார்களோடு பேசும் போது அவர்களில் யாருக்குமே விளங்க முடியாத வகையில் பேசியிருப்பது சாத்தியமில்லை. அவன் அப்படிச் செய்வதில்லை.

உண்மையில், இவ்விருசாராரின் கருத்துக்களுக்கும் இடையில் இணக்கம் காணமுடியும். முதலாவது பிரிவினர் முதஷாபிஹான வசனங்களை விளங்க முடியாது எனும் போது அவ்வசனங்களின் யதார்த்தத்தை விளங்க முடியாது என்றே கூற வருகின்றனர். அவ்வசனங்களின் கருத்தை சாதாரணமாக விளங்க முடியும். என்பதை அவர்கள் மறுக்கவில்லை. இரண்டாம் பிரிவினர் முதஷாபிஹான வசனங்களை விளங்க முடியும் என்று கூறுகையில் அதன் கருத்து அவ்வசனங்களின் கருத்துக்களை விளங்க முடியும் என்பதேயாகும். முற்றாக அவ்வசனங்களின் யதார்த்தத்தை அறிய முடியும் என இவர்கள் கூற வில்லை. எனவே இவ்விரு சாராரும் முதஷாபிஹான வசனங்களின் யதார்த்தத்தை இறைவனே அறிந்தவன் என்ற கருத்தையே கொண்டிருக்கிறார்கள்.

முதஷாபிஹான வசனங்களை அல்குர்ஆனில் இடம்பெறச் செய்ததன் மூலம் அல்லாஹ் மனித அறிவுக்கு வேலை கொடுத்துள்ளான். அவன் நாடியிருந்தால் அல்குர்ஆனின் அனைத்து வசனங்களையுமே திட்டவட்டமான கருத்துக்களைக் காட்டக்கூடியதாக இறக்கியிருக்கலாம். அவ்வாறு செய்யாது மனித அறிவை மதித்து அவன் செயற்பட்டுள்ளமை இஸ்லாத்தில் அறிவுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்துக்கு சான்றாக அமைகின்றது.

## அஸ்பாபுந் நுஸூல்

ஒரு நிகழ்வு அல்லது சம்பவம் இடம்பெற்ற போது அது தொடர்பாக அல்குர்ஆன் வசனமொன்று அல்லது பல வசனங்கள் இறங்கியிருக்கலாம். உதாரணம், கப்பாப் பின் அல்அரத் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள். "நான் ஒரு கொல்லனாக இருந்தேன். அல்ஆஸ் பின் வாஇத் பின் வாஇல் அஸ்ஸஹ்மீ என்னிடம் கடன்பெற்றிருந்தார். எனது அக்கடனை திருப்பிப் பெறுவதற்காக நான் அவரிடம் சென்றேன். அப்போது அவர் என்னை நோக்கி "நீர் முஹம்மதை நிராகரித்து விட்டு லாத், உஸ்ஸா ஆகியவற்றை வணங்கும் வரை நான் உனது கடனைத் தரமாட்டேன்" என்று கூறினார். அதற்கு நான் "அல்லாஹ் உம்மை மரணிக்கச் செய்து திரும்ப உயிர் கொடுத்து எழுப்பும் வரை நான் நிராகரிப்பில் ஈடுபடப்போவதில்லை" எனப் பதிலளித்தேன். அதற்கு அவர் "அப்படியாயின் நான் மரணித்து பின்னர் எழுப்பப்படுவேன். அந்த நாள் வரை நீர் எதிர்பார்த்திருப்பீராக. அந்நாளில் எனக்கு செல்வம் வழங்கப்படும். பிள்ளைகள் வழங்கப்பட்டிருப்பர். அந்நாளில் நான் உனது கடனை பூரணமாக தருகிறேன்" என்றார். அவ்வேளை அல்லாஹ் அவர் தொடர்பாக பின்வரும் வசனங்களை இறக்கி வைத்தான் "நம்முடைய வசனங்களை நிராகரித்தோனை நீர் பார்த்தீரா? அவன் 'நிச்சயமாக நான் செல்வமும் பிள்ளையும் வழங்கப்படுவேன்' எனக் கூறினான். மறைவானவற்றை அவன் அறிந்திருக்கின்றானா? அல்லது அளவற்ற அருளாளனிடத்தில் அது பற்றியதொரு உறுதிமொழியைப் பெற்றிருக்கின்றானா? அவ்வாறன்று, அவன் கூறுகின்றவற்றை நாம் எழுதி வருவோம். வேதனையிலிருந்து நாம் அவனுக்கு அதிகப்படுத்தியும் விடுவோம். அவன் கூறுபவற்றை நாம் அனந்தரமாக ஆக்குவோம். அவன் எம்மிடம் தனியாகவே வருவான். (19 : 77 - 80) (ஆதாரம் : புஹாரி)

சிலவேளை சட்டத்தை அறிவதற்காக அல்லது மார்க்க விடயம் ஒன்றில் தெளிவைப் பெறுவதற்காக நபி(ஸல்) அவர்களிடம் ஒரு வினா எழுப்பப்பட்டிருக்கலாம். அதற்குப் பதிலாக சில வசனங்கள் இறங்கியிருக்கலாம். உதாரணமாக, ஆயிஷா (றழி) அவர்கள் கூறுகிறார்கள் "நிச்சயமாக நான் கவ்லா பின்து ஸஃலபாவின் பேச்சை செவியுற்றுக் கொண்டிருந்தேன். அப்பேச்சில் சில பகுதிகள் எனக்கு கேட்கவில்லை. அவர் தனது கணவனைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் முறையிட்டார். 'அல்லாஹ்வின் தூதரே ! அவர் எனது இளமைக் காலத்தைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டார். எனது வயிற்றை அவருக்கு விரித்துக் கொடுத்தேன். நான் வயதிலே முதிர்ச்சியை அடைந்தவுடன் பிள்ளைப் பேறு தடைப்பட்டதன் பின்னர் அவர் என்னை தனது தாய்க்கு ஒப்பிடுகிறார். இறைவா! உன்னிடம் நான் முறையிடுகிறேன்? எனக் கூறினார். அவர் அவ்விடத்தை விட்டு நகர முன்னரே ஜிப்ரீல் (அலை) அவர்கள் பின்வரும் வசனங்களுடன்

இறங்கினார்கள். “தன் கணவனைப் பற்றி உம்மிடம் தர்க்கித்து அல்லாஹ்விடமும் முறையிட்டாளே அவளுடைய கூற்றை அல்லாஹ் செவியேற்றுக் கொண்டான்.” (58 : 1) (ஆதாரம் - இப்னு மாஜா)

இவ்வாறு அல்குர்ஆனின் வசனங்கள் ஒரு நிகழ்வு இடம் பெறும் வேளை அது சம்பந்தமாக இறங்கியிருந்தால் அவ்வசனங்களின் “ஸபபுந் நுஸூல்” என அந்நிகழ்வு கருதப்படும். அவ்வாறே ஒரு வினாவுக்குப் பதிலாக சில வசனங்கள் இறங்கியிருப்பின் அவ்வசனங்களின் ஸபபுந் நுஸூல் என அவ்வினா கருதப்படும். எனவே, அல்குர்ஆனின் சில வசனங்கள் இறங்குவதற்கு காரணமாக அமைந்த நிகழ்வை அல்லது வினாவை ஸபபுந் நுஸூல் என சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

அல்குர்ஆன் ஒரு வழிகாட்டி நூல். எனவே மனித சமூகத்துக்கு அத்தியாவசிய மான நம்பிக்கைக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், பண்பாடுகள், சட்டங்கள் வரலாறுகள் என்பவற்றைப்பற்றியெல்லாம் அது விளக்கியிருக்கும். அவ்விளக்கங் கள் வழங்கப்படக் காரணமாக அமைந்த எந்த நிகழ்வும் இடம்பெற்றிருக்கமாட்டாது. அல்லது அது இறங்குவதற்கு காரணமாக அமையும் விதத்தில் எவ்வினாவும் தொடுக்கப்பட்டிருக்கவுமாட்டாது. அல்குர்ஆனில் அதிகமான வசனங்கள் இவ்வாறு காரணங்கள் இன்றி அருளப்பட்டவையே. எனவே, அல்குர்ஆனின் எல்லா வசனங்களுக்கும், எல்லா அத்தியாயங்களுக்கும் ஸபபுந் நுஸூல் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஸபபுந் நுஸூல் பற்றிய அறிவு பல்வேறு பயன்களைப் பெற்றுத் தருகின்றது :-

1. ஒரு சட்டம் உருவாக்கப்படுவதற்கு பின்னணியாக அமைந்த காரணத்தைத் தெரிந்து கொள்ள ஸபபுந் நுஸூல் பற்றிய அறிவு உதவுகின்றது. அவ்வாறே பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்ற போது அல்லாஹ் மனிதன் மீது கொண்ட கருணையின் காரணமாக மனித நலன்களைக் கருத்திற் கொண்டுள்ளான் என்பதனைப் புரிந்து கொள்ளவும் இவ்வறிவு துணை நிற்கின்றது.

2. அல்குர்ஆனின் கருத்துக்களை விளங்கிக் கொள்ள ஸபபுந் நுஸூல் பற்றிய அறிவு பெருந்துணை புரிகின்றது. அல்குர்ஆனின் சில வசனங்களை அவற்றுக்குரிய ஸபபுந் நுஸூலைத் தெரியாது விளக்க முற்படுகின்ற போது சில கருத்து மயக்கங்கள் ஏற்பட இடமிருக்கின்றது.

ஸபபுந் நுஸூலை அறிவதனால் இத்தகைய சிக்கல்கள் ஏற்படாது பார்த்து கொள்ள முடியும். இதனாலேயே இமாம் இப்னு தகீக் அல்ஈத் அல்குர்ஆனின் கருத்துக்களை விளங்குவதற்கு ஸபபுந் நுஸூலை விளங்குவது பயனுள்ள ஒரு வழிமுறையாகும் என குறிப்பிடுகின்றார். இக்கருத்தை விளக்க பின்வருமாறு உதாரணம் கூறலாம். ஸபபுந் நுஸூலை அறியாது பகரா எனும் அத்தியாயத்தின் 158 ஆம் வசனத்தை படிக்கும் ஒருவர் ஹஜ்ஜின் போது ஸஃயு செய்வது கடமைகளில் ஒன்றல்ல என எண்ணுவார். உர்வா பின் ஸுபைர் அவ்வசனத்தை அப்படித்தான் விளங்கினார். அவ்விளக்கம் பிழையானது என அவருக்கு ஆயிஷா (றழி) அவர்கள் ஸபபுந் நுஸூலை அடிப்படையாக வைத்துத் தெளிவுபடுத்தினார்கள்.

3. ஒரு வசனம் யார் சம்பந்தமாக இறங்கியிருக்கிறதோ அவர் விடயத்தில் மாத்திரம் அவ்வசனம் பயன்படுத்தப்படவும் வேறு யார் மீதும் அது பயன்படுத்தப்படாதிருக்கவும் ஸபபுந் நுஸூல் பற்றிய அறிவு துணை செய்கின்றது. உதாரணமாக முஆவியா(றழி) அவர்கள் தமக்குப் பின்னால் யஸீதை கலீபாவாக நியமிக்க விரும்பினார்கள். மதீனாவிலுள்ள தமது கவர்னரான மர்வானுக்கு அது பற்றி அறிவித்தார்கள். மனிதர்களை ஒன்று திரட்டி பிரசங்கம் நிகழ்த்திய மர்வான் (றழி) அவர்கள் யஸீதுக்கு பைஅத் செய்யுமாறு வேண்டினார்கள். அவ்வேளை அப்துர் ரஹ்மான் பின் அபூபக்கர்(றழி) அவர்கள் அதனை ஏற்கவில்லை. அப்போது மர்வான் அவருக்கு தீங்கிழைக்க விரும்பினார். அப்போது, ஆயிஷா(றழி) அவர்களது வீட்டில் அப்துர் ரஹ்மான் நுழைந்திருந்தார்கள். அத்தியாயம் அல்அஹ்காபின் 17 ஆம் வசனத்தை ஓதிக்காட்டிய மர்வான், அப்துர்ரஹ்மான் பின் அபூபக்ர் விடயத்திலேயே அவ்வசனம் இறங்கியதாக குறிப்பிட்டார். அப்போது அவ்வசனம் அவர் சம்பந்தமாக இறக்கப்படவில்லை என ஆயிஷா(றழி) அவர்கள் எடுத்துரைத்தார்கள். அவ்வசனம் யார் விடயத்தில் இறங்கியது என ஆயிஷா(றழி) அவர்கள் அறிந்திருந்தமையால் வேறொருவர் மீது அது அநியாயமாக பயன்படுத்தப்படுவதை தடுக்க முடிந்தது.

நபி(ஸல்) அவர்களிடமிருந்தோ அல்லது ஸஹாபாக்களிடமிருந்தோ கிடைக்கப்பெறுகின்ற ஆதாரபூர்வமான அறிவிப்புக்கள் வழியாகவே ஸபபுந் நுஸூல் அறியப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இஃஜாஸுல் குர்ஆன்

“இ∴ஜாஸுல் குர்ஆன்” எனும் பதம் “குர்ஆனின் அற்புதம்” என மொழிபெயர்க்கப்படுகிறது. ஆனால், பிறரை பலவீனப்படுத்துவது, பிறர் பலவீனர்கள் என்று கூறுவது என்பதே “இ∴ஜாஸ்” எனும் அரபுப் பதத்தின் நேரடியான மொழிப் பொருளாகும். அதாவது, மக்களிடத்தில் அல்லாஹ் ஒரு சவாலை முன்வைத்து அச்சவாலை அவர்களால் முறியடிக்க முடியாது என்று கூறுவதையே இது குறிக்கும். அல்லாஹ் குர்ஆனைப் போன்ற ஒன்றை இயற்றிக் காட்டும்படி சவால் விடுத்து அந்த சவாலை மக்களால் முறியடிக்க முடியாது என்று வலியுறுத்திக் கூறுவதன் மூலம் குர்ஆன் அல்லாஹ்வின் வாக்குத்தான் என்று நிறுவ எடுக்கப்படும் முயற்சி தான் இ∴ஜாஸுல் குர்ஆன் எனப்படும். சவாலாக முன்வைக்கப்படும் அம்சம் மு∴ஜிஸா எனப்படும்.

பொதுவாக ‘மு∴ஜிஸாக்கள்’ என்றால், அல்லாஹ்வின் தூதர்களில் ஒருவர் தான் எத்திவைக்கும் தூது அது அல்லாஹ்விடமிருந்து வந்தது என்றும், தான் அல்லாஹ்வின் அதிகாரம் பெற்றவர் என்றும் நிறுவுவதற்காக முன்வைக்கும் சான்றுகளாகும். இந்த மு∴ஜிஸாக்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்டவையாகவும் வழக்கத்துக்கு மாற்றமானவையாகவும் சவால்விடும் தன்மை கொண்டவையாகவுமே இருக்கும்.

முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு முன்னர் வந்த நபிமார்கள் பல மு∴ஜிஸாக்களைக் காட்டியிருக்கிறார்கள். அவை அனைத்தும் கட்புலனாகும் தன்மை கொண்டவை. அத்தோடு அவ்வக்கால மக்கள் எந்தத் துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் அதிக கவனமெடுப்பவர்களாகவும் இருந்தார்களோ அந்தத் துறைகளுடன் சம்பந்தப்பட்டவையாகவும் அவை இருந்தன. அந்தவகையில், பின்வரும் மு∴ஜிஸாக்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம் :-

1. மூஸா(அலை) அவர்களது கைத்தடி பாம்பாக மாறி, சூனியக்காரர்களது பாம்புகளை விழுங்கியது. அவர்களது கை வெண்மையாகியது. பிர்அவ்னின் காலத்தில் சூனியக்காரர்களது சூனியங்களுக்கு அதிக முக்கியத்துவமிருந்தமையால் அத்துறை சார்ந்ததாக இந்த மு∴ஜிஸாக்கள் இருந்தன.

2. ஈஸா(அலை) அவர்கள் தகப்பனின்றிப் பிறந்தமை, இறந்தவர்களை உயிர்ப்பித்தமை, குஷ்டரோகிகளை குணப்படுத்தியமை போன்றன அவர்களது மு∴ஜிஸாக்களாகும். ரோம, பாரசீக பிராந்திய மக்கள்

உலகாயத, சடரீதியான சிந்தனைகளில் மூழ்கி, மறைவான உலகுடன் சம்பந்தப்பட்ட அம்சங்களை மறுத்து வந்தமையால் இப்படியான மு.ஃ.ஜிஸாக்கள் காட்டப்பட்டன.

மேற்படி நபிமார்கள் கொண்டு வந்த தூதை மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக இந்த மு.ஃ.ஜிஸாக்கள் காட்டப்பட்டன. அந்த மக்களை பணிய வைக்க வேண்டும் என்பதற்காக அவர்களால் முறியடிக்க முடியாதவையாகவும் அவர்கள் பிரமித்துப்போகும் வகையிலும் அவை அமைந்தன. அவர்களது சக்திகளை மிஞ்சியவனாக அல்லாஹ் இருக்கின்றான் என்பதை நிறுவும் வகையில் அவை இருந்தன. ஆனால், இந்த மு.ஃ.ஜிஸாக்களது உள்ளடக்கம் அந்த நபிமார்கள் கொண்டு வந்த தூதுகளின் உள்ளடக்கத்தோடு சம்பந்தமற்றவையாக, கட்புலனாகும் தன்மை கொண்டவையாக இருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## குர்ஆன் எனும் மு.ஃ.ஜிஸா

முஹம்மத்(ஸல்) அவர்கள் முன்வைத்த மு.ஃ.ஜிஸாவான குர்ஆன் முன்னைய நபிமார்கள் முன்வைத்த மு.ஃ.ஜிஸாக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைந்தது. அது சிந்தனையோடும் அறிவோடும் சம்பந்தப்பட்டிருந்தது அதன் உள்ளடக்கமே மு.ஃ.ஜிஸாவாக காணப்பட்டது.

நபி(ஸல்) அவர்களது காலத்தில் சந்திரன் பிளந்தமை, ஈத்தமரக்குற்றி பேசியமை, சுராகா மண்ணில் புதைந்தமை போன்ற பல கட்புலனாகும், அசாதாரண நிகழ்வுகள் இடம்பெற்ற போதிலும் அவற்றை முன்வைத்து நபி(ஸல்) அவர்கள் சவால்விடவில்லை. மக்கள் அப்படியான அத்தாட்சிகளையே அல்லாஹ்விடமிருந்து எதிர்பார்த்தும் கூட அல்லாஹ் குர்ஆனையே அத்தாட்சியாக்கியிருப்பதாகக் கூறினான்.

“அவருக்கு அவரது இரட்சகனிடமிருந்து அத்தாட்சிகள் இறக்கப் பட்டிருக்கக்கூடாதா என அவர்கள் கூறுகிறார்கள். (நபியே) கூறுவீராக! நிச்சயமாக அத்தாட்சிகள் அல்லாஹ்விடமே உள்ளன. நிச்சயமாக நான் தெளிவாக எச்சரிப்பவர் மாத்திரமே. அவர்கள் மீது ஓதிக் காண்பிக்கப்படும் வேதத்தை உம்மீது நாம் இறக்கியிருப்பது அவர்களுக்குப் போதாதா?” (29 : 50,51) என அல்லாஹ் வினவுகிறான்.

குர்ஆனை இறக்கிய அல்லாஹ் அது தன்னிடமிருந்து தான் வந்தது என்பதையும் அதனை மனிதர்களால் இயற்ற முடியாது என்றும் வலியுறுத்திக் கூறினான். ஆனால், “இந்த குர்ஆனை முஹம்மத்(ஸல்) அவர்கள் தான் இயற்றினார்கள்” என்று நிராகரிக்கும் குறைஷியர் கூறி வந்தார்கள். அப்போது அல்லாஹ் இது மனித ஆக்கமல்ல, அவ்வாறு மனித ஆக்கம் என எவரும் வாதிட்டால் இது போன்ற ஒன்றை அவர்கள் இயற்றிக் காட்டட்டும் என்று சவால் விட்டான். மனிதனால் அது இயற்றப்பட்டிருப்பின் அந்த மனிதனைப் போன்ற மனிதர்களால் அதனைப் போன்ற ஒன்றை இயற்றுவதன் மூலம் சவாலை முறியடிக்கலாமே என்பது அல்லாஹ்வின் வாதமாக இருந்தது.

இந்த சவால் மூன்று கட்டங்களாக அமைந்தது :-

(1) குர்ஆனைப் போன்ற ஒன்றை முழுமையாக இயற்றிக் காட்டும்படி அல்லாஹ் வேண்டினான். (17 : 88)

(2) பின்னர் இரண்டாம் கட்டமாக குர்ஆனில் இருப்பது போன்ற பத்து அத்தியாயங்களையாவது இயற்றிக் காட்டும்படி வேண்டினான். (11 : 13,14)

(3) அதுவும் முடியாவிட்டால் குர்ஆனின் அத்தியாயத்தைப் போன்ற ஒரு அத்தியாயத்தையாவது இயற்றும் படி அல்லாஹ் சவால் விட்டான். இந்த இறுதிக் கட்டச் சவாலைக் கூட அரபிகளால் முறியடிக்க முடியாது போய்விட்டது. (2 : 23)

குர்ஆனின் உள்ளடக்கம், அதன் மொழி நடை, அது கருத்துக்களை முன்வைக்கும் பாங்கு அனைத்துமே அற்புதமாகவே இருக்கின்றன. அரபிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் அரபு மொழியில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்ததுடன் இலக்கியவாதிகளுக்கும் கவிஞர்களுக்கும் அதிகூடிய முக்கியத்துவமுமளித்தார்கள். கவிதைகள், உரைநடைகள் என்பன போட்டி நிகழ்ச்சிகளுக்காக அரங்கேற்றப் பட்டதுடன் அவற்றில் இருந்த குறைபாடுகள் துல்லியமாக இனம் காணப்பட்டு அவற்றிற் சிறந்தவை தெரிவு செய்யப்பட்டன. குறிப்பாக கவிதைகள் இயற்றுவதிலும் அவற்றை சுவைப்பதிலும் அவர்களுக்கு அலாதியான விருப்பமும் ஈடுபாடுமிருந்தது. இப்படியாக இலக்கிய முயற்சிகளில் உச்சகட்டத்திலிருந்த அரபிகளுக்கு அரபுமொழியிலேயே அமைந்த குர்ஆனையொத்த ஒன்றை இயற்றிக் காட்ட முடியாது போய்விட்டது.

இஸ்லாத்தை மக்கள் ஏற்பதைச் சகிக்க முடியாத அவர்கள் மக்களை இஸ்லாத்தை விட்டும் திசைதிருப்ப எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டார்கள். நாடுகடத்தல், உடல் மற்றும் உளரீதியான வதைகள் என அவை பலவாறாக

அமைந்தன. ஆனால், குர்ஆன் விடுத்த சவாலை முறியடித்திருப்பின் இவற்றில் அவர்கள் ஈடுபட்டிருக்கத் தேவையில்லை.

எனவே, குர்ஆனுக்கு மக்கள் செவிமடுத்து அது அவர்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனக்கண்ட நிராகரிப்பாளர்கள் :- "... நீங்கள் இந்தக் குர்ஆனை செவிமடுக்காதீர்கள். (அது ஓதப்படும் போது மற்றவர்கள் கேட்காதிருக்க) அதில் (கூச்சலிடுவது போன்ற) வீணானவற்றை செய்யுங்கள்..." (41 : 26) ஆனால், குர்ஆனின் ஈர்ப்பு சக்தியை மனதார அவர்கள் ஏற்றார்கள். அதனை அவர்கள் விசுவாசிக்காத போதிலும் அது நபியவர்களால் ஓதப்படுவதை இரகசியமாக செவிமடுத்தமைக்கு பல சம்பவங்கள் சான்றாக அமைகின்றன. குர்ஆன் அரபிகளால் மட்டுமன்றி மறுமை நாள் வரையுமுள்ள சமூகங்களால் கூட முறியடிக்க முடியாத அற்புதமாகும். அது மூஸா(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டது போன்ற கட்புலனாகும் அற்புதமாக இருந்திருந்தால் அந்தக் காலத்தோடும், அதனை கண்ணால் பார்த்தவர்களோடும் மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கும். ஆகவே, குர்ஆன் இறுதிவேதம் என்ற வகையில் நீடித்து நிற்கும் அற்புதமாகவும் அறிவு முதிர்ச்சியுற்ற காலத்தில் தலைநிமிர்ந்து நிற்கும் அதிசயமாகவும் உள்ளது.

### குர்ஆனிய முஃஜிஸாவின் தன்மை

எந்த அம்சத்தை வைத்து குர்ஆன் சவால் விட்டது என்பது சம்பந்தமாக அறிஞர்கள் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அவற்றை சுருக்கமாக நோக்குவோம் :

1. எதிர்காலத்தில் நடக்கவுள்ள அம்சங்களை குர்ஆன் முன் கூட்டியே கூறியது. அவை அவ்வாறே நடந்தேறின. எனவே, எதிர்காலம் பற்றிய தகவல்களை இறைவனால் மட்டுமே கூறமுடியும் என்பதால் குர்ஆன் முஃஜிஸாவாக அமைந்தது. இதற்கு ஆதாரங்களாக (30 : 2, 3) (54 : 45) (48 : 27), (11 : 49) போன்ற வசனங்கள் உள்ளன.

2. குர்ஆனின் மொழிநடை, கருத்துக்களை முன்வைக்கும் பாங்கு, சொற்பிரயோக முறைகள் என்பன தனித்துவமானவையாக இருப்பதனால் அது அற்புதமாகவுள்ளது.

3. அதன் சட்டதிட்டங்கள், அது மனித உரிமைகளைப் பேணுவதற்காக முன்வைக்கும் அடிப்படைகள் அற்புதமானவையாகும்.

4. குர்ஆனின் விஞ்ஞானக் கருத்துக்கள் காலத்தால் முந்தியவையாக இருப்பதால் அவை அற்புதமானவையாகும்.

என பல்வேறு வகையான அற்புதங்களை அறிஞர்கள் முன்வைத்து அவை பற்றி மிக விரிந்த ஆய்வுகளை எழுதியிருக்கிறார்கள். அவற்றை பின்வரும் பிரதான தலைப்புக்களில் சுருக்கமாக ஆராயலாம் :-

- **மொழி ரீதியானவை**

குர்ஆன் அரபு மொழியில் இறக்கப்பட்ட வேதநூலாகும். அது இறக்கப்பட்ட காலமாகிய ஏழாம் நூற்றாண்டில் அரபு மொழி அதன் உச்சகட்ட வளர்ச்சியைக் கண்டிருந்தது. கவிதை, உரைநடை போன்ற மொழியின் வெளிப்பாடுகளில் அரபிகள் பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள். சிறந்த இலக்கிய படைப்புக்களை இனம் காண்பதும், ரசிப்பதும், மெச்சுவதும் அரபிகளது வாழ்வின் அன்றாட நிகழ்வுகளாக இருந்தன. எழுத வாசிக்கத் தெரிந்தவர்களது தொகை குறைவாக இருப்பினும் கூட இலக்கிய விழாக்களில் அச்சமூகம் அதீத அக்கறை காட்டியது.

துல்மஜாஸ், உக்காஸ், மிஜன்னா போன்ற இலக்கியச் சந்தைகள் ஏற்பாடு செய்யப்பட்டு, அங்கு கவிதைகளும் உரைநடைகளும் இலக்கியவாதிகளால் அரங்கேற்றப்பட்டன. அவற்றில் அதிசிறந்தவை தெரிவு செய்யப்பட்டதுடன் குறைபாடுகள் துல்லியமாக விமர்சிக்கப்பட்டன. எனவே, அரபிகளைப் பொறுத்தவரை அவர்களது திறமையின் அடையாளமாக மொழியும், மொழிசார் படைப்புக்களும் இருந்தன என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் பின்னணியில் நின்று தான் குர்ஆனின் மொழி ரீதியான அற்புதம் என்ற அம்சம் பார்க்கப்பட வேண்டும். அதாவது, குர்ஆனைப் போன்ற ஓர் ஆக்கத்தை இயற்றிக்காட்டும்படி அல்லாஹ் சவால்விட்டான். அந்த சவாலை அரபிகளால் முறியடிக்க முடிந்திருந்தால் அரபிகள் வெற்றி கண்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் அதனைச் செய்ய சக்தி பெறவுமில்லை. அதற்கான முயற்சிகளில் ஈடுபடவுமில்லை.

இஸ்லாத்தின் தூதை முறியடிக்கவும் அதிலிருந்து மக்களைத் திசைதிருப்பவும் பல்வேறு உத்திகளை அவர்கள் கையாண்டார்கள். ஆனால், குர்ஆனைப் போன்ற ஒன்றை இயற்றிக் காட்டியிருந்தால் இந்த எதுவும் அவசியப்பட்டிருக்காது. குர்ஆனை ஆய்வுக்குட்படுத்தும் போது அதன் எழுத்துக்களது உச்சரிப்பின் மூலம் வெளிப்படும் ஓசை அற்புதமானது. அந்த வகையான சொற்களையே அல்லாஹ் தெரிவு

செய்திருக்கிறான். அதன் ஹரகத்துகள், சுகூன்கள், மத்துக்கள், குன்னாக்கள், எதுகை, மோனை என்பவற்றை செவிமடுக்கும் போது அவை தெவிட்டுவதில்லை. மென்மேலும் செவிமடுக்க வேண்டும் என்ற உணர்வைத் தருகின்றன.

தெரிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லும் வேறு எந்த சொல்லாலும் தரமுடியாத கருத்தையே தருகின்றது. ஒவ்வொன்றும் அதற்கேயுரிய இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. அங்கு வேறு ஒரு சொல் மேலதிகமாக வந்திருக்கலாமே என எவரும் கருதமாட்டார்கள். குர்ஆனை செவியேற்கும் ஒவ்வொருவரது அறிவுத் தரத்திற்கும் ஏற்ப அது கருத்துக்களை அள்ளித் தெளிக்கிறது. அங்கு அறிவுக்கு விருந்தாக அமையும் அம்சங்களுடன் ஆன்மீகத்தை போஷிப்பவையும் சமநிலையில் உள்ளன. எதுவும் எதனையும் மிகைப்பதில்லை.

எனவே, குர்ஆனை செவிமடுக்கும் போது ஏற்படும் தாக்கம் அற்புதமானது. "அல்லாஹ் மிக அழகான செய்தியை வேதமாக இறக்கினான். (இவை முரண்பாடில்லாமல்) ஒன்றுக்கொன்று ஒப்பானதாகவும் (மனதில் பதியுமாறு) திரும்பத் திரும்பக் கூறப்படுவதாகவும் இருக்கின்றன. தங்கள் இறைவனுக்கு எவர்கள் அஞ்சுகிறார்களோ அவர்களுடைய தோல்களின் உரோமக் கால்கள் (இவற்றைக் கேட்கும்போது) சிலிர்த்து விடுகின்றன. பிறகு அவர்களுடைய தோல்களும் இதயங்களும் அல்லாஹ்வின் தியானத்தில் இணைகின்றன." (39:23) என குர்ஆனின் வசனங்களது தாக்கம் பற்றி அல்லாஹ் கூறுகிறான்.

மக்கா காலப்பிரிவில் குறைஷிக் காபிர்கள் குர்ஆனின் வசீகரத்தால் கட்டுண்டுபோய் நபி(ஸல்) அவர்கள் குர்ஆன் ஓதுவதை ஒருவர் மற்றவருக்குத் தெரியாமல் செவிமடுத்தார்கள். இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்கள்:- "நபி(ஸல்) அவர்களிடம் அல்வலீத் இப்னுல் முகீரா வந்தபோது அன்னார் அவனுக்கு குர்ஆனை ஓதிக் காண்பித்தார்கள். அப்போது அவனது உள்ளம் உண்மையின் பால் மாறத் தொடங்கியது. இதுபற்றிக் கேள்விப்பட்ட அபூஜஹ்ல் வலீதை அணுகி குர்ஆனைப் பற்றி பிழையான கருத்துக்களை முன்வைக்கும்படி கேட்டான். அதற்கு அல்வலீத் "உங்களுக்கு மத்தியில் கவிதைகள் பற்றி என்னை விட அதிக அறிவுள்ளவர் எவருமில்லை. இந்தக் கவிதைகளில் எதனையும் போல இந்தக் குர்ஆன் இல்லை. அல்லாஹ் மீது ஆணையாக அவர் (முஹம்மத் ஸல்) கூறும் வார்த்தைகளுக்கு இனிமையுண்டு. அதன் மீது புதுமெருகுண்டு. அதன் மேல் பகுதி பயன்மிக்கது. அதன் கீழ்பகுதி கருத்துக் செறிவு கொண்டது. அது தன் கீழுள்ள அனைத்தையும் தகர்த்துவிடுகிறது." என்று கூறினான். எனவே அரபிகளால் மிகைக்க முடியாத மொழி ரீதியான, இலக்கிய ரீதியான அற்புதமாக குர்ஆன் விளங்கியது. இதுவரை இச்சவால் முறியடிக்கப்படவில்லை.

- **சட்டம் தொடர்பானவை**

குர்ஆனில் அல்லாஹ் முன்வைக்கும் வாழ்வு முறையானது மனிதர்களால் உருவாக்கப்பட்ட அனைத்து வாழ்வு முறைகளை விடவும் சிறந்தது ; அனைத்தையும் மிஞ்சியது ; மனித வாழ்வுக்கு மிகவுமே உசிதமானது என்பதை சட்டம் தொடர்பான அற்புதம் என்ற சொல் குறிக்கிறது. இறைவன், மனிதவாழ்வு, பிரபஞ்சம் போன்றன தொடர்பாக மனித சிந்தனையில் உதிக்கும் அடிப்படையான வினாக்களுக்கு குர்ஆனில் மட்டுமே தெளிவானதும் மனித உள்ளத்தால் ஏற்றுக் கொள்ளத் தக்கதுமான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையில், குர்அனை மிகைக்க எந்த நூலாலும் முடியாது. அது மிகவுமே பொருத்தமான சிறந்த வழியைக் காட்டுகிறது.

அல்லாஹ் குர்ஆனில் "நிச்சயமாக இந்தக் குர்ஆன் முற்றிலும் நேராக இருக்கும் வழியைக் காட்டுகிறது." எனக் கூறுகிறான். (17:9) தனிமனிதன், குடும்பம், சமூகம், அரசு என்ற ஒவ்வோர் அலகு தொடர்பான வழிகாட்டல்களையும் கனகச்சிதமாக அது வழங்குகிறது. தனிமனித உருவாக்கத்தில் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றின் கூட்டான பங்கு பற்றியும் தனித்தனியான பங்குபற்றியும் அது விரிவாகவே பேசியிருக்கிறது. அது சம்பூரணமான, நடுநிலையான, சமச்சீரான, ஈருலக சுபீட்சத்தை ஏக காலத்தில் இலக்காகக் கொண்ட வாழ்வு முறையை முன்வைக்கிறது.

மனிதனுக்குள் அடங்கியுள்ள மனவெழுச்சிகள், ஆசாபாசங்கள் என்பன மனித நடத்தையில் பலத்த செல்வாக்கை விளைவிப்பதால் அவற்றை நெறிப்படுத்த பகுத்தறிவால் முடியாது. அவற்றை நெறிப்படுத்தி நல்ல வழியில் நடாத்த விசேடமான பயிற்சி நெறி அவசியமாகிறது.

தனிமனித நலன்களுக்கும் சமூக நலன்களுக்குமிடையில் அற்புதமான ஒரு சமநிலையை குர்ஆனிய வழிகாட்டல்களில் காண முடிகிறது. தனிமனித உருவாக்கத்தில் மாத்திரம் குறியாக இருந்த கொள்கைகளோ சமூகமேம்பாட்டில் மட்டும் கவனம் செலுத்திய கொள்கைகளோ தோல்வியில் முடிந்திருப்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

மனிதனின் நம்பிக்கைக் கோட்பாடுகளில் ஏற்படும் மாற்றமே அவனது நடத்தைக் கோலங்களில் மாற்றம் ஏற்படக் காரணம் என அல்லாஹ் கூறுகிறான்.

"…. மனிதர்கள் (தங்கள் தீய நடத்தையை விட்டு) தங்களை மாற்றிக்கொள் ளாத வரையில் நிச்சயமாக அல்லாஹ்வும் மாற்றிவிடுவதில்லை." (13 : 11) என

அல்லாஹ் கூறுவதிலிருந்து சமூக மாற்றம் உளமாற்றத்தினூடாக மட்டுமே செய்யப்பட வேண்டுமென வலியுறுத்துகிறான்.

அந்த வகையில், ஆதாரங்களினடிப்படையாக அமைக்கப்படும் தூய ஏகத்துவக் கோட்பாடு பற்றி குர்ஆன் விரிவாக விளக்குகிறது. இந்த விசுவாசம் ஆழமாக உள்ளத்தில் ஊன்றப்பட்ட பின்னர் வணக்க வழிபாடுகளை நோக்கி கவனம் செலுத்தப்படுகிறது. அந்த ஒவ்வொரு கிரியையும் தனிமனித சமூக நலன்களை ஈட்டுகின்றன.

குர்ஆன் வலியுறுத்தும் அடுத்த அம்சம் "அக்லாக்குகள்" எனப்படும் ஒழுக்க விழுமியங்களாகும். அவை சமூகத்தின் கட்டுக்கோப்பைப் பேண உதவுவதுடன் அதற்கு மெருகூட்டுகின்றன.

அடுத்து குடும்ப உறவுகள், சமூக உறவுகள், அரசுடன், குற்றங்களுடன் தொடர்பான சட்டங்கள் என விரிந்த பகுதிகள் குர்ஆனில் கூறப்பட்டுள்ளன.

எனவே, குர்ஆன் முன்வைக்கும் வாழ்வு முறையானது உலகிலுள்ள எல்லா வாழ்வு முறைகளை விடவும் மிகைத்தது என்பது சட்டரீதியான அற்புதம் என்ற பகுதியில் விளக்கப்படுகிறது. அந்த வாழ்வு முறைக்கு நிகரான ஒரு வாழ்வு முறையை அவர்களால் முடியுமானால் இயற்றிக்காட்டட்டும் என்பது சவாலாக அமைந்துள்ளது.

- **அறிவியல் சார்ந்த அற்புதம்**

குர்ஆனில் பௌதீக உலகோடு தொடர்பான பல அறிவியல் உண்மைகள் கூறப்பட்டுள்ளன. குர்ஆன் இறக்கப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களோ இந்த உண்மைகளை தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால், தற்காலத்தில் நவீன விஞ்ஞான ஆய்வுகளால் அவை நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து இந்த உண்மைகளை உள்ளடக்கிய குர்ஆன் மனித ஆக்கமல்ல என்ற உண்மையைப் புரியமுடியும்.

குர்ஆன் விஞ்ஞானக் கருத்துக்களை முன்வைக்கிறது என்பதனால் அது விஞ்ஞான நூல் என்பது கருத்தல்ல. பிரபஞ்சத்தில் அடங்கியுள்ள பௌதீக விதிகளும், அற்புதமான படைப்புக்களும், படைப்புமுறைகளும் அல்லாஹ்வின் வல்லமைக்கும் ஆழ்ந்த, வரையறையற்ற அறிவுக்குமான சான்றுகளாகும் என்பதை நிரூபிப்பதற்கு மட்டுமே அவை குர்ஆனில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் அந்த படைப்புக்களின் உண்மையான சிருஷ்டிகர்த்தாவிடமிருந்துதான் இந்த குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது என்பது புலனாகிறது.

வானங்களிலும் பூமியிலுமுள்ள அல்லாஹ்வின் படைப்பினங்களை நுணுக்கமாக ஆராயும்படி குர்ஆன் பல்வேறு வசனங்களில் பணிக்கிறது.

> "வானங்கள் பூமி படைக்கப்பட்டிருப்பதிலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும் சிந்திக்கக் கூடியவர்களுக்கு அத்தாட்சிகள் உள்ளன. (3 : 190)

> "உறுதியாக நம்புவர்களுக்கு பூமியில் பல அத்தாட்சிகள் உள்ளன. உங்களுக்குள்ளேயும் (உள்ளன.) நீங்கள் பார்ப்பதில்லையா?" (51 : 20,21) என அல்லாஹ் கேட்கிறான்.

சடப்பொருள்கள், வாயுக்கள், உயிரினங்கள், மனிதர்கள் என்று பலகோடி அத்தாட்சிகளை உள்ளடக்கிய பல படைப்பினங்களைப் படைத்த அல்லாஹ் அவற்றில் மனிதன் தனது சிந்தனையைப் பிரயோகித்து படிப்பினை பெற வேண்டுமென எதிர்பார்க்கிறான். பிற்பட்ட காலத்தில் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்ட, குர்ஆன் இறங்கிய காலத்தில் இருந்த மக்கள் தெரிந்திராத சில விஞ்ஞான உண்மைகள் வருமாறு :

1. "சூரியன் தனது தங்குமிடத்தை நோக்கி ஓடுகிறது." (36:38) என குர்ஆன் கூறியது. குர்ஆன் இறக்கப்பட்ட அக்காலத்தில் சூரியன் ஒரே இடத்தில் உறுதியாக நிற்பதாக நம்பப்பட்டது. ஆனால், அது தனது கிரகங்களுடன் சேர்ந்து வினாடிக்குப் 12 மைல் வேகத்தில் வேறு ஓர் இலக்கை நோக்கி நகர்வதாக பிற்பட்ட காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

2. "யாரை அல்லாஹ் வழிகெடுக்க நாடுகிறானோ, அவரது நெஞ்சை வானத்தில் ஏறுகின்றவனைப் போல் இறுக்கமானதாக,சிரமத்துடன் கூடியதாக ஆக்கி விடுவான்."(6 : 125) சுவாசிப்பதற்கு அத்தியவசியமான ஒட்சிசன் புவிமேற்பரப்பி லிருந்து மேலே செல்லச் செல்ல குறைவடைந்து செல்வதால் அங்கு சுவாசிப்பதில் சிரமமிருப்பதாக இவ்வசனம் கூறுகிறது. இதுவும் பிற்காலத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டது.

3. "காற்றுக்களை நாம் கருக்கட்டக் கூடியவையாக அனுப்புகிறோம்." (15 : 22) என்று அல்லாஹ் கூறுகிறான். இதிலிருந்து மகரந்த சேர்க்கை இடம் பெறுவதற்கு காற்றின் பங்களிப்பு தேவை என குறிப்பிடப்படுகிறது.

அந்தவகையில் ஏழாம் நூற்றாண்டில் இறக்கப்பட்ட குர்ஆனில் இதுபோன்ற புரட்சிகரமான விஞ்ஞான உண்மைகள் இடம்பெற்றிருப்பதானது அது அல்லாஹ்வின் வேதம் என்பதற்கான அத்தாட்சியாகும்.



9-CM14796

# தப்ஸீர் கலை

## தோற்றமும் வளர்ச்சியும்

அல்லாஹ் குர்ஆனின் ஒரு வசனத்தினூடாக அல்லது பல வசனங் களினூடாக எந்த உண்மைகளை உணர்த்த விரும்புகிறான் என்பதை மனித சிந்தனையால் புரிய எடுக்கப்படும் முயற்சிதான் 'தப்ஸீருல் குர்ஆன்' எனப்படுகிறது. இந்த விளக்கம் ஒருவரது அறிவுத்தரம், சிந்தனா ஆற்றல் என்பனவற்றிற்கு ஏற்ப வேறுபடலாம். தப்ஸீர் கலை என்றால் குர்ஆனின் சொற்களை உச்சரிக்கும் விதம், அவை தரும் கருத்துக்கள், அவை தனியாகவும் கூட்டாகவும் இருக்கையில் அவை தொடர்பான சட்டங்கள், சொற்கள் இணையும் போது அவை தரும் பொருள்கள் போன்றவற்றை ஆராயும் கலையாகும்.

ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களது காலம் முதல் நவீன காலம் வரை தப்ஸீர் ஒரு தனியான கலையாக வளர்க்கப்பட்டு வந்துள்ளது. அவ்வக்கால மக்களது கலாசார, அறிவியல், சமூகப் பின்னணிகளுக்கு ஏற்ப அவ்வப்போது எதிர்கொள்ளப் பட்ட சவால்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தப்ஸீர் துறைசார் நிபுணர்கள் தமது ஆக்கங்களை முன்வைத்தார்கள்.

தப்ஸீர் கலைக்கான அடித்தளம் நபி(ஸல்) அவர்களது காலத்திலேயே இடப்பட்டது. குர்ஆனின் வசனங்களுக்கு விளக்கம் சொல்லும் பொறுப்பை அல்லாஹ் அவர்களிடம் ஒப்படைத்தான். "(நபியே) மக்களுக்கு இறக்கப்பட்டதை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவே நாம் உமக்கு வேதத்தை இறக்கினோம்." (16 : 44) எனக் கூறினான்.

குர்ஆன் அரபிகளது மொழியில், அவர்களுக்குப் பரீட்சயமான இலக்கண விதிகளுக்கமைய, எதுகை மோனை, அணியிலக்கண முறைமைகளுடன் இறங்கியது. எனவே, ஸஹாபாக்களால் பெரும்பாலும் குர்ஆனின் மொழியையும் அது உணர்த்த வரும் கருத்துக்களையும் புரிய முடியுமாக இருந்தது. சில சொற்கள் மாத்திரமே அவர்களுக்குப் பரீட்சயமாக இருக்கவில்லை. அப்போது அவர்கள் நபி(ஸல்) அவர்களிடமோ சக தோழர்களிடமோ கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

குர்ஆனில் சுருக்கமாக குறிப்பிடப்பட்டவற்றுக்கு நபி (ஸல்) அவர்கள் தனது சுன்னாவின் மூலம் விரிவான விளக்கங்களைத் தந்தார்கள். தொழுகை, ஸகாத், ஹஜ் போன்றவற்றோடு தொடர்பான விரிவான சட்டத்திட்டங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இவ்வாறான விளக்கங்களை ஸஹாபாக்கள் மனதில் இருத்திக் கொண்டார்கள்.

குர்ஆன் வசனங்கள் இறங்கிய சந்தர்ப்ப சூழ்நிலைகள், நபர்கள், பின்னணிகள் என்பவற்றை ஸஹாபாக்கள் நேரடியாகக் கண்டமையால் பெரிய விளக்கங்களை வழங்கவேண்டிய தேவை இருக்கவில்லை. ஸஹாபாக்கள் குர்ஆனிய வசனங்களை தத்தமது அறிவுத் தரத்துக்கேற்ப விளங்கிய சந்தர்ப்பங்களுமுண்டு.

நபி(ஸல்) அவர்களது மறைவின் பின்னர் நிலை சற்று மாறியது. .இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் எல்லை விரிவடைந்து பல மத, மொழி, கலாசார பின்னணிகளைக் கொண்டவர்கள் இஸ்லாத்தில் நுழைந்தனர். அவர்களது தேவைகள் நிமித்தம் குர்ஆனிய வசனங்களுக்கு விளக்கங்களை வழங்கும் தேவையேற்பட்டது.

குறிப்பிட்ட ஒரு வசனத்திற்கு குர்ஆனின் ஏனைய வசனங்களிலோ நபி(ஸல்) அவர்களது சுன்னாவிலோ விளக்கம் கிடைக்காத போது ஸஹாபாக்கள் தமது சிந்தனையைப் பிரயோகித்து விளக்கமளித்தனர். குர்ஆனின் சொற்களுக்கான விளக்கங்களாகவோ நபி(ஸல்) அவர்களுடன் உறவாடியதனால் அவர்கள் பெற்ற அறிவின் அடியாகப் பெற்ற விளக்கங்களாகவோ அவை அமைந்தன.

ஸஹாபாக்களுக்கு மத்தியில் நான்கு கலீபாக்கள், இப்னு மஸ்ஊத், இப்னுஅப்பாஸ், உபை இப்னு க.்.ப், ஸைத் இப்னு தாபித், அபூமூஸா, ஆயிஷா(ரழி) போன்றவர்கள் இவ்வாறான விளக்கங்களை வழங்கிவந்தார்கள். இவர்கள் வழங்கிய விளக்கங்கள் கட்டாயமாக ஏற்கப்படவேண்டும் என்பது பெரும்பாலான அறிஞர்களது கருத்தாகும். குர்ஆனிய வசனங்கள் இறங்கிய சந்தர்ப்ப சூழ்நிலைகள் தொடர்பாக அந்த ஸஹாபாக்கள் நன்கு அறிந்திருந்தார்கள். மேலும், அவர்களது விளக்கங்கள் மனித சிந்தனையால் வெளியிடப்பட்டிருக்க முடியாது எனக் கருதத்தக்க மறைவான உலகுடன் தொடர்பான கருத்துக்களாக இருந்தால் அவை நபி(ஸல்) அவர்களால் கூறப்பட்டவையாக கருதப்பட வேண்டும் என்பது இந்த அறிஞர்களது வாதமாகும்.

ஆனால், அக்காலத்து விளக்கங்கள் நூலுருப்படுத்தப்படவில்லை. ஸஹாபாக்களுக்குப் பின்னர் வந்த தாபிஈன்களைப் பொறுத்தவரையில் அவர்கள் குர்ஆனிய வசனங்களுக்கு விளக்கமளிப்பதில் குர்ஆனிய வசனங்களிலும், நபியவர்கள் மற்றும் ஸஹாபாக்களது விளக்கங்களிலும் யூத கிறிஸ்தவர்களிட மிருந்து கிடைத்த செய்திகளிலும், தமது சொந்த அறிவிலும் தங்கியிருந்தார்கள்.

நபியவர்களும் ஸஹாபாக்களும் குர்ஆனின் எல்லா வசனங்களுக்கும் விளக்கமளிக்கவில்லை. சமகாலத்தவர்களுக்கு விளங்க முடியாத மயக்கமான வற்றுடன் அவர்களது விளக்கம் சுருங்கியது. காலம் செல்லச் செல்ல கருத்து மயக்கமும் அதிகரித்தது. எனவே, காலம் தூரமாகிய போதெல்லாம் விளக்கங்கள் அதிகரித்தன.

பல நகரங்களில் சென்று குடியேறிய ஸஹாபாக்கள் பல அறிவு வட்டங்களை ஏற்படுத்தியபோது அங்கு கற்க வந்த தாபிஈன்கள் குர்ஆனுக்கான வியாக்கியானங்களைக் கற்று பிறருக்கும் போதித்தனர். மக்காவில் போதனையில் ஈடுபட்ட இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களிடம் ஸயீத் இப்னு ஜுபைர், முஜாஹித், இக்ரிமா, தாவூஸ், அதா போன்றோரும், மதீனாவில், உபை இப்னு க.்.ப்(ரழி) அவர்களிடம் ஸைத் இப்னு அஸ்லம், அபுல் ஆலியா போன்றோரும் ஈராக்கில், இப்னு மஸ்ஊத்(ரழி) அவர்களிடம் அல்கமா, மஸ்ரூக், ஹஸனுல் பஸரீ, ஸ.்.பீ போன்றோரும் தப்ஸீர் விளக்கங்களைப் பெற்று தாபிஈன்களின் பெரும் விரிவுரையாளர்களாக மாறினார்கள் . இவர்கள் தமது சொந்த அறிவினடியாக வழங்கிய பல விளக்கங்களை நாம் பாரம்பரிய தப்ஸீர் கிரந்தங்களில் அதிகமாக காண முடியும். தாபிஈன்கள் வழங்கிய விளக்கங்களைப் பொறுத்தவரையில் அவர்கள் குறிப்பிட்ட ஒரு விளக்கத்தில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பின் அவற்றை ஏற்பது எமது கடமையாகும். அப்படியில்லாத போது அவற்றை ஓர் அறிஞனின் சாதாரண கருத்தாகவே கொள்ள வேண்டியிருக்கும்.

தப்ஸீர் கலையைப் பொறுத்தவரை உமையாக்களின் இறுதிக் காலப்பிரிவும் அப்பாஸியரது ஆரம்பப் பிரிவும் அது தனியான கலையாக உருவெடுத்த காலங்களாகும். ஹதீஸ்களைத் தொகுத்தவர்கள் ஹதீஸ் கிரந்தங்களில் "கிதாபுத் தப்ஸீர்" என்று தனியான ஒரு பகுதியை ஒதுக்கி அதில் சூராக்களுக்கும் தனியான வசனங்களுக்கும் நபியவர்களும் ஸஹாபாக்களும் தாபிஈன்களும் வழங்கிய விளக்கங்களைத் தொகுத்தார்கள்.

## தப்ஸீர் கிரந்தங்கள்

அடுத்தகட்டமாக குர்ஆனின் ஆரம்பம் முதல் இறுதி வரையுள்ள சூராக் களுக்கு ஒழுங்கு முறைப்படி வசனத்துக்கு வசனம் விளக்கம் சொல்லும் தனியான தப்ஸீர் கிரந்தங்கள் எழுதப்பட்டன. இமாம்களான இப்னுமாஜா (ஹி.273), தபரீ (ஹி.310), நைஸாபூரி (ஹி.318), இப்னு அபீஹாதீம் (ஹி. 327) போன்ற மேதைகள் இத்தகைய கிரந்தங்களை எழுதினார்கள். இவர்கள் தமக்குக் கிடைத்த விளக்கங்களை அறிவிப்பாளர் வரிசைகளோடு பதிந்தது மட்டுமன்றி, சில விளக்கங்களை விட வேறுசில விளக்கங்கள் பொருத்தமானவை எனக் கூறியதுடன் சில பிக்ஹ் சட்டங்களையும் வெளியிட்டனர். இலக்கண ரீதியான விளக்கங்களையும் சிலபோது வழங்கினார்கள்.

அதற்குப் பிறகு வந்த முபஸ்ஸிர்கள் தாம் சார்ந்த மத்ஹப், கொள்கைப் போக்கு, தமக்கு விருப்பமான துறைகள் போன்றவற்றுக்கேற்ப வியாக்கியானங்களை வழங்கலாயினர். இது அறிவிப்புக்களை வைத்து விளக்கமளிப்பது என்ற நிலையிலிருந்து விலகி, பகுத்தறிவையும் சார்பு நிலைகளையும் வைத்து விளக்கமளிப்பது என்ற நிலைக்கு குர்ஆனிய விளக்கத்துறையை உட்படுத்தியது.

அதேவேளை, நவீன காலத் தப்ஸீர்கள் தற்காலத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி, சமூகவியல் துறைசார் தப்ஸீர்களாக மிளிர்வதையும் தற்கால கொள்கைசார் படையெடுப்புக்களுக்கு பதிலடி கொடுத்து இஸ்லாத்தை ஒரு சம்பூரண வாழ்க்கைத் திட்டமாக முன்வைப்பதையும் காணமுடியும்.

**தப்ஸீர்கள் (மன்கூல், ம∴கூல், நவீன தப்ஸீர்கள்)**

குர்ஆன் வசனங்களுக்கு இரண்டு வகையில் விளக்கங்கள் வழங்கப்படுவதுண்டு:-

**1. தப்ஸீர் ம∴கூல் :-**

இது 'அத்தப்ஸீர் பிர் ர.்.யி' என்றும் கூறப்படும். குர்ஆனின் வசனங்களுக்கு விளக்கம் கூறுவதற்கு ஒரு முபஸ்ஸிர் தனது தனிப்பட்ட அறிவில் தங்கியிருந்தால் அவர் கூறும் விளக்கங்கள் 'தப்ஸீர் ம.்.கூல்' எனப்படும். இந்த வகையான அணுகுமுறை பெரும்பாலும் இஸ்லாமிய சமூகத்திலிருந்த வழிதவறிய குழுக்களால் கையாளப்பட்டது.

ஆனால், ஷரீஅத்தின் உயிரோட்டத்தை நன்கு விளங்கிய நிலையில், குர்ஆன், ஹதீஸ் வசனங்களது நிழலில் நின்று வழங்கப்படும் நிதானமான விளக்கங்களை இந்த வகையில் சேர்க்க முடியாது. தப்ஸீர் ம.்.கூல் செய்பவர் எவ்வித ஆதாரங்களுமில்லாமல் அவ்வாறு செய்தால் அது ஹராமானதாகும் என்பதே ஏற்கத்தக்க கருத்தாகும். குர்ஆனிய வசனங்களை ஒருவர் தனது சொந்தக் கருத்துக்கு ஏற்றாற்போல் விளக்குவது அல்லாஹ் கூறவந்த கருத்தை வேண்டுமென்றே மறைப்பதாக அமையும்.

இஸ்ராயீலிய்யாத்களை அடிப்படையாக வைத்தும், தஸவ்வுப் துறையில் நுழைக்கப்பட்ட அத்வைதம் போன்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும், வெளிக்கருத்துக்குப் புறம்பாக உட்கருத்தும் இருக்கிறது என்று கூறும் "தப்ஸீர் இஷாரீ" என்ற முறையிலும் விளக்கமளிப்பது தப்ஸீர் ம.்.கூல் வகையைச் சார்ந்ததாகும்.

“தப்ஸீர் ம.்.கூல்” வகையைச் சார்ந்தவையாக ஸமக்ஸரீ, ஜுபாஈ, பைளாவீ, இப்னு அரபி போன்றவர்களது வியாக்கியானங்கள் அமைந்தன.

**2. தப்ஸீர் மன்கூல்**

இதற்கு ‘அத்தப்ஸீர் பில் ம.்.தூர்’ என்றும் கூறப்படும். குர்ஆன் வசனங்களை குர்ஆனின் பிறவசனங்களது உதவியாலும், நபி(ஸல்) அவர்களது கருத்துக்களாலும் மற்றும் ஸஹாபாக்கள் தாபிஈன்களது கருத்துக்களது துணையோடும் விளக்கும் முறைமை தப்ஸீர் மன்கூல் எனப்படும். குர்ஆன் வசனங்களுக்கு இவ்வாறு கூறப்பட்ட விளக்கங்கள் பிற்காலப் பிரிவில் தொகுக்கப்பட்டன. ஒரே வசனத்திற்கு பல வித்தியாசமான விளக்கங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பெரிய அளவில் அவை முரண்பட்டவையாக இருப்பதில்லை. குர்ஆனுக்கான விளக்கத்தைப் பொறுத்தவரை இமாம் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களது பின்வரும் கூற்று எமது சிந்தனைக்குரியதாகும். தப்ஸீர் நான்கு வகைப்படும் :-

1. **அரபிகள் அறிந்த பகுதி** (அரபு மொழியில் அவர்களுக்கிருக்கும் பரீட்சயம் மற்றும் ஆழிய ஞானத்தினடியாக அவர்களால் மட்டுமே விளக்க முடிந்த சொற்களுக்கான உண்மையான பொருள்)

2. **தனக்குத் தெரியாது என எவருமே கூறித் தப்ப முடியாத பகுதி** (குர்ஆனை ஓதும் போது எவராலும் உடனுக்குடன் புரிந்து கொள்ள முடியுமான சட்டங்கள், ஏகத்துவம் என்பவற்றுடன் சம்பந்தமான பகுதி)

3. **அறிஞர்களால் மட்டுமே புரிய முடியுமான பகுதி** (ஆதாரங்கள் மற்றும் சான்றுகளினடியாக அவர்களால் புரிய முடியுமான - வெறும் சிந்தனையினால் பெறப்படாத சுருங்கக் கூறப்பட்டவற்றை விரித்துக் கூறுவது, பொதுவாகக் கூறப்பட்டவற்றை குறிப்பான இடங்களில் பிரயோகிப்பது போன்ற பணிகள்)

4. **அல்லாஹ் மட்டுமே அறிந்த பகுதி** (மறுமை, ஆத்மா போன்ற மறை உலகுடன் சம்பந்தப்பட்ட பகுதி)

எனவே, குர்ஆனில் மேற்படி நான்கு வகையான வசனங்களும் இருப்பதனால் “மன்கூல்” முறையில் தப்ஸீர் செய்வதே வழி தவறாதிருப்பதற்கான பாதுகாப்பான வழிமுறையாகும். “ம.்.கூல்” அடிப்படையில் தப்ஸீர் செய்யும் போது மன்கூலின் துணையுடன் இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படைகளுக்கு முரணில்லாத வகையில், காலத்தின் தேவைகளை கருத்திலெடுத்து அவ்வாறு செய்வதில் தவறுகிடையாது. சிலபோது அவ்வாறு செய்வது கடமையாகவும் மாறும்.

தப்ஸீர் ம.்.தூருக்கு உதாரணமாக இமாம்களான தபரீ, பகவீ, இப்னுகதீர், சுயூதீ, சவ்கானி போன்றவர்களது கிரந்தங்களைக் குறிப்பிட முடியும். எது எப்படியிருப்பினும் மன்கூல், ம.்.கூல் ஆகிய இரு வகையான தப்ஸீர் கிரந்தங்கள் குர்ஆனிய விளக்கங்களை மக்களுக்கு வழங்குவதில் மகத்தான பங்களிப்பைச் செய்து இஸ்லாமிய கலாஞானங்கள் என்ற துறையில் முதுசங்களாக அமைந்திருக்கின்றன.

**நவீன தப்ஸீர்கள்**

வரலாற்றில் தோன்றிய மன்கூல், ம.்.கூல் வகை தப்ஸீர்கள் மொழி, இலக்கணம், இலக்கியம், பிக்ஹ், மத்ஹப், தத்துவங்கள் போன்ற இன்னோரன்ன துறைகளை உள்ளடக்கிய பல விளக்கங்களை வழங்கின. ஆனால், பிற்கால அறிஞர்கள் புத்தாக்க முயற்சிகளைக் கைவிட்டு முன்சென்ற அறிஞர்களது கருத்துக்களைச் சுருக்கமாக விளங்குவது அல்லது அவற்றை அப்படியே நகர்த்துவது, அவர்களது கருத்துக்களிலிருந்து தமக்கு சரியாகப்பட்டதை தெரிவு செய்வது அல்லது பிடிக்காததை விமர்சிப்பது போன்றவற்றோடு தமது ஆக்கங்களை சுருக்கிக்கொண்டனர். இதனால் தப்ஸீர் துறை தேக்கமடைந்தது. முஸ்லிம் சமூகம் பின்னடைந்து குர்ஆன் வெறுமனே பரகத்துக்காக (இறை அருளை வேண்டி) ஓதப்படும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

ஆனால் கி.பி. 18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் இஸ்லாமிய சமூகத்தில் ஓர் உத்வேகம் உருவாகி ஆக்கமுயற்சிகள் அதிகமாக இடம்பெற்றன. கண்மூடித் தனமாக பின்பற்றும் நிலைக்கெதிராக முஸ்லிம் அறிஞர்களிற் பலர் வெகுண் டெழுந்தனர். மேற்கத்தேய, கீழைத்தேய சிந்தனைப் படையெடுப்பிலிருந்து முஸ்லிம் சமூகத்தை விடுவித்து இஸ்லாமிய மறுமலர்ச்சியொன்றை நோக்கி முஸ்லிம் சமூகத்தை அழைத்துச் சென்றனர். இதற்காக அவர்கள் தமது கவனத்தை குர்ஆன் வியாக்கியானத்தில் செலுத்தி குர்ஆனிலிருந்து ஆழமான விளக்கங்களை வெளிக்கொணர்ந்தனர். கால, இட, எல்லைகளைத் தாண்டி சகல இனங்களையும் பிரதேசங்களையும் சேர்ந்தவர்களுக்கும் வழிகாட்டும் தன்மை கொண்டதாக இருக்கும் குர்ஆன், பெரும் வழிகாட்டற் சுரங்கமாக, பொக்கிஷமாக இருப்பதனால் அவர்கள் காலத்தின் தேவைக்கேற்ப இப்பணியில் ஈடுபட்டார்கள்.

அந்தவகையில், எடுத்துக்காட்டாக சில தப்ஸீர்களை இங்கு குறிப்பிட முடியும். நவீன கால இஸ்லாமிய சிந்தனையின் முன்னோடியாகக் கருதப்படும் முஹம்மத் அப்துஹு தனது மாணவர்களுக்குச் செய்த பாடபோதனைகளைத் தொகுத்த அவரது மாணவர் ரஷீத் ரிளா அவற்றை ‘தப்ஸீருல் மனார்’ என்ற பெயரில் தனியான நூலாக வெளியிட்டார். முஸ்லிம் சமூகத்திலுள்ள பலர் ‘இஜ்திஹாத்’

வாயில் மூடப்பட்டுள்ளது என்று கூறி வெறும் யூகங்களுடனும், முற்பட்ட காலத்தவர்களது விளக்கங்களுடனும் குறுகிப் போய் இருந்தபோது முஸ்லிம் சமூகத்தை விடுதலை செய்யும் பணியை இந்த தப்ஸீர் ஊடாக அவர் செய்தார். அடுத்த பக்கத்தில் மேற்குலகத்தார் ஆத்மீகத்தை முழுக்கவும் தூக்கியெறிந்து விட்டு பகுத்தறிவை தெய்வமாக எடுத்து, சடவாத நாஸ்திக சிந்தனைகளில் மூழ்கியதையும் கண்டித்தார். பிளவுபட்டுள்ள முஸ்லிம் சமூகத்தை ஐக்கியப் படுத்துவது, மேலைத்தேயவாதிகளது கூற்றுக்களுக்குப் பதிலடி கொடுப்பது என்பதும் அவரது நோக்கமாக இருந்தது.

ஷெய்க் தன்தாவீ ஜவ்ஹரீ அவர்களால் எழுதப்பட்ட "அல்ஜவாஹிர் பீ தப்ஸீரில் குர்ஆன்" எனும் நவீன தப்ஸீர் பிரபஞ்சத்திலுள்ள அல்லாஹ்வின் படைப்பு நுணுக்கங்களுடன் சம்பந்தமான வசனங்களுக்கு விளக்கமளிப்பதற்கு அதிகமான முக்கியம் கொடுக்கிறது. குர்ஆன் கூறும் ஏனைய துறைகளைவிட குர்ஆனின் விஞ்ஞான அற்புதங்களுக்கு முஸ்லிம்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் குர்ஆனில் விஞ்ஞானத்துடன் சம்பந்தமான வசனங்கள் 750 ற்கும் அதிகமாக இருப்பதாகவும் அவர் கூறுகிறார். அவர் பல சந்தர்ப்பங்களில் குர்ஆனின் பிரதானமான இலக்கை "அது மனித வாழ்வுக்கு வழிகாட்ட வந்த வான்மறையன்றி விஞ்ஞான நூலல்ல" என்ற உண்மையை அசட்டை செய்திருப்பதாக விமர்சகர்கள் கருதுகின்றனர். எது எப்படியிருப்பினும் தப்ஸீர் வரலாற்றில் அது ஒரு திருப்புமுனையாகும்.

நவீன தப்ஸீர்களது வரிசையில் "தப்ஹீமுல் குர்ஆன்" உம் குறிப்பிடத்தக்க தாகும். மொழி ரீதியான ஆய்வுகளைத் தவிர்த்த நிலையில் நவீன சித்தாந்தங்களது போலிவேஷத்தை தோலுரித்துக்காட்டி, இஸ்லாம் மாத்திரமே உலகுக்கான பொருத்தமான, பூரணமான வாழ்க்கைத்திட்டம் என்ற கருத்தை குர்ஆனின் வழிகாட்டலில் நவீன பாணியில் மௌலானா மௌதூதி(ரஹ்) (1903 -1979) அவர்கள் இதனை எழுதியுள்ளார்.

ஸையித் குத்ப்(ரஹ்) அவர்களது "பீ ழிலாலில் குர்ஆன்" என்பது நவீன தப்ஸீர்களில் குறிப்பிடத்தக்க மற்றொன்றாகும். இங்கு இலக்கியவாதியான ஸையித் குத்பின் மொழிப் புலமையை அற்புதமான பாணியில் காணமுடியும். வாசகர்களது கவனத்தை ஈர்க்கும் வகையில் வழக்கமான தப்ஸீர்களது பாணியைத் தவிர்த்து முதலில் சூரா பற்றிய பொதுவான அறிமுகத்தை வழங்கி சூராவை பகுதிகளாகப் பிரித்து அவர் விளக்கும் முறை அலாதியானது. நவீன சித்தாந்தங்களது மாயையில் சிக்கி வாழ்வுக்கு அர்த்தத்தை தேடிக் கொண்டிருக்கும் மனித சமூகத்துக்கு இறைவன், பிரபஞ்சம், மனிதவாழ்வு என்பன தொடர்பாக எழும் அடிப்படை வினாக்களுக்கு தர்க்க ரீதியிலும், அறிவுபூர்வமாகவும் குர்ஆனின்

நிழலில் நின்று அவர் பதில்களை முன்வைக்கிறார். சட்டமியற்றும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரியது, இஸ்லாம் மனித வாழ்வின் சகல பகுதிகளுக்கும் வழிகாட்டக்கூடியது போன்ற கருத்துக்களை முதன்மைப்படுத் துகிறார். வசனங்களுக்கு விளக்கம் கூறுகையில் வியாக்கியானிகளுக்கு மத்தியில் நிலவும் கருத்து பேதங்களையோ இஸ்ராயீலிய்யாத்களையோ அவர் கையாள்வ தில்லை. இஸ்லாமிய வாழ்வு நெறியை குர்ஆனிய வெளிச்சத்தில் முன்வைப்பதே அவரது குறிக்கோளாகும்.

"அத்தப்ஸீருல் பயானீ" எனப்படும் தப்ஸீர் கலாநிதி ஆயிஷா அப்துர்ரஹ்மான் என்பவரால் எழுதப்பட்டதாகும். குர்ஆனின் மொழி ரீதியான அற்புதத்தை விளக்கவும் குர்ஆனை குர்ஆனால் விளக்கவும் அவர் மிகுந்த பிரயத்தனம் எடுத்திருக்கிறார். குர்ஆனின் ஒவ்வொரு எழுத்தும் அல்லது சொல்லும் அல்லாஹ்வால் மிகப்பொருத்தமாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை இந்த தப்ஸீரின் வாயிலாகப் புரியமுடியும். "கஷ்ஷாப்" எனப்படும் பழைய தப்ஸீர் ஒரு புதிய உருவில் வந்திருப்பது போன்ற ஒரு பிரமையை இந்த தப்ஸீர் தோற்றுவிக்கிறது.

"உம்ததுத்தப்ஸீர்" என்ற சுருக்கமான பெயரிலும் "முக்தஸரு தப்ஸீரில் குர்ஆனில் அழீம்" என்ற விரிந்த தலைப்பை இட்டும் அஹ்மத் முஹம்மத் ஷாகிர் எனும் ஹதீஸ் துறை திறனாய்வாளர் ஒரு தப்ஸீரை எழுதியுள்ளார். இமாம் இப்னு கதீர் எழுதிய தப்ஸீரின் சுருக்கமாக இது அமைந்துள்ளது. அதாவது, இப்னு கதீரின் தப்ஸீரில் ஒரே கருத்து பல தடவை வந்திருப்பின் அது இங்கு தவிர்க்கப்பட்டிருக்கிறது. இஸ்ராயீலிய்யாத்கள் முற்றாக நீக்கப்பட்டுள்ளன. தத்துவார்த்த, பிக்ஹ் ரீதியான மொழி ஆய்வுகளும் இடம்பெறவில்லை. இமாம் இப்னு கதீர் அறிவிப்பாளர் வரிசைகளைக் குறிப்பிடாதுவிட்ட கருத்துக்களுக்கு அறிவிப்பாளர் வரிசைகள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

இவை தவிர ஒரு குழுவினரது ஆக்கமான 'அல்முன்தஹப்' எனும் தப்ஸீர் முதன் முதலில் குர்ஆன் கற்பவர்களுக்கு பொருத்தமான இலகு நடையில் வியாக்கியானங்கள் கொண்டதாக அமைந்துள்ளது. அதில் நவீன விஞ்ஞான விளக்கங்களையும் அவ்வப்போது காணமுடிகிறது.

அலீ அஸ்ஸாபூனி என்பவரால் எழுதப்பட்ட 'ஸப்வதுத் தபாஸிர்' எனும் தப்ஸீர், 'ம:.கூல்', 'மன்கூல்' தப்ஸீர்கள் மற்றும் நவீன தப்ஸீர்களது தொகுப்பாக உள்ளது.

## குர்ஆனுடனான தொடர்பு

### குர்ஆனை பயன்படுத்தும் முறை

குர்ஆனை பலமுறைகளில் கையாள வேண்டியது எமது கடமையாகும். குர்ஆனுக்கான எமது கடமைகளாக அவை அமையும்:-

**1. செவிமடுப்பது (இஸ்திமாஉ)**

குர்ஆன் வெறும் அட்சரங்களைக் கொண்டமைந்த கண்ணால் பார்த்து மட்டும் வாசிக்கும் நூலல்ல. அதற்கென ஓர் ஒலி வடிவமும் உள்ளது. அந்தவகையில், இஸ்லாமிய வரலாற்றில் "தஜ்வீத்" எனப்படும் ஒரு தனியான கலை வளர்ந்துள்ளது. குர்ஆனின் எழுத்துக்களை தனித்தனியாக உச்சரிக்கும் போதும் சொற்களை சேர்த்து உச்சரிக்கும் போதும் உள்ளத்தில் அலாதியான ஓர் அதிர்வும் தாக்கமும் ஏற்படும். அது குர்ஆனின் ஓசை நயமாகும். எனவே, பிறர் ஓதும்போது அதற்கு செவிசாய்ப்பது என்பது நபி(ஸல்) அவர்கள் காலம் முதல் பின்பற்றப்படும் ஒரு மரபாகும். நபியவர்கள் ஸஹாபாக்களில் அழகிய குரலில் ஓதக்கூடியவர்களை அழைத்து தனக்குக் குர்ஆனை ஓதிக் காட்டும்படி கூறுவார்கள். குர்ஆனில் அல்லாஹ் "குர்ஆன் ஓதப்பட்டால் நீங்கள் அதற்கு செவி தாழ்த்துங்கள்" (அ.்.ராப் -204) என்றும் "தூதுவருக்கு இறக்கப்பட்டவற்றை செவியேற்றால் அவர்களது கண்கள் கண்ணீரால் நிரம்பி வழியும்" என்றும் கூறுகிறான்.

எனவே, குர்ஆனை நன்கு ஓதத்தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் நல்லதொனியில், தஜ்வீத் சட்டங்களைப்பேணி, பயபக்தியுடன் ஓதக்கூடிய காரீக்கள் - நேரடியாகவோ நவீன சாதனங்கள் மூலமாகவோ - ஓதும்போது கவனமாக, அக்கறையோடு செவிமடுக்கப் பழக வேண்டும். இது அற்புதமான தாக்கத்தை தருவதோடு ஆத்ம பலத்தையும் உள நிம்மதியையும் அறிவு ஞானத்தையும் தரும்.

**2. ஓதுவது (திலாவத்)**

குர்ஆனுடனான எமது உறவின் பிரதான படித்தரம் அதனை அடிக்கடி ஓதிவருவதாகும். குர்ஆனின் ஓர் எழுத்து ஓதப்பட்டால் ஒரு நன்மை கிட்டும். மறுமையில் குர்ஆனை ஓதுபவர்களுக்காக அது சிபாரிசு செய்யும். நபி(ஸல்) அவர்களும் தோழர்களும் தொழுகையிலும் ஏனைய சந்தர்ப்பங்களிலும்

அதிகமதிகம் குர்ஆனை ஓதியிருக்கிறார்கள். திக்ர்களில் அதிசிறந்த திக்ராக அது கருதப்படுகிறது. குர்ஆனை ஓதுவதால் ஷைத்தான்களது ஊசலாட்டங் களிலிருந்து விடுதலையடைய முடியும் என சில நபிமொழிகளில் காணமுடிகிறது. நிச்சயமாக உளநோய்களுக்கான அருமருந்தாக திலாவத்துல் குர்ஆன் அமையும். "குர்ஆனிலிருந்து நாம் விசுவாசிகளுக்கான நிவாரணியையும் அருளையும் இறக்கி வைக்கிறோம்."(17 : 82) "மக்களே உங்களது இரட்சகனிடமிருந்து உங்களுக்கு உபதேசமும் உள்ளங்களிலுள்ளவற்றுக்கு நிவாரணமும் வந்துள்ளது." (10 : 57) என அல்லாஹ் கூறுகிறான்.

### 3. மனனமிடுவது (ஹிப்ள்)

குர்ஆனுடனான எமது உறவை மென்மேலும் பலப்படுத்த வேண்டுமாயின் அதனை முழுமையாகவோ அல்லது சிறுபகுதியாகவோ மனனமிட வேண்டும். "குர்ஆனின் சிறுபகுதியாவது மனனமில்லாத உள்ளம் பாழடைந்த வீட்டுக்கு நிகரானது" (திர்மிதீ) என நபி(ஸல்) கூறினார்கள். ஸஹாபாக்களில் பலர் குர்ஆனை முழுமையாக மனனமிட்டிருந்தனர். அவர்கள் "குர்ராக்கள்" என அழைக்கப்பட்டனர். மனனத்தின் மூலமும் குர்ஆன் பாதுகாக்கப்பட்டது. தற்போதும் அவ்வாறே பாதுகாக்கப்படுகிறது. நபி(ஸல்) அவர்கள் ஹாபிள்களுக்கு பல சந்தர்ப்பங்களில் முன்னுரிமை கொடுத்தார்கள்.

### 4. கற்பது (திராஸா)

குர்ஆன் வெறுமனே ஓதுவதற்கும் மனனமிடுவதற்கு மட்டும் வந்ததல்ல. அப்படியாயின் அது இறக்கப்பட்டதன் பிரதான இலக்காகிய வாழ்வின் வழிகாட்டியாக அமையவேண்டும் என்பது சாத்தியப்படமாட்டாது. எனவே, குர்ஆனை கற்காமல், அது பற்றி ஆழமாக சிந்திக்காமல் இருப்பவர்களை அல்லாஹ் கடுமையாகக் கண்டிக்கிறான். "அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது இவர்களுடைய உள்ளங்கள் மீது பூட்டுக்கள் இடப்பட்டுள்ளதா?" (47 : 24) "அவர்கள் அதன் வசனங்களை நுணுகி ஆராயவேண்டும் என்பதற்காகவும் சிந்தனையுள்ளவர்கள் ஞாபகப்படுத்திக் கொள்வதற்காகவுமே நாம் அதனை இறக்கினோம். அது பாக்கியமுள்ளதாகும்." (38 : 29) "உங்களில் சிறந்தவர் குர்ஆனை தானும் கற்று அதனை பிறருக்கும் கற்றுக்கொடுப்பவராவார்"(புஹாரி) என நபி(ஸல்) கூறினார்கள். எனவே, குர்ஆனை நுணுகி ஆராய்கின்றபோது அது உள்ளத்தில் விரிவையும் ஆழிய ஞானங்களையும் தரும். இது அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்லும்.

**5. விளங்குவது (பஹ்ம்)**

விளங்குவது என்பது கற்றல் என்ற பகுதியோடு மிகவுமே நெருக்கமானதாகும். வெறும் ஆய்வு, ஆராய்ச்சி என்ற நிலையைக் கடந்து கற்றதை வைத்து தெளிந்த விளக்கங்களுக்கு வருவது கடமையாகும். இஸ்லாத்தின் பல பகுதிகளை விரிவாக விளங்கி வாழ்வு பற்றிய இஸ்லாமிய கோட்பாட்டை தெளிவாக வகுத்துக் கொள்ளவேண்டும். இஸ்லாம் மார்க்கமானது நம்பிக்கைக் கோட்பாடுகள் (அகீதா), வழிபாடுகள் (இபாதா), பண்பாட்டு விழுமியங்கள் (அக்லாக்), மனிதவாழ்வின் அன்றாட வாழ்வுடன் தொடர்பான சட்டதிட்டங்கள் (அஹ்காம்) போன்றவற்றைக் கொண்டது என்ற முடிவைப் பெற வேண்டும். ஏனைய மதங்களின் சித்தாந்தங்களிலிருந்து அது வேறுபடும் விதத்தை ஒப்பிட்டுப் பார்த்து துல்லியமாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

**6. நடைமுறைப்படுத்துவது (அமல்)**

குர்ஆனின் முக்கிய இலக்கு அதன் போதனைகள் மனித வாழ்வில் நடைமுறைக்கு வரவேண்டும் என்பதாகும். குர்ஆன் வெறும் சித்தாந்தமோ அறிவுக்கு விருந்தாக அமையும் தத்துவச் சர்ச்சையோ அல்ல. அது யதார்த்தமான சமூக அமைப்பை வேண்டி நிற்கிறது. மனித உள்ளங்கள் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு, அரச முறைமை, சர்வதேச உறவுகள் போன்ற எல்லா மட்டங்களிலும் குர்ஆனிய போதனைகள் அமுலாக வேண்டும் என்பது அல்லாஹ்வின் எதிர்பார்ப்பாகும். “இது நாம் இறக்கிய பாக்கியமுள்ள ஒரு வேத நூலாகும். ஆகவே, இதனை நீங்கள் பின்பற்றுங்கள்.” (6 : 155) “யார் அல்லாஹ் இறக்கியவற்றைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ அவர்கள் தான் நிராகரிப்பாளர்களாவர்.” (5 : 44) என அல்லாஹ் கூறுகிறான். மனிதர்களால் இயற்றப்பட்ட சட்டங்களை நிராகரித்து குர்ஆனிய சட்டங்களை அமுலாக்குவதன் அவசியத்தை இதன் மூலம் புரிய முடிகிறது.

**7. குர்ஆனிய பிரசாரம் (தப்லீக்)**

ஓதுதல், விளங்குதல், நடைமுறைப்படுத்தல் என்ற நிலைகளுடன் சுருக்கிக்கொள்ளாமல் குர்ஆனை பிறருக்கும் போதிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். குர்ஆனை ஓதக் கற்றுக் கொடுப்பது, அதன் தஜ்வீத் சட்டங்களை போதிப்பது, அதன் வியாக்கியானங்களை சமூகத்தில் முன்வைப்பது, அது தரும் வாழ்வு முறையை உலகில் ஸ்தாபிப்பது போன்றன குர்ஆனிய பிரசாரம் என்ற பகுதியில் அடங்கும்

## அல்குர்ஆனின் இலக்குகள்

நாம் குர்ஆனை ஆராய்ந்து பார்த்தால் அது ஏழு வகையான இலக்குகளைக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. எனவே, அதன் வசனங்கள் அனைத்தும் அந்த ஏழு இலக்குகளை மையமாக வைத்து சுழன்று வருகின்றன எனக் கூறலாம்.

1. நம்பிக்கைக் கோட்பாடுகளை திருத்தியமைப்பது
2. மனித கௌரவத்தை வலியுறுத்துவது
3. அல்லாஹ்வை மட்டும் இபாதத் செய்யவும் அவனையே அஞ்சுமாறும் தூண்டுவது
4. மனித உள்ளத்தை பரிசுத்தப்படுத்துவது
5. குடும்ப அமைப்பை உருவாக்கி, பெண்ணுக்கு நீதி வழங்குவது
6. மனித சமூகத்துக்கு சான்று பகரும் ஓர் உம்மத்தை கட்டியெழுப்புவது
7. பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொள்ளும் ஓர் உலகத்துக்கான அழைப்பை விடுப்பது

### 01. நம்பிக்கைக் கோட்பாடுகளை திருத்தியமைப்பது

இறைவன், மனித சமூகத்துக்கான அவனது தூதுத்துவம், மக்களது செயல்களுக்காக வழங்கப்படும் கூலி என்பன தொடர்பாக ஏற்கனவே மக்கள் பல பிழையான நம்பிக்கைக் கோட்பாடுகளையும் கற்பிதங்களையும் கொண்டிருந் தார்கள். அவை அவர்களால் உருவாக்கப்பட்டவையாகவோ மூதாதையர்களிட மிருந்து அவர்கள் பெற்றவையாகவோ இருந்தன. அவற்றிலிருந்த பிழைகளை சுட்டிக் காட்டி தூய அகீதாவை குர்ஆன் நிறுவியது. அதன் விபரம் வருமாறு:

#### அ. ஏகத்துவத்தின் அடித்தளங்களை பலப்படுத்துவது

"அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்கமாட்டான். அது தவிரவுள்ளவற்றை தான் நாடுபவர்களுக்கு மன்னிப்பான்". (4 : 48)

"அல்லாஹ்வுக்கு மட்டும் இபாதத் செய்யுங்கள். தாகூத்களை (பிற தெய்வங்களை) தவிர்ந்து கொள்ளுங்கள் என்று பிரசாரம் செய்யும்படி கூறியே ஒவ்வொரு தூதரையும் ஒவ்வொரு சமூகத்திலும் நாம் அனுப்பினோம்." (6 : 36)

**ஆ. நபித்துவம்-தூது பற்றிய நம்பிக்கையை சீர்படுத்தல்**

நுபுவத்தின் அவசியம் (2 : 213), நபிமார்களது பணிகள் (4 : 165), தூதர்கள் பற்றிய சந்தேகங்களைக் களைவது (14 : 10), (17 : 95) தூதர்களை பொய்ப்பித்தவர்களும் மற்றவர்களும் சந்திக்கும் வித்தியாசமான முடிவுகள் பற்றி இப்பகுதியில் பேசப்படுகிறது.

**இ. மறுமை நாள் கூலிகள் பற்றிய நம்பிக்கையை பலப்படுத்துவது**

மனிதர்கள் மீள எழுப்பப்படுவது சாத்தியமே, இதற்கான ஆற்றலை அல்லாஹ் பெற்றுள்ளான். (22 : 05), வானங்கள் பூமியைப் படைத்தவனுக்கு மீள எழுப்ப சக்தியுண்டு (46 : 33), கூலி கொடுப்பதற்குப் பின்னாலுள்ள அல்லாஹ்வின் நோக்கங்கள் (38 : 27), விசுவாசிகளும் நிராகரிப்போரும் பெறும் கூலிகள். சிலைகள் மறுமை நாளில் சிபாரிசுக்காக முன்வர மாட்டாது போன்ற கருத்துக்களை குர்ஆன் பல்வேறு வகையாக தெளிவுப்படுத்துகிறது.

**02. மனித கௌரவத்தையும் உரிமைகளையும் வலியுறுத்துவது**

உலகில் படைக்கப்பட்ட சிருஷ்டிகளுள் மனிதன் சிரேஷ்டமானவன். காரணம், அவனை அல்லாஹ் தனது பிரதிநிதியாகப் படைத்து, விஷேட உயிரை ஊதி, உலகிலுள்ள அனைத்தையும் அவனுக்கு வசப்படுத்தியுள்ளான். ஆனால், உலகிலுள்ள கொள்கைகளும் சித்தாந்தங்களும் மனிதனை மிருகத்துக்கு சமனாக்கி வைத்து அவனது உரிமைகளைப் பறித்துள்ளன. வரலாறு நெடுகிலும் இது நடந்துள்ளது. எனவே, அவனுக்கான கௌரவத்தை மீட்டிக்கொடுத்து அவனுக்கான பிறப்புரிமைகளை பாதுகாத்துக் கொடுப்பது அல்லாஹ்வின் இலக்காகும். அது பின்வரும் உபதலைப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அ. மனிதனது அந்தஸ்த்தை வலியுறுத்துவது**

- “நாம் ஆதமின் பிள்ளைகளை கண்ணியப்படுத்தினோம்” (17 : 70)
- “வானங்கள் பூமியிலுள்ளவற்றை அவன் உங்களுக்கு வசப் படுத்தினான்.” (31 : 20)
- “நிச்சயமாக நான் பூமியில் எனது பிரதிநிதியை அமைக்கப் போகிறேன். (2 : 30)
- “அல்லாஹ் தனது அடியார்களுக்கு வெளிப்படுத்திய அலங்காரங் களை தடைசெய்தவர் யார்?” (7 : 31)

**ஆ. மனித உரிமைகளை வலியுறுத்துவது**

(1) ஆய்வு செய்வதற்கும் சிந்திப்பதற்குமான உரிமையை வழங்குவது: “வானங்களிலும் பூமியிலுமுள்ளவற்றை பாருங்கள் என்று அவர் களுக்குக் கூறுவீராக” (10 : 6)

(2) நம்பிக்கை மற்றும் மத சுதந்திரம் “மார்க்கத்தில் பலவந்தமில்லை” (2 : 256) “அவர்கள் விசுவாசிகளாக மாறுவதற்காக நீர் அவர்களை பலாத்காரப்படுத்துகிறீரா?” (10 : 99)

(3) நல்லவற்றை அனுபவிப்பதற்கான உரிமை :- “அல்லாஹ் தனது அடியார்களுக்கு அளித்திருக்கும் அலங்காரத்தையும் உணவு வகைகளில் உள்ள நல்லவைகளையும் தடுப்பவர் யார்?” (7 : 32)

நீதி, சுயகௌரவம், மானம், மரியாதை, உயிர், பொருள், இல்லிடம், தொழில் செய்தல், குழந்தை பெறல், திருமணம் செய்தல், வாழ்வாதாரங்கள் என்பவற்றை பாதுகாத்துக் கொடுப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் உத்தரவாதங்களை குர்ஆன் கொண்டுள்ளது.

இ. **பலவீனர்களது உரிமைகளை வலியுறுத்துவது:**
அநாதைகள், ஏழைகள், பரம ஏழைகள், வழிப்போக்கர்கள் பலவீனப்படுத்தப்பட்டவர்கள் போன்றோரது உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்கள் தலைநிமிர்ந்து வாழ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (2 : 215, 4 : 74, 107 : 1-7)

## 03. அல்லாஹ்வுக்கு மட்டும் இபாதத் செய்யவும் அவனையே அஞ்சவும் தூண்டுவது

உலகில் மனிதர்கள் பல்தெய்வ வணக்கத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர். அல்லாஹ் அல்லாத தெய்வங்களுக்குப் பயந்து அவற்றுக்கு நேர்ச்சைகளை வைத்து, உதவியும் தேடினர். இந்நிலையை மாற்றியமைப்பது குர்ஆனின் இலக்குகளில் ஒன்றாகும்.

அல்லாஹ்வின் பண்புகள் மற்றும் அவனது செயல்கள் பற்றி குர்ஆன் விரிவாகப் பேசியதுடன் மனிதர்கள் இறைவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள், அவற்றை நிறைவேற்றுவதால் மனிதன் அடையும் பயன்கள், மறுப்பதனாலோ இணைவைப்பதனாலோ ஏற்படும் பாதக விளைவுகள் போன்றன பற்றியும் பேசியது. எல்லா வகையான குறைபாடுகளிலிருந்தும் அல்லாஹ் பரிசுத்தமானவன் என்ற கருத்தையும் வலியுறுத்துகிறது. (87:1-5, 4:1)

**04. மனித உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துவது :-**

மனித செயற்பாடுகளின் பிறப்பிடமாக உள்ளம் அமைந்திருப்பதால் அதனை பரிசுத்தப்படுத்துவதற்கும் நெறிப்படுத்துவதற்கும் குர்ஆன் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. நபி(ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டதன் நோக்கங்களில் ஒன்றாக "தஸ்கியதுன் நப்ஸ்" உள்ளது. (3 : 164) "ஆத்மாவின் மீதும் அதனைச் செவ்வையாக்கியவன் மீதும் சத்தியமாக" (91 : 6, 7) "எவர் ஆத்மாவாகிய அதை பரிசுத்தமாக்கிக் கொண்டாரோ அவர் திட்டமாக வெற்றியடைந்துவிட்டார்." (91 : 8-10)

**05. குடும்ப அமைப்பை உருவாக்குவதும் பெண்ணுக்கு நீதி வழங்குவதும் :-**

(அ) குடும்ப அமைப்பே மனநிறைவான வாழ்வுக்கு வழிவகுக்கும் என வலியுறுத்துவது (30 : 21)

(ஆ) நல்லதொரு பரம்பரையை உருவாக்குவது (25 : 74)

(இ) திருமணத்தின் போது மார்க்கத்துக்கு முன்னுரிமை (24 : 26)

(ஈ) பெண்ணுக்கு நீதி பெற்றுக் கொடுத்து ஜாஹிலிய்ய அநீதிகளிலிருந்து விடுதலை செய்வது "அவர்களுக்கு கடமைகள் போன்றே உரிமைகளும் உண்டு" (2 : 228), தாய்க்கு முன்னுரிமை (46 : 15) மனைவியருடனான நல்லுறவு (4 : 19) பெண்பிள்ளைகளை உயிருடன் புதைப்பது தடை (6 : 151, (17 : 31) போன்றன இதில் அடங்கும்.

**06. மனித சமூகத்திற்கு சான்றுபகரும் ஓர் உம்மத்தைக் கட்டியெழுப்புவது :-**

நபி(ஸல்) அவர்கள் உலகத்தாருக்கான அருட்கொடையாகவும் (21 : 107) அவர்களது தூது சகலருக்குமானதாகவும் (34 : 28) அமைந்திருப்பதால் அதனை உலகெங்கும் பரவச் செய்வது முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பாகும். அப்பணியைச் செய்யும் போதுதான் அது சிறந்த சமுதாயமாக மாறும். (3 : 110) நடுநிலைப் பண்பு, அல்லாஹ்வுடன் நெருங்கிய உறவு, இஸ்லாமியப் பிரசார மனநிலை, ஐக்கியம் போன்ற பண்புகளைக் கொண்டதாக, அந்த உம்மத் இருக்கும். இத்தகைய பண்புகள் கொண்ட ஓர் சமூக அமைப்பை குர்ஆன் உருவாக்க விரும்புகிறது.

**07. பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொள்ளும் ஓர் உலகத்துக்கான அழைப்பைவிடுப்பது :-**

அ. **இஸ்லாத்தின் தூது சர்வதேச தன்மை கொண்டது.** அது இன, மத, குல, மொழி, பிரதேச எல்லைகளுக்குள் குறுகிவிடமாட்டாது. சகலரையும் அரவணைக்கும் தன்மை கொண்டது. அந்த வகையில் மனிதன் சக மனிதனுக்கு அடிமையாவதிலிருந்து அவனை விடுவிப்பது குர்ஆனின் இலக்காகும். (9 : 31), (3 : 64)

ஆ. **மனித சகோதரத்துவமும் சமத்துவமும்**:- குர்ஆன் சகலரையும் "மனிதர்கள்" என்ற சொல்லால் அழைப்பதுடன் நபிமார்கள் தாம் அழைப்பு விடுத்த தமது சமூகத்தைச் சேர்ந்தவர்களை சகோதரர்களாகவே கருதினார்கள். (49 : 13), (26 : 106, 124, 142)

இ. **சகலருக்கும் நீதி வழங்குவது** :- உலக மாந்தர் அனைவருக்கும் நீதிவழங்கவே நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள். எதிரிகளுடனும் நீதியாக நடக்கும்படியே குர்ஆன் பணிக்கிறது. (4 : 135), (5 : 2)

ஈ. **சர்வதேச சமாதானம்** : உலகில் வாழும் அனைவரும் சமாதானமாக வாழவேண்டும் என்பதே ஜிஹாதின் நோக்கங்களில் ஒன்றாகும். (22 : 40), (2 : 190), (4 : 75)

உ. **முஸ்லிம் அல்லாதவர்களுடன் சகிப்புத்தன்மை** :- யூத கிறிஸ்தவர்களாயினும் வேற்று மதத்தவர்களாயினும் அவர்கள் முஸ்லிம்களுடன் சமாதானமாக வாழ விருப்பம் தெரிவித்தால் அவர்களுடன் சமாதான சகவாழ்வை மேற்கொள்வது கடமையாகும். (60 : 8, 9)

மேற்கூறப்பட்ட ஏழு இலக்குகளையும் அடையும் வகையில் தான் குர்ஆனின் அனைத்து வசனங்களும் அல்லாஹ்வால் இறக்கியருளப்பட்டன.

## அல்குர்ஆனைக் கற்கும் முறை

குர்ஆன் மனித சமூகத்தின் சுபீட்சமான ஈருலக வெற்றிக்காக அல்லாஹ் இறக்கியருளிய வேதநூலாகும். அந்த வகையில், உலகிலுள்ள எல்லா நூல்களையும் விட அது வித்தியாசமானது என்பது போலவே அதனை ஓர் உயர்ந்த கண்ணியமான இறைவனது பேச்சு என்ற வகையில் தனித்துவமான முறையிலே அணுகவேண்டும்.



10-CM14796

01. குர்ஆனை அணுக முன்னர் ஏற்கனவே இறைவன், பிரபஞ்சம், மனிதவாழ்வு, தொடர்பாக எமது மனதில் பதிந்துள்ள வேற்று மதங்கள் கொள்கைகளது கருத்துக்களை ஒரு புறம் வைத்துவிட்டு திறந்த உள்ளத்தோடு, அல்லாஹ்வின் வழிகாட்டலை கற்கப்போகிறேன் என்ற எண்ணத்தோடு, எமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று கற்க வேண்டும். இதனை அல்லாஹ் “அந்த வேதம் அதில் சந்தேகமென்பது கிடையாது. அது பயபக்தியுள்ளவர்களுக்கு வழிகாட்டியாக உள்ளது.” (2 : 2) என்கிறான். பயபக்தி என்பது இறையச்சமாகும். இறைவன் மீது நல்லபிப்பிராயம் கொண்டு, அவனது மேலாண்மையை, எல்லையற்ற அறிவை ஆழமாக விசுவாசம் கொண்டுதான் அதனுள் நுழைய வேண்டும்.

02. குர்ஆனை கற்பதன் நோக்கம் தூய்மையாக இருத்தல் அவசியமாகும். பிறருடன் தர்க்கம் புரியவேண்டும் என்ற குறிக்கோளோடு அல்லது வெறுமனே அறிவைப் பெருக்க வேண்டும், அல்லது ஆய்வுசெய்ய வேண்டும் எனும் நோக்குடன் குர்ஆனை கற்க ஆரம்பிக்கக் கூடாது. எனது வாழ்வுக்கான ஒளி விளக்காக அதனை எடுப்பதற்காக, என்னைப் படைத்த இறைவனது விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொள்வதற்காக அதனை கற்கிறேன் என இதயத்தின் ஆழத்தால் நினைக்க வேண்டும். அப்போது எம்மையறியாமலேயே பெரும் அறிவு ஞானக் களஞ்சியங் களை எமக்காக அவன் திறந்து தருவான்.

03. ஏனைய நூல்களை விட குர்ஆனும் அதன் உள்ளடக்கமும் அது தொகுக்கப்பட்டுள்ள விதமும் வித்தியாசப்படுவதை அதனை அணுக முன்னர் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தலைப்புவாரியாக அதன் அத்தியாயங்கள் பிரிக்கப்படவில்லை. ஒரே அத்தியாயத்தில் பல தலைப்புக்களோடு தொடர்பான வசனங்கள் அடங்கப்பட்டுள்ளன. அங்கு நாஸிக், மன்ஸூக், முதஷாபிஹாத், மக்கீ, மதனீ போன்றவற்றுடன் சம்பந்தமான வசனங்கள் இருப்பது பற்றி முன்கூட்டியே தெரிந்திருப்பது நல்லது. குர்ஆனின் மொழிபெயர்ப்புக்கள் ஊடாக அதனை விளங்க முயற்சிப்பதில் தவறில்லை. இருப்பினும் குறிப்பிட்ட ஓர் அத்தியாயம் அல்லது வசனம் இறக்கப்பட்ட சந்தர்ப்பம், சூழல், அந்த வசனத்துக்கு விளக்கமாக வந்த வேறு வசனங்கள், “ம∴கூல்”, “மன்கூல்” விளக்கங்கள் என்பவற்றைத் தாங்கிய நூல்களை அல்லது தப்ஸீர்களை வாசித்துக் கொள்வது மிகப்பொருத்தமான வழிகாட்டலைப் பெற ஏதுவாக அமையும்.

# அஸ்ஸுன்னா

**பத விளக்கமும் பிரயோக விளக்கமும்**

அஸ்ஸுன்னா என்ற சொல் அறபு மொழியில் வழி, வாழ்க்கை முறை போன்ற கருத்துக்களில் பயன்படுத்தப்படுகின்றது. நல்ல, கெட்ட இருவகையான வாழ்க்கை முறைகளுக்கும், அல்லது வழிகளுக்கும் இச்சொல்லே பிரயோகிக்கப்படுகிறது. நபி(ஸல்) பின்வருமாறு கூறினார்கள்:- "யார் நல்லதொரு வழிமுறையை காட்டி விடுகிறாரோ அவருக்கு அதன் நன்மையும், மறுமை வரை அதனை செய்து கொண்டிருப்பவர்களது நன்மைகளும் கிடைக்கின்றன. யார் தீய வழிமுறை யொன்றை காட்டிவிடுகிறாரோ அவருக்கு அதன் பாவமும், மறுமை வரை அதனை செய்து கொண்டிருப்பவர்களது பாவங்களும் கிடைக்கின்றன." (முஸ்லிம்)

லிஸானுல் அறப் என்ற அறபு அகராதியில், அஸ்ஸுன்னா என்ற சொல் நல்ல அல்லது கெட்ட வாழ்க்கை முறையைச் சுட்டிக்காட்டுகிறது என விளக்கம் கொடுக்கப்படுகிறது.

இச்சொல்லிற்கான பிரயோக விளக்கம், அறிஞர்களின் வித்தியாசப்பட்ட பார்வைகளுக்கும் நோக்கங்களுக்குமேற்ப வேறுபட்டமைகின்றது.

- ஹதீஸ் துறை அறிஞர்கள் நபியவர்களது சொல், செயல், அங்கீகாரம், உடலமைப்பு, பண்பாடுகள் நுபுவ்வத்துக்கு முன், பின் இரு காலங்களையும் இது உள்ளடக்குகின்றது என வரைவிலக்கணப்படுத்துகின்றனர்.

- உஸுலுல் பிக்ஹ் துறை அறிஞர்கள் ஸுன்னா என்பது நபியவர்களுடைய சொல், செயல், அங்கீகாரம் என விளக்குகின்றனர். நபியவர்களுடைய சொற்களுக்கு உதாரணமாக "செயல்களுக்கான கூலி நிய்யத்தைப் பொறுத்தே அமைகின்றது." (புஹாரி, முஸ்லிம்) என்ற ஹதீஸையும் செயல்களுக்கான உதாரணமாக நபியவர்களுடைய தொழுகை, ஹஜ் போன்ற வணக்க வழிபாடுகளையும் காட்டுகின்றனர். நபியவர்களுடைய அங்கீகாரத்தைப் பொறுத்தவரை இருவகையாக அமையலாம். ஸஹாபாக் களின் செயல்களை அவதானித்துவிட்டு நபியவர்கள் அமைதியாக இருந்துவிடுவது அதில் ஒன்றாகும். உதராணமாக, பனூகுறைளா சம்பவம் ஸஹாபாக்களில் சிலர் அஸர் தொழுகையை பனூ குறைளாவை அடைய முன்னரே தொழுது முடிக்க, ஏனையோர் அஸர் தொழுகையை பிற்படுத்தி பனூ குறைளாவிலே தொழுதார்கள். நபியவர்களிடம் விடயம் எத்திவைக்கப்பட்ட போது இரு நிலைப்பாடுகளையும் அங்கீகரித்தார்கள்.

அடுத்தது ஸஹாபாக்களுடைய செயல்களைக் கண்டிக்காது உறுதிப்படுத்துவது. உதாரணமாக, ஒருமுறை காலித் இப்னுல் வலீத்(ரழி) உடும்பு இறைச்சியை நபியவர்களிடம் கொடுத்தபோது அவர்கள் அதனைச் சாப்பிடவில்லை. அதற்கு ஸஹாபாக்கள் "உடும்பு இறைச்சி ஹராமானதா?" என வினவ "இல்லை, நான் வாழ்ந்த பகுதியில் உடும்பு இருக்கவில்லை. எனவே அதனைச் சாப்பிடுவதை நான் விரும்பவில்லை" என்றார்கள். (புஹாரி-முஸ்லிம்)

- பிக்ஹ் துறை அறிஞர்களின் கருத்துப்படி ஸுன்னா என்பது நபியவர்கள் வாஜிபாகவோ, பர்ளாகவோ கருதாமல் செய்தவையாகும். சில பிக்ஹ் துறை அறிஞர்கள் "பித்அத்"தின் எதிர்ப்பதமாக ஸுன்னாவைக் கருது கின்றனர்.

ஸுன்னா என்ற சொல் பிரயோக ரீதியாக பல கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கான காரணம், பல துறைகளையும் சார்ந்தவர்கள் தமது துறைகளைக் கருத்திற்கொண்டு அதனொளியில் ஸுன்னாவை அணுகியதாகும். நபியவர்கள் வழிகாட்டக் கூடியதொரு முன்மாதிரி, இமாம் என்ற வகையில் அவரது பண்பாடுகள், உடற் தோற்றங்கள் போன்ற பகுதிகளுக்கு ஹதீஸ் துறை அறிஞர்கள் கூடிய அழுத்தம் கொடுத்தனர்.

உஸுலுல் பிக்ஹ் துறை அறிஞர்கள் நபியவர்களை சட்டம் இயற்றுபவராக நோக்கினர். நபியவர்கள் முன்வைத்த சட்டவிதிகளை ஆராய்வதில் இவர்கள் கூடிய கரிசனை கொண்டனர். பிக்ஹ்துறை அறிஞர்கள் நபியவர்களது செயல்களிலிருந்து வாஜிப், விரும்பத்தக்கது, ஹராம், மக்ரூஹ் போன்ற சட்டங்களைப் பெற்றனர்.

### சட்டவாக்க மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னா

இஸ்லாமிய ஷரீஆவில் குர்ஆன் முதல் மூலாதாரமாகவும் அதனைத் தொடர்ந்து இரண்டாவது மூலாதாரமாக ஸுன்னாவும் முஸ்லிம்களிடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. குர்ஆனிய வசனங்களும் ஹதீஸ்களும் இவ்வுண்மையை மிகத் தெளிவாகவே விளக்குகின்றன. பின்வரும் குர்ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் நாம் நோக்குவோம்.

1. "தூதர் உங்களிடம் கொண்டு வந்தவற்றை எடுத்து நடவுங்கள். அவர் தடுத்தவற்றை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள்." (59 : 07)

2. "அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கட்டுப்படுங்கள்" (3 : 132)

3. “உங்களிடம் இரு விடயங்களை விட்டுச்செல்கிறேன். அவற்றை பற்றிப்பிடிக்கும் காலமெல்லாம் நீங்கள் வழிகெட்டுச் செல்லமாட்டீர்கள். அல்குர்ஆனும் எனது ஸுன்னாவுமே அவையிரண்டும்.” (ஹாகிம்)

4. “உங்களுடைய கிரியைகளை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்.” (முஸ்லிம்)

மேலே கூறப்பட்ட குர்ஆன் வசனங்களும் ஹதீஸ்களும் நபியவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதை கடமையாக்கியுள்ளன. நபிக்கு கட்டுப்படுவதை அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதாக அவை கூறுகின்றன. நபியவர்களுடைய வாழ்விலும் மரணித்ததன் பின்னரும் அவருக்கு இந்த உம்மத் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதை மேலுள்ளவற்றை கவனமாக வாசிக்கின்ற போது விளங்கலாம்.

ஸுன்னாவிற்கு கட்டுப்படுவது அவசியம் என்பதை இன்னொரு வகையிலும் நிறுவ முடியும். குர்ஆனுக்கும் ஸுன்னாவிற்குமிடையிலான தொடர்பை வரையறுப்பதன் மூலம் அது சாத்தியமாகிறது. குர்ஆன் சுருக்கமாகக் கூறிய சில விடயங்களை சுன்னா விரிவுபடுத்திக் கூறுகின்றது. உதாரணமாக “தொழுகை” என்ற அம்சத்தை குர்ஆன் மிகச்சுருக்கமாகவே கூறுகின்றது. ஆனால் நபி(ஸல்) அவர்கள் அதனை தனது செயல்களில் செய்து காட்டியதோடு நின்றுவிடாமல் பின்வருமாறு ஏவினார்கள். “நான் தொழுவது போன்று தொழுது கொள்ளுங்கள்”. தொழுகையின் நேரங்களையும், தொழும் முறையையும் தனது செயல்களினூடாக ஸஹாபாக்களுக்கு கற்பித்தார்கள். குர்ஆனில் சுருக்கமாகக் கூறப்பட்ட ஹஜ் கிரியைகளை தனது செயலின் மூலம் கற்பித்தார்கள். நோன்பு, ஸகாத் தொடர்பான பலவிடயங்களை நபியவர்கள் விரிவாகக் கற்பித்தார்கள்.

சிலபோது குர்ஆன் வரையறையின்றி கூறிய விடயங்களை நபியவர்கள் வரையறுத்துக் கூறினார்கள். அல்குர்ஆன் திருட்டுக்கான தண்டனை கையை வெட்டுதல் என வரையறையின்றிக் கூறியிருந்தாலும் நபியவர்கள் அதனை வரையறுத்து “மணிகட்டுக்கை” எனக் கூறினார். வஸிய்யத் பற்றி வரையறையின்றி வந்திருக்கும் வசனத்தை நபியவர்கள் வாரிசுரிமை பெறக்கூடியவருக்கு வஸிய்யத் செய்யமுடியாது, ஏனையோருக்கு வஸிய்யத் செய்வதாயினும் 1/3 ஐயே செய்ய முடியும் எனவும் வரையறுத்துக் கூறினார்கள்.

பொதுப்படையாக வந்திருக்கும் குர்ஆன் வசனங்களை நபியவர்கள் குறிப்பாக்கிக் கூறினார்கள். உதாரணமாக வாரிசுரிமை பற்றி பொதுப்படையாக வந்துள்ள வசனத்தை, “கொலை செய்தவன் வாரிசுச் சொத்திற்கு அருகதையற்றவன்” என்றும் “நபிமார்கள் வாரிசுச் சொத்துக்களை விட்டுச்செல்வதில்லை, அவர்கள் விட்டுச் செல்வது ஸதகாவாகக் கருதப்படும்” என்றும் குறிப்பாக்கிக் கூறினார்கள்.

குர்ஆன் கூறாத சில விடயங்களையும் நபியவர்கள் கூறியுள்ளார்கள் என சில அறிஞர்கள் கூறுகின்றனர். உதாரணமாக, கோவேறு கழுதையின் இறைச்சி ஹராமானது, வேட்டைப்பல் கொண்ட விலங்குகளை சாப்பிடுவது ஹராமாகும், உடும்பு இறைச்சி ஹலாலானது போன்ற குர்ஆனில் வராத புதிய சட்டங்களைக் குறிப்பிடலாம். இவ்வகையான சட்டங்கள் குர்ஆன் குறிப்பிடாத சட்டங்களா? அல்லது குர்ஆனில் வந்துள்ள “அவர் தீங்கு விளைவிக்கக் கூடியவைகளை உங்களுக்கு ஹராமாக்குகிறார்” (அ'.ராப்:157) போன்ற பொதுவான வசனங்களுள் உள்ளடங்கக் கூடிய சட்டங்களா? என்ற விடயத்தில் அறிஞர்கள் அபிப்பிராய பேதம் கொண்டுள்ளனர்.

## <u>ஹதீஸ் பாதுகாக்கப்படல்</u>

### நபி (ஸல்) அவர்களின் காலம்

நபி (ஸல்) அவர்களது காலப்பிரிவில் ஸஹாபாக்கள் ஸுன்னாவைக் கற்றுக்கொள்வதிலும், பாதுகாப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் கூடிய கவனம் செலுத்தினர். ஸுன்னாவைக் கற்றுக்கொள்வதில், நபியவர்களுடைய மஜ்லிஸில் அமர்வதில் ஸஹாபாக்கள் எவ்வளவு தூரம் முனைப்போடு ஈடுபட்டார்கள் என்பதற்கு உமர் (ரழி) அறிவிக்கும் பின்வரும் சம்பவம் போதிய ஆதாரமாகும். “நானும் அன்ஸாரிகளில் ஒருவரான எனது அயல்வீட்டுக்காரரும் ஒவ்வொரு நாள் விட்டு விட்டு நபியவர்களிடம் உட்காரக்கூடியவர்களாக இருந்தோம். ஒரு நாள் அவர் அங்கு செல்வார். அடுத்த நாள் நான் செல்வேன். அங்கு கூறப்பட்ட வஹி மற்றும் வஹியல்லாத விடயங்களை பரஸ்பரம் அறிவித்துக் கொள்வோம்” (புஹாரி).

இன்னும் சில ஸஹாபாக்கள் பேணுதல் கருதி குறிப்பிட்டதொரு ஹதீஸை பல தடவைகள் நபியவர்களிடமிருந்து கேட்பதற்கு முயன்றுள்ளார்கள். தான் அறிவிக்கும் ஹதீஸ் பிழையாகி விடக்கூடாது என்ற நோக்கமே இவ்வாறான முயற்சிக்குக் காரணமாகும். அம்ர் இப்னு அன்பஸா(ரழி) ஒரு ஹதீஸை அறிவித்துவிட்டு பின்வருமாறு கூறினார்கள்: “நான் முதுமையடைந்துவிட்டேன். எனது எலும்புகளோ மிகவும் பலவீனப்பட்டுவிட்டன. என்னுடைய காலம் நெருங்கிவிட்டது. அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் பொய் சொல்வதற்கு எனக்கு எவ்விதத் தேவையும் இல்லை. அல்லாஹ்வின் தூதரிடமிருந்து ஒரு விடயத்தை ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் ... ஏழு தடவைகளாவது செவிமடுக்காமல் நான் அதனை அறிவிக்கப் போவதில்லை. ஆனால், நான் அதனை விட அதிக தடவைகள் செவிமடுத்திருக்கிறேன்” (முஸ்லிம்)

ஸஹாபாக்கள் எப்போதும் நபியவர்களுடைய ஸுன்னாவை அதே வசனத்திலேயே அறிவிக்க முற்பட்டனர். நபியவர்களுடைய பின்வரும் எச்சரிக்கையை அவர்கள் உள்ளத்தில் இருத்தினர். “யார் என் மீது வேண்டுமென்று

பொய் கூறுகிறானோ அவன் தனது தங்குமிடமாக நரகத்தை எடுத்துக் கொள்ளட்டும்” (புஹாரி)

நபியவர்களுடைய காலத்தில் ஸுன்னா எழுதப்பட்டதா இல்லையா என்பதில் இரு கருத்துக்கள் நிலவுகின்றன. இக்காலப்பிரிவில் ஸுன்னா எழுதப்படவில்லை என்ற கருத்தை முன்வைப்பவர்கள், பின்வரும் ஹதீஸை ஆதாரமாக முன்வைக்கின்றனர்: நபி(ஸல்) அவர்கள் “குர்ஆனைத் தவிர வேறெதனையும் என்னிடமிருந்து எழுதிக் கொள்ள வேண்டாம். குர்ஆனைத் தவிர வேறெதனையும் என்னிடமிருந்து எழுதியிருந்தால் அதனை அழித்துவிடுங்கள்” எனக் கூறினார்கள். (முஸ்லிம்)

அடுத்த சாரார் ஸுன்னா நபியவர்களுடைய காலத்திலேயே எழுதப்பட்டு விட்டது என்ற கருத்தை முன்வைக்கின்றனர். இவர்கள் பின்வரும் ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்வர். மக்கா வெற்றியைத் தொடர்ந்து நபி(ஸல்) அவர்கள் ஒரு குத்பா பிரசங்கம் செய்தபோது யெமன் நாட்டைச் சேர்ந்த ஒருவர் வந்து “அல்லாஹ்வின் தூதரே! இவற்றை எனக்கு எழுதித் தாருங்களே” என்றார். உடனே நபியவர்கள் ஸஹாபாக்களிடம் “அபூ ஷாவிற்கு எழுதிக் கொடுங்கள்” என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ்(ரழி) பின்வரும் ஹதீஸை அறிவிக்கிறார்கள்: நபியவர்களிடமிருந்து செவிமடுக்கும் அனைத்து விடயங்களையும் மனனமிடும் நோக்கில் எழுதிக்கொள்பவனாக இருந்தேன். குறைஷிகளில் சிலர் என்னைத் தடுத்து “நபியவர்களிடமிருந்து செவிமடுக்கின்ற அனைத்தையும் நீ எழுதிக்கொள்கிறாயா? அவர் ஒரு மனிதர். கோபமாக திருப்தியாக இருக்கும் கட்டங்களிலெல்லாம் பேசுபவற்றை எழுதுகிறாயா?” என்றனர். எனவே நான் எழுதுவதை நிறுத்திக் கொண்டேன். இதனை நான் நபியவர்களிடம் கூறியபோது தனது விரலினால் தன்னை சுட்டிக்காட்டி பின்வறுமாறு கூறினார்கள்:- “எழுதிக் கொள்ளுங்கள், யாருடைய கையில் எனது உயிர் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக! சத்தியத்தைத் தவிர வேறொன்றும் இவரிடமிருந்து வெளிவரமாட்டாது.” (அபூதாவூத்)

இவ்விருவகையான ஹதீஸ்களும் வெளிப்படையாகப் பார்க்கின்ற போது முரண்படுவதாகத் தென்பட்டாலும் மிக நுணுக்கமாகப் பார்க்கின்ற போது இவற்றுக்கு மத்தியில் உடன்பாடு நிலவுவதைக் காணலாம்.

பின்வரும் உண்மைகளை மேலுள்ள ஹதீஸ்களிலிருந்து பெறலாம் :

1. மனனிமிடும் சக்திகொண்டவர் எழுத்துருவில் பாதுகாப்பதில் முழுமையாக தங்கிவிட முடியும் என்ற காரணத்தால், மனனமிடும் சக்திகொண்டவர்களை மாத்திரமே ஹதீஸ்களை எழுதுவதிலிருந்து தடுத்திருக்க முடியும்.

2. ஆரம்ப காலத்தில் குர்ஆனும், ஹதீஸும் ஒன்றோடொன்று கலந்துவிடும் என்ற பயமிருந்து, பிற்பட்ட காலத்தில் இவ்வாறான கலப்பு சாத்தியமில்லை என்ற நிலை வந்த போது எழுதுவதற்கு அனுமதித்திருக்க முடியும்.

3. ஒரே ஏட்டில் குர்ஆனையும் ஹதீஸையும் சேர்த்து எழுத வேண்டாம் என்பதை நாடியிருக்கலாம்.

நபியவர்களுடைய காலத்தில் எழுத்துருவில் ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்ட எத்தனையோ ஏடுகள் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தன. அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி) அவர்கள் எழுதிய “ஸாதிகா” என்ற ஏடு ஹதீஸ் துறை அறிஞர்களுக்கு மத்தியில் மிகவும் பேசப்படுகின்ற ஒன்றாகும். “ஸாதிகா என்பது நபியவர்களிடமிருந்து நான் எழுதிக் கொண்டதொரு ஏடு” (தாரமி) என அவர்கள் கூறினார்கள்.

அலி(ரழி) அவர்களுடைய தோற்பையினுள் இருந்த ஓர் ஏடு பற்றி அபூஜுஹைபா வினவியபோது பின்வருமாறு கூறினார்கள். “நஷ்ட ஈடு, அடிமை விடுதலை போன்ற சட்டங்கள் எழுதப்பட்டுள்ள ஏடு அதுவாகும்.” (புஹாரி)

அம்ர் இப்னு ஹம்ஸ் என்கின்ற அன்ஸாரி ஸஹாபியிடம், ஸகாத், வாரிசுரிமை, நஷ்டஈடு பற்றிய சட்டங்களை உள்ளடக்கியதோர் புத்தகம் இருந்தது. நபியவர்கள் நஜ்ரான் பகுதிக்கு பொறுப்புதாரியாக அவரை நியமித்த போது அவர் அப்புத்தகத்தையும் தன்னோடு எடுத்துச் சென்றார். (அஹ்மத்)

## ஸஹாபாக்களின் காலம்

நபியவர்களுடைய மரணத்தைத் தொடர்ந்து, ஹதீஸ் எழுத்து வடிவில் கொண்டுவரப்பட வேண்டிய தேவை இருந்தது. அரசர்களுக்கும் தலைவர்களுக்கும் கடிதங்கள் எழுதப்பட்டபோது இடையில் ஹதீஸ்கள் மேற்கோள் காட்டப்பட்டன. பல பகுதிகளிலும் பிரிந்திருந்த முஸ்லிம் தலைவர்களுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டியிருந்த போது ஹதீஸ்களை உள்ளடக்கிய கடிதங்கள்

அனுப்பிவைக்கப்பட்டன. உதாரணமாக முகீரா இப்னு ஷு.்.பாவிடம் முஆவியா இப்னு அபூஸுப்யான் சில ஹதீஸ்களை அனுப்பிவைக்கும் படி வேண்டியபோது எழுத்து வடிவில் அனுப்பிவைத்தார். (புஹாரி)

நபியவர்களுடைய அனைத்து செயல்களையும் பதிவு செய்வதில் ஸஹாபாக்கள் முனைப்போடு ஈடுபட்டனர். வீடு, பள்ளிவாசல், சந்தை, போர்க்களம் என்று அனைத்து இடங்களிலும் நபியவர்களுடைய சொல், செயல், அங்கீகாரம் என்பவற்றை பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். குறிப்பாக மனன சக்தியில் பலவீனமானவர்கள் ஹதீஸ்களில் பிழைகளோ, இடைச்செருகல்களோ நுழைந்துவிடக் கூடாது என்ற காரணத்தால் எழுதிவைத்துக் கொண்டனர்.

சில ஸஹாபாக்கள் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக ஹதீஸ்களை எழுதி வைத்துக் கொண்டனர். அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்களிடம் ஒரு புத்தகம் இருந்தது. அடிக்கடி அதனைப் புரட்டிப்பார்த்துக்கொள்வார். இன்னும் சில ஸஹாபாக்கள் பிற மாணவர்களுக்கு ஹதீஸ்களைக் கற்பித்துக் கொடுப்பவர்களாகவும், அவற்றை எழுதுவதற்குப் பணிப்பவர்களாகவும் இருந்தனர். உதாரணமாக, வாஸிலா இப்னுல் அஸ்த.். என்கின்ற ஸஹாபி தனது மாணவர்களுக்கு எழுதிக் கொள்ளும்படி கட்டளையிடுவார். உபை இப்னு க.்.ப், அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத், அபூஹுரைரா, அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரழி) போன்றவர்களும் தமது மாணவர்களுக்கு ஹதீஸ்களை எழுதிக் கொள்ளும்படி பணித்தார்கள்.

ஹதீஸ்களைப் பாதுகாப்பதில் ஸஹாபாக்கள் எழுத்து மூலமான வழிமுறையில் கவனம் செலுத்தியதோடு மாத்திரம் நின்றுவிடாமல் வாய்மூலமாக ஹதீஸ்களை ஏற்றுக்கொள்வதில் மிகவும் பேணுதலான வழிமுறைகளைக் கைக்கொண்டனர். ஹதீஸ்களில் தெரிந்தோ தெரியாமலோ பிழைகள், இடைச்செருகல்கள் வந்துவிடக்கூடாது என்பதுதான் அவர்களது ஒரே நோக்கமாக இருந்தது. ஹதீஸ்களை ஏற்றுக்கொள்கின்ற போது ஸஹாபாக்கள் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றினர் :-

**(அ) சாட்சியை வேண்டுதல்**

ஹதீஸ்கள் பிழையாக அறிவிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்கான இப்பேணுதல் முறையை அபூபக்ர்(ரழி) முதன்முதலில் அறிமுகப்படுத்தினார்கள். ஒரு பாட்டி தனக்குரிய வாரிசுச் சொத்தைப் பெற்றுத்தரும்படி அபூபக்ர்(ரழி)விடம் முறைப்பட்ட போது உங்களுக்கு பங்கு இருப்பதாக நான் குர்ஆனில் காணவில்லை. நபியவர்கள் உங்களுக்கு எந்தவிதப் பங்கையும் கூறுவதை நான் செவிமடுத்ததில்லை.” என்று கூறிவிட்டு பிறகு அடுத்தவர்களிடம் வினவினார்.

முகீரா(ரழி) எழுந்து நபி(ஸல்) பாட்டிக்கு 1/6 பங்கு கொடுக்கும் படி கூறியதை தான் செவிமடுத்துள்ளதாகக் கூறவே, “இக்கருத்தை வேறு யாராவது செவிமடுத்துள்ளீர்களா?” என அபூபக்ர்(ரழி) வினவினார்கள். முஹம்மத் இப்னு மஸ்லமா, தான் அதனை செவிமடுத்துள்ளதாக சாட்சி கூறவே அபூபக்ர்(ரழி) அச்சட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். (அபூதாவூத்)

ஒரு முறை உமர்(ரழி) அவர்களுடைய வீட்டிற்கு அபூமூஸா அல்அஷ்அரீ சென்று மூன்று முறை அனுமதி கோரியும் அனுமதி வழங்கப்படவில்லை. எனவே, அவர் வந்த வழிக்குத் திரும்பினார். இதனை அவதானித்த உமர்(ரழி) அவரை நிறுத்தி, “ஏன் திரும்பிவிட்டீர்?” எனக் கேட்டார். அதற்கவர் “நபியவர்களிடமிருந்து பின்வரும் ஹதீஸை நான் செவிமடுத்துள்ளேன்” என்றார். “உங்களில் ஒருவர் மூன்று முறை அனுமதி கோரியும் அனுமதி கிடைக்காவிட்டால் திரும்பிவிடுங்கள்”. உடனே உமர்(ரழி) அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமாக “இதற்கு நீங்கள் ஆதாரம் காட்ட வேண்டும்” எனப் பணித்தார்கள். உபை இப்னு க.்.ப்(ரழி) தானும் இவ்வாறான ஹதீஸை செவிமடுத்துள்ளதாக சாட்சி பகர்ந்தார்.

**(ஆ) மனனமிடுவதிலும், ஹதீஸை அறிவிப்பதிலும் மிகவும் பேணுதலாக நடத்தல்**

ஒருவர் ஒரு ஹதீஸை செவிமடுத்து பிழையான முறையில் மனனம் செய்வாராயின் தன்னையறியாமலே நபியவர்கள் மீது பொய்யுரைத்தவராக மாறிவிடுகிறார். இவ்வகையான குற்ற உணர்வு ஸஹாபாக்களிடம் ஆழமாகவே குடிகொண்டிருந்தது. எனவே, அவர்கள் ஹதீஸ்களை குறைவாகவே அறிவிப்பவர் களாக இருந்தனர். மிகவும் ஊர்ஜிதமான ஹதீஸ்களையே அடுத்தவர்களுக்கு எத்திவைத்தனர். உஸ்மான்(ரழி) அறிவிக்கின்ற பின்வரும் அறிவிப்பு இதற்கு நல்லதோர் சான்றாகும். ‘நபியவர்கள் கூறிய பின்வரும் வாசகத்தை நான் செவிமடுத்தேன். இதுவே அதிகமான ஹதீஸ்களை அவரிடமிருந்து அறிவிப்பதை விட்டும் என்னைத் தடுக்கின்றது. “நான் கூறாத ஒன்றை யார் என்மீது பொய்யாக இட்டுக்கட்டுகின்றாரோ அவர் தனது இருப்பிடமாக நரகை தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்.” (முஸ்னத் அஹ்மத்)

ஹதீஸ்களை அறிவிப்பதில் மிகவும் பேணுதலாக இருந்த அபூபக்ர்(ரழி), அடுத்தவர்களுக்கும் இதனை எத்திவைத்தார்கள். நபியவர்களுடைய மரணத்தைத் தொடர்ந்து அனைத்து ஸஹாபாக்களையும் ஒன்றுகூட்டி, அபூபக்ர்(ரழி) “நீங்கள் அல்லாஹ்வின் தூதரிடமிருந்து ஹதீஸ்களை அறிவிக்கிறீர்கள். அவற்றில் நீங்கள் முரண்பட்டுக் கொள்கிறீர்கள். உங்களுக்குப் பின் வரஇருப்பவர்கள் இதனைவிட அதிகம் முரண்படப் போகின்றார்கள். எனவே, அல்லாஹ்வின் தூதரிடமிருந்து அதிகம் அறிவிக்க வேண்டாம். யாராவது உங்களிடம் வினவினால் எமக்கும் உங்களுக்கும் அல்லாஹ்வின் வேதம் இருப்பதாகக் கூறுங்கள்.” என்று

கூறினார். இங்கு அபூபக்ர்(றழி) ஹதீஸ்களை அறிவிப்பதை தடுக்கவில்லை. மாற்றமாக அறிவிப்பதில் பேணுதல் நிலையைக் கைக்கொள்ளுமாறே பணிக்கிறார்கள்.

**(இ) ஹதீஸைப் பெற்றுக்கொள்பவர் கடும்போக்கை கையாள்தல்**

அறிவிப்பாளரிடமிருந்து ஒருவர் ஹதீஸை செவிமடுக்கின்ற போது, கடுமையான போக்கை கையாள்வது ஸஹாபாக்களின் இயல்பாக இருந்தது. உதாரணமாக, அறிவிப்பவர் மிக முக்கியமானவராக இருந்தாலும் சத்தியம் செய்து கூறும்படி வேண்டுவதுண்டு. ஒருமுறை அலி இப்னு அபீதாலிப்(ரழி) ஹதீஸொன்றை அறிவித்தார். உடனே அபீதா அஸ்ஸல்மானி எழுந்து “அமீருல் மு.ஃமினீனே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் இதனை நபியவர்களிடமிருந்து செவிமடுத்தீர்களா?” என வினவ “ஆம் அல்லாஹ்வின் மீது சத்தியமாக !” என மூன்று தடவை சத்தியம் செய்தார்கள்.

அவர்கள் ஹதீஸ்களை செவிமடுத்த போது அறிவிப்பாளர் வரிசையையும் சேர்த்தே பெற்றுக் கொண்டனர். இங்கு பொய் கலப்பதற்கான வாய்ப்பு மிக அரிதாகவே அமைகின்றது.

அதுபோலவே ஹதீஸைப் பெற்றுக் கொள்கின்ற போது அதன் உள்ளடக்கம் குர்ஆனுடைய கருத்துக்களோடு முரண்படுகின்றதா என்பதைப் பார்த்துக் கொண்டார்கள். “ஒரு மையித்தின் குடும்பத்தார் அதன் மீது அழுவதன் காரணமாக அம்மையித்தானது வேதனை செய்யப்படுகின்றது.” என்ற ஹதீஸை ஆயிஷா(ரழி) “ஒரு ஆன்மாவின் பாவத்தை இன்னொன்று சுமக்காது” (53 : 38) என்ற குர்ஆன் வசனத்தின் மூலம் மறுத்தார்கள். இந்த ஹதீஸ் யஹுதிப் பெண்ணொருத்தியைப் பார்த்து கூறப்பட்டது. அவளுடைய நிராகரிப்பின் காரணமாகவே அவள் வேதனை செய்யப்படுகிறாள் என ஆயிஷா(ரழி) விளக்கிக் கூறினார்கள். அறிவிப்பாளர் ஹதீஸின் ஒரு பகுதியையே செவிமடுத்துள்ளார் அல்லது மனனம் செய்துள்ளார் என்பதே ஆயிஷா(ரழி)வின் கருத்தாகும்.

காலப்போக்கில் இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட அரசியல் முரண்பாடுகள், வழிகெட்ட சிந்தனைப் பிரிவுகளின் தோற்றம் போன்றன ஸஹாபாக்கள் முன்னிருந்த பெரும் சவாலாக மாறின. ஒவ்வொரு பிரிவினரும் தம்மைப் பலப்படுத்தவும் நியாயப்படுத்தவும் குர்ஆன், ஹதீஸ் வசனங்களைத் தேடத் தொடங்கினர்.

ஹதீஸ்களை இட்டுக்கட்டுவதற்கும் அவர்கள் தயங்கவில்லை. தூதரின் வழிமுறைக்கு ஏற்பட்டுவரும் பேராபத்தை புரிந்து கொண்ட ஸஹாபிகள் விழித்துக் கொண்டனர். இட்டுக்கட்டுக்களிலிருந்தும் திரிபுகளிலிருந்தும் ஹதீஸ்களைப் பாதுகாக்க வேண்டிய தமது பொறுப்பை உணர்ந்து இன்னும் சில விதிகளையும் உருவாக்கினர்.

**(ஈ) அறிவிப்பாளரது நிலை குறித்து ஆய்வு செய்தல்**

இமாம் இப்னு ஸீரின் பின்வருமாறு குறிப்பிடுகிறார். “ஸஹாபிகள் அறிவிப்பாளர்களை வினவுபவர்களாக இருக்கவில்லை. எப்போது குழப்ப நிலை தோன்றியதோ அப்போது ஹதீஸ்களை அறிவிப்பவர்களிடம் அடுத்த அறிவிப்பாளர்களைக் கூறுங்கள்” என வினவத் தொடங்கினர்.

மார்க்கம், பேணுதல், மனன ஆற்றல், எழுத்துப்பதிவு கொண்டவர்களிடமிருந்து ஹதீஸ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு மக்களை ஸஹாபிகளில் உள்ள அறிஞர்கள் தூண்டினர். ”நிச்சயமாக இந்த அறிவு (ஹதீஸ்) மார்க்கமாகும். எவரிடமிருந்து உங்களது மார்க்கத்தைப் பெறுகின்றீர்களோ அவரில் அவதானம் செலுத்துங்கள்” என்று மக்கள் பரவலாகப் பேசுமளவுக்கு இது விடயத்தில் ஸஹாபா சமூகம் ஆழ்ந்த கவனம் செலுத்தியது.

ஹதீஸ் ஒன்றை கேள்வியுற்றதும் ஹதீஸை அறிவித்த அறிவிப்பாளர் எவ்வளவு தொலைவிலிருந்தாலும் அவரிடம் சென்று நேரடியாகச் செவிமடுத்து குறித்த ஹதீஸை உறுதிசெய்து கொண்டனர். ஹதீஸைப் பெறுவதற்காக நீண்ட தூரம் பயணிக்கும் பாரம்பரியத்தை ஸஹாபிகளே உருவாக்கினர்.

பலவீனமான ஹதீஸ்களினதும், இட்டுக்கட்டப்படும் ஹதீஸ்களினதும் இயல்பை ஸஹாபிகள் அறிந்து வைத்திருந்தனர். உறுதியான, சிறந்த மனன ஆற்றல் உள்ளவர்களது ஹதீஸ்களுக்கு முரணாக அமைகின்ற உடன்பாடு காண முடியாத ஹதீஸ்களை ஸஹாபிகள் மறுத்துவிட்டனர்.

## தாபிஈன்கள் காலம்

ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் நடுப்பகுதி தொடக்கம் இரண்டாம் நூற்றாண்டின் அரைப்பகுதி வரை தாபிஈன்களது காலம் எனப்படும். அக்கால கட்டங்களில் பல புதிய விடயங்கள் நடந்தேறின. அவற்றை பின்வருமாறு சுருக்கிக் கூறமுடியும் :-

- ✓ நபியவர்களது ஹதீஸ்களை மனனம் செய்திருந்த பல ஸஹாபிகள் மரணித்தமை.
- ✓ ஹதீஸ்களை அறிவிக்கின்ற அனைத்து ஸஹாபிகளையும் நேரடியாச் சென்று சந்தித்தல் சாத்தியமின்மையாக மாறியமை.
- ✓ பிக்ஹ் சார்ந்த மத்ஹப்கள் தோற்றம் பெற்றமை. ஒவ்வொரு மத்ஹபினரும் தமது கருத்துக்களை வலுப்படுத்தி தாம் சுமந்துள்ள ஹதீஸ்களை நம்பகத்தன்மை கொண்டவையாக மாற்ற முற்பட்டமை.
- ✓ முஸ்லிம்களாகத் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட போலிகள், ஹதீஸ்களை இட்டுக்கட்டியமை.
- ✓ குர்ஆனும், சுன்னாவும் ஒன்றோடொன்று கலந்துவிடும் என்ற அச்சம் நீங்கியமை.

ஸஹாபாக்களைப் போன்று தாபிஈன்களும் ஹதீஸ்களை எழுதிப்பதிவு செய்திருந்தனர். "தக்யீதுல் இல்ம்" என்ற இம்முயற்சியை ஸஹாபாக்களை விடத் தீவிரமாக இவர்கள் மேற்கொண்டனர். இப்பணியை மேற்கொண்டவர்களுள் முஹம்மத் பின் அல்ஹனபிய்யா(ஹி 73), உர்வா பின் ஸுபைர்(ஹி 94), ஸஈத் இப்னு ஸுபைர்(ஹி 95), முஜாஹித் இப்னு ஜபீர்(ஹி 103), காலித் இப்னு ம.்.தன்(ஹி 103), ஹஸனுல் பஸரி(ஹி 110), அதா இப்னு ரபாஹ்(ஹி 117) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். தாம் கற்றுக் கொள்ளும் விடயங்கள் அனைத்தையும் எழுதிவைக்கும் பழக்கமுடையவராக இமாம் ஸுஹ்ரி காணப்பட்டார். இது பற்றி அபூஸினாத் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "நாங்கள் ஸுஹ்ரியுடன் எழுதும் உபகரணங்களைச் சுமந்து கொண்டு அறிஞர்களிடம் செல்வோம். நாம் செவிமடுக்கும் விடயங்கள் அனைத்தையும் எழுதிப்பதிவு செய்துகொள்வோம்."

அத்தோடு தாபிஈன்கள் ஹதீஸ்களை முறைப்படி தொகுத்தெழுதும் முறைமையையும் ஆரம்பித்து வைத்தனர். இது "தத்வீனுல் இல்ம்" எனப்பட்டது. ஹி. 99 இல் பதவியேற்ற கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ்(ரஹ்) இதற்கு கூடுதலாக அழுத்தம் கொடுத்தார். உமையா ஆட்சியை இஸ்லாமிய மயப்படுத்துவதில் அவர் அதிக கவனம் செலுத்தினார். ஹதீஸ்களை ஒழுங்கு முறையில் தொகுத்தெடுப்பதற்கு அரச மட்டத்தில் நடவடிக்கை எடுத்த முதலாவது

ஆட்சியாளராக இவர் கருதப்படுகிறார். ஹதீஸ்கள் அழிந்து போகும் நிலை இருப்பதாகவும் அவற்றைப் பாதுகாப்பதற்கு மக்கள் மத்தியில் அவற்றை பரப்புமாறும் கட்டளையிட்டதுடன் அவற்றை ஒன்று திரட்டித் தொகுக்கும்படி அறிஞர்களைப் பணித்தார். மதீனாவில் வாழ்ந்த அறிஞர்களுக்கு பின்வருமாறு கட்டளை பிறப்பித்தார். "ரஸுல்(ஸல்) அவர்களின் ஸுன்னாவையும், ஹதீஸையும் தேடிக் கண்டுபிடியுங்கள். ஏனெனில் நான் அறிவின் மறைவையும் அறிஞர்களது பிரிவையும் அஞ்சுகிறேன்."

கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் ஏனைய உமையா ஆட்சியாளர்களைப் போல அரசின் நில எல்லைகளை விரிவுபடுத்திச் செல்ல வேண்டுமென்று விரும்பவில்லை. இஸ்லாமிய அறிவைப் பெற்றுக்கொண்டு மக்கள் சரியான முஸ்லிம்களாக வாழ்வதற்கு அவர் வழிகாட்டினார். இதற்காக நாபிஃ மவ்லா, இப்னு உமர், ஹாரித் பின் முஹம்மத் போன்றோரை பல இடங்களுக்கும் ஹதீஸ் போதனைக்காக அனுப்பிவைத்தார். நபித்தோழர்களுக்கு அனுப்பப்பட்ட நபியவர்களது கடிதங்கள், கட்டளைகள் என்பவற்றைத் தேடிப் பாதுகாக்குமாறும், காஸிம் பின் முஹம்மத், அம்ரா பின்த் அப்துர் ரஹ்மான் போன்றோருடன் தொடர்பு கொண்டு ஹதீஸ்களைப் பெற்று பதிவு செய்யும்படியும் மதீனாவில் கவர்னராக இருந்த அபூபக்ர் அம்ர் இப்னு ஹஸ்ம் அவர்களுக்கு கட்டளையிட்டார். இவையனைத்தையும் ஒழுங்குபடுத்தித் தொகுக்கும் பொறுப்பை இமாம் ஸுஹ்ரியிடம் ஒப்படைத்தார்.

இமாம் ஸுஹ்ரி தாபிஈ அறிஞர்களில் முக்கியமானவர். ஸஹாபாக்கள் பத்துப் பேரை நேரில் இவர் கண்டிருக்கிறார். மாலிக் இப்னு அனஸ், ஸுப்யான் இப்னு உயைனா, ஸுப்யானுஸ் ஸவ்ரி போன்ற மேதைகளின் ஆசிரியராகவும் இவர் திகழ்ந்திருக்கிறார். இவருக்கிருந்த அபார திறமைகளினால் இவரிடம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஆளுனர்களைப் பணித்தார். ஹதீஸ்களைத் தொகுத்தெடுக்கும் பணியை இமாம் ஸுஹ்ரி டமஸ்கஸ் பள்ளியை மையமாக வைத்தே மேற்கொண்டார். அப்பகுதி ஆளுனர்களும் அவருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினர். ஆளுனர்கள் கலீபாவுக்கு அனுப்பிவைத்த ஹதீஸ் தொகுப்புக்கள் இமாம் ஸுஹ்ரியிடம் ஒப்படைக்கப்பட்டன. அவை ஏடுகளாகத் தொகுக்கப்பட்டு பின்னர் சாம்ராஜ்யத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் போன்றே கலீபா ஹிஷாமும் இமாம் ஸுஹ்ரியைப் பயன்படுத்தி ஹதீஸ் கலைக்குத் தொண்டாற்றினார். ஹதீஸ்களை

நூலுருவில் தொகுக்க கலீபா ஹிஷாம் இமாம் ஸுஹ்ரியைப் பணித்த போது தனக்கு உதவிக்கு இருவரைத் தந்தாலன்றி இப்பணியைச் செய்ய முடியாதென்று அவர் கூறினார். ஆகவே, இருவர் உதவிக்கு வழங்கப்பட்டனர். அவர்களது முயற்சியினால் இமாம் ஸுஹ்ரியிடம் இருந்த ஹதீஸ்கள் முப்பது பதிவேடுகளில் பதியப்பட்டன. கலீபா ஹிஷாம் இவற்றை அரச நூலகத்தில் வைத்துப் பாதுகாத்ததாக வரலாறு குறிப்பிடுகின்றது.

இமாம் ஸுஹ்ரி ஆரம்பித்து வைத்த இத்தூய பணி பல்வேறு இடங்களிலும் பல அறிஞர்களாலும் தொடரப்பட்டது. பக்தாத், பஸரா, கூபா, மக்கா, டமஸ்கஸ், புஸ்தாத், மதீனா போன்ற இடங்களில் ஹதீஸ் போதனைகள் இடம் பெற்றதோடு இவ்விடங்களில் வாழ்ந்த ஹதீஸ் துறை அறிஞர்கள் ஹதீஸ் தொகுப்பு நூல்களை எழுதினர். அப்துல் அஸீஸ் இப்னு ஜுரைஜ், அப்துர் ரஹ்மான் பின் கம்ர் அல்அவ்ஸாஈ, மாலிக் பின் அனஸ், ஹிஷாம் பின் பஷீர், ஸுப்யான் பின் உயைனா போன்றோர் ஹதீஸ் தொகுப்பு நூல்களை எழுதியோர்களில் முக்கியமானவர்கள். எனினும் இவ்வாறு எழுதப்பட்ட தொகுப்புக்களில் அதிகமானவை கிடைக்கப் பெறவில்லை. இவற்றுள் இமாம் மாலிகின் முவத்தா மிகவும் பிரசித்தி வாய்ந்ததாகும். அன்றைய இஸ்லாமிய உலகின் அனைத்துப் பாகங்களிலும் ஹதீஸ்கள் நூற்களாகத் தொகுக்கப்பட்டன.

| | |
|---|---|
| மக்கா | - இப்னு ஜுரைஜ் |
| மதீனா | - மாலிக்பின் அனஸ், முஹம்மத் இப்னு இஸ்ஹாக் |
| பஸரா | - ரபீஃ இப்னு ஸபீஹ், ஹம்மாத் இப்னு ஸலமா |
| யெமன் | - மஃமர் இப்னு ராஷித் |
| ஷாம் | - அப்துர் ரஹ்மான் அவ்ஸாஈ |
| கூபா | - சுப்யான் அஸ்ஸவ்ரி |
| குராஸான் | - அப்துல்லாஹ் இப்னு முபாரக் |
| எகிப்து | - அப்துல்லாஹ் இப்னு வஹபி |

பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த தாபிஈன்கள் ஹதீஸ்களைப் பாதுகாப்பதற்காக ஸஹாபாக்களைப் போன்று சில வழிவகைகளைக் கையாண்டனர். அவற்றில் முக்கியமானவையாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(அ) அறிவிப்பாளர்களின் வாழ்க்கை, வரலாறு, பண்பாடு, நடத்தை என்பவற்றை ஆய்வு செய்தனர். அறிவிப்பாளர்களிடமிருக்கும் நேர்மை, மனன சக்தி போன்ற பண்புகளை மிகக் கட்டாயமாக அவதானித்தனர். ஹதீஸ்களைப் பாதுகாப்பதற்காக அறிவிப்பாளர்களின் மோசமான பண்புகளையும் விளக்குவதற்கு அறிஞர்கள் தயங்கவில்லை.

நம்பத்தகுந்த அறிவிப்பாளர்களிடமிருந்து மாத்திரமே ஹதீஸ்களைப் பெற்றுக் கொண்டனர். இமாம் ஷா∴பியுடைய பின்வரும் கூற்று இதனை உறுதிப்படுத்துகிறது: "அல்லாஹ்வின் மீது ஆணையாக! தொண்ணூற்றி ஒன்பது ஹதீஸ்களை நான் சரியாக அறிவித்து ஒரே ஒரு ஹதீஸை பிழையாக அறிவித்துவிட்டால் அந்த ஒன்றைக் கொண்டே என்னைக் குற்றம் பிடிப்பார்கள்."

(ஆ) ஹதீஸின் உள்ளடக்கம் குர்ஆன் வசனங்களுக்கு முரண்படுகின்றதா என்பதை அவதானித்தார்கள்.

(இ) எழுத்து வடிவிலிருந்த ஹதீஸ்களை மிகக்கவனமாகப் பாதுகாத்தனர். ஹஸன் இப்னு அலி தனது தந்தையுடைய ஹதீஸ் தொகுப்புக்களை தனது அறையினுள் வைத்து மிகக் கவனமாக பாதுகாப்பவராக இருந்தார். அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரமே அவற்றை வெளியே கொண்டு வருபவராக இருந்தார்.

# தபஉத் தாபிஈன்கள் காலம்

தபஉத் தாபிஈன்களது காலப்பிரிவு ஹதீஸ்கலை வரலாற்றின் பொற்காலம் என வர்ணிக்கப்படுகின்றது. இக்காலப்பிரிவில் ஹதீஸ் கலை வரலாற்றில் பல்வேறு முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டன.

## ❖ ஹதீஸ் கற்றலும் கற்பித்தலும்

ஹதீஸ்களைத் தொகுத்தெழுதுதல், பாதுகாத்தல், பரப்புதல் போன்ற முயற்சிகள் தொடரப்பட்ட போது ஆசிரியர், மாணவர் தொடர்புகளும் அதிகரிக்கத் தொடங்கின. மாணவர்கள் தமது ஆசிரியர்களிடமிருந்து பல்வேறு வழிமுறைகளினூடாக ஹதீஸ்களைப் பெற்றுக் கொண்டனர். அவற்றுள் சில வழிமுறைகள் ஆரம்பத்திலிருந்தே பின்பற்றப்பட்டு வந்திருப்பினும் இக்காலத்திலேயே இவ்வழிமுறைகள் அதிகமாக பயன்படுத்தப்பட்டன. அவற்றின் சுருக்கம் பின்வருமாறு :-

1. **ஆசிரியர் வாசிக்க மாணவர் செவிமடுத்தல் - (ஸமாஉ)**

   ஓர் ஆசிரியர் வாய்மொழி மூலமாகவோ, பதியப்பட்ட ஏடுகளிலிருந்தோ வாசித்தல், கேள்வி, பதில்கள், சொல்வதெழுதல் மூலமோ மாணவருக்குக் கற்றுக்கொடுப்பதை இது குறித்துக் காட்டுகிறது. வாய்மொழி மூலமான முறை ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து பரந்த அளவில் பிரயோகிக்கப்படவில்லை. பதியப்பட்ட ஏடுகளிலிருந்து வாசித்துக் காட்டும் முறை பெரிதும் பின்பற்றப்பட்டது. ஆசிரியர் சொல்லும் போது மாணவர்கள் எழுதியவை ஆசிரியரின் திருத்தங்களுக்குப் பின்னர் அங்கீகரிக்கப்பட்டன.

2. **மாணவர்கள் ஹதீஸ்களை ஆசிரியருக்கு வாசித்துக்காட்டல் - (அர்ள்)**

   மாணவர் ஒருவர் தான் எழுதியவற்றை ஆசிரியருக்கு வாசித்துக் காட்டுகையில் ஏனைய மாணவர்களும் தாம் எழுதியவற்றை சரிபார்த்துக் கொள்வர். அல்லது மிக அவதானமாகச் செவிமடுத்து பின்னர் அவற்றை எழுதிக் கொள்வர். ஆசிரியருக்கு ஹதீஸ்களைப் படித்துக்காட்டி மாணவர் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாதபோது “ஸாரிக் அல்ஹதீஸ்” (திருடியவர்) என்று அவர் பார்க்கப்பட்டதோடு ஹதீஸ்களை அறிவிக்கும் உரிமையையும் அவர் இழக்க நேரிட்டது. இதற்காக ஆசிரியரின் மூலப் பிரிதிகளிலிருந்து தாம் எழுதியவற்றை மாணவர் ஆசிரியருக்கு வாசித்துக் காட்டும் பழக்கம் பின்பற்றப்பட்டது.

**3. ஆசிரியரின் அனுமதி (இஜாஸா)**

ஆசிரியர் மாணவரிடம் இருக்கும் பதிவேட்டிலுள்ள ஹதீஸ்களை பிறருக்குக் கற்றுக் கொடுக்க அனுமதியளிப்பதனையே இது குறித்துக் காட்டுகிறது. ஹதீஸ் கலையைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியாகவே இம்முறை அமைந்திருந்தது.

**4. பதிவேட்டை ஆசிரியர் மாணவருக்குக் கையளித்தல்**

ஹதீஸ்கள் தொகுத்து எழுதப்பட்டுள்ள பிரதியொன்றை ஒரு மாணவருக்கு ஆசிரியர் வழங்கி அதனைக் கற்றுக் கொடுக்க அனுமதியளிப்பதனை இது குறித்துக் காட்டுகிறது.

**5. வேறு ஒருவருக்காக ஹதீஸ்களை பிரதிபண்ணல்**

ஹதீஸ்களை எழுதி பிறருக்கு அனுப்பிவைக்கும் முறை இக்காலப்பிரிவில் நடைமுறையில் இருந்தது. கலீபாக்கள் ஹதீஸ்களை எழுதி தமது நிருவாகிகள், கவர்னர்களுக்கு அனுப்பிவைத்தனர். அறிஞர்களும் கூட தூர இடங்களிலிருந்த தமது மாணவர்களுக்கு ஹதீஸ்களை எழுதி அனுப்பினார்கள்.

**6. ஹதீஸ் அறிவிப்பதற்கு தனக்கு ஆசிரியர் வழங்கிய அனுமதியை ஒருவர் பகிரங்கப்படுத்தல்(இஃலாம்).**

ஹதீஸ் அறிவிக்கும் ஆசிரியரிடம் அங்கீகாரம் பெறுபவர் அதற்கான சான்றிதழ் ஒன்றின் பிரதியை தன்னிடம் வைத்திருக்க வேண்டும் என்றும் சில சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்பட்டார்.

**7. வஸிய்யா**

ஆசிரியர் தனது ஹதீஸ்கள் உள்ள தொகுப்பை இன்னொருவரிடம் கையளித்து அதிலுள்ள ஹதீஸ்களை அவர் அறிவித்ததாக அறிவிப்புச் செய்யும் உரிமையை வழங்குவதை இது குறிக்கிறது.

**8. விஜாதா**

ஒருவர் ஒரு ஹதீஸ் அறிஞரின் தொகுப்பைப் பெற்று அவரின் அங்கீகாரத்தைப் பெறாமல் அதிலுள்ள ஹதீஸ்களைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதனை இது குறிக்கிறது. ஹதீஸ் கற்பதற்கான அங்கீகாரம் பெற்ற ஒரு முறையாக இது அமைவதில்லை.

## ஹதீஸ் தொகுப்பு முயற்சிகள்

ஆரம்ப காலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த ஹதீஸ் தொகுப்பு முயற்சிகள் தபஉத் தாபிஈன்களது காலத்தில் சிறப்பாக வளர்ச்சி கண்டன. “ஸிஹாஹுஸ் ஸித்தா” எனப்படும் ஆறு ஹதீஸ் கிரந்தங்களும் தொகுக்கப்பட்டமை ஹதீஸ்கலை வரலாற்றில் ஓர் உயரிய பணியாகவும் மைல்கல்லாகவும் அமைந்தது. இக்காலப்பிரிவில் தொகுக்கப்பட்ட ஹதீஸ் கிரந்தங்கள் மிகப் பரவலாக பின்வரும் முறைமைகளைக் கருத்திற் கொண்டே தொகுக்கப்பட்டன :-

- **முஸ்னத்** : ஓர் அறிவிப்பாளர் வேறுபட்ட தலைப்புக்களில் அறிவிக்கும் ஹதீஸ்கள் அனைத்தும் அவரது பெயருக்குக் கீழ் தொகுக்கப்படுவதை இம்முறை குறித்து நிற்கிறது.

- **ஜாமிஉ** : மார்க்கத்தின் எல்லாத் தலைப்புக்களும் உள்ளடக்கப்படும் ஹதீஸ்களின் தொகுப்புக்கள் ஜாமிஉ எனப்படும். ஈமான், அஹ்காம், ஆதாப், தப்ஸீர் போன்ற தலைப்புக்களில் ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டிருக்கும்.

- **முஸன்னப்** : நபி (ஸல்) அவர்களது ஹதீஸ்களுடன் ஸஹாபாக்கள் மற்றும் தாபயீன்களது கருத்துக்களையும் தலைப்பு ரீதியாக உள்ளடக்கியுள்ள கிரந்தங்களாகும்.

- **ரிஸாலா** : ஜாமிஉ நூல்களில் உள்ளடக்கப்படும் தலைப்புக்களில் ஒன்றின் கீழ் உள்ளடங்கும் ஹதீஸ்களின் தொகுப்பை இது குறிக்கும்.

- **ஸுனன்** : மார்க்கத்தின் பெரும்பாலான தலைப்புக்களுடன் தொடர்பான ஹதீஸ்களைத் தொகுத்துத் தரும் நூல் வகையை இது குறிக்கும். சட்டங்கள் தொடர்பான ஹதீஸ்களே இவ்வகை நூல்களில் அதிகம் இடம் பெற்றிருக்கும்.

- **முஸ்தக்ரஜ்** : ஒரு ஹதீஸ் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஹதீஸ் இன்னொரு அறிவிப்பாளர் தொடரையும் கொண்டிருப்பின் அவ்வமைப்பில் ஹதீஸ்களைத் தொகுத்தெடுப்பதை இது குறிக்கும்.

- **மஆஜிம்** : ஒவ்வொரு அறிவிப்பாளரும் தத்தமது ஆசான்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஹதீஸ்கள் ஆசான்களின் பெயர்களது அகரவரிசைப்படி தொகுக்கப்பட்ட கிரந்தங்கள்.

**உலூமுல் ஹதீஸ்**

ஹதீஸ் கலையின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் தபஉத்தாபிஈன்களது காலப்பிரிவில் போலி ஹதீஸ்களிலிருந்து சரியான ஹதீஸ்களை வேறுபடுத்த இஸ்லாமிய அறிஞர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக "உலூமுல் ஹதீஸ்" என்ற தனித்துறையொன்று வளர்ச்சி கண்டது. ஹதீஸ் அறிவிப்பாளர்கள் பற்றி ஆய்வதும், ஹதீஸ்களைத் திறனாய்வு செய்வதும், ஹதீஸ் கலைக்குரிய அடிப்படை விதிகளை வகுப்பதும் ஒரு பெரும் முயற்சியாகத் தொடரப்பட்டபோது இக்கலை உருவாகியது. இதனால் ஹதீஸ் கலையோடு ஒட்டிய பின்வரும் துணைக்கலைகள் வளர்ச்சி கண்டன.

1. அஸ்மாஉர் ரிஜால்
2. இல்முல் ஜரஹ் வத்த.்.தீல்
3. உஸுலுல் ஹதீஸ்

**நவீன காலம்**

நவீன காலத்தில் ஸுன்னா பாதுகாக்கப்படுவதற்கான பலவிதமான முயற்சிகள் துறைசார் அறிஞர்களால் தனியாகவும், கூட்டாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக இஸ்லாத்தின் எதிரிகள் ஸுன்னா மீது கட்டவிழ்த்து விடுகின்ற குற்றச்சாட்டுக்களிலிருந்து அதனைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளைக் கையாள்வது இன்றியமையாத ஒன்றாகிவிட்டது.

ஸுன்னாவைப் பாதுகாப்பதற்கான நவீனகால முயற்சிகளை பின்வருமாறு வரையறுத்துக் கூறலாம் :-

1. சொற்களை வைத்து ஹதீஸ்களை அறிந்து கொள்வதற்கான அகராதிகளை உருவாக்கல். இப்பணியை கீழைத்தேயவாதிகளின் ஒரு குழுவினர் செய்து முடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2. ஹதீஸின் ஆரம்பப் பகுதியை வைத்து ஹதீஸ்களை கண்டறியும் முறைமையை அகரவரிசை முறைப்படி திரட்டல்.

3. பல்வேறுபட்ட ஹதீஸ் கிரந்தங்களை ஒரு தொகுப்பாக கொண்டுவருதல்

4. ஸஹீஹான, ளஈபான ஹதீஸ்களைத் உள்ளடக்கிய கலைக் களஞ்சியங்களை உருவாக்குதல். நவீன கால முஹத்திஸாகக் கருதப்படும் ஷெய்க் நாஸிருத்தீன் அல்பானியுடைய முயற்சிகள் இப்பகுதியில் முக்கியத்துவம் பெறுகின்றன.

5. குறிப்பிட்டதொரு ஹதீஸின் மேலதிகமாக வரும் பகுதிகளைத் திரட்டல். இதனை ஹதீஸ் கலை பரிபாஷையில் "ஸவாஇத்" என்போம்.

6. ஹதீஸ்களைத் திறனாய்வு செய்து, அவற்றின் தராதரத்தை விளக்குதல். உதாரணமாக ஹதீஸ்துறை அறிஞர் சுஐப் அல்அர்னாஊத்தின் தலைமையில் முஸ்னத் அஹ்மதில் வந்துள்ள ஹதீஸ்கள் திறனாய்வுக் குட்படுத்தப்பட்டு ஒவ்வொரு ஹதீஸினதும் தராதரம் விளக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

7. நவீன கால தொழிநுட்ப விருத்தியைக் கருத்திற்கொண்டு அதனூடாகவும் ஸுன்னாவைப் பாதுகாப்பதற்கு இஸ்லாமிய அறிஞர்கள் முற்பட்டனர். பல ஹதீஸ் கிரந்தங்களை சுமந்துள்ள CD களை வெளியிட்டமையை உதாரணமாகக் கூறலாம்.

## ஹதீஸை அடியொட்டி எழுந்த கலைகளும் விளைவுகளும்

**அஸ்மாஉர் ரிஜால்**

முஸ்லிம்கள் அல்லாஹ்வை நேசிப்பது போன்று அவனது தூதரையும் நேசிக்கின்றனர். எனவே, அவர்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர். ஆரம்ப கால முஸ்லிம்கள் ஹதீஸ்களைப் பாதுகாக்க முற்பட்ட போது அவர்கள் ஹதீஸ் அறிவிப்பாளர்களது பெயர்கள், குடும்பங்கள் பற்றிய தரவுகள், பிறந்து வளர்ந்த இடங்கள், குணவொழுக்கங்கள், காணப்பட்ட திறமைகள், அறிவு தேடி மேற்கொண்ட பிரயாணங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பற்றிய பல்வேறு ஒழுக்கங்களையும் திரட்டிப் பாதுகாத்து வைத்தனர். ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட அறிவிப்பாளர்களது வாழ்க்கை வரலாறுகளைச் தொகுத்தெடுத்துள்ள கலையே "அஸ்மாஉர் ரிஜால்" எனப்படுகிறது.

இக்கலை பற்றி ஸ்பிரிங்கர் என்ற மேற்கத்தைய அறிஞர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:- "முஸ்லிம்களைப் போல அஸ்மாஉர் ரிஜால் கலையைக் கண்டுபிடித்த சமுதாயமொன்று இவர்களுக்கு முன்னரும் உலகில் வாழ்ந்ததில்லை. இப்போதும் இல்லை. அவ்வுயர் பணியினால் ஐந்து இலட்சம் பேரின் வரலாறு பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு ஹதீஸை இறுதியாக அறிவிப்பவரிலிருந்து நபி(ஸல்) அவர்கள் வரை அந்த ஹதீஸைத் தொடர்புபடுத்துகின்ற அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறும் ஒவ்வொரு காலப்பிரிவைச் சேர்ந்த அறிவிப்பாளர்களையும் நாம் அந்த வரலாற்றிலே சந்திக்க முடிகிறது. இக்கலையில் ஹதீஸ் அறிவிப்பாளர்கள் பின்வரும் அணியினர்களாகப் (தபகா) பிரிக்கப்பட்டிருக்கின்றனர்.

**ஸஹாபாக்கள்**

ஹதீஸ் அறிவிப்பாளர்களில் ஸஹாபாக்களே முதல் அணியினராக உள்ளனர். நபி(ஸல்) அவர்களது ஹதீஸ்களை இவர்களே முதன்முதலில் பெற்றுக் கொண்டனர். ஹதீஸ் விடயத்தில் இவர்கள் மிக நேர்மையாகவே நடந்து கொண்டனர். "யார் வேண்டுமென்று என் மீது புனைந்துரைக்கிறாரோ அவர் தங்குமிடம் நரகமாகும்." என்ற ஹதீஸை ஸஹாபாக்களும் மனதில் ஆழமாகவே இருத்திக் கொண்டார்கள். ஸஹாபாக்கள் மனிதர்கள் என்ற வகையில் சில தவறுகளைப் புரிந்திருந்தாலும் அவர்கள் அனைவரும் நேர்மையானவர்களாகவே கருதப்படுகின்றனர். "அல்லாஹ்வின் மீது சத்தியமாக நாங்கள் பொய் பேசமாட்டோம், பொய் என்றால் என்ன என்பதையும் நாம் அறியமாட்டோம்." என்ற அனஸ்(ரழி) அவர்களது கருத்து இதற்கு சிறந்த சான்றாகும்.

ஹதீஸ் அறிவிப்பாளர்களான இம்முதல் அணியில் அபூஹுறைரா(ரழி) அவர்கள் 5371 ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள். குறைந்தளவான ஹதீஸ்களை அறிவித்துள்ள ஸஹாபாக்களும் உள்ளனர். இவர்கள் அனைவரும் நேர்மையான வர்களாவர். இவர்களது வரலாறுகளை இக்கலை உள்ளடக்கியிருக்கிறது.

**தாபிஈன்கள்**

ஸஹாபாக்களுக்கு அடுத்த இடத்தில் தாபிஈன்கள் காணப்படுகின்றனர். தாபிஈன்களில் ஷிஹாப் அஸ்ஸுஹ்ரி, ஹிஷாம் இப்னு உர்வா, அதாஇப்னு அபீரபாஹ், ஸஈத் இப்னு ஜுபைர், அபுஸ்ஸினாத் போன்றோர் கடும் சிரமங்களுக்கு மத்தியில் ஹதீஸ்களைத் தொகுத்தெடுத்துப் பாதுகாத்தோராவர். இவர்களைப்போல இன்னும் அதிகமான தாபிஈன்கள் ஸஹாபாக்களிடமிருந்து பாதுகாப்பான முறையில் ஹதீஸ்களை பெற்று அடுத்த சந்ததியிடம் நேர்மையான முறையில் அவற்றை ஒப்படைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

ஸஹாபாக்களது இறுதிக் காலப்பிரிவில் உருவாகிய குழப்ப நிலையால் பல பிரிவுகள் தோற்றம் பெற்றன. இதன் பின்னரே ஹதீஸ்கள் பொய்யாக புனைந்துரைக்கப்பட்டன. அப்போது ஹதீஸ்களை மிகக் கவனமாகக் கையாளும் நிலை உருவாகியது. அறிவிப்பவர்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஹதீஸ்களை ஒப்புக்கொள்வது சாத்தியமில்லாத ஒன்றாகிவிட்டது என இமாம் தஹபீ குறிப்பிடுகிறார்.

### தபஉத் தாபிஈன்கள்

தாபிஈன்களைத் தொடர்ந்து வந்த இவர்கள் ஹதீஸ் கலையைப் பாதுகாப்ப தற்கு உயர்ந்த தொண்டாற்றியுள்ளனர். இக்காலப்பிரிவில் பொய்யர்களின் தொகை அதிகரித்திருந்ததனாலும் பல முரண்பட்ட சிந்தனைப் போக்குடைய இயக்கங்கள் தோற்றம் பெற்றிருந்ததனாலும் ஹதீஸ் கலையின் தூய்மை பாதிப்படையும் நிலை உருவாகியது. இக்காலப்பிரிவிலே ஹதீஸ்களைப் பாதுகாப்பதற்காக பெரும் அறிஞர்களும் உருவாகினர். இவர்கள் ஹதீஸ் அறிவிப்பாளர்களான ராவிகள் பற்றிய முழு விபரங்களையும் ஆராய்ந்தனர். இம்முயற்சியின் விளைவாக ஹதீஸ்களை தூய்மையான முறையில் இனங்கண்டுகொள்ள அவர்களால் முடிந்தது.

தபஉத்தாபிஈன்களில் யஹ்யா இப்னு ஸயீத், அப்துல்லாஹ் இப்னு முபாரக், முஹம்மத் இப்னு ஹஸன் அஷ்ஷைபானி, இப்றாஹீம் போன்றோர் ஹதீஸ்கலையைப் பாதுகாப்பதற்குத் தொண்டாற்றிய மிகப் பெரும் அறிஞர்களாவர்.

இவ்வாறுதான் ஹதீஸ் அறிவிப்பாளர்களது வாழ்வும் வரலாறும் ஆராயப்பட்டிருக்கின்றது. இதனால் பெரிய எண்ணிக்கையைக் கொண்டதொரு அறிவிப்பாளர் குழுவின் வரலாறு பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. அஸ்மாஉர்ரிஜால் எனப்படும் இக்கலை ஹதீஸ்கலையின் தூய்மை பாதுகாக்கப்படுவதற்கு உதவியாக அமைந்தது.

### இல்முல் ஜரஹ் வத் த:.தீல்

அறிவிப்பாளர்களது நற்குணங்கள் தீயகுணங்கள் பற்றி ஆய்வு செய்யும் கலையே இல்முல்ஜரஹ் வத்த:.தீல் ஆகும். "அல்ஜரஹ்" என்றால் அறிவிப்பாளரை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறைகளால் குற்றம் சாட்டுவதாகும். அறிவிப்பாளரது உண்மைத் தன்மையை நிறுவுவதை "அத்த:.தீல்" குறித்து நிற்கிறது. அவரது அறிவிப்பு மூலம் குறிப்பிட்ட ஹதீஸ் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக மாறும்.

அறிவிப்பாளர்களின் குறைகளைத் தேடிப்பிடிப்பதும் பகிரங்கப்படுத்துவதும் புறம்பேசும் பாவமாகக் கருதப்படமாட்டாது என்ற கருத்தை அனைத்து அறிஞர்களுமே ஏற்றுக் கொள்கின்றனர். இப்பணி ஹதீஸைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பணியேயன்றி இது தனிமனிதனை குறைகண்டு அவனது குறைகளை அம்பலப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டதொன்றல்ல. ஒரு செய்தியை உண்மை பேசுகின்ற நம்பிக்கைக்குரியவனிடமிருந்தே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் குர்ஆனும் ஸுன்னாவும் உள்ளன. எனவே, இல்முல் ஜரஹ் வத்த:.தீல் கலை எவ்வித மறுப்புமின்றி அனைத்து அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு இஜ்மாவாகும்.

சில ஸஹாபாக்கள், தாபிஈன்கள் இக்கலையில் அதிக ஈடுபாடு காட்டியுள்ளனர். இமாம் இப்னு அப்பாஸ்(ரழி), இமாம் ஷ.்.பி போன்றோர் அவர்களில் முக்கியமானோர். ஹிஜ்ரி 189 இல் மரணித்த யஹ்யா இப்னு ஸஅத் என்பவர், அறிவிப்பாளர்கள் பற்றிய தனது கருத்துக்களை எழுத்து ரீதியில் கொண்டு வந்த முதல் நபராகக் கருதப்படுகிறார். ஹிஜ்ரி 233இல் மரணித்த யஹ்யா இப்னுமுஈன், ஹிஜ்ரி 241 இல் மரணித்த அஹ்மத் இப்னு ஹன்பல் போன்றோரது காலகட்டத்தில் இக்கலை அதன் உச்ச நிலையை அடைந்திருந்தது.

அறிவிப்பாளர்களது ஊர்ஜிதத் தன்மை பற்றிய ஆய்வில் ஈடுபடுவோர் சில வரையறைகளையும் அடிப்படைகளையும் பேணுகின்றனர். அவற்றிற் சில மிகச் சுருக்கமாகத் தரப்படுகின்றன.

1. அறிவிப்பாளரது நம்பகத்தன்மையை ஏற்றுக்கொள்கின்ற போது ஏற்றுக் கொண்டதற்கான காரணங்களை விளக்கிக் கூறவேண்டிய தேவை இல்லை. மாற்றமாக அறிவிப்பாளரை குறை காணும்போது அதற்கான காரணத்தை தெளிவாகக் குறிப்பிடவேண்டும். உதாரணமாகக் பொய்யர், பொடுபோக்கானவர் என்று குறிப்பிடவேண்டும்.
2. பொடுபோக்கு, மனனசக்தியில் குறைபாடு போன்ற காரணங்களும் அறிவிப்பாளரது குறைகளில் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. அறிவிப்பாளர் மிகப் பெரிய தக்வாவுடையவராக இருப்பினும் இப்பண்பு களைப் கொண்டிருப்பின் ஹதீஸ் அறிவிப்புக்கு தகுதியற்றவராகவே கருதப்படுவார். இமாம் மாலிக் பின்வருமாறு கூறுவார் : "எத்தனையோ அறிவிப்பாளர்களுடைய அறிவிப்புக்களை நாம் மறுக்கிறோம். ஆனால், மறுமையில் அவர்களுடைய ஷபாஅத்தை எதிர்பார்க்கிறோம்."
3. அறிவிப்பாளரை இனம்காண்பதற்கு ஒரு நபர் போதும் என்று சில அறிஞர்களும் குறைந்தது இருவர் தேவை என இன்னும் சிலரும் கருதுகின்றனர்.

அறிவிப்பாளர்கள் பற்றிய ஆய்வுகள் புத்தகங்களாக தொகுக்கப்பட்டுள்ளன. இமாம் புஹாரியுடைய அத்தாரீகுல் கபீர், இமாம் தஹபீயுடைய மீஸானுல் இ.்.திதால், ஸியரு அ.்.லாமின் நுபலா போன்றவை அவற்றில் முக்கியமானவை.

**முஸ்தலஹுல் ஹதீஸ்**

முஸ்தலஹுல் ஹதீஸ் எனப்படும் இக்கலை முஸ்லிம் அறிஞர்கள் உருவாக்கிய முக்கியமானதொரு கலையாகும். அறிவிப்புக்களின் ஊர்ஜிதத் தன்மையை அறிவதற்கு அறிஞர்கள் முன்வைத்த நிபந்தனைகள், அடிப்படைகளை உள்ளடக்கியதே இக்கலையாகும்.

இக்கலையின் தோற்றத்தின் மூலம் நிபந்தனைகளுக்கும் அடிப்படைகளுக்கு மேற்ப ஹதீஸ்கள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவற்றின் ஊர்ஜிதத் தன்மையையும் குறைகளையும் விளக்குவதற்காக பரிபாஷை ரீதியான சொற்கள் அறிமுகப்படுத்தப் பட்டன. ஸஹீஹ், ளஈப், முஸ்னத், முத்தஸில், மர்பூ.:., மவ்கூப், முர்ஸல், முன்கதி.:., மக்லூப், மு.:.ளல், முஅல்லக், கரீப் போன்ற இன்னும் பல சொற்கள் ஹதீஸ் துறை அறிஞர்களால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டு ஹதீஸ்களும் அவற்றிற்கேற்ப பிரிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்டதொரு ஹதீஸ் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா மறுக்கப்படக் கூடியதா? என்பதை கலைச் சொல்லினூடாக அறிஞர்கள் இலகுவாக விளக்கிக் கூறுவர்.

தகவல்களை ஊர்ஜிதப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட இக்கலை பற்றி நவீன காலத்தில் மிக அதிகமாகவே பேசப்படுகின்றது. மேற்கத்தைய அறிஞர்கள் கூட வரலாற்றுத் தகவல்களை நிறுவ இவ்வழிமுறையை கையாள்கின்றனர். அமெரிக்கா பல்கலைக்கழகத்தின் வரலாற்றாசிரியரான அஸத் ருஸ்தம் இக்கலை பற்றி, “ஐரோப்பிய, அமெரிக்க வரலாற்றறிஞர்களால் பல நூற்றாண்டுகள் கடந்தும் இதனை ஒத்ததொரு கலையை உருவாக்க முடியாமல் போய்விட்டது.” எனக் குறிப்பிடுகிறார்.

ஹதீஸ்களுடைய தராதரத்தை அறிவதற்காக ஹதீஸ்துறை அறிஞர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகளையும் அடிப்படைகளையும் அறிந்து கொள்ளும் ஒருவர் அதாவது, உஸுலுல் ஹதீஸ் துறையை படித்துப்பார்ப்பவர் ஹதீஸ்களைப் பாதுகாக்கும் முயற்சியில் எமது அறிஞர்களது முயற்சியைக் கண்டு ஆச்சரியப்படுவார் என்பதில் ஐயமில்லை.

## ஹதீஸை விளங்குதல்

### ஹதீஸ் முழு வாழ்க்கைக்குமான வழிகாட்டி

நபி(ஸல்) அவர்களுடைய சொல், செயல், அங்கீகாரம் என்பன மனிதனது வாழ்வின் அனைத்துப் பகுதிகளுடனும் சம்பந்தப்பட்டுள்ளன. தனிமனித வாழ்வு, குடும்பவாழ்வு, சமூகம் இஸ்லாமிய அரசு என்று அனைத்துப் பகுதிகளுக்கும் சுன்னா வழிகாட்டி நிற்கிறது.

மனித வாழ்வுக்குத் தேவையான அடிப்படைகளை குர்ஆன் முன்வைத்துள்ள அதேநேரம், ஸுன்னா அவற்றை மிகவிரிவாக நடை முறைரீதியாக விளக்கியுள்ளது. அல்லாஹ், மலக்குமார்கள், வேதங்கள், தூதர்கள், மறுமைநாள், கழா கத்ர் போன்ற நம்பிக்கைப் பகுதிகளை ஸுன்னா விரிவாக விளக்குகிறது.

மனிதன் மரணித்ததன் பின் இடம்பெறும் கப்று வாழ்க்கை மற்றும் மறுமை நாள் பற்றிய ஹதீஸ்கள் அதிகமாகவே வந்துள்ளன. மார்க்கத்தின் இன்னோர் அடிப்படையான வணக்க வழிபாடுகள் பற்றி ஸுன்னா விரிவாகப் பேசுகின்றது. குறிப்பாக தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் போன்ற பாடங்களை ஒரு முஸ்லிம் ஸுன்னாவைப் புறக்கணித்து விட்டு விளங்கிக் கொள்ள முடியாது. கடமையான ஐவேளைத் தொழுகை, ரமழான் நோன்பு, கடமையான ஸகாத் போன்றவற்றிற்கு மேலாக ஸுன்னத்தான தொழுகைகள், ஸுன்னத்தான நோன்புகள், ஸதகாக்கள் போன்றவற்றையும் ஸுன்னா அதிகமாக வலியுறுத்துகிறது.

தொழுகையின் ஆரம்ப கட்டங்களான சுத்தம், வுழு., குளிப்பு, தயம்மும் போன்றவற்றையும் அதான், இகாமத், கூட்டுத்தொழுகை, இமாம், தொழுகை நேரங்கள், ருகூன்கள், ஸுன்னத்துகள், முறிப்பவைகள் போன்றவற்றையும் ஹதீஸ் நூல்கள் தலைப்புக்களாகக் கொண்டிருக்கின்றன. கியாமுல் லைல், ஸலாதுல் ழுஹா, ஜமாஅத்துடன் தொழ முடியுமானவை, முடியாதவை போன்ற தலைப்புக்களையும் அவை உள்ளடக்கியுள்ளன. இவ்வாறு வணக்க வழிபாடுகளில் ஒவ்வொரு பகுதிக்குமான வழிகாட்டல்கள் ஸுன்னாவில் அதிகமாகவே இருக்கின்றன.

இஸ்லாமியப் பண்பாடுகளை ஸுன்னா அதிகமாக வலியுறுத்துகிறது. உண்மை, அமானிதம், கொடை, துணிவு, நம்பிக்கை, வெட்கம், மென்மை, இரக்கம் காட்டல், நீதி, நன்மை செய்தல், பணிவு, பொறுமை, கோபத்தின் போது நிதானம், மன்னித்தல், பெற்றோருக்கு உபகாரம் செய்தல், குடும்ப உறவை பேணி நடத்தல், அயல் வீட்டாரை கண்ணியப்படுத்தல் இவ்வாறு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல பண்பாடுகளை ஸுன்னா மிகவிரிவாகப் பேசுகிறது.

இறைவனோடு தொடர்புபடும் ஆன்மீகப் பண்பாடுகளையும் ஸுன்னா கூறுகிறது. அல்லாஹ் மீது அன்பு வைத்தல், அவனிடம் தவக்குல் வைத்தல், இஹ்லாஸுடன் நடத்தல், அவனது இரக்கத்தை எதிர்பார்த்தல், அவனது தண்டனைக்குப் பயப்படல், அவனது நாட்டத்தில் திருப்தியுறல், சோதனைகளில் பொறுமையாயிருத்தல், அருள்களுக்கு நன்றி செலுத்துதல் என்று இப்பகுதி நீண்டு செல்கிறது.

மனிதன் தனது நாளாந்த வாழ்க்கை கட்டங்களில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் பற்றியும் ஸுன்னா பேசுகிறது. உணவு உண்ணும் போது பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள், நடத்தல், அமர்தல், வாழ்த்துதல், தரிசித்தல், அனுமதி வேண்டுதல், தூங்குதல், எழும்புதல், உடை அணிதல், அலங்காரம், பேசுதல், அமைதியாக இருத்தல் போன்ற கட்டங்களில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்களை ஸுன்னா எமக்குத் கற்றுத் தருகின்றது.

அல்லாஹ்வின் பெயரைக் கூறியே ஒரு முஸ்லிம் சாப்பிட ஆரம்பிக்க வேண்டும், வலது கையால் சாப்பிடவேண்டும், அளவாகச் சாப்பிட வேண்டும், சாப்பிட்டு முடிந்துவிட்டால் அல்லாஹ்வைப் புகழ வேண்டும் என்று ஸுன்னா கற்றுத்தருகிறது.

குடும்ப வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என ஸுன்னா கூறுகிறது. கணவன் மனைவி தெரிவு, திருமணப் பேச்சு, அதன் சட்டங்கள், திருமணம், அதன் ஒழுக்கங்கள், கணவன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகள், மனைவி கணவனுக்கு செய்ய வேண்டிய கடமைகள், தலாக், இத்தா, ளிஹார், பிள்ளைகள் பெற்றோருக்கு செய்ய வேண்டிய கடமைகள், பெற்றோர் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகள், அஜ்னபீ, மஹ்ரமி உறவு என்று குடும்ப வாழ்வின் அனைத்துப் பகுதிகள் பற்றியும் ஹதீஸ்கள் வந்துள்ளன.

பொருளாதார நடவடிக்கை பற்றி ஸுன்னா பேசுகிறது. வாங்குதல், விற்றல் பற்றிய சட்டங்கள், நன்கொடைகள், கடன், முளாரபா, முஷாரகா, இரவல், அடகு, வக்ப் என ஸுன்னா பேசும் இப்பகுதியும் நீண்டு செல்கின்றது.

ஆட்சியாளன் குடிமக்களுக்கிடையிலான தொடர்பு, நிர்வாகம், நீதி போன்ற அரசியல் பகுதிகளும் ஸுன்னாவில் விரிவாக வந்துள்ளன ஸுன்னா ஒரு மனிதனுடைய அனைத்து பகுதிகளுக்கும் அழகாகவும் விரிவாகவும் வழிகாட்டியுள்ளது என்பதை நாம் அதனைப்படித்துப் பார்க்கும்போது அறிந்து கொள்ளலாம்.

## ஹதீஸ் தொகுப்புகள்

**01. ஸஹீஹுல் புஹாரி**

உலக முஸ்லிம்களால் குர்ஆனை அடுத்து அதிகமாக போற்றப்படுகின்ற புத்தகம் ஸஹீஹுல் புஹாரியாகும். இமாம் முஹம்மத் இப்னு இஸ்மாஈல் ஹரம் ஷரீபில் வைத்து ஆரம்பித்து 16 வருடங்களாக திரட்டி புஹாராவில் முடிவுபெற்ற இத்திரட்டு 7275 ஹதீஸ்களை உள்ளடக்கியுள்ளது. இமாம் புஹாரி ஹதீஸ்களை பதிவு செய்ய முன் இரண்டு ரக்அத்துகள் தொழுதுவிட்டே பதிவு செய்பவராக இருந்தார்.

ஸஹீஹ் புஹாரி 97 தலைப்புக்களையும் 3450 கிளைத் தலைப்புக்களையும் உள்ளடக்கியிருக்கின்றது. இவர் முன்வைத்த தலைப்புக்களும் கிளைத் தலைப்புக்களும் ஆழமான கருத்தையும் சட்டத் தீர்ப்புக்களையும் உள்ளடக்கி யிருப்பதாக ஹதீஸ் துறை அறிஞர்கள் கருதுகின்றனர். ஸஹீஹ் புஹாரிக்கு கிட்டத்தட்ட 82 விளக்கவுரைகள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமானவையாக பின்வருவனவற்றைக் கருத முடியும் :-

(அ) பத்ஹுல்பாரி - இப்னு ஹஜர் அல்அஸ்கலானி
(ஆ) உம்ததுல் காரீ - மஹ்மூத் இப்னு அஹ்மத் ஐனீ
(இ) இர்ஷாதுஸ் ஸாரீ - அஹ்மத் இப்னு அபீபக்ர் கஸ்தலானி
(ஈ) துஹ்பதுல் பாரீ - ஸகரிய்யா அன்ஸாரீ
(உ) அல்முப்ஹிம் - குர்துபீ

**02. ஸஹீஹ்முஸ்லிம்**

ஸஹீஹுல் புஹாரிக்கு அடுத்ததாக மிக நம்பகமான புத்தகமாக ஸஹீஹ் முஸ்லிம் கருதப்படுகிறது. ஸஹீஹ் முஸ்லிமில் திரும்பத்திரும்ப வந்துள்ள ஹதீஸ்களை நீக்கிப் பார்த்தால் கிட்டத்தட்ட 4000 ஹதீஸ்களை அது கொண்டுள்ளதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஸஹீஹுல் புஹாரியில் பதிவாகியுள்ள பல ஹதீஸ்கள் இக்கிரந்தத்தில் பதிவாயிருப்பினும் அவற்றில் பெரும்பாலானவை வித்தியாசமான அறிவிப்பாளர் வரிசையைக் கொண்டமைந்திருக்கின்றன. இமாம் புஹாரி ஹதீஸ்களுக்கு தலைப்பிட்டது போன்று இமாம் முஸ்லிம் இடவில்லை.

ஸஹீஹ் முஸ்லிமுக்கு பல விளக்கவுரைகள் எழுதப்பட்டிருப்பினும் மிக முக்கிய மானவை வருமாறு :-

1. அல்மின்ஹாஜ் பீ ஷரஹி முஸ்லிம் - இமாம் நவவீ
2. அத்தீபாஜ் அலா ஸஹீஹ் முஸ்லிம் - இமாம் ஸுயூதி
3. அல்ம.்.லம் பீ பவாஇதி கிதாபி முஸ்லிம் - முஹம்மத் இப்னு அலீ

### 03. ஸுனன் அபீதாவூத்

இருபது வருடங்களாக தர்ஸீஸில் தங்கியிருந்த போது தான் இமாம் அபூதாவூத் தனது நூலைத் தொகுத்தார். சுமார் 5 இலட்சம் ஹதீஸ்களிலிருந்து 4800 ஹதீஸ்களை மாத்திரம் தேர்ந்தெடுத்து இவர் ஒவ்வோர் அத்தியாயத்திலும் ஒன்று அல்லது இரண்டு ஹதீஸ்களுடன் நிறுத்திக்கொண்டார். இதனை விளக்கும் வகையில் மக்காவிலிருந்த அறிஞர்களுக்கு கடிதம் எழுதினார். ஒவ்வோர் அத்தியாயத்திலும் ஒன்று அல்லது இரண்டு ஹதீஸ்களுக்கு மேல் இணைக்க வில்லை. இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடியவாறே இவ்வாறு அமைத்ததாகவும் மேலதிகமாகக் கொடுப்பது தேவைக்கு மிஞ்சியதாயிருக்கும் என்றும் அவர் கூறுவார்.

இவரது வாழ்நாளிலேயே இந்நூல் மிகப்பரவலாக பிரபல்யம் பெற்று பயன்படுத்தப்பட்டது. இந்த நூலை தான் அபூதாவூதிடமிருந்து ஆறுமுறை கற்றதாக அலி பின் ஹஸன் குறிப்பிட்டார். இமாம் அபூதாவூத் இத்தொகுப்பில் சேர்த்துக் கொண்ட எல்லா ஹதீஸ்களுமே ஆதாரபூர்வமானவை எனக் கூறிவிட முடியாது. அவரே பலவீனமான ஹதீஸ்களுள் சிலதைச் சுட்டிக்காட்டியுள்ளார். அதே வேளை அவர் பலவீனமானவை எனக் குறிக்காத பல ஹதீஸ்களை அறிஞர்கள் பலவீனமானவை எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். இமாம் அபூதாவூத் பலவீனமான ஹதீஸ்களைக் கொண்டு வந்தமைக்கான பிரதான காரணமாக அறிஞர்கள் பின்வரும் விடயத்தை அடையாளப்படுத்துகின்றனர் :-

பலவீனமான ஒரு ஹதீஸ் மிகப் பலவீனமானதாக இல்லாவிடின் அது அறிஞர்களின் தனிப்பட்ட அபிப்பிராயத்தை விடச்சிறந்ததாகும் என்பது இமாம் அபூதாவூதின் கருத்தாகும் - ஆரம்பகால அறிஞர்களது அபிப்பிராயங்களை விட பலவீனமான ஹதீஸ்களைத் தொகுப்பது நல்லதென அவர் கண்டார். ஸுனன் அபூதாவூதிற்கு ஏராளமான விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கிய விளக்கவுரைகள் வருமாறு :-

1. மஆலிமுஸ் ஸுனன் - இமாம் கத்தாபி
2. அவ்னுல் ம.்.பூத் - அலீம் அபாதி
3. பத்லுல் மஜ்ஹூத் பீ ஹல்லி ஸுனன் அபீதாவூத் - ஷெய்க் கலீல் அஹ்மத்

### 04. ஸுனனுத் திர்மிதீ

ஹிஜ்ரி 209 இல் பிறந்த இமாம் திர்மிதி ஹதீஸ் கற்றலுக்கான தனது பயணத்தை சுமார் ஹி.235 இல் ஆரம்பித்து தனது சொந்த பிரதேசமான குராஸானை

250ற்கு முன் வந்து சேர்ந்தார். இதன் பின்னரே அவர் தனது ஆக்கத்தை தொகுக்கலானார். இவரது மிகப் பிரசித்தி பெற்ற நூலாக ஸுனனுத் திர்மிதி அல்லது அல்ஜாமிஉ கருதப்படுகிறது. இந்நூலில் மூன்று விடயங்களுக்கு ஆசிரியர் முக்கியத்துவமளித்துள்ளார்:-

(அ) நபிகளாரின் ஹதீஸ்களை ஓர் ஒழுங்குமுறையின் கீழ் தொகுத்திருக்கிறார்.
(ஆ) ஒவ்வொரு விடயம் குறித்து ஆரம்பகால இமாம்களின் சட்டரீதியான கருத்துக்களைத் தொகுத்திருப்பதுடன் அவர்கள் தமது மார்க்கத் தீர்ப்புகளுக்கு பயன்படுத்திய ஹதீஸ்களையே இவர் குறிப்பிட்டுள்ளார்.
(இ) ஹதீஸ்களின் தரம் குறித்து விளக்கமளித்திருக்கிறார்.

இத்தொகுப்பு மொத்தம் 3956 ஹதீஸ்களை உள்ளடக்கியுள்ளது. இவ்ஹதீஸ்கள் 50 உப பிரிவுகளாக (கிதாப்) பிரிக்கப்பட்டுள்ளன. பொதுவாக ஜாமிஉ என்பது எல்லா வகையான ஹதீஸ்களையும் கொண்டமைந்திருக்கும். அதாவது ஸியர், அதப், தப்ஸீர், அகீதா, பிதன், அஹ்காம், மனாகிப் ரிகாக் போன்ற எல்லா தலைப்புக்களையும் ஸுனன் திர்மிதி உள்ளடக்கியிருப்பதால் ஜாமிஉ எனவும் அதற்குப் பெயரிடுவர்.

இமாம் திர்மிதீ தலைப்பை குறிப்பிட்டு பின் ஒன்று அல்லது இரண்டு ஹதீஸ்களைக் குறிப்பிடுவார். பின்னர் ஹதீஸ்களின் தரம் குறித்த தனது அபிப்பிராயத்தை விளக்குவார். இதற்கென அவர் முன்னைய அறிஞர்களால் பயன்படுத்தப்படாத சில குறியீட்டுப் பிரயோகங்களை பயன்படுத்தியுள்ளார். அத்துடன் ஆரம்பகால இமாம்களுடைய கருத்துக்களையும் கொண்டுவருவார். இதற்கு மேலாக வேறு தோழர்கள் ஏதும் ஹதீஸ்களை அறிவிப்புச் செய்திருப்பின் அவற்றையும் அறிவிப்பார். ஸுனன் திர்மிதிக்கு பல விளக்கவுரைகள் எழுதப்பட்டுள்ளன. அப்துர் ரஹ்மான் முபாரக்பூரி எழுதிய "துஹ்பத் அல் அஹ்வதீ" அவற்றுள் மிகவும் சிறந்ததாகும்.

### 05. ஸுனன் இப்னு மாஜா

ஸுனன் இப்னுமாஜா கிரந்தம் மிகப் பிரசித்தி வாய்ந்தது. பிற்காலத்தில் ஸிஹாஹுஸ் ஸித்தா என வழங்கப்பட்ட ஆதாரபூர்வமான ஆறு ஹதீஸ் கிரந்தங்களுள் ஒன்றாக இதுவும் கொள்ளப்பட்டது. இதனால் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள ஹதீஸ்கள் அனைத்துமே ஆதாரபூர்வமானவை என்பது கருத்தல்ல.

இமாம் இப்னு மாஜாவின் இத்தொகுப்பு 4341 ஹதீஸ்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் 3002 ஹதீஸ்களை ஏனைய ஐந்து ஸஹீஹ் தொகுப்புக்களிலும் கண்டு கொள்ளலாம். அந்த ஹதீஸ்களை ஏனைய ஐவரும் அல்லது ஒருவராவது பதிவு

செய்துள்ளார்கள். இப்னு மாஜா ஏனைய ஐவருள் எவரும் இணைத்துக் கொள்ளாத 1339 ஹதீஸ்களை மாத்திரமே இணைத்துள்ளார். இந்த 1339 ஹதீஸ்களுள் 428 ஹதீஸ்கள் ஆதாரபூர்வமானவை. 199 “ஹஸன்” எனும் தரத்தில் உள்ளவை 613 பலவீனமான இஸ்னாத்களை கொண்டன 99 முன்கர் அல்லது மக்தூஉகளாகும்.

அபூதாவூத், திர்மிதீ போன்ற அறிஞர்களும் பலவீனமான ஹதீஸ்களை தமது கிரந்தங்களில் உள்ளடக்கியுள்ளனர். எனினும் அவற்றை அவர்கள் குறிப்பிட்டுக்காட்டியுள்ளார். ஆனால், இப்னு மாஜாவோ பலவீனமான ஒரு ஹதீஸை இணைத்த போதும் அமைதியாக இருந்து விடுகிறார். எனவே, இந்த நூல் குறித்து அறிஞர்களிடையே பெரும் வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. ஸுனன் இப்னு மாஜாவன்றி வேறு பல நூல்கள் ஸிஹாஹ் ஸித்தாவில் இணைத்துக் கொள்ளும் தகுதியுடையன என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

ஸுனன் இப்னு மாஜா குறைவாகவே ஹதீஸ்களை மீட்டிக் கூறுகின்றது. அத்தியாயங்கள், துணை அத்தியாயங்களைப் பொறுத்த வரையில் மிகவும் சிறந்ததோர் முறை கையாளப்பட்டுள்ளது என்பதை ஏராளமான அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது37 அத்தியாயங்களை(கிதாப்)யும் 4341 ஹதீஸ்களையும் கொண்டுள்ளது.

ஸுனன் இப்னு மாஜாவுக்கான விளக்கவுரைகள் குறைவு. “அல்இ∴லாம் பீ ஸுனன்” அவற்றுள் முக்கியமானதாகும்.

**06. ஸுனன் நஸாஈ**

இமாம் நஸாஈயின் மிகப்பிரசித்தி பெற்ற ஆக்கம் அஸ்ஸுனன் அல்முஜ்தபாவாகும். உண்மையில் இது அஸ்ஸுனன் அல்குப்ராவிலிருந்து தேர்ந்து பதிப்பிக்கப்பட்ட ஒரு தொகுப்பாகும். நஸாஈ தனது அஸ்ஸுனன் அல்குப்ராவைத் தொகுத்து ரம்லாவின் கவர்னருக்கு அளித்தபோது, கவர்னர் அத்தொகுப்பிலுள்ள ஹதீஸ்கள் அனைத்துமே ஆதாரபூர்வமானவைதானே என வினவினார். இமாம் நஸாஈ இல்லை என பதில் கூற ஆதாரபூர்வமானவற்றை மாத்திரம் தொகுக்கும்படி கவர்னர் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்றுவதாகவே ஸுனன் அல்முஜ்தபா தொகுக்கப் பட்டது.

இமாம் நஸாஈயின் நூல் ஆரம்பகால அறிஞர்களது கவனத்தைப் பெரிதும் ஈர்த்ததாகத் தெரியவில்லை. நீண்ட காலத்தின் பின் இமாம் ஸுயூதி இதற்கு சிறிய விளக்கவுரையொன்றினை எழுதியுள்ளார். அவ்விளக்கவுரை பல முறை பிரசுரமாகியுள்ளது.

இங்கு நாம் மிகமுக்கிய ஆறு ஹதீஸ் தொகுப்புக்களையே தந்துள்ளோம். இன்னும் பல ஹதீஸ் கிரந்தங்கள் காணப்படுகின்றன. இமாம்களான மாலிக் அஹ்மத் இப்னு ஹன்பல், தபராணி, இப்னுல் அஸீர், ஹைதமீ, ஜலாலுதீன் ஸுயூதி போன்றவர்களது தொகுப்புக்களும் மிகவும் பிரசித்திபெற்றவையாகும்.

## ஹதீஸை அணுகுதல்

### பல்வேறு துறைசார் ஹதீஸ்களை விளங்குதல்

இஸ்லாம் பூரணத்துவம் வாய்ந்த மார்க்கமாகும். எனவே, மனிதனது தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கக்கூடிய எல்லாப் பகுதிகளையும் அது பேசவேண்டியிருக்கின்றது. அந்தவகையில், இரண்டாம் மூலாதாரமான சுன்னாவும் இவ்வனைத்துப் பகுதிகளையும் விளக்கிக் கூறியிருக்கின்றது. வெறும் இபாதத்துக்களை மாத்திரம் பேசிவிட்டு மௌனம் சாதிக்காமல் மனிதனது அடிப்படைப் பகுதிகளான பொருளாதாரம், அரசியல், சுகாதாரம் போன்ற பகுதிகளையும் சுன்னா விரிவாகப் பேசுகின்றது. இந்த ஒவ்வொரு பகுதியையும் இங்கு விரிவாக விளக்குவது சாத்தியமற்றது. இப்பகுதிகளில் ஸுன்னாவின் வழிகாட்டல்களை மிகச்சுருக்கமாகத் தருகின்றோம்.

### மருத்துவம் பற்றிய ஹதீஸ்கள்

“அல்லாஹ் நோயையும் பரிகாரத்தையும் சேர்த்தே இறக்கியுள்ளான். ஒவ்வொரு நோய்க்கும் நிவாரணம் உண்டு. எனவே, நிவாரணம் செய்து கொள்ளுங்கள். ஹராமான பொருட்களைக் கொண்டு நிவாரணம் செய்ய வேண்டாம்.” (அபூதாவூத்)

தாரிக் இப்னு ஸுவைத் என்பவர் நபியவர்களிடம் சாராயம் பற்றி வினவினார். அதனை தயாரிப்பதை நபியவர்கள் தடுத்தபோது நோய் நிவாரணத்திற்காகவே அதனை செய்வதாகக் கூறினார். அதற்கு நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள் :- “சாராயம் நோய் நிவாரணியல்ல. மாறாக, அது நோயை ஏற்படுத்தக் கூடியது.” (முஸ்லிம்)

நபியவர்கள் பின்வருமாறு கூறுவதை தான் செவிமடுத்ததாக அபூ ஹுரைரா(ரழி) பின்வருமாறு அறிவிக்கின்றார்கள். “மரணத்தைத் தவிர கருஞ்சீரகத்தில் அனைத்து நோய்க்குமான நிவாரணி இருக்கிறது.” (புஹாரி)

ஆபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “உங்களுடைய குடிபானத்தில் ஈ விழுந்து விட்டால் முழுமையாக

அமிழ்த்திவிட்டு வீசிவிடுங்கள். அதன் ஒரு இறகில் நோயும் அடுத்த இறகில் அதற்கான நிவாரணியும் இருக்கின்றது.” (புஹாரி)

யாராவது ஒருவர் நபியவர்களிடம் தனது தலையில் வலி இருப்பதாக முறையிட்டால்; இரத்தம் குத்தி (ஹிஜாமா) எடுக்கும் படியும் காலில் ஏதாவது வலியை முறைப்பட்டால் மருதானி இடும் படியும் பணிப்பார்கள். (அபூதாவூத்)

மருத்துவம் சம்பந்தமான இவ்வாறான பல ஹதீஸ்கள் வந்துள்ளன. இவ்வாறான ஹதீஸ்களுடைய விளக்கங்களை ஆழமாகப் பார்க்கும் போது நபியவர்கள் எவ்வளவு நுணுக்கமான மருத்துவ முறைகளை அறிமுகப்படுத்தி யிருக்கிறார்கள் என்பது புலப்படுகிறது.

**அரசியல்**

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : “உங்களில் மூன்றுபேர் ஒரு பயணத்திற்காக வெளியேறிவிட்டால், அவர்களில் ஒருவரை தலைவராக நியமித்துக் கொள்ளட்டும்” (அபூதாவூத்)

“யார் எந்தவொரு பைஅத்தும் செய்யாத நிலையில் மரணிக்கின்றாரோ, அவர் ஜாஹிலிய்ய மரணத்தையே அடைந்து கொள்கிறார்.” (முஸ்லிம்)

“அல்லாஹ் மீது ஆணையாக இப்பணிக்கு (இமாமத்) அதனைக் கேட்டுப்பெற முயல்கின்றவனை அல்லது ஆவலுடன் இருப்பவனை நாம் பொறுப்பாளனாக நியமிக்கமாட்டோம்.” (புஹாரி, முஸ்லிம்)

“படைப்பாளனுக்கு மாறுசெய்யும் விடயங்களில் படைப்பினங்களுக்கு கட்டுப்படக்கூடாது.” (புஹாரி, முஸ்லிம்)

“யார் ஒரு ‘திம்மி’யை துன்புறுத்துகிறானோ மறுமையில் நான் அவனுக்கு எதிராக வாதிடுவேன்” (அபூதாவூத்)

**பொருளாதாரம்**

“வட்டி சாப்பிடுபவன், அதனை எழுதுபவன், சாட்சியாளன், பொறுப்பாளன் ஆகியோரை அல்லாஹ் சபித்துள்ளான்.” (முஸ்லிம்)

“பிழையான வழியில் செல்பவனைத் தவிர வேறுயாரும் பொருட்களை பதுக்கி வைக்கமாட்டார்கள்.” (அபூதாவூத்)

“மூன்று விடயங்கள் முஸ்லிம்களுக்கு பொதுவானவை. மேய்ச்சல் நிலம், நீர், நெருப்பு.” (அபூதாவூத்)

“யார் தரிசு நிலத்தை பண்படுத்துகிறாரோ அது அவருக்குச் சொந்த மானது.” (திர்மிதி)

“உண்மை பேசும் வியாபாரி நபிமார்கள், உண்மையாளர்கள், ஷுஹதாக்களோடு மறுமையில் எழுப்பப்படுவார்.” (திர்மிதி)

### விஞ்ஞானம்

“உடம்பினுள் ஒரு சதைப்பிண்டம் இருக்கிறது. அது சீர்பெற்றால் முழு உடம்புமே சீர் பெற்றுவிடும். அது கெட்டுவிட்டால் முழு உடம்புமே சீர்கெட்டுவிடும். அதுதான் உள்ளமாகும்.” (புஹாரி)

“எனது சமூகத்திற்கு நான் கஷ்டம் கொடுப்பதை கருத்திற் கொள்ளாமல் இருந்திருந்தால், ஒவ்வொரு தொழுகையின் போதும் பல்சுத்தம் செய்யுமாறு ஏவியிருப்பேன்.” (புஹாரி)

“நோன்பு நோற்று சுகதேகியாக இருங்கள்.” (தபராணி)

“ஆதமுடைய மகன் படைக்கப்பட்ட, பொருத்தப்பட்ட அஜ்புத்தனபைத் தவிர அவனுடைய ஏனைய அனைத்து பகுதிகளையும் பூமி சாப்பிட்டுவிடும்.” (முஸ்லிம்)

“ஜல்லாலா விலங்குகளுடைய இறைச்சியை உண்பதையும் அவற்றின் பாலை குடிப்பதையும் அல்லாஹ்வின் தூதர் தடுத்துள்ளார்கள்.” (திர்மிதி)

“ஹஜ் செய்பவராக அல்லது உம்ரா செய்பவராக அல்லது அல்லாஹ்வின் பாதையில் போராடுபவராகவன்றி கடலில் பயணிக்க வேண்டாம். கடலின் கீழ் நெருப்பிருக்கின்றது. நெருப்பின் கீழ் கடலிருக்கின்றது.” (அபூதாவூத்)

**சூழல் பாதுகாப்பு**

"ஒரு முஸ்லிம் ஏதாவதொரு பயிரை நட்டி அதிலிருந்து ஒரு பறவை அல்லது ஒரு மனிதன் அல்லது ஒரு கால்நடை சாப்பிட்டாலும் அவனுக்கு ஸதகாவுடைய நன்மையை அது ஈட்டித்தருகிறது." (புஹாரி, முஸ்லிம்)

"அல்லாஹ் அழகானவன். அழகை விரும்புகிறான். அவன் நல்லவன். நல்லதை விரும்புகிறான். அவன் சுத்தமானவன். சுத்தத்தை விரும்புகிறான். உங்களுடைய முற்றங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். யூதர்களைப் போன்றிருக்க வேண்டாம்." (திர்மிதி)

அபூபர்ஸா (ரழி) ஒரு முறை நபியவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே பயனடையக் கூடிய ஏதாவதொன்றை எனக்குக் கற்றுத்தாருங்கள்" எனக் கூறியபோது நபியவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள் : "முஸ்லிம்களது பாதையில் இருக்கக் கூடிய இடைஞ்சல் தரக்கூடியவைகளை நீக்கிவிடு." (முஸ்லிம்)

"நாய்கள் ஒரு சமூகமாக இல்லாவிட்டால் அவற்றைக் கொல்லும்படி ஏவியிருப்பேன்." (அபூதாவூத்)

"ஓடாமல் தேங்கியிருக்கும் நீரில் உங்களில் யாரும் சிறுநீர் கழித்துவிட வேண்டாம்." (புஹாரி)

இங்கு சில ஹதீஸ்கள் மாத்திரமே தரப்பட்டுள்ளன. ஸுன்னா முன்வைக்கும் பொருளாதாரம், அரசியல், சூழல் பாதுகாப்பு போன்ற பகுதிகள் மிகவிரிவாக அலசி ஆராயப்பட வேண்டியவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# துணை மூலாதாரங்கள்

## இஜ்திஹாத்

### பத விளக்கமும் பிரயோக விளக்கமும்

"ஜுஹ்த்" அல்லது "ஜஹ்த்" எனும் சொல்லிலிருந்தே 'இஜ்திஹாத்' எனும் சொல் பிறந்திருக்கிறது. "ஜுஹ்த்" என்றால் மொழியில் முயற்சியை செலவிடல் என்பது பொருளாகும். "ஜஹ்த்" என்ற சொல்லுக்கு சிரமங்களை சகித்தல் என்பது பொருளாகும். எனவே, மொழியில் 'இஜ்திஹாத்' எனும் பதம் ஏதேனும் ஒரு செயற்பாட்டுக்காக முழு முயற்சியையும் செலவிடல் எனும் கருத்திலேயே பயன்படுத்தப்படுகிறது. ஒரு செயற்பாட்டுக்காக முயற்சியை செலவிட வேண்டியிருப்பின் அதற்காக சிரமப்பட வேண்டியிருப்பின் அதனையே மொழியில் "இஜ்திஹாத்" என்பர் மாற்றமாக, சிரமமின்றி ஒரு பணியை மேற்கொள்ள முடியுமாக இருப்பின் அதற்காக செலவிடப்படுகின்ற முயற்சியை 'இஜ்திஹாத்' என மொழியில் கூறுவதில்லை.

பிரயோகத்தில் "இஸ்தின்பாத்" மூலமாக நடைமுறை சார்ந்த ஷரீஆ சட்டம் ஒன்றைப் பெறுவதற்கு முயற்சியை செலவிடல் என்பதனையே "இஜ்திஹாத்" என்பது குறித்து நிற்கின்றது.

"இஜ்திஹாத்" எனும் சொல்லுக்கு ஷரீஆ பிரயோகத்தில் தரப்படும் வரை விலக்கணம் நன்கு புரியப்படுவது அவசியமாகும்.

- ❖ முயற்சியை செலவிடல் என்பதிலிருந்து அரைகுறை முயற்சி இஜ்திஹாதாகக் கருதப்படமாட்டாது. தன்னால் இனிமேலும் செலவிடு வதற்கு சக்தி இல்லாத அளவுக்கு குறிப்பிட்ட விடயத்தில் முழு முயற்சியையும் செலவிட்டிருத்தலைத்தான் இஜ்திஹாத் என்பது குறிக்கும் என்ற கருத்து உணர்த்தப்படுகின்றது.
- ❖ "ஷரீஆ" சட்டம் என்பதனூடாக மொழி ரீதியான, பகுத்தறிவு ரீதியான, புலன் உணர்வுகளை சார்ந்த அம்சங்களில் ஒருவர் ஆய்வு மேற்கொள்ளும் போது அவ்வாய்வு இஜ்திஹாத் என பிரயோகத்தில் கருதப்படுவதில்லை என்பது உணர்த்தப்படுகிறது.
- ❖ "நடைமுறை சார்ந்த" என்பதனூடாக அறிவு சார்ந்த அதாவது நம்பிக்கை சார்ந்த சட்டங்களைப் பெறுவதற்கு மேற்கொள்ளப்படும்

முயற்சியானது சட்ட அறிஞர்களிடையே இஜ்திஹாதாக கருதப்படுவதில்லை என்பது உணர்த்தப்படுகின்றது.

❖ “இஸ்தின்பாத்” என்பதன் மூலம், நேரடியாக சட்ட வசனங்களிலிருந்து சட்டங்களைப் பெறுவதற்கு அல்லது சட்டப் பிரச்சினைகளை மனனமிடுவதற்கு அல்லது ஒரு முப்தியிடம் சட்டத் தீர்ப்புகளைத் தெரிந்து கொள்வதற்கு அல்லது நூல்களில் சட்டப் பிரச்சினைகளைப் படித்து தெரிந்து கொள்வதற்கு பிரயோகத்தில் “இஜ்திஹாத்” எனும் சொல் பயன்படுத்தப்படுவதில்லை என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலே விளக்கியவற்றில் இருந்து ஒரு சட்ட அறிஞன் நடைமுறை சார்ந்த ஒரு பிரச்சினைக்கு தீர்வைப் பெறுவதற்காக தனது முழு முயற்சியையும் செலவிடுதல் பிரயோகத்தில் “இஜ்திஹாத்” எனப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

## இஜ்திஹாதின் அவசியம்

“இஜ்திஹாத்” பர்ளு கிபாயாவாகும் என்ற கருத்தை இஸ்லாமிய அறிஞர்கள் கொண்டிருப்பதானது சமூகத்தில் இஜ்திஹாத் எல்லாக் காலங்களிலும் இடம்பெற வேண்டும் என்பதையும் அதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ளுதல் முழு முஸ்லிம் சமூகத்தினதும் கடமை என்பதையும் உணர்த்துகின்றது.

நவீன உலகில் இஜ்திஹாத் அவசியம் என்பதை விளக்க இங்கு சில உதாரணங்கள் தரப்படுகின்றன :-

❖ நவீன உலகில் பலவகையான காப்புறுதி நிறுவனங்கள் காணப்படுகின்றன. இந்நிறுவனங்களைப் பற்றிய இஸ்லாத்தின் கருத்து என்ன?

❖ தற்காலத்தில் நாம் காண்கின்ற பல்வகையான வங்கிகள், அவற்றில் மேற்கொள்ளப்படும் வைப்புக்கள், வங்கித் தொழிற்பாடுகள் பற்றிய இஸ்லாத்தின் தீர்ப்பு யாது?

❖ தொலைபேசி, பெக்ஸ், டெலெக்ஸ் என்பவற்றினூடாக மேற்கொள்ளப்படும் வியாபாரம் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு யாது?

❖ உறுப்புக்களைப் பொருத்துதல் சம்பந்தமாக இஸ்லாத்தின் தீர்ப்பு யாது?

❖ ஒருவர் தனது மரணத்தின் பின்னர் தன் உடம்பை மருத்துவ பீடத்துக்கு தர்மம் செய்துவிடுமாறு கூறுவதை அனுமதிக்கலாமா?

ஏற்கனவே நாம் தந்துள்ளவை அனைத்துமே நவீன உலகில் தோற்றம் பெற்றுள்ள வினாக்களாகும். முன்னைய இமாம்கள் இப்பிரச்சினைக்கு பதில் சொல்லியிருக்கமாட்டார்கள். ஏனெனில், இப்பிரச்சினைகள் அவர்களது காலத்தில் இருக்கவில்லை. எனவே, நவீன உலகில் வாழும் முஜ்தஹிதுகள் இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வை முன்வைக்க கடமைப்பட்டுள்ளனர். இஜ்திஹாத் இடம் பெறும் போதுதான் இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும்.

இஜ்திஹாத் பணியை நவீன பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்வதோடு சுருக்கிவிட வேண்டிய அவசியம் கிடையாது. எமது பிக்ஹ் நூல்களில் காணப்படுகின்ற பல்வேறு வித்தியாசமான முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ள பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் அவற்றுள் இக்காலப்பகுதிக்கு மிகவும் பொருத்தமான முடிவைத் தெரிவு செய்வதற்கும் இஜ்திஹாத் மேற்கொள்ளப்பட வேண்டும்.

முஜ்தஹிதுகள் தனித்தனியாக இஜ்திஹாதை மேற்கொள்வது அவசியமாக இருப்பது போல கூட்டாகவும் அவர்கள் இஜ்திஹாதை மேற்கொண்டு நவீன சமூகத்துக்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்க வேண்டிய தேவை இருக்கிறது.

இஸ்லாம் உயிரோட்டத்துடன் உள்ளது, அது காலம் கடந்ததல்ல, எக்காலத்துக்கும் அது ஏற்றது என்ற கருத்தை மக்கள் ஏற்க வேண்டுமாயின் இஜ்திஹாத் பணியைத் தொடர்வது அவசியமாகும். இஸ்லாம் எக்காலத்துக்கும் ஏற்றது என்ற கருத்தை நிறுவுவதில் இஜ்திஹாதின் பணி மிகமிக முக்கிய மானதாகும்.

## தகைமைகளும் வகைகளும்

இஜ்திஹாத் எனும் பணியை நிறைவேற்றும் தகுதி அனைவருக்கும் இருப்பதாக சிலர் நினைப்பதுண்டு. உண்மையில் அவ்வெண்ணம் தவறானதாகும். இப்பணியை யாரும் களங்கப்படுத்திவிடக்கூடாது எனும் நன்நோக்கில் இஸ்லாமிய அறிஞர்கள் அதற்குரிய தகைமைகளை நிர்ணயித்துள்ளனர். அவை பின்வருமாறு :-

1. அல்குர்ஆன் பற்றிய அறிவு (சட்ட வசனங்கள், அஸ்பாபுந் நுஸூல், நாசிக் மன்சூக் பற்றிய அறிவு. பொதுவாக, அல்குர்ஆனைப் பற்றிய பரந்த அறிவு)

2. ஸுன்னா பற்றிய அறிவு (உலூமுல் ஹதீஸ், ஹதீஸ் திறனாய்வு கலை, நாஸிக் மன்ஸுக், முரண்பாடான ஹதீஸ்கள், அஸ்பாபு வுரூதில் ஹதீஸ் போன்றன பற்றிய அறிவும் ஸுன்னா பற்றிய பொதுப்படையான பரந்த அறிவும்)
3. அரபு மொழி அறிவு
4. ஏற்கனவே இடம்பெற்றிருக்கும் இஜ்மா∴ பற்றிய அறிவு: (இஜ்மா∴ வான முடிவுகளுக்கு முரணாக தீர்ப்பு சொல்ல முடியாது. இதனாலேயே இந்நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது)
5. உஸுலுல் பிக்ஹ் பற்றிய அறிவு : (சட்ட மூலாதாரங்கள் ஆம்-காஸ், முத்லக்-முகய்யத், மன்தூக் -மப்ஹூம், ழாஹிர்-முஅவ்வல், முஹ்கம்-முதஷாபிஹ் போன்றவற்றைப் பற்றிய அறிவு)
6. ஷரீஆவின் நோக்கங்கள் பற்றிய அறிவு
7. மனிதர்கள் மற்றும் வாழ்க்கை பற்றிய அறிவு
8. நீதி நேர்மையுடையவராகவும் இறையச்சமுடையவராகவும் இருத்தல்.

ஒரு முஜ்தஹித் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டவராக இருக்கும் போதே அவரது பணி சிறக்க முடியும்.

## முஜ்தஹிதுகளின் வகைகள் (படித்தரங்கள்)

(1) **முஜ்தஹித் முத்லக்** : இப்பிரிவில் அடங்கும் முஜ்தஹிதுகளை இரு துணைப்பிரிவுகளில் அடக்கலாம் :-

(அ) முஜ்தஹித் முத்லக் முஸ்தகில் : இவர்கள் மூன்று சிறப்பம்சங்களைக் கொண்டிருப்பர். இஜ்திஹாதுக்கு அடிப்படையாக அமைகின்ற மூலாதாரங்கள் விவகாரத்தில் தீர்மானம் எடுக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பர். மேலும், ஏற்கனவே தீர்வு சொல்லப்பட்டுள்ள பிரச்சினைகளை அறிவதன் மூலம் அவற்றுக்கு ஆதாரமாக கையாளப் பட்டுள்ள அல்குர்ஆன் வசனங்களையும் ஹதீஸ்களையும் ஆராய்ந்திருப்பர். அவற்றுள் பல கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்களில் மிகவும் பொருத்தமான கருத்தை உறுதிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருப்பர். அல்குர்ஆன் வசனங்கள் ஹதீஸ்கள் குறிப்பிட்ட சட்டத்துக்கு எவ்வகையில் ஆதாரமாக அமைகின்றன. என்பதை விளக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பர். மேலும், ஏற்கனவே தீர்வு சொல்லப்படாத பிரச்சினைகளுக்கு ஆதாரங்கள் மூலமாக தீர்வு சொல்லும் ஆற்றலைப் பெற்றிருப்பர்.

இப்பிரிவில் ஸஹாபாக்களில் இருந்த சட்ட அறிஞர்களும் தாபிஈன்களில் இருந்த சட்ட அறிஞர்களும் அடங்குவர். அவ்வாறே நான்கு மத்ஹபுகளின் ஸ்தாபகர்களும் இப்பிரிவில் இடம்பெறுவர். அவர்களோடு அவர்களது தரத்தில் வைத்து நோக்கப்பட வேண்டிய ஸைத் பின் அலீ(ரஹ்), ஜஃபர் ஸாதிக்(ரஹ்), ஸுப்யானுஸ் ஸவ்ரீ(ரஹ்), அவ்ஸாஈ(ரஹ்), லைஸ் பின் ஸஃத்(ரஹ்), தபரீ(ரஹ்), தாவூத் பின் அலீ(ரஹ்) போன்றோரும் இப்பிரிவில் அடங்குவர்.

(ஆ) **முஜ்தஹித் முத்லக் முன்தஸிப்** - இவர் இஜ்திஹாதுக்குரிய அடிப்படையை தீர்மானிக்கும் விவகாரத்தில் தனது ஆசிரியரைப் பின்பற்றுவார். அதாவது ஆசிரியர் ஏற்றுக் கொண்ட மூலாதாரங்களை ஏற்றுக் கொள்வார். ஆதாரங்களை ஆராயும் போதும் ஆதாரங்களை முன்வைக்கின்ற போதும் ஆசிரியரின் கருத்துக்களைத் துணையாகக் கொள்வார். ஆயினும், சுயமாக இஜ்திஹாத் செய்யும் ஆற்றல் இவரிடம் காணப்படும். ஆசிரியர் சரி என்று நம்புவதனாலேயே இவர் அவரை ஏற்கின்றார்.

இப்பிரிவில் அடங்கும் முஜ்தஹிதுகளுக்கு உதாரணமாக நான்கு இமாம்களினதும் மாணவர்களைக் குறிப்பிடலாம்.

- அபூஹனிபா:- அபூயூஸுப், முஹம்மத், ஸுபர்
- மாலிக்:- இப்னு காஸிம், அஷ்ஹப்
- ஷாபிஈ:- முஸ்னீ, புவைதீ
- அஹ்மத்:- கல்லால்

(இ) **முஜ்தஹித் பில் மத்ஹப்** :- இவர் தனது மத்ஹபின் இமாம் கருத்துத் தெரிவித்துள்ள விடயங்களில் அவரைப் பின்பற்றுவார். எனினும் அவரது மூலாதாரங்களையும் விதிகளையும் இவர் அறிந்தே இருப்பார். இமாம் கருத்துத் தெரிவித்திருக்காத ஒரு பிரச்சினை வரும்போது அவரின் வழிமுறைக்கு மாற்றமில்லாதவாறு தீர்வு வழங்குவார்.

(ஈ) **முஜ்தஹிதுல் புத்யா** : இவர் குறிப்பிட்ட ஒரு மத்ஹபில் ஆழம் கண்டவர். மத்ஹபில் ஒருவிடயம் சம்பந்தமாக பல கருத்துக்கள் காணப்படும்போது அவற்றில் மிகப் பொருத்தமானதை உறுதிப்படுத்தும் ஆற்றலைக் கொண்டவர். குறிப்பிட்ட மத்ஹபிலுள்ள பல இமாம்கள் முன்வைக்கும் நியாயங்களில் மிகவும் பொருத்தமானதை உறுதிப்படுத்தும் ஆற்றல் பெற்றவர்.

## சட்ட சிந்தனைப் பிரிவுகள் (மத்ரஸதுல் அஸர்-மத்ரஸதுர் ர.்.யு)

ஸஹாபாக்கள் மதீனாவுக்கு வெளியே இஸ்லாமிய சமூகத்தின் முக்கிய நகரங்களில் குடியேறிய வேளை தாம் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு அல்குர்ஆனின் மூலம் தீர்வை வழங்கினர். அல்குர்ஆனில் தீர்வில்லாத போது நேரடியான தெளிவான ஸுன்னாவைப் பயன்படுத்தி தீர்வு வழங்கினர். ஸுன்னாவிலும் தீர்வில்லாதபோது இஜ்திஹாதைப் பயன்படுத்தி அல்குர்ஆன் ஸுன்னா என்பவற்றுக்கு முரணில்லாத வகையில் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தனர்.

அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ திட்டவட்டமாகத் தீர்வு சொல்லப்படாத பிரச்சினைகளை ஸஹாபாக்களும் தாபிஈன்களும் அணுகிய விதமானது பிரதானமாக இருவகை சிந்தனைப் பிரிவுகள் தோற்றம் பெற வழிவகுத்தன. அவை மத்ரஸதுல் அஸர், மத்ரஸதுர் ர.்.யி எனப்படுகின்றன.

**மத்ரஸதுல் அஸர்:** மத்ரஸதுல் ஹதீஸ், மத்ரஸதுல் ஹிஜாஸ் என்ற பெயர்களாலும் இச்சிந்தனைப் பிரிவு வழக்கப்படுவதுண்டு. இச்சிந்தனைப் பிரிவு மதீனாவில் தோற்றம் பெற்றது. மதீனாவிலேயே நபி(ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை வாழ்ந்தார்கள். அவர்களது பாசறையில் வளர்ந்த ஸஹாபாக்களும் அங்கு தான் வாழ்ந்து வந்தனர். உமர்(றழி) அவர்களது இறுதிக் காலம் வரை முக்கியமான ஸஹாபாக்கள் எவரும் மதீனாவை விட்டு வெளியேற அனுமதிக்கப் படவில்லை. இத்தகைய காரணங்களால் மதீனாவில் பாரியளவுக்கு ஹதீஸ்கள் பரவியிருந்தன. இதனால் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு பொருத்தமான ஹதீஸ்களைப் பெறுவது மதீனாவில் வாழ்ந்த அறிஞர்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் சிரமமானதாக இருக்கவில்லை. பெரும்பாலும் இவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க ஹதீஸ்களிலேயே தங்கியிருந்தனர். வேறுவழியில்லாத போது மாத்திரமே மனித சிந்தனையைப் பயன்படுத்தினர். இதனால் தான் இப்பிரிவை மத்ரஸதுல் அஸர் என்கின்றனர்.

இச்சிந்தனைப் பிரிவு மதீனாவில் தோற்றம் பெற்றாலும் அதனை மதீனா எல்லையோடு சுருக்கி விடுவது நியாயமானதல்ல. இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் இச்சிந்தனைப் பிரிவினரின் வழிமுறையைப் பின்பற்றியவர்கள் “மத்ரஸதுல் அஸர்” ஐச் சார்ந்தவர்களாகவே மதிக்கப்படு கின்றனர். உதாரணமாக, இமாம் ஸுஹ்ரி, இமாம் அவ்ஸாஈ ஆகியோர் ஷாமில் வாழ்ந்தவர்கள். எனினும் இவர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும்போது ஹதீஸ்களிலேயே பெரும்பாலும் தங்கியிருந்தனர். மனித சிந்தனை வழிகேட்டுக்கு

வழிவகுக்கக்கூடும் என்பதனால் அதனைப் பயன்படுத்துவதை இவர்கள் விரும்பவில்லை. எனவே இவர்களும் மத்ரஸதுல் அஸரைச் சார்ந்தவர்கள்தான்.

இச்சிந்தனைப் பிரிவைச் சார்ந்த அறிஞர்களுக்கு சிறந்ததோர் உதாரணமாக இமாம் ஸஈத் பின் முஸய்யப்(ரஹ்) அவர்களைக் குறிப்பிடலாம். மதீனாவில் வாழ்ந்த இவர் பெரிய ஸஹாபாக்களிடம் கல்வி பயின்றவர். குறிப்பாக அப்துல்லாஹ் பின் உமர்(றழி), ஸைத் பின் ஸாபித்(றழி) ஆகிய ஸஹாபாக்களின் சிந்தனைகளால் கவரப்பட்டவர். குறிப்பாக இப்னு உமர்(றழி) அவர்களின் தாக்கத்தை இவருள் அதிகமாக அவதானிக்க முடிகின்றது.

இச்சிந்தனைப் பிரிவைச் சார்ந்தோர், பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் தான் மூலாதாரங்களாகக் கொண்டனர். அவற்றில் தீர்வில்லாதபோது ஸஹாபாக்களின் கருத்துக்களைப் பயன்படுத்தி தீர்வு கண்டனர். ஒரு பிரச்சினைக்கு அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் இஜ்மா∴ விலும் ஸஹாபாக்களுடைய கருத்துக்களிலும் தீர்வில்லாத போது மாத்திரமே மனித சிந்தனையைப் பயன்படுத்தி அதனைத் தீர்த்து வைக்க முற்பட்டனர்.

ஸுன்னாவைப் பாதுகாப்பதில் இச்சிந்தனைப் பிரிவினர் ஆற்றிய பங்கு மகத்தானது. ஆஹாதான ஹதீஸ்களை ஏற்கும் இவர்கள் அல்குர்ஆனில் "ஆம்" ஆக வந்துள்ள ஒரு விடயத்தை இவற்றின் மூலம் "காஸ்" ஆக்க முடியும் என்கின்றனர்.

**மத்ரஸதுர் ர∴யி :** இச்சிந்தனைப் பிரிவினரை ஈராக்கிலேயே தெளிவாக அடையாளம் காணமுடிகிறது. இருப்பினும் இச்சிந்தனைப் பிரிவின் தோற்றம் ஈராக்கிலேயே நிகழ்ந்தது எனக் கூறுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும். உண்மையில், இத்தகைய ஒரு சிந்தனைப் பிரிவின் தோற்றத்துக்குரிய வித்துக்கள் மதீனாவிலேயே இடப்பட்டன எனலாம். சில ஸஹாபாக்களே இதற்கு முன்னோடிகளாக அமைந்தனர். உதாரணமாக உமர்(றழி), அலீ(றழி), அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(றழி) போன்றோரைக் குறிப்பிட முடியும்.

உமர்(றழி) அவர்களது காலத்தில் ஈராக்கிற்கு அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(றழி) சென்றபோது நபி(ஸல்) அவர்களது ஹதீஸ்களை மாத்திரம் சுமந்து கொண்டு செல்லவில்லை. சட்டப் பிரச்சினைகளுக்கு ஸஹாபாக்கள் வழங்கிய தீர்வுகளையும் சுமந்து கொண்டே அவர் அங்கு சென்றார். எனவே, அல்குர்ஆன், ஹதீஸுடன் இணைந்த வகையில் மனித சிந்தனையையும் பயன்படுத்துகின்ற இச்சிந்தனைப் பிரிவு ஈராக்கில் வளர்ச்சியடைய அடிப்படை இட்டவராக இவர் கருதப்பட முடியும்.

பகுத்தறிவை பயன்படுத்திப் பிரபல்யம் பெற்றிருந்த ஸஹாபாக்கள் உமர்(றழி) அவர்களின் சிந்தனைத் தாக்கத்துக்கு உட்பட்டவர்களே என வரலாற்றுத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. உமர்(றழி) அவர்கள் சட்டங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதிலும் கியாஸைக் கையாள்வதிலும் மிகுந்த தேர்ச்சியுடையவராக காணப்பட்டார்கள்.

அல்குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் உரிய இடமளிக்கும் அதேவேளை பகுத்தறிவை அல்லது மனித சிந்தனையையும் பயன்படுத்தும் இச்சிந்தனைப் பிரிவு ஈராக்கில் வளர்ச்சியடைந்தமைக்கும் அறிஞர்கள் பின்வரும் காரணங்களைக் குறிப்பிடுகின்றனர் :

1. ஈராக் மதீனாவை விட்டும் தொலைவில் இருந்தது. அங்கு ஹதீஸ்களைப் புனைந்துரைக்கும் இழி செயலில் சிலர் ஈடுபட்டிருந்தனர். அங்கு நிலவிய அரசியல் சமூக பிரச்சினைகளும் அவர்கள் அதில் ஈடுபடுவதை இலகுப்படுத்தின. இதனால் போலி ஹதீஸ்கள் அங்கு பரவிக் காணப்பட்டன. இவ்வாறான போலி ஹதீஸ்களின் பரவல் அறிஞர்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்கும் போது சிந்தனையைக் கூடுதலாக பயன்படுத்த முனைந்தமைக்கான பிரதான காரணமாக அமைந்தது.
2. இஸ்லாமிய சமூகத்தின் தலைமைப்பீடம் மதீனாவிலிருந்து ஈராக்கிற்கு நகர்த்தப்பட்டபோது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அப்பகுதியே அறிவுப் பணிகளின் மையமாகவும் அமைந்தது. இது அதற்கான இன்னொரு காரணமாகும்.

இச்சிந்தனைப் பிரிவைச் சார்ந்த அறிஞர்களுக்கு உதாரணமாக அல்கமா, நகஈ, மஸ்ரூக், உபைதா பின் அம்ர் அஸ்ஸல்மானீ, ஷுரைஹ் பின் அல்ஹாரிஸ் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களில் மிக முக்கியமானவர் இமாம் நகஈ ஆவார். இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் தனது தாக்கத்தை விட்டுச் செல்ல அவர் தவறவில்லை.

இங்கு ஓர் அடிப்படையான கருத்தைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் காணப்படுகிறது. இப்பிரிவைச் சாராத சட்ட அறிஞர்களும் பகுத்தறிவை பயன்படுத்தி உள்ளனர். பிக்ஹ் என்ற சொல்லுக்கு விளக்கம், தெளிவு என்பது பொருளாகும். இப்பொருள்கூட ஒரு சட்ட அறிஞன் பகுத்தறிவைப் பயன்படுத்துவான் என்பதையே காட்டுகின்றது. “மத்ரஸதுல் அஸர்” ஐச் சார்ந்தவர்கள் கூட தேவையான இடங்களில் பகுத்தறிவை (மனித சிந்தனையைப்) பயன்படுத்தியுள்ளனர். நிலைமை இவ்வாறிருக்க குறிப்பிட்ட ஒரு பிரிவினரை மட்டும் மத்ரஸதுர் ர.்.யி என ஏன் அழைக்கிறோம்?

சட்டங்களைப் பெறும் போது கையாண்ட வழிமுறையின் காரணமாகவே "மத்ரஸதுர் ர.்.யி" என இவர்களை அழைக்கிறோம். இவ்வழிமுறை மத்ரஸதுல் அஸர் பிரிவினரின் வழிமுறையை விட வேறுபட்டது.

ஈராக்கில் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்கள் பத்வா வழங்க பயப்படவில்லை. தம்முன் வைக்கப்படும் எந்த ஒரு பிரச்சினைக்கும் அப்பிரச்சினை யதார்த்த உலகில் நிலவினாலும் சரி, ஒரு கற்பனா உலகில் நிலவினாலும் சரி, அவர்கள் தீர்வை முன்வைத்தனர். இவ்வாறு அவர்கள் நடந்துகொள்ளக் காரணம் அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் சட்டங்கள் மாத்திரமல்ல, அவற்றுக்கான காரணங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன என அவர்கள் உறுதியாக நம்பினர். எனவே, ஒரு சட்ட அறிஞனின் பணி காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்கேற்ப தனது இஜ்திஹாதை அமைத்துக் கொள்வது என அவர்கள் குறிப்பிட்டனர். குறிப்பாக சட்ட வசனங்கள் வரையறைக்கு உட்பட்டவை. மனித பிரச்சினைகளோ எல்லையற்றவை. வரையறைக்கு உட்பட்ட சட்ட வசனங்களால் வரையறைக்கு உட்படாத பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவது இயலாத காரியம். எனவே, அச்சட்ட வசனங்களின் நிழலில் பகுத்தறிவு பயன்படுத்தப்பட வேண்டும் என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஈராக்கில் வாழ்ந்த அறிஞர்கள் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளும் போது கண்டிப்பாக நடந்து கொண்டமைக்கும் நியாயங்கள் இருக்கவே செய்கின்றன. போலி ஹதீஸ்கள் பரவியுள்ள ஒரு சூழலில் ஹதீஸ்களை ஏற்பதில் காட்டும் கண்டிப்பு ஒரு மனிதனது தக்வாவையும் பேணுதலையுமே காட்டும் என்பதை மறுப்பதற்கில்லை. போலி ஹதீஸ்கள் மலிந்துள்ள ஒரு சூழலில் குறிப்பிட்ட ஒரு ஹதீஸின் நம்பகத்தன்மையில் ஐயப்பாடு நிலவுகின்ற போது அதனை ஒரு சட்ட அறிஞன், தான் முன்வைக்கும் தீர்வுக்கு நியாயமாக கொள்வான் என எதிர்பார்க்க முடியாது.

ஈராக்கில் இருந்த பிரச்சினைகள் மதீனா சூழலில் காணப்படவில்லை. ஹதீஸ்கள் அங்கு புனைந்துரைக்கப்படவும் இல்லை. எனவே, மதீனா சூழலில் வாழ்ந்த அறிஞர்கள் ஹதீஸின் பால் கூடுதலான ஈடுபாடு காட்டியமை நியாயமானதே.

இச்சிந்தனைப் பிரிவுகள் இரண்டும் தோற்றம் பெற்றபோது அவை இரண்டுக்கும் இடையிலான இடைவெளி பாரியதாக காணப்பட்டது. போலி ஹதீஸ்களின் பரவல், ஹதீஸ்கள் அனைத்தும் ஒன்று திரட்டப்பட்டிருக்காமை இவ்விடைவெளியை நியாயப்படுத்துகின்ற முக்கிய காரணங்களாகத் திகழ்ந்தன.

ஹதீஸ்கள் ஒன்று திரட்டப்பட்டுள்ளமையாலும், போலி ஹதீஸ்கள் இனம் காணப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையாலும் இவ்விரு சிந்தனைப் பிரிவுகளுக்கும் இடையிலான இடைவெளி அகற்றப்பட்டுவிட்டது. இவ்விரு சிந்தனைப் பிரிவுகளும் இணைந்து நிறைவான ஒரு சிந்தனைப் பிரிவாக மாறிவிட்டது.

# துணை சட்ட மூலாதாரங்கள்

அல்குர்ஆனும், ஸுன்னாவும் இஸ்லாமிய சட்டவாக்கத்தின் அடிப்படை சட்ட மூலாதாரங்களாகும். இஜ்மா என்பது முஸ்லிம் சமூக சிந்தனை ஒன்றுபட்டு நிற்கும், அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் அடிப்படையாகக் கொண்ட சட்ட மூலாதாரமாகும். கியாஸ் என்பது உண்மையில் அல்குர்ஆனினதும், ஸுன்னாவினதும் விரிந்த பிரயோகமாகும். அதாவது பிற்பட்ட காலப்பிரிவில் அல்குர்ஆன், ஸுன்னாவில் வந்த நிகழ்வுகளுக்கு ஒத்த நிகழ்வுகளைக் கொண்டதே அதுவாகும். இந்த வகையில் இஜ்மாவும், கியாஸும் குர்ஆன், ஸுன்னா என்ற அடிப்படை மூலாதாரங்களோடு இணைந்தவை ஆகின்றன.

இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் பிற்காலத்தில் தோன்றும் புதிய நிகழ்வுகள், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இன்னும் சில சட்டமூலாதாரங்களை அல்குர்ஆன், ஸுன்னாவின் வெளிச்சத்தில் அடையாளம் கண்டனர். அவை துணை மூலாதாரங்கள் எனப்படுகின்றன. கீழே அவை பற்றிய அறிமுகம் தரப்படுகிறது.

(1) இஸ்திஹ்ஸான்
(2) மஸ்லஹா முர்ஸலா
(3) உர்பு
(4) ஸத்துத் தராயிஃ
(5) இஸ்திஸ்ஹாப்
(6) கவ்ல் அல் ஸஹாபி
(7) அஷ்ஷராயிஃ அஸ்ஸாபிகா

### (1) இஸ்திஹ்ஸான்

இஸ்திஹ்ஸான் என்பது கியாஸ் என்ற சட்ட மூலாதாரத்தை அடுத்து வருகின்ற ஒரு சட்ட மூலாதாரமாகும்.இமாம்களான அபூஹனீபா, மாலிக் என்போர் இச்சட்ட மூலாதாரத்தை உருவாக்கியுள்ளார்கள். ஆனால், சில சட்ட அறிஞர்கள் குறிப்பாக இமாம் ஷாபிஈ (ரஹ்) இச்சட்ட மூலாதாரத்தை ஏற்கவில்லை. எனினும், இக்கருத்துவேறுபாடு வெறும் சொற்பிரயோகக் கருத்து வேறுபாடே என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

### வரைவிலக்கணமும் விளக்கமும்

இஸ்திஹ்ஸான் என்பதன் மொழிப் பொருள் 'சிறந்ததாகக் காணல்' என்பதாகும். ஒரு பிரச்சினைக்கான தீர்வைத்தேடும் போது அதனை ஒத்த பிரச்சினைகளுக்கான தீர்வை விட்டுவிட்டு ஒரு பலமான காரணத்திற்காக இன்னொரு தீர்வைக் காண்பதே

‘இஸ்திஹ்ஸான்’ ஆகும். அதாவது, கியாஸ் என்பது நிகழ்ச்சிகளுக்கிடையில் அல்லது பிரச்சினைகளுக்கிடையில் காணப்படும் ஒற்றுமையை அவதானித்து ஒரே தீர்வை வழங்கல் எனக் கண்டோம். ஆனால் சில சந்தர்ப்பங்களின் போது அந்த பிரச்சினைகளிடையே காணப்படும் ஒற்றுமையை அவதானித்து ஒரே தீர்வைக் கொடுப்பது பொருத்தமாக இருக்காது. அவ்வாறு ஒரே தீர்வைக் கொடுக்காதிருக்க வேறு பலமான நியாயங்களும் காரணங்களும் இருக்கலாம்.

கீழே தரப்படும் உதாரணங்களினூடாக இதனை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

1. தனிப்பட்ட ஒரு பணியாள் வேலைக்கமர்த்தப்படும் போது அவனது கையால் பொருட்கள் ஏதும் பாதிக்கப்பட்டால் அல்லது சேதமடைந்தால் அவன் அதற்கு பொறுப்பாகமாட்டான். உதாரணமாக, வீட்டையோ தோட்டத்தையோ சுத்தம் செய்பவன் வரம்புமீறாது, கவனத்துடன் வேலை செய்யும் போது அவனிடம் கொடுக்கப்பட்ட உபகரணங்களுக்கு பாதிப்பேற்பட்டால், அவன் நஷ்டயீடு செலுத்தவேண்டியதில்லை. இது பொதுவாக சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். ஏனெனில், அவன் அமானிதப் பொறுப்புள்ளவனாகவே கணிக்கப்படுகின்றான்.

2. கடிகாரம், தொலைக்காட்சிப்பெட்டி போன்றவற்றைத் திருத்துபவன், சலவைத்தொழிலாளி போன்ற பொதுப்பணியாளர்களுக்கு மேற்சொன்ன சட்டம் பொருந்தும். எனவே, அவர்களால் பொருட்கள் சேதமானால் அல்லது தொலைந்து போனால் அதற்கவர்கள் பொறுப்பல்ல என்று கொள்ளப்பட வேண்டும். கியாஸ் என்ற சட்ட மூலாதாரத்தின் அடிப்படையில் இதுவே தீர்வாகும். எனினும், இத்தீர்வு மக்களின் பொது நலனைப் பாதிப்பதாக அமையும் என்று கண்ட இஸ்லாமிய அறிஞர்கள், பொதுத்துறைகளில் பணியாற்றும் வேலையாள், தொழிலாளி பொறுப்புச் சொல்ல வேண்டியவனாகிறான் எனக் கூறினார்கள். கியாஸ் அடிப்படையிலான தீர்வு இங்கு “பொது நலன்” என்ற காரணத்தினால் விடப்படுகின்றது. இது ‘இஸ்திஹ்ஸான்” என்பதன் அடிப்படையிலான தீர்வாகும்.

3. இஸ்திஸ்னா வியாபாரம் : குறிப்பிட்ட ஒரு பொருளை செய்து தரும்படி வேண்டுதல் என்பது இதன் பொருளாகும். அதாவது மேசைகள், கதிரைகள் போன்றவற்றைச் செய்து தருமாறு ஒப்பந்தம் செய்தல், குறிப்பிட்ட அமைப்பிலான கட்டடத்தை அமைத்துத் தருமாறு கேட்டல். கையிருப்பில் இல்லாத ஒரு பொருளுக்காக ஒப்பந்தம் செய்து அதனை விற்கக்கூடாது என்பது ஸுன்னா கூறும் கருத்தாகும். இதுவும் ஒருவகை விற்பனை என்பதால் கியாஸின் அடிப்படையில் அனுமதிக்கப்படாததாகக் கொள்ளப்பட வேண்டும்.

எனினும், இத்தகைய ஒப்பந்தம் ஒரு பொது வழக்காறாக மாறி, அதனால் பாதகம் விளைவதாகவும் இல்லை. எனவே கியாஸின் நேரடித் தீர்வை விட்டு இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் வழக்காற்றின் அடிப்படையில் இந்த ஒப்பந்த முறையை அனுமதித்தனர்.

(அ) குறிப்பிட்ட சில பொருட்களை கைமாற்றிக் கொள்ளும் போது கால இடைவெளி கூடுதல், கூடாது என சுன்னா தெளிவாகக் கூறுகின்றது. தங்கம், வெள்ளி, கோதுமை போன்றன அவற்றில் அடங்கும். இதனை 'ரிபா அல்பய்இ" என அழைப்பர்.அதாவது, இதுவும் ஒருவகை வட்டி எனக் கொள்ளப்பட்டது.

(ஆ) எனினும் அண்டை வீட்டார் எண்ணிக்கை அடிப்படையாக ரொட்டிகளை, சிறிதளவு அரிசி போன்றவற்றை கைமாறாகப் பெற்று அடுத்த ஓரிரு நாட்களில் கொடுத்து விடுவர்.

(இ) குறிப்பிட்ட ஹதீஸோடு நோக்கும்போது இப்பண்டமாற்று முறை ஒருவகை விற்றல், வாங்கல் எனக் கொள்ளப்பட வேண்டும். எனினும் ஹனபி மத்ஹபின் சட்ட அறிஞர்கள் மக்களின் தேவைகளைக் கவனத்திற் கொண்டு இதனை அனுமதித்தனர்.

**ஆதாரங்கள்**

"இஸ்திஹ்ஸான்" என்பது ஆழ்ந்து நோக்கும் போது தனியானதொரு சட்ட மூலாதாரமல்ல. கியாஸின் இன்னொரு வகைப் பிரயோகமாகும். அத்தோடு அது கியாஸ் என்ற அடிப்படையை விட்டு அது வெளியேற வேறு சட்ட விதிகள் ஆதாரமாக இருந்தன எனவும் கண்டோம். எனவே, இதற்கு தனியான ஆதாரங்களைக் குறிப்பிட வேண்டியதில்லை.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் "முஸ்லிம்கள் சிறந்ததாகக் கண்டது அல்லாஹ்விடத்திலும் சிறந்ததாகவே அமையும். அவர்கள் தீங்காகக் கண்டது அல்லாஹ்விடத்திலும் தீங்காகவே அமையும்" (தபறானி) என்றார்கள்.

இது இப்னு மஸ்ஊத்(ரலி) அவர்களின் கருத்து என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறான ஒரு கருத்தை இறைத்தூதரைப் பின்பற்றியே இந்த ஸஹாபி சொல்லியிருக்க முடியும் என்பது சில ஆய்வாளர்களின் கருத்தாகும். பஜ்ஜார், தபரானி என்போரும் தமது ஹதீஸ் கிரந்தங்களில் இதனைப் பதிவு செயதுள்ளனர். இந்த ஹதீஸின் படி முஸ்லிம் சட்ட அறிஞர், ஆய்வாளன் குறிப்பிட்ட ஒரு

விடயத்தை சரி, பிழை என சிலவரையறைகளுடன் தீர்மானிக்க இடமுள்ளது. இந்த அமைப்பைக் கொண்டே 'இஸ்திஹ்ஸான்' என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது.

அல்குர்ஆன் இத்தகைய சட்டப் பிரயோகங்களைக் கொண்டுள்ளது. இதற்கு சிறந்த உதாரணம் 'வஸிய்யத்' ஆகும். ஒருவர் இறக்கும் போது அவரின் சொத்துக்கள் அவரது வாரிசுகளுக்குப் போய்ச்சேரும் என்பது அல்குர்ஆனின் கருத்து. எனினும், இறக்கும் நபர் குறிப்பிட்ட வரையறைகளின் கீழ் தனது சொத்தின் ஒரு பகுதியை 'வஸிய்யத்' செய்ய முடியுமென அல்குர்ஆன் விளக்கியுள்ளது.

ஸுன்னாவிலும் இஹ்திஹ்ஸான் பிரயோகம் காணப்படுவதனை அவதானிக்க முடியும். 'ஸலம்' என்ற வியாபார முறையை ஸுன்னா அனுமதித்துள்ளது. இல்லாத பொருளை விற்பதாகவே இது அமைகின்றது. இல்லாத பொருளை விற்கக் கூடாது என்பது ஸுன்னாவின் கருத்து. எனினும் மக்களது தேவையைப் பொறுத்து ஸுன்னா இதனை அனுமதித்துள்ளது. ஆணும், பெண்ணும் அவர்கள் அந்நியர்களாக இருக்கும்போது பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறு அல்குர்ஆன் கூறுகின்றது. (ஸுரா நூர் 31) எனினும், திருமணம் பேசும்போது இவ்வாறு பார்ப்பதனை இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அனுமதித்துள்ளார்கள். இது எதிர்காலக் குடும்ப நலனை உத்தேசித்து ஆக்கப்பட்ட விதி விலக்கான சட்டமாகும்.

## (2) மஸ்லஹா முர்ஸலா

அறிவுசார் சட்டமூலங்களில் "மஸ்லஹா முர்ஸலா" என்பதும் முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக மாலிக், ஹனபி மத்ஹபினர் இதனை தனியான, வித்தியாசமான ஒரு சட்ட மூலாதாரமாகக் குறித்துள்ளனர். எனினும், வித்தியாசமான சொற்பிரயோகங்கள், ஆய்வு முறைகள் ஊடாக ஏனைய மத்ஹபினரும் இதனை சட்ட மூலாதாரமாகக் கொண்டுள்ளனர் என்பது இஸ்லாமிய சட்ட ஆய்வாளர்களின் கருத்தாகும்.

### பொருளும் வரைவிலக்கணமும்

'மஸ்லஹா' என்பது நலன் என்றும் 'முர்ஸலா' என்பது வரையறையற்றது என்றும் பொருள்படும். எனவே, வரையறைக்குட்படாத நலன் என்பது இதன் பொருளாகும்.

“குர்ஆனோ ஸுன்னாவோ குறிப்பிட்டுக் காட்டாத, ஆனால் அவற்றின் பொது விதிகளோடும் கொள்கைகளோடும் ஒத்துச்செல்லும் வகையில் நலன்களின் அடிப்படையில் சட்டமியற்றல்” என்பது தான் மஸ்லஹா முர்ஸலாவுக்கான வரைவிலக்கணமாகும்.

குர்ஆனும் ஸுன்னாவும் இயற்றியுள்ள சட்டங்கள் நலன்களை அடிப்படையாகக் கொண்டவையாகவே இருக்கும். திருமணத்தை குர்ஆன் சட்டபூர்வமாக்கியதன் மூலம் மனிதனின் பாலியல் உணர்வை அது நெறிப்படுத்தியது. அதன்மூலம் மனித இனம் தொடர்வதற்கும் வளர்வதற்கும் பொருத்தமாக அமையும் குடும்ப ஒழுங்கொன்றை உருவாக்கிக் கொடுத்தது. இவ்வாறு குர்ஆனின் அல்லது ஸுன்னாவின் எந்தச் சட்டத்தை எடுத்து நோக்கினாலும் அங்கு மனித நலன் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளமையைக் காணமுடியும்.

அத்தோடு அனைத்து வகை நலன்கள் பற்றியும் குர்ஆனும் ஸுன்னாவும் பொதுவாகக் குறித்துள்ளமையை அவதானிக்க முடியும். உதாரணத்திற்குக் கீழ்வரும் வசனங்களைத் தர முடியும்.

(அ) “நீங்கள் வெற்றி பெறுவீர்கள் என்பதால் நல்லவற்றைச் செய்யுங்கள்” (22 : 77)

(ஆ) “அல்லாஹ் நீதியையும் சிறந்த நடத்தையையும் கடை பிடிக்கும்படி ஏவுகிறான்” (16 : 90)

(இ) “நற்காரியங்கள், இறை பயத்தோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் என்பவற்றில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுங்கள்” (5 : 2)

இவ்வாறு குர்ஆன் அல்லது ஸுன்னா என்பன நலன்கள் பற்றி மிகப் பொதுவாக சுட்டிக் காட்டியிருக்கலாம். ஆனால், குறிப்பான சில நலன்களைக் காட்டாமல் விட்டிருக்கலாம். அத்தகைய நலன்களை அடிப்படையாக வைத்து சட்டமியற்றலே ‘மஸ்லஹா முர்ஸலா’ எனப்படுகின்றது. சில உதாரணங்களினூடாக இச்சட்டமூலாதாரம் பற்றி மேலும் சிறப்பாக விளங்கிக் கொள்ள முடியும்.

**(அ) போக்குவரத்து ஒழுங்குகளுக்கான சட்ட விதிகள்**

போக்குவரத்து சட்டங்கள் பற்றிய தனியான குர்ஆன், ஸுன்னா சட்ட வசனங்களைக் காணமுடியாது. மனித உயிர்கள், சொத்துக்களைக் காத்தல் என்ற இஸ்லாத்தின் பொது நோக்கங்களோடு இச்சட்டங்கள் ஒத்துச் செல்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இந்தவகையில், போக்குவரத்து சட்டங்களை ஆக்குதல் என்பது வரையறைக்குட்படாத நடத்தை என்ற இப்பகுதியில் அடங்குகின்றது.

**(ஆ) கல்வி நிர்வாகம்**

கல்வி கற்றலுக்கான படித்தரங்கள், புள்ளி இடலுக்கான வரையறைகள், பல்கலைக்கழக நுழைவு விதிகள் போன்ற கல்வி நிர்வாகத்தோடு சம்பந்தப்பட்ட பகுதிகள் பற்றி குர்ஆனும் ஸுன்னாவும் நேரடியாக எதுவும் கூறவில்லை.

**(இ) அரச நிறுவனப் பதிவுகள்**

திருமண ஒப்பந்தம், மற்றும் வாடகைக்கு விடல் சம்பந்தமான ஒப்பந்தங்கள், சொத்துக்களைப் பதிவு செய்தல் போன்றன அரச நிறுவனப் பதிவுகளுக்கு உட்படுகின்றன. அது சம்பந்தமாக பல்வேறு சட்ட ஒழுங்குகளும் உள்ளன. இவ்வாறு அரச ரீதியாக இவை பதிவு செய்யப்பட வேண்டுமென்பதற்கு குர்ஆனிலும் ஸுன்னாவிலும் நேரடியாக ஆதாரங்கள் எதுவுமில்லை.

ஆனால், இவ்வாறு ஒப்பந்தங்களில் ஈடுபடுவோரது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பற்றி குர்ஆனும், ஸுன்னாவும் வலியுறுத்திக் கூறுகின்றன. அந்த இலக்கை நிறைவு செய்யவே இந்தச் சட்டங்கள் ஆக்கப்படுகின்றன.

**ஆதாரங்கள்**

'வரையறுக்கப்படாத நலன்களின் அடிப்படையில் சட்டமாக்கல்' என்ற சட்ட மூலாதாரத்திற்கு இஸ்லாமிய சட்டவல்லுனர்கள் கீழ்வரும் ஆதாரங்களை முக்கியமாக முன்வைக்கின்றனர். இஸ்லாமிய சட்டம் மனித நலன்களைக் கவனத்திற் கொள்கின்றது என்பது சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். குர்ஆனும், ஸுன்னாவும் பல இடங்களில் இக்கருத்தை விளக்கியுள்ளன.

"உலகத்தாருக்கு அருளாகவேயன்றி உம்மை நாம் அனுப்ப வில்லை" (21 : 107)

என்ற ஒரு வசனமே இறைதூது மனிதனுக்கு அருளும், நலமும் பயப்பது என்பதை உணர்த்தப் போதுமானதாகும். இவ்வாறு பல வசனங்கள் இந்த உண்மையை உணர்த்துகின்றன.

வரையறுக்கப்படாத நலன்கள் என்பது உண்மையில் குர்ஆனும், ஸுன்னாவும் பொதுவாக சுட்டிக் காட்டிய நலன்களின் அடிப்படையில் சட்டமியற்றுவதாக அமைகின்றது என்பர். இதனை உதாரணங்களினூடாகக் கண்டோம். எனவே, இது சட்ட மூலாதாரமாகக் கொள்ளப்படுவது ஆதாரபூர்வமானது என்பது தெளிவாகின்றது.

1. ஸஹாபாக்கள் மஸ்லஹா முர்ஸலாவை அடிப்படையாகக் கொண்டு சட்டமியற்றியுள்ளார்கள் என்பது தெளிவு. உதாரணமாக,

   (அ) **குர்ஆன் ஒன்று திரட்டப்படல்** : குர்ஆனை தனி நூலாகத் திரட்ட வேண்டும் என்ற நிலை இருந்தாலும், அதற்கு குர்ஆனிலோ சுன்னாவிலோ தனியான ஆதாரமில்லை. ஆனால், முஸ்லிம் சமூகத்திற்கு மாபெரும் நலன் பயக்கும் செயற்பாடு அது என்பதில் சந்தேகமில்லை. எனவேதான் அபூபக்ர்(ரலி) அவர்களது காலப்பிரிவில் ஸஹாபாக்கள் அல்குர்ஆனை ஒன்று திரட்டினார்கள். இது வரையறுக்கப்படாத நலன் என்ற அடிப்படையில் வைத்து எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

   (ஆ) அபூபக்ர்(ரலி) அவர்கள் தனக்குப் பின்னால் உமர்(ரலி) அவர்களை கலீபாவாக நியமித்தார்கள். உமர்(ரலி) அவர்கள் ஆறு பேரை நியமித்து அவர்களில் ஒருவரைக் கலீபாவாகத் தெரிவு செய்யுமாறு சொன்னார்கள். இறைதூாதர்(ஸல்) அவர்கள் இவ்வாறு செய்யவில்லை. எனினும் முஸ்லிம் சமூக நலனை உத்தேசித்தே அவர்களிருவரும் இவ்வாறு செய்தனர்.

   (இ) உஸ்மான்(ரலி) ஒரே முஸ்ஹபை அமைத்து ஏனைய எழுதப்பட்டிருந்த அல்குர்ஆன் பிரதிகள் அனைத்தையும் எரித்துவிட்டார்கள். இதுவும் வரையறுக்கப்படாத நலன் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவாகும்.

   (ஈ) அலி(ரலி) அறபு இலக்கணத்தை வகுக்குமாறு அபூஅஸ்வத் அத்துவலியை பணித்தார்கள். இதுவும் வரையறுக்கப்படாத நலன் வகையைச் சேர்ந்ததாகும்.

## (3) உர்ப் - வழக்காறு

இது மனித அறிவின் ஆய்வுப் பிரயோகத்தைக் காட்டுகின்ற இன்னொரு சட்டமூலாதாரமாகும். ஹனபி, மாலிகி மத்ஹபினர் இதனை ஒரு சட்ட மூலாதார மாகக் கொண்டனர். எனினும், அடுத்த மத்ஹபினரும் வழக்காற்றை – உர்பை – தமது சட்டத் தீர்ப்புக்களிலும் சட்ட ஆக்கங்களிலும் கையாண்டிருக்கிறார்கள். ஆனால், தனி சட்ட மூலாதாரமாக மட்டும் அவர்கள் அதனை குறிப்பிடவில்லை.

### வரைவிலக்கணமும் பொருளும்

'உர்ப்' என்பதன் மொழிப் பொருள் பழக்க வழக்கம், வழக்காறு என்பதாகும். சொல், அல்லது செயலில் சில குறிப்பிட்ட ஒழுங்குகளை மக்கள் பொதுவாக பாரம்பரியமாகப் பேணி வருவர். இதுவே உர்ப் - வழக்காறு எனப்படுகின்றது. சம்பிரதாயம் எனவும் அச்சொல்லை மொழிபெயர்ப்பது பிழையல்ல.

### வரைவிலக்கணம்

"பெருந்தொகையினரான மக்களிடம் சொல்லிலோ செயலிலோ காணப்படும் வழக்கம்" என்பது தான் பரிபாஷையில் அதன் பொருளாகும். பெருந்தொகையான மக்கள் என்போர் ஒரு சிலரோ ஒரு சிறிய தொகையினரோ அல்லர். மக்கள் ஒரு குறிப்பிட்ட நாட்டில், கிராமத்தில் செயலிலோ பேச்சிலோ சில வழக்காறுகளைக் கொண்டிருப்பர். அத்தகைய நிலையே இங்கு உர்ப் - வழக்காறு எனப்படுகிறது.

"இறைச்சி" என்பது ஒரு பொதுச்சொல்லாகும். அது வழக்கத்தில் மாட்டிறைச்சியையே குறிக்கும். இவ்வாறு வழக்கத்தில் பல சொற்கள் மொழி அமைப்பை விட்டு வேறு கருத்தில் பிரயோகிக்கப்படுவதுண்டு.

திருமணத்தில் பல்வேறு வழக்காறுகள் உள்ளன. மணமகனின் ஆடை, மணமகளின் ஆடை, திருமண விருந்து போன்றவற்றிலும் இன்னும் பல விடயங்களிலும் பல வழக்காறுகள் பின்பற்றப்படுகின்றன.

இவ்வாறு சொல், செயல் இரண்டிலும் பல வழக்காறுகள் உள்ளன. சட்டத் தீர்ப்பின் போதும், சட்டமாக்கலின் போதும் இந்த வழக்காறுகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இந்தவகையில் வழக்காறு சட்ட மூலாதாரமாகக் கொள்ளப்படுகின்றது.

**உதாரணங்கள்**

(1) எவ்வாறு மஹர் கொடுப்பது என்பதை குறிப்பிட்ட சமூகத்தின் வழக்காறை -உர்ப்- வைத்தே தீர்மானிக்கலாம். அனைத்தையும் உடனே முழுமையாகக் கொடுத்தல், பகுதி பகுதியாகக் கொடுத்தல், திருமண ஒப்பந்தத்தின் போது கொடுத்தல், திருமண வைபவத்தின் போது கொடுத்தல் போன்ற எதனையும் தீர்மானிப்பது வழக்காறாகும்.

(2) கொடுக்கல் வாங்கல் ஒப்பந்தமானது விற்கப்பட்ட பொருளில் இருக்கும் குறைபாட்டால் ரத்தாக முடியும். பொருளில் காணப்படும் குறைபாட்டைத் தீர்மானிப்பது வழக்காறாகும்.

(3) மனைவிக்கான செலவினங்களைக் கணவன் கொடுக்க வேண்டுமெனக் குர்ஆன் கூறுகிறது. (பகரா -223) எவ்வளவு கொடுக்க வேண்டு மென்பதைத் தீர்மானிப்பது வழக்காறாகும்.

**"உர்ப்" க்கான அடிப்படை நிபந்தனை**

உர்ப் - வழக்காறு சட்டமூலாதாரமாகக் கொள்ளப்பட அடிப்படையான நிபந்தனை, குறிப்பிட்ட வழக்காறு குர்ஆன், ஸுன்னாவுக்கு முரண்பட்டதாக இருக்கக்கூடாது என்பதாகும்.

## 4. அஷ் ஷராஇஸ் ஸாபிகா

அல்லாஹ்வினால் நபிமார்கள் மீது இறக்கப்பட்ட ஷரீஆக்கள் அனைத்தும் ஒரே அடிப்படையைக் கொண்டவையாகும் என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. எனினும் கால சூழ்நிலைகள், சமூக நிலைமைகளுக்கேற்ப சட்டங்கள் மாற்றப்பட்டன. சட்டங்களின் தோற்றங்களும், அமைப்புகளும் மாறின என்பதிலும் சந்தேகமில்லை.

அல்குர்ஆன், சுன்னாவிலும் முன்னர் சென்ற சமூகங்களின் சட்டங்கள் சிலபோது குறிக்கப்பட்டுள்ளன. இச்சட்டங்கள் எம்மைப் பொறுத்தவரையில் மாற்றப்பட்டுவிட்டன என்பது உறுதியாயின் அப்போது கருத்து வேறுபாடின்றி முன்னைய சமூகங்களது சட்டங்களைப் பின்பற்ற முடியாதென்பது மிகத் தெளிவு.

முன்னைய சமூகங்களின் சட்டங்களை குறிப்பிடும் போது அவை மாற்றப்பட்டுவிட்டன என்பதற்கோ அவை குறிப்பிட்ட சமூகங்களுக்கு மட்டுமே

குறிப்பாக உரியன என்பதற்கோ உறுதியான ஆதாரங்கள் இல்லாத போது அவற்றை சட்டமூலங்களாகக் கொள்ள முடியுமா என்பதுவே இங்கு ஆராயப்படும் பிரச்சினையாகும்.

ஹனபி, மாலிகி, ஷாபியீ, ஹன்பலீ மத்ஹபின் சிலர் இது சட்டமூலாதாரமாகக் கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தையும் வேறு சிலர் அவ்வாறு கொள்ளப்படக் கூடாது என்ற கருத்தையும் கொண்டுள்ளனர்.

அல்குர்ஆன் முன்னைய சமூகங்களின் சட்டங்கள் பற்றிக் குறிப்பிடும் அனைத்து இடங்களிலும் அவை குறிப்பிட்ட சமூகங்களுக்கு மட்டுமே உரியன என அவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளமையை அவதானிக்க முடிகிறது. இந்தவகையில் கருத்து வேறுபாடு மேலோட்டமானது தான் என இமாம் அபூ ஸஹ்ரா குறிப்பிடுகிறார்.

### 5. இஸ்திஸ்ஹாப்

இஸ்திஸ்ஹாப் என்றால், தோழமையுடனிருத்தல், கூடச்செல்லல் என்பது மொழிப் பொருளாகும். குறிப்பிட்ட நிகழ்வு, விடயமொன்றை அதனை மாற்றும் காரணியொன்று தோன்றாத வரையில் தொடர்ந்து வைத்திருத்தல் என்பது இதற்கான சட்ட வரைவிலக்கணமாகும்.

குறிப்பிட்ட நிகழ்வை அதாவது திருமணம், விற்றல், பரிசளித்தல் போன்றவற்றை அதனை மாற்றும் நிகழ்வு நடந்தது என உறுதிப்படுத்தாத வரை அவ்வாறே தொடருதல் என்பது இதன் கருத்தாகும்.

இஸ்லாமிய சட்டம் பற்றிய அடிப்படை உண்மைகள் மீதும் இது பிரயோகிக்கப்படுகிறது. உதாரணமாக, பொறுப்பின்மையே அடிப்படையாகும். இந்நிலையில் ஷரீஅத் ரீதியாக பொறுப்பாதல் என்பது நிறுவப்பட்டதன் பின்னரே ஒருவர் பொறுப்பாளராக மாறுகிறார். சிறுபிராயத்தில் உள்ள ஒருவர் முதிர்ச்சி நிலைக்கு வரல், அறிவற்ற ஒருவர் அறிவு பெறல் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

‘அனைத்துப் பொருட்களும் ஆகுமானவை’ என்பது ஷரீஅத் சட்ட அடிப்படைகளில் ஒன்றாகும். குறிப்பிட்ட ஒரு பொருள் தடை செய்யப்பட்டது என நிறுவப்படும் வரை அதனை கையாள முடியும். இவ்வாறான விதிகளையும், முன்னர் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளையும் உடன்கொண்டு செல்லலே “இஸ்திஸ்ஹாப்” ஆகும்.

இச்சட்ட மூலாதாரம் அனைத்து இஸ்லாமிய சட்ட அறிஞர்களாலும் ஏற்கப்பட்டதாகும். எனினும், இதன் பிரயோகத்தில் அவர்களுக்கு மத்தியில் சிற்சில இடங்களில் கருத்து வேறுபாடுண்டு.

### 6. கவ்லுஸ் ஸஹாபா

அல்குர்ஆனுக்கும், ஸுன்னாவுக்கும் அடுத்ததாக ஸஹாபாக்களது தீர்வுகள் சட்டப்பகுதியில் நிறையக் காணப்படுகின்றன. இச்சட்டத் தீர்வுகளை எவ்வாறு நோக்குவது என்பது தான் இங்கு ஆராயப்படும் விடயமாகும்.

அல்குர்ஆன் சட்டமியற்றுவதை ஸஹாபாக்கள் நேரடியாக அவதானித்தார்கள். இறைதூதரோடு நெருக்கமாக இருந்து பல நிகழ்வுகளை அவர்கள் கையாளும் முறையையும், தீர்வுகள் சொல்லும் முறையையும் அவதானித்தார்கள். அத்தோடு அவர்கள் அரபுமொழிப் புலமைமிக்கவர்களாகவும் எக்கலப்புமின்றி சொற் பிரயோகங்களில் எந்த மாற்றமும் உருவாக முன்னர் அம்மொழி அறிவைப் பெற்றவர்களாகவும் இருந்தனர்.

எனினும் ஸஹாபாக்கள் தவறிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களல்லர். ஆய்வுத் தவறுகள் அவர்களிடம் தோன்ற முடியும். எனவே நபிகளாரின் தரத்திற்கு அவர்களை உயர்த்தவும் முடியாது.

இப்பின்னணியிலேயே ஸஹாபாக்களது சட்டத் தீர்வுகள் நோக்கப்பட்டன. நான்கு இமாம்கள் ஸஹாபாக்களது தீர்வுகளை சட்டமூலாதாரமாக ஏற்றனர். இமாம் ஷாபிஈ (றஹ்) ஸஹாபாக்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு காணப்படும் இடங்களில் அல்குர்ஆனுக்கும், ஸுன்னாவுக்கும் நெருக்கமான கருத்தைப் பெற முயற்சி செய்வார். அது தெளிவில்லாத போது ஸஹாபாக்களைப் பின்பற்றலைக் கொள்கையாகக் கொண்டார். ஏறத்தாழ ஏனைய மூன்று இமாம்களது போக்கும் இவ்வாறே இருந்தது.

பின்னர் வந்த சில இமாம்கள் ஸஹாபாக்களது சட்டதீர்வுகளை சட்டமூலாதார மாகக் கொள்ள முடியாது என வாதிட்டனர். இமாம் பாகில்லானி (றஹ்), இமாம் கஸ்ஸாலி (றஹ்), இமாம் ஷவ்கானி (றஹ்) போன்றோர் இதில் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

### 7. ஸத்துத் தராஇஃ

“தரீஆ” என்ற சொல்லின் பன்மையே “தராஇ.ஃ.” ஆகும். “தரீஆ” என்றால் ஒரு விடயத்திற்கு காரணமாகும் சாதனம் என்பது மொழிப் பொருளாகும்.

“ஹராம் அல்லது ஹலாலுக்கு இட்டுச் செல்லல் என்பதைக் கவனத்திற்கொண்டு சட்டமாக்கல் என்பதே இதன் வரைவிலக்கணமாகும். ஹராத்திற்கு இட்டுச் செல்லும் காரணியைத் தடுத்தால் அதனை “ஸத் அத்தராயி∴” எனவும் ஹலாலுக்கு நன்மைக்கு இட்டுச் செல்லும் வழியைத் திறந்துவிட்டால் அதனை “பத்ஹ் அத் தராயி∴” எனவும் கூறுவர்.

இங்கு தீமைக்கு இட்டுச்செல்லும் காரணிகள் பற்றியே அதிகமாக ஆராயப்படுவதால் இந்த சட்ட மூலாதாரம் அதிகமாக “ஸத்-அத்தராயி∴” என்றே கூறப்படும். அல்குர்ஆனும், ஸுன்னாவும் சட்டமியற்றும் போது தீமைகளை தடைசெய்தல் என்று மட்டுமல்லாது அவைகளுக்கு இட்டுச் செல்லும் வழிகளையும் தடைசெய்துள்ளன என்பதனை அவதானித்த இஸ்லாமிய சட்டவியலாளர்கள் இதனை ஒரு சட்டமூலாதாரமாகக் கொண்டு அல்குர்ஆனும் ஸுன்னாவும் தெளிவாகக் காட்டாத இடங்களில் இதனைப் பிரயோகித்தனர்.

குறிப்பிட்டதொரு செயல் அல்லது நிகழ்வு தீமைக்கு இட்டுச் செல்வது திட்டவட்டமாக இருக்க முடியும். சிலபோது, பெரும்பாலும் உறுதியாக இருக்கமுடியும். சிலபோது சந்தேகத்திற்குரியதாக இருக்க முடியும். சிலபோது மிகவும் அரிதானதாக இருக்க முடியும். இந்த நிகழ் சாத்தியப்பாடுகளையும் கவனத்திற்கொண்டே இஸ்லாமிய சட்டவியலாளர்கள் இப்பகுதியில் சட்டமியற்றுவர்.

குழப்ப காலங்களில் ஆயுதம் விற்றல், மதுசாரம் எடுக்கலாம் எனக் கருதப்படுபவருக்கு தென்னை மரங்களை விற்றல் என்பன இதற்கான சில உதாரணங்களாகும்.

மாலிகி, ஹன்பலி மத்ஹபினர் இதே தலைப்பில் இச்சட்ட மூலாதாரத்தை ஏற்றுப் பிரயோகித்துள்ளனர். ஷாபியீ, ஹனபி மத்ஹபினர் இத்தலைப்பைக் குறிப்பிடாவிட்டாலும் இச்சட்ட சிந்தனைப் போக்கை ஏற்றுப் பிரயோகித்துள்ளனர்.

# அகீதாவும் மஸாதிருஷ் ஷரீஆவும்

## (இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடும்
## சட்ட மூலதாரங்களும்)